# இலக்கிய அணிகள்

டாக்டர்.சி.பாலசுப்பிரமணியன்

# இலக்கிய அணிகள்

தமிழாராய்ச்சி குறித்து 1972ஆம் ஆண்டு வெளி வந்த நூல்களில் சிறந்த நூலெனத் தமிழக அரசின் முதற் பரிசு பெற்ற நூல்.


**டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்**

**எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.**

*தமிழ்ப் பேராசிரியர்/தமிழ்த் துறைத் தலைவர்*

சென்னைப் பல்கலைக்கழகம்,

சென்னை - 5



*விற்பனை உரிமை :*

**பாரி நிலையம்**

*59, பிராட்வே - சென்னை-1.*

ரூ. 10.00

முதற் பதிப்பு : ஏப்பிரல், 1972
இரண்டாம் பதிப்பு : செப்டம்பர் 1977
நறுமலர்ப் பதிப்பக வெளியீடு.

ஆசிரியரின் பிற நூல்கள்

தமிழ் இலக்கிய வரலாறு
உருவும் திருவும்
கட்டுரை வளம்
மனோன்மணீயம்
காரும் தேரும்
வாழையடி வாழை
முருகன் காட்சி
பெருந்தகை மு. வ.
The Status of women in Tamilnadu during the Sangam Age.

அச்சிட்டோர் :
மெட்ரோபாலிட்டன் பிரிண்டர்ஸ், சென்னை-2.

## முதற் பதிப்பின்

# முன்னுரை

ஒருவாத புகழுடைய திருவாசகம் தந்த திருவாத ஆரராம் மணிவாசகப் பெருந்தகையார் இமைப்பொழுதும் தம் நெஞ்சில் நீங்காத நினைவுடைய சிவனெனும் நாமந் தமக்கேயுடைய செம்மேனி அம்மானைக் குறிப்பிடும் பொழுது ''முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்ப் பேர்த்தும் அப் பெற்றியன்'' என்று குறிப்பிட்டுள்ளார். அத்தகு புகழுரை நந்தமிழ் மொழிக்கும் பொருந்தும். காலந்தோறும் வேகச் சுழிப்புடன் விரைந்து ஓடிவரும் தமிழ் இலக்கியப் பேரியாற்றிலே பல்வேறு திருப்பங்களையும் போக்குகளையும் காண்கிறோம்; காலம் பல கழிந்தாலும் தமிழன்னையின் எழிலார்ந்த பேரழகு குறைய வில்லை. அவ்வக் காலங்களில் வாழ்ந்த பெரும் புலவர்கள் தமிழன்னையின் எழிலார்ந்த பேரழகுக்கு அழகு கூட்டும் வகையில் புத்தம் புதிய அணிகளை நித்த நித்தம் கவின்பெற ஆக்கி அளித்துள்ளனர். தமிழன்னையின் எழிலார்ந்த திருக் கோலம் காண்போர் நெஞ்சை ஈர்க்கும் பெற்றியதாகும்.

**''இலக்கிய அணிகள்''** என்னும் பெயரிய இந்நூலில் இருபத்து மூன்று கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இக் கட்டுரைகள் அவ்வப்போது பல்வேறு சூழல்களில் எழுதப் பட்டவையாகும்; சில வானொலிப் பேச்சுக்கள்; சில மலர் களுக்கு எழுதப்பட்டனவாகும். இவை தனித்தனியே தலைப் பிற்கேற்பப் பல்வேறு சமயங்களில் எழுதப்பட்டன வாகையால் இக்கட்டுரைகளில் சில கருத்துக்கள் மீண்டும் மீண்டும் இடம் பெற்றிருக்கக் காணலாம். அவற்றைக் 'கூறியது கூறல்' என்ற குற்றத்தின்பாற் கொள்ளாமற்

பொருள் இயைபிற்கும் ஒழுக்கிற்கும் தெளிவிற்கும் இடமாக வந்தன என்று கொள்ள வேண்டுகின்றேன். இக்கட்டுரைகள் அனைத்தும் ஆராய்ச்சிப் போக்கில் அமைந்துள்ளன. தமிழக வரலாறு, பண்பாட்டுத் தொடர்பான கட்டுரைகள் முதற் கண் இடம் பெற்றுள்ளன. அவற்றின் தொடர்ச்சியாக இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் யான் படித்த கட்டுரை 'பெருமங்கலம்' இடம் பெற்றுள்ளது. பதிற்றுப் பத்தினை நான் 'டாக்டர்' பட்டத்திற்கென ஆராய்ந்த காலத்தில் 'சேரர்தம் கொடை வளம்' எனும் கட்டுரை பிறந்தது. சேரர்களின் தொண்டித் துறைமுகம் பற்றிய கட்டுரை அடுத்து இடம் பெற்றுள்ளது. 'காதல் உணர்த்திய பண்பாடு', 'பழந்தமிழ் இலக்கியத்தில் குழந்தை' ஆகிய இரு கட்டுரைகளும் சங்க இலக்கியக் காட்சிகளினின்றும் முகிழ்த்தவைகளாகும். 'பொருள்வயிற் பிரிவு', 'வற்றிய பாலையில் வற்றாத அன்பு', 'மடலேறுதல்' ஆகிய மூன்று கட்டுரைகளும் காதற் பெற்றியினைக் கவினுற விளக்கி நிற்பனவாகும்.

'குறள் வழி நடப்போம்' என்ற தலைப்பில் மதிப்பிற்குரிய துணைவேந்தர் உயர்திரு நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் தலைமையில் ஒரு கருத்தரங்கினைச் சென்னை வானொலி நிலையத்தார் ஏற்பாடு செய்திருந்தனர். அதுபோது 'குறள்வழி நடப்போம்; கற்றபின் நிற்றலில்' என்ற தலைப்பில் யான் பேசிய பேச்சு அடுத்து இடம் பெற்றுள்ளது. 'திருவள்ளுவர் தெளிவுறுத்தும் வாழ்க்கை', 'சிலப்பதிகாரத்தில் வரும் போர்க்களங்கள்', 'சேக்கிழார் கண்ட செம்பொருள்' முதலிய கட்டுரைகள் தனித்தனி மலர்களுக்கு எழுதப் பெற்றனவாகும்.

கம்பநாடர் காவிய நாயகனும் இராமனை உத்தம சகோதரனாகவும், நல்ல கணவனாகவும் நலமுறத் தீட்டிக் காட்டியுள்ளார். அந்த ஓவியங்கள் அடுத்து இடம் பெற்றுள்ளன. 'இடைக்கால உரையாசிரியர்கள்', 'சீறாப் புராணத்தில் இலக்கிய நயம்' ஆகிய இரண்டும் காற்றிலே மிதந்தவை; அதாவது வானொலிச் சொற்பொழிவுகள்.

'முதலாந் திருமுறை', 'வள்ளலார் வாழ்வு', 'வள்ளலார் கண்ட சீர்திருத்தம்' ஆகிய மூன்று கட்டுரைகளும் சமயஞ் சார்ந்தனவாகும். ஆயினும் இக் கட்டுரைகளில் இலக்கியச் சிறப்பும் இலங்கக் காணலாம்.

இறைவன் மாட்டு ஈடுபாடு கொண்டுள்ள எனக்கு அவர்தம் கணக்கிலாப் பேரருள் விளக்கமாகத் தோன்றுவது இயற்கைக் காட்சிகள் வழங்கும் இனிய இன்பமாகும். எனவே இந்நூலின் இறுதிக் கட்டுரை 'இயற்கை இன்பம்' என்னும் தலைப்பினைப் பெற்றுள்ளது. புலனுவிற் பிறந்த செஞ்சொற் கவியின்பம் இக் கட்டுரைகளில் மிளிரக் காணலாம்.

அவ்வப்போது யான் எழுதிய இக்கட்டுரைகளை நூல் வடிவில் வெளியிட்டுக் கொள்ள உரிமை வழங்கிய, சிற்றூர்ச் சிறுரும் சீரிய கல்வி கற்கும் பொதுநிலையினை ஏற்படுத்தித் தந்த மதிப்பிற்குரிய துணைவேந்தர் தாமரைச் செல்வர் உயர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்களுக்கும், சென்னைப் பல்கலைக்கழகத்தின் சீர்சால் ஆட்சிக் குழுவினர்க்கும், பதிவாளர் அவர்களுக்கும் மாறு நன்றியுடையேன்.

எங்கோ ஒரு சிற்றூரில் எளிய குடும்பத்தில் பிறந்த எனக்கு அன்பு காட்டி, தமிழ்ப்பற்று ஊட்டி, பண்படுத்தித் தமிழுலகில் நடமாட வைத்து இந்நிலைக்கு என்னை ஆளாக்கிய -- சான்றாண்மைக்கு ஆழி என விளங்கும் என் பேராசிரியப் பெருந்தகை டாக்டர் மு. வரதராசனர் அவர்களை இந்த மணியான நேரத்தில் நன்றியுடன் நினைந்து வணங்குகின்றேன். அவர்கள் அளித்த அறிவுச் செல்வத்தின் பயனே இந்நூல் என்று கூறி அமைகிறேன்.

இனிய விழாக்கள் அயரும் தமிழுலகம் வழக்கம்போல் இந்நூலினையும் வரவேற்கும் என்னும் துணிபுடையேன்.

"'தமிழகம்''
சென்னை-29
25-4-1972

**சி. பாலசுப்பிரமணியன்**

தமிழ்நாடு அரசு

வாய்மையே வெல்லும்

# தமிழ்நாடு அரசு
# தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம்

## சான்றிதழ்

1971, 1972 ஆகிய ஆண்டுகளில் வெளியிடப் பெற்ற நூல்களில் மொழி, இலக்கியம் பற்றிய ஆராய்ச்சி என்ற தலைப்பில், இலக்கிய அணிகள் என்னும் நூல் முதற் பரிசுக்குரியதெனத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

நூலாசிரியர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் அவர்களைப் பாராட்டி ரூபாய் இரண்டாயிரம் பரிசாக அளிப்பதோடு இச்சான்றிதழும் வழங்கப் படுகிறது.

(ஒ - ம்) இரா. நெடுஞ்செழியன்
துணைத் தலைவர்
கல்வி அமைச்சர்

(ஒ - ம்) மு. கருணாநிதி
தலைவர்
முதலமைச்சர்

தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம்
சென்னை

நாள்: 21.11.1975

# மதிப்புரை

## தினமணி சுடர் அநுபந்தம் 7—16-12-1973

## இலக்கிய அணிகள்

(டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், பாரி நிலையம்,
59, பிராட்வே, சென்னை-1)

இந்நூலில் இடம் பெற்ற 23 கட்டுரைகள் அனைத்தும் ஆராய்ச்சிப் போக்கில் எழுதப் பெற்றவை. நூல் முழுவதும் தமிழ் இலக்கண இலக்கியத்துடன் சிறப்பாகக் காணப்படும் பாடல்கள் மேற்கோளாகக் கையாளப்பட்டிருக்கின்றன. தமிழ், தமிழர் வரலாறு, தமிழர் சமயக் கொள்கை, உரைநடை ஆசிரியர்கள், வள்ளலார் கொள்கை, இளங்கோவடிகள் திறமை, மணிமேகலை, திருக்குறள், திருமுறைகள் மாண்பு, நூல் நெடுகிலும் பின்னிப் பிணைந்து கிடக்கிறது.

இவரது உரைநடையில் அழுத்தமும் கவர்ச்சியும் பிறருக்குத் தெரிய வேண்டிய அறிவு பூர்வமான சரக்குகளும் விரவி வருகின்றன. ''வேம்பின் வெண் மலர்கள் பூத்துப் புதுமணம் கமழும் தென்னை மரங்கள் பசிய ஓலை விரித்துத் தென்றலில் தலை அசைத்துத் தீஞ்சுவை நீரினை இளநீராக வழங்கும். பனை மரங்கள் நுங்கினை வழங்கி மகிழ்விக்கும். மாஞ்சோலை எங்கும் ஒருவகைப் புதுமணமாம் பூக்களால் எழும்பும். மேடையெங்கும் பூங்காற்று வீசும். கோடையில் குளிர் தருக்களின் நிழல் இணையாற்றிக் கொள்ளுதற்கேற்ப விளங்கும்'' என்று வர்ணனை செய்யும்போதும் ஆராய்ச்சி பூர்வமான அரிய பொருள்களைப் பெய்யும்போதும் செஞ் சொற் கவியின்பமும் கருத்து வளமும் பக்கத்திற்குப் பக்கம்

காணுகிறோம். ஆராய்ச்சிப்போக்கில் எழுதப் பெற்றாலும் படிக்கப் படிக்க மொழி, இலக்கியம், இலக்கணம், மரபு, கலைகள், மேற்கோள் காட்டும் விதம், பண்டைய அரசியல் வாழ்க்கை நெறி யாவற்றையும் தெளிவாக அறியும் வண்ணம் நம்மைத் தெள்ளியர் ஆக்குகின்றார். நற்றிணை, குறுந்தொகை, இறையனார் களவியல் உரை தொடங்கி, பாரதியார், பாரதிதாசன் வரை தமிழ்க் கவி வெள்ளமும் தமிழ்க் கருத்தோட்டமும் எத்தனை மாண்புள்ளது என்பதனை நமக்கு நயம்பட உரைக்கின்றார்.

தமிழ்க் கவிஞர்கள், உரையாசிரியர்கள், சமயவாதிகள் தமிழ் மொழிக்குச் செய்த அளப்பரிய தொண்டு போன்று செந்தமிழ்க் கட்டுரை வடிவத்திற்கும் வளர்ச்சிக்கும் தமிழ் மொழி ஆக்க வழிக்கும் வடிவத்திற்கும் அரிய தொண்டினைச் செய்துள்ளார். புலவர்களும், புதுமைப் பிரியர்களும் விரும்பிப் படிக்கக் கூடிய அணிகள் பல இவற்றுள் இடம் பெற்றிருக்கின்றன.

—டி. என். சுகி. சுப்பிரமணியன்

### இரண்டாம் பதிப்பின்

# முன்னுரை

1972 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25 ஆம் நாள் என் வணக்கத்திற்குரிய பேராசிரியர் பெருந்தகை டாக்டர் மு. வரதராசனுர் அவர்களுக்கு அறுபது ஆண்டுகள் நிறைந்தது. அவர்தம் வீட்டாரும் தமிழ் நாட்டாரும் அவருக்கு மணிவிழா எடுக்கவேண்டும் என்று விரும்பினர். அவர்தம் பழைய மாணவர் சிலரும் அவர்தம் மணிவிழாக் காண விழைந்தனர். ஆனால் டாக்டர் மு. வ. அவர்கள் உறுதியாக அவ்விழாவினை மறுத்து விட்டார்கள். எனவே எல்லோர் எண்ணமும் ஈடேறுமற் போனது.

அதுபோது என் மனத்தில் ஓர் எண்ணம் உதித்தது. அவர் தந்த கொடை எனக்குக் கல்வி, பண்பு, வாழ்வு முதலியனவாகும். கல்விக் கண் தந்த அவர்களே என் ஆராய்ச்சி அறிவிற்குத் துணை கோலியவர் ஆனார்கள். என்னுடைய எம். லிட்., பிஎச். டி. முதலான பட்டங்கள் அவர் வழிகாட்டலில், மேற்பார்வையில் நிறைவேறின. எனவே அவர்தம் கல்விக் கொடையால் பெற்ற அறிவால் எழுந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிட்டு அவருக்குக் காணிக்கையாக்க வேண்டும் என விரும்பினேன். அவ்வெண்ணத்தை யான் அவர்களிடம் வெளிப்படுத்தியபோது அதனை மறுத்து விட்டார்கள். ஆனாலும் யான் நூல் வெளியிடும் முயற்சியைப் பாராட்டிக் கட்டுரைகளை ஒழுங்கும் செப்பமும் செய்து

நூலிற்கும் 'இலக்கிய அணிகள்' என்று பெயரிட்டார்கள். நூலினை அச்சியற்றி முடித்து 25-4-1972 அன்று அவர்தம் இல்லம் சென்று அவர்தம் திருக்கரங்களில் நூலின் முதற் படியினை வழங்கினேன். அவர்கள் பெற்று உவந்து என்னை வாழ்த்தினார்கள். யான் எண்ணியவாறு அந்நூலினை அவர்கள் காணிக்கையாக ஏற்றுக் கொள்ளாவிடினும், அந் நூலின் முன்னுரையின் இறுதியில்

> ''எங்கோ ஒரு சிற்றூரில் எளிய குடும்பத்தில் பிறந்த எனக்கு அன்பு காட்டி, தமிழ்ப்பற்று ஊட்டி, பண்படுத்தித் தமிழுலகில் நடமாட வைத்து இந்நிலைக்கு என்னை ஆளாக்கிய—சான்றாண் மைக்கு ஆழி என விளங்கும் என் பேராசிரியப் பெருந்தகை டாக்டர் மு. வரதராசனார் அவர்களை இந்த **மணியான நேரத்தில்** நன்றியுடன் நினைந்து வணங்குகின்றேன். அவர்கள் அளித்த அறிவுச் செல்வத்தின் பயனே இந்நூல் என்று கூறி அமை கிறேன்''

என்று எழுதியிருந்தேன். இந்நூல் தமிழாராய்ச்சி குறித்து 1972 ஆம் ஆண்டு வெளிவந்த நூல்களில் சிறந்த நூலெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தமிழக அரசின் முதற் பரிசாக இரண்டாயிரம் ரூபாயினைப் பெற்றது. என் பேராசிரியப் பெருந்தகை இருந்திருந்தால் பெரிதும் மகிழ்ந் திருப்பார்கள். யான் பேறு பெற்றிலேன்.

இந்நூலினை அடக்கத்துடன் அவர்தம் இனிய நினைவிற்குக் காணிக்கையாக்கி வணங்குகின்றேன்.

தமிழகம்
சென்னை-29
25-9-1977

சி. பா

# உள்ளுறை


| கட்டுரை எண் | தலைப்பு | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தமிழகத்தின் தொன்மை<br>[இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர், சென்னை, சனவரி, 1968.] | ... | 9 |
| 2. | தமிழர் வரலாறு<br>[சொற்பொழிவுக் கட்டுரை] | ... | 19 |
| 3. | தமிழர் பண்பாட்டின் வரலாறு<br>[சொற்பொழிவுக் கட்டுரை] | ... | 34 |
| 4. | பெருமங்கலம்<br>[இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு—கருத்தரங்கப் பேச்சு, சென்னை, சனவரி, 1968] | ... | 48 |
| 5. | சேரர் கொடை வளம்<br>[சென்னைப் பல்கலைக் கழகக் கீழ்த்திசை மொழி மலர், 1967] | ... | 64 |
| 6. | சேரர் தொண்டி<br>[முருகு, 1967] | ... | 85 |
| 7. | காதல் உணர்த்திய பண்பாடு<br>[பச்சையப்பன் கல்லூரியின் 125-வது ஆண்டு விழா மலர், பிப்பிரவரி 1968] | ... | 97 |
| 8. | பழந்தமிழ் இலக்கியத்தில் குழந்தை<br>[பெங்களூர்த் தமிழ்ச் சங்க மலர், மார்ச்சு, 1968] | ... | 105 |
| 9. | பொருள்வயிற் பிரிவு<br>[பல்கலைக் கழகத் தமிழாசிரியர் முதல் மாநாடு, மதுரை, சூன், 1969] | ... | 115 |
| 10. | வற்றிய பாலையில் வற்றாத அன்பு<br>[அமுத சுரபி, சூன், 1968] | ... | 129 |
| 11. | மடலேறுதல்<br>[பல்கலைக் கழகத் தமிழாசிரியர் இரண்டாவது மாநாடு திருச்சி, சூன், 1970] | ... | 143 |

12. குறள் வழி நடப்போம் ... 156
[வானொலிப் பேச்சு, சென்னை, 5-6-1969]
13. திருவள்ளுவர் தெளிவுறுத்தும் வாழ்க்கை ... 164
[கல்கத்தாத் தமிழ் மன்ற மலர், பிப்பிரவரி, 1968]
14. சிலப்பதிகாரத்தில் வரும் போர்க் களங்கள் ... 174
[தமிழ் உறவு மலர்]
15. சேக்கிழார் கண்ட செம்பொருள் ... 188
[தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகப் பொன்விழா மலர், சென்னை, டிசம்பர், 1970]
16. கம்பர் காட்டும் இராமன்—சகோதரன் ... 202
[வானொலிப் பேச்சு, சென்னை, 26-10-1970]
17. கம்பர் காட்டும் இராமன்—கணவன் ... 213
[வானொலிப் பேச்சு, சென்னை, 27-10-1970]
18. பண்டைய உரைநடை—இடைக்கால உரையாசிரியர்கள் ... 232
[வானொலிப் பேச்சு, சென்னை, 20-5-1968]
19. சீறாப்புராணத்தில் இலக்கிய நயம் ... 246
[வானொலிப் பேச்சு, சென்னை, 10-5-1970]
20. முதலாந் திருமுறை ... 256
[இலங்கை, யாழ்ப்பாணம் வட்டுக் கிழக்கு-சித்தன் கேணி-திருமுறைக் கழக ஆண்டு மலர், மே, 1968]
21. வள்ளலார் வாழ்வு ... 267
[சுத்த சன்மார்க்க சங்க மலர், சென்னை, ஏப்பிரல், 1968]
22. வள்ளலார் கண்ட சீர்திருத்தம் ... 277
[வானொலிப் பேச்சு, சென்னை, 8-2-1968]
23. இயற்கை இன்பம் ... 289
[பாடநூலொன்றுக்கு எழுதி வழங்கியது]

# 1

# தமிழகத்தின் தொன்மை

உலகம் தோன்றிப் பன்னெடுங்காலம் கழிந்துவிட்டது. முதற்கண் உலகம் தோன்றிய காலத்தில் தீக்குழம்பாக இருந்த மண் முதலில் குளிர்ந்து அமைந்த நிலப்பகுதி தென்னகமே என்றும், உலகில் முதற்கண் தோன்றிய மக்களினம் இத்தென்னகத்தில்தான் வாழ்ந்திருத்தல் வேண்டும் என்றும் புவி இயல் ஆராய்ச்சியாளர் பலரும் கருதுகின்றனர். வட இந்தியாவில் கங்கைச் சமவெளியில் மனித வாழ்வு தொடங்காத காலத்திலேயே, இப்போது இந்தியப் பெருங்கடல் உள்ள பகுதியில் பரந்த நிலமும், மலையும், ஆறும் இருந்து, பிறகு கடல்கோளால் மறைந்தழிந்தன என்றும் கூறுவர். இந்தப் பெரிய நிலப்பரப்பு கிழக்கே பர்மா தொடங்கித் தெற்கே சீன வரையிலும், மேற்கே ஆப்பிரிக்காவின் கிழக்குத் தெற்குக் கரைகள் வரையிலும், வடக்கே விந்திய மலை வரையிலும் தெற்கே ஆஸ்திரேலியா[1] வரையிலும் பரந்திருந்தது. இந் நிலப்பரப்பினை ஆங்கிலேயர் லெமூரியா (Lemuria) என்று

---

1. There is geological evidence to prove that in very early time South India formed part of a huge continent whieh extended from Burma and South China in the East, South Africa on the west, Vindhya Hills on the north and Australia on the South.

—Rig Vedic India, p. 91.

அழைப்பர். நம் தமிழ் முன்னோர் இப்பகுதியினைக் குமரிக் கண்டம் என அழைத்தனர். இங்குத்தான் மனிதன் முதலில் தோன்றியிருக்கக்கூடும் என்று வரலாற்றுப் பேராசிரியர் தம் நூலின்கண் புலப்படுத்தியுள்ளார். எரிமலை வெடிப்பும் நிலநடுக்கமும் தென்னகத்தில் இல்லாத தன்மையைக் கொண்டு இக்கருத்து வலியுறுகின்றது.[2]

பழந்தமிழ் இலக்கியங்களிலும் கடல்கோளைப் பற்றிய குறிப்புக்கள் உண்டு. தற்போதைய குமரிமுனைக்குத் தென் பகுதியில் பஃறுளியாறு என்னும் ஆறு பாய்ந்து வளம் பரப்பியதாகவும், பன்மலையடுக்கம் செறிந்து விளங்கியதாக வும் பின்னர் அவை கடல்கோளால் அழிந்துபோனதாகவும் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.[3] புறநானூறு,[4] இறையனார் களவியல் உரை[5] முதலியனவும் இக்கருத்துக்குச் சான்று பகர்கின்றன. இவ்வாறு கடல்கொண்ட நிலப்பகுதியே

---

2. Considering the fact that we have scarcely any trace of Volcanic eruptions or earth tremours as they frequently occur in North India, it may be said that South India was the part of the world to settle first as a land mass. It is probable that the originsl man might have come into existence first in South India.

—V. R. Ramachandra Dikshitar, Pre-Historie South India, p. 234

3. வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள

—சிலப்பதிகாரம், காடுகாண் காதை, 19-20.

4. முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே

—புறநானூறு; 9: 10-11.

5. இறையனார் களவியல் உரை; பக்கம், 6.

மனித நாகரிகம் வளர்ந்த தொட்டில் (Cradle of human race) என்பர். சிலர் மத்தியதரைக் கடலை அடுத்த நிலப்பகுதியில் மக்கள் முதன் முதலில் தோன்றிப் பின் பல்வேறு நாடுகளில் சென்று குடியேறினர் என்பர். ஆயினும் "பழந் தமிழ் நாட்டு மக்களே முதலில் தோன்றிய மனித இனம் என்றும், அவர்கள் வெவ்வேறு நாடுகளுக்குச் சென்று பிரிந்து வாழ்ந்த பின் வேறு வேறாக இனங்கள் வளர்ந்தன என்றும் கொள்வது பொருந்தும்" என்பது அறிஞர் கண்ட உண்மை யாகும்.

வரலாற்றின் மிகப் பழங்காலத்திலே தென்னகத்தில் வாழ்ந்த மக்கள் தமிழர் என்று வழங்கப்பட்டதோடு, வரலாற்றுத் தெளிவு நோக்கித் திராவிடர்கள் என்றும் வழங்கப்பட்டார்கள். கிறித்துநாதர் பிறப்பிற்கு ஐயாயிரம் ஆண்டுகள் முற்பட்டதாகக் கருதப்படும் மொகஞ்சதரோ அல்லது சிந்துவெளி நாகரிகம், வரலாற்றுப் பழமையும் புகழும் வாய்ந்த சுமேரிய நாகரிகத்திற்கு இணையான திராவிட நாகரிகத்தைக் கொண்டிருந்தது என்று சர் ஜான் மார்ஷல் முதலான தொல்பொருளியல் ஆராய்ச்சி அறிஞர்கள் துணிகின்றனர். அம் மக்கள் பேசிய பழந் திராவிட மொழியின் கூறுகள் தமிழ் மொழியில் காணப்படு வதால் தமிழ் மொழியே இன்று உலகில் வாழும் மொழி களில் மிகப் பழமையான மொழியாகும் என்பர் மறைத்திரு. ஹிராஸ் பாதிரியார் அவர்கள்.[6] வடநூலார் தமிழரைத்

---

6. Being Dravidiars the inhabitants of Mohenjodaro in Northern India naturally spoke a Dravidian language in which the earliest proportion of the words used are found in Tamil. This confirms the common belief that Tamil is the oldest of the present languages.

—Rv. H. Heras, Light on the Mohenjodaro Riddle, p. 14.

திராவிடர் என வழங்கினர். தமிழகத்தை 'தமிரிகே' என்று ரோமர்களும், 'தெ ஹிமோளோ' என்று சீனர்களும் வழங்கினர்.

தமிழகத்தின் எல்லை மிகப் பழங்காலத்திலேயே வரையறுக்கப்பட்டு விட்டதனைச் சங்க இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

'' வடாஅது. பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது. உருகெழு குமரியின் தெற்கும்,
குணாஅது. கரைபொரு தொடுகடல் குணக்கும்,
குடாஅது, தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்'

'' தென்குமரி வடபெருங்கல்
குணகுட கடலா எல்லை'' [8]

என்ற புறநானூற்றுத் தொடர்களும் 'ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியம்' தந்த தொல்காப்பியனாரின் ஒரு சாலை மாணாக்கராகிய பனம்பாரனாரின் பாயிரமும்[9] பழந் தமிழ் நாட்டின் எல்லையினை நன்கு குறிக்கின்றன. சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் உரையில் குமரிக்குத் தெற்கே அக்காலத்தே விளங்கிய நாற்பத்தொன்பது நாடுகளைப் பற்றிய குறிப்பையும் காண்கிறோம்.

தமிழகம் தொன்மை மிகுந்ததுபோலவே இங்கு வழிவழியாக வாழ்ந்து வரும் தமிழினமும் தொன்மையும் சிறப்பும் கொண்டு துலங்குவதாகும்.

'' கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே—வாளொடு
முன்தோன்றி மூத்த குடி''

---

7. புறநானூறு; 6 : 1-4
8. புறநானூறு; 17 : 1-2
9. வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து
—தொல்காப்பியம்; சிறப்புப்பாயிரம்.

என்று சேரர் ஐயனரிதனர் புறப்பொருள் வெண்பா மாலையில் தமிழினத்தின் பழமையினையும் வீர மேம்பாட்டினையும் விளங்கக் கூறியுள்ளார்.

"வழங்குவது உள் வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பின் தலைப்பிரிதல் இன்று "[10]

என்ற குறளின் உரையில், உரையாசிரியர் பரிமேலழகர், "தொன்று தொட்டு வருதல்—'சேர சோழ பாண்டியர்' என்றாற்போலப் படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டு வருதல்" எனக் கூறியுள்ளார். தமிழின் தொன்னூலாசிரியராம் தொல்காப்பியனார்,

"........................உறுபகை
வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்
போந்தை வேம்பே ஆர்என வருஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும் "[11]

என்று சேர சோழ பாண்டிய மன்னர்களின் அடையாளப் பூக்களைச் சுட்டிக் கூறியுள்ளமை தமிழினத்தின் பழமையினைப் பரக்கப் பேசும்.

வடமொழியின் முதல் காவியமாகிய வால்மீகி ராமாயணத்தில் பாண்டிய மன்னன் பாராட்டப்பட்டிருக்கிறான். "பின்பு. பொன் நிறைந்ததாயும் அழகுடைத்தாயும் முத்துமணி இவற்றால் அணியப்பட்டதாயும் நகரத்து அரணோடு இணைக்கப்பட்டதாயும் உள்ள பாண்டியர் வாயிற் கதவை, வானரங்காள், போய்க் காண்பீர்" [12] என்று இராமன் கிட்கிந்தையிலிருந்த

10. திருக்குறள் - 955.

11. தொல்காப்பியம் : புறத்திணை இயல் : நூற்பா : 5

12. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், தமிழ் மொழி வரலாறு, பக்கம், 49.

வானரப்படையினர்க்குச் சொன்னதாக அக்காவியம் குறிப்பிடுகின்றது. வடநூல்களில் இருக்கு வேதமும் தைத்திரீயமும் வியாச பாரதமும் சேர அரசர்களைக் குறிக்கின்றன.[13] அசோகப் பேரரசன் கல்வெட்டுகளும் சேரவேந்தரைப் பற்றிய குறிப்பை வெளியிடுகின்றன.

காலினும் கலத்தினும் பிரிந்து பழந்தமிழர் பொருளீட்டினர். அக்காலத்தே மேலைநாட்டினராகிய கிரேக்கர், யவனர், பாபிலோனிய நாட்டுக் கோசியர்கள் முதலியவர்கள் தமிழகத்தோடு வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். யவனரைப் பற்றிய குறிப்பு தமிழிலக்கியங்களில் பத்து இடங்களில் வந்துள்ளன.[14] அலெக்சாண்டர் என்னும் பெருவேந்தனுக்குப் பின் செல்யூகஸ் நிகோடர் விடுத்த மெகஸ்தனீஸ் என்னும் மேலைநாட்டறிஞர் சந்திரகுப்த மன்னன் அவையில் தங்கியிருந்த நாளில் தாம் கேள்வியுற்ற செய்திகளைக் குறித்துவைத்தார். அக்குறிப்பினுள் தமிழகத்து மன்னர்களைப் பற்றியும் ஊர்களைப் பற்றியுமான செய்திகள் உள்ளன. எகிப்து நாட்டுத் தாலமிகள் தமிழகத்திற்குக் கடல்வழி காண முனைந்தனர். இப்பலாஸ் (Hippalus) என்னும் கிரேக்கன் இந்நாட்டில் அடிக்கும் தென்மேற்கு, வடகிழக்குப் பருவக் காற்றின் நிலைகண்டு உரைத்தபின் யவன வாணிகம் வளம் பெற நடந்தது. அராபியரும் மேலைக் கரை வழியே தமிழகம் வந்து வாணிகம் செய்தனர். சீன நாட்டுடனும், ஜாவா, சுமத்ரா, மலேயா முதலிய தீவுகளோடும் வாணிக உறவு ஓங்கியிருந்தது.

---

13. P. T. Srinivasa Iyenger, History of the Tamils, pp, 29, 3 2.

14. முல்லைப்பாட்டு: 61, 66; நெடுநல்வாடை: 31 - 35; புறம் : 56, 343; பெரும்பாண் : 316; பதிற்றுப்பத்து பதிகம் II; அகம் : 57, 149

"களியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட வுரவோன் மருக"[15]

என்று சோழன் கரிகாற் பெருவளத்தானை வெண்ணிக் குயத்தியார் பாடுவதிலிருந்து வரலாற்றின் பழங்காலத் திலேயே தமிழர் கடல் வாணிகம் செலுத்திய வன்மை புலப்படுகின்றது.

சேரநாட்டுத் தேக்கமரம் வெளிநாடுகள் பலவற்றிற்குச் சென்று, அங்குப் பல கட்டடங்கள் எழும்பத் துணை கோலி யுள்ளது. தமிழ்நாட்டு நீலிச் சாயத்தில் தோய்த்த மெல்லிய துணிகள் மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தாகக் கூறப்படும் எகிப்து நாட்டுக் கல்லறைகளில் காணப்பட்டதாகக் கூறுவர். எகிப்து மட்டுமன்றிச் சிரியா, பாபிலோனியா முதலிய நாடுகளோடும் தமிழகம் வணிக உறவு வைத்திருந்தது. கி.மு. பத்தாம் நூற்றுண்டில் அரசாண்ட சாலமன் என்ற ஹீப்ரு மன்னன் தமிழகத்திலிருந்து பொன், வெள்ளி, தந்தம், குரங்கு, மயில், அகில் முதலிய பொருள்களைப் பெற்றுக் கொண்டதாக வரலாறு குறிப்பிடுகிறது. பைபிளில் (Bible) 'துக்கியம்' என்ற சொல் மயிலைக் குறிக்கக் காண லாம். தமிழில் 'தோகை' என்ற சொல்லே ஹீப்ரு மொழியில் 'துக்கியம்' ஆனது. இவ்வாறே தமிழகத்து அரிசி, கிரேக்கத்தில் ஓரிசியாகவும், சந்தனம் பல மொழிகளில் வழங்கிப் பின் ஆங்கிலத்தில் சந்தல் (Sandal) ஆகவும் ஆனது.

தென்பாண்டிக் கடல் முத்து உலகப் புகழ்பெற்றது. தமிழ்நாட்டு முத்து. அதைப்போல் மூன்று மடங்கு எடையுள்ள மாற்றுயர்ந்த பொன்னுக்கு நிகராக மதிக்கப் பட்டதாகவும், காயஸ் கிளாடியஸ் என்னும்

---

15. புறநானூறு : 66: 1-2

மேற்புல மன்னனுடைய மனைவி, மூன்று லட்சம் பவுன் மதிப்புள்ள முத்து அணிந்திருந்ததாகவும், தமிழ்நாட்டு முத்துக்களுக்கும் மணிகளுக்கும் ஈடாக இருபது லட்சம் பெறும் உரோம நாட்டுச் செல்வம் தமிழகத்திற்குக் கிடைத்ததாகவும் வரலாறு கூறுகின்றது. பிளினி (Pliny) என்ற வரலாற்றாசிரியர் இதனை வருந்திக் குறிப்பிட்டுள்ளார்.[16]

சேர, சோழ, பாண்டியர் என்னும் முடியுடை மூவேந்தர் பெயர்களும், ஆர்க்காடு, கரூர், முசிறி, தொண்டி, கொற்கை, குமரிமுனை, பொதிகை, கோடிக் கரை முதலிய இடப்பெயர்களும் கிரேக்கர் முதலான மேனாட்டு மக்கள் குறிப்புக்களில் இடம்பெற்றுள்ள சிறப்பினைக் கால்டுவெல் காட்டுவர்.[17] கி. மு. 20ஆம் ஆண்டில் பாண்டிய மன்னன் ஒருவன் ஐரோப்பாவில் அந்நாளில் புகழ் பெற்று விளங்கிய அகஸ்டஸ் மன்னனுக்குத் தூது அனுப்பினான். கி. பி. 225ஆம் ஆண்டில் ஏற்பட்ட உரோம நாட்டுக் குறிப்புக்களின்படி (Peutingerian Tables of 225 A. D) இரண்டாயிரம் உரோம நாட்டு வீரர்கள் கொண்ட படை ஒன்று முசிறித் துறைமுகத்தில் இருந்ததாக அறியப்படுகிறது. பழைய உரோம நாணயங்கள் பல தமிழகத்தில் மேற்குக் கடற் கரைப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளமை இக் கருத் துக்களுக்கு அரண் செய்கின்றன. ஸ்டிரபோவின்

---

16. Pliny complained in 70 A. D. that India drained gold to the value of nearly a million pounds a year giving back her own wares, which are sold among as at fully a hundered times their first cost.

—'P. T. Srinivasa Iyenger, History of the Tamils, P.305

17. Dr. Caldwell—A comparative Grammar of the Dravidian languages, Introduction, pp.15-28.

விவரணம், பெரிபிளஸ் என்னும் நூல், பிளினியின் "இயற்கை வரலாறு" தாலமியின் 'பூகோள விவரணம்' முதலியன தமிழர் நாகரிகச் சிறப்பை நன்கு விளக்குவன வாம். யவனரின் பாவை விளக்கு, புலிச்சங்கிலி, யவனப் பொறிகள் தமிழ் நாட்டில் இடம்பெற்று விளங்கின. வடநாட்டு வாணிகத்திலும் தென்னாட்டு வாணிபமே சிறந்திருந்தது என்று சாணக்கியர் தம் அர்த்த சாஸ் திரத்தில் புகழ்ந்துரைத்துள்ளார்.[18]

## தமிழ் மொழியின் தொன்மை

தமிழினம் போன்றே தமிழ் மொழியும் பழமை யானது என்பது சொல்லாமலே விளங்கும். தொல் காப்பியத்தில் பலவிடங்களில் தொல்காப்பியனார் 'என்மனார் புலவர்', 'என்ப' எனக் குறிப்பிடுவதனின்று தொல்காப்பியத்திற்கும் முற்பட்டே தமிழ் மொழியில் இலக்கண இலக்கிய நூல்கள் இருந்தமை புலனாகும். மாக்ஸ் முல்லர் என்னும் மொழி நூலறிஞர் தமிழே மிகவும் பண்பட்ட மொழி என்றும், தனக்கே உரிய வளம் வாய்ந்த இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக் கும் மொழி என்றும் பாராட்டியுள்ளார்.[19] ஆற்றல் மிக்கதாகவும் சில சொற்களால் கருத்தைத் தெரிவிப்ப தாகவும் விளங்குவதில் தமிழ் மொழியை எம் மொழியும் விஞ்சமுடியாது என்றும், உள்ளத்தின் பெற்றியை உள்ளவாறு எடுத்துக்காட்டுவதில் வேறு எம்மொழியும் இயைந்ததாக இல்லை என்றும் பெர்சிவல் என்னும் அறிஞர்

---

18. K. A. Nilakanta Sastri, A History of South India, P. 81.

19. Tamil is the most highly cultivated language and possesses the richest stores of indigenous literature.

—Max Muller

சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார்.[20] வடமொழி, எபிரேயம் (Hebrew), கிரேக்கு ஆகிய மூன்று இலக்கிய மொழி களில் தமிழ்ச் சொற்கள் கலந்திருக்கின்றன என்று ரைஸ்டேவிஸ் என்பார் கூறியுள்ளார்.[21]

இதுகாறும் கூறியவற்றால் தமிழகம் நிலம், இனம், மொழி ஆகிய முத்திறத் துறையிலும் தொன்மை யுடையதாக விளங்குவதோடு, சிறப்பும் உடையதாகப் பல்லாற்றானும் நனிசிறந்து துலங்குகின்றது என்பது வெள்ளிடைமலை.

---

20. No language combines greater force with equal brevity than Tamil and it may be asserted that no human speech is more close and philosophic in its expression as an exponent of the mind than the same.—Rev-Percival

21. The three classical languages of the world namely sanskrit, Hebrew and Greek contain Tamil words in the vocabulary.

—Rhys Davids.

# 2

# தமிழர் வரலாறு

'தமிழ்நாடு' என்னும் தொடருக்குத் 'தமிழ்மொழி வழங்கும் நாடு' என்பது பொருள். தமிழ்மொழி இன்ன காலத்திலேதான் தோன்றியதென்று எளிதாக வரை யறுத்துச் சொல்லக்கூடிய அளவிற்குப் பழைமை உடைய தாக இல்லை.

எனவே உலகில் இப்பொழுதுள்ள பல மொழிகளும் தோன்றுவதற்கு முன்பே தமிழ்மொழி தோன்றி வழங்கி வந்திருக்க வேண்டுமென்று ஆராய்ச்சியாளர் முடிவு கட்டு கின்றனர். இதனால் தமிழ்மொழி தோன்றுவதற்கு முன்பே அம்மொழியினைப் பேசக்கூடிய தமிழ் முன்னோரும் —அவர் வாழ்ந்த தமிழ்நாடும் தோன்றியிருக்க வேண்டும். இதனால் தமிழ் நாட்டின் பழைமை விளங்கும். மொழிகளைக் கொண்டு நாடுகளுக்குப் பெயர் அமைப்பது முன்பு வழக்கமாக இருந்திருக்கிறது.

" தமிழ் கூறு நல்லுலகம் '

என்று தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்தில் வரும் தொடர் இவ்வுண்மையினை வலியுறுத்தும். மொழி வேறு பட்ட தேயங்களில் வாழ்ந்த மக்களைத் தமிழர்,

" மொழிபெயர் தேஎயத்தர் "

என வழங்கினர் என்பது தெரிய வருகின்றது.

தமிழ்நாடு பண்டைக்காலத்தில் தென்திசையில் மிகுதியாகப் பரந்திருந்தது. அத் தென் பகுதியில் குமரி

யாறு, பஃறுளியாறு என்னும் இரண்டு பேராறுகள் பாய்ந்து வளம் பரப்பின. அந்நிலப் பரப்பில், ஏழ்தெங்க நாடு, ஏழ் மதுரைநாடு, ஏழ் முன்பாலைநாடு, ஏழ் பின்பாலைநாடு, ஏழ் குன்றநாடு, ஏழ் குணகரைநாடு, ஏழ் குறும்பனை நாடு என நாற்பத்தொன்பது நாடுகள் இருந்தன என்றும், அவை கடல்கோளால் அழிந்தன என்றும் சிலப்பதிகார உரையால் தெரிகின்றது.[1] அவ்வாறாயின் பழந்தமிழ் நாட்டில் வாழ்ந்த தமிழினமே வரலாற்றுப் பழமையுடைய இனமாகக் கொள்ளக் கிடக்கின்றது. இவ்வாறு தென்னிந்தியாவில் பன்னெடுங் காலத்திற்கு முன்பே வாழ்ந்த மக்கள் 'தமிழர்' என்று குறிக்கப்பட்டதோடு வரலாற்றுத் தெளிவு கருதித் 'திராவிடர்' என்ற பெயராலும் வழங்கப்பட்டனர். வட நூலார் தமிழரைத் 'திராவிடர்' என்று வழங்கினர்.

வரலாற்றுக்கு எட்டாத காலம் முதல் தமிழ்நாட்டில் நிலையான அரசியல் அமைப்பு சீரும் சிறப்புடனும் துலங்கியது. சேரர், சோழர், பாண்டியர் என்ற மூன்று வேந்தர் மரபுகள் இருந்து வந்தன.

> " வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
> பண்பின் தலைப்பிரிதல் இன்று "[2]

என்ற குறளிற்கு விளக்கவுரை எழுதப் புகுந்த பரிமேலழகர் பழங்குடி என்ற சொல்லிற்குப் 'படைப்புக் காலந் தொட்டு மேம்பட்டு வரும் குடி; சேர சோழ பாண்டியர் குடி என்றாற்போல' என்று மூவேந்தர் மரபினின் பழைமையினைக் குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியனாரும்

> " போந்தை வேம்பே ஆரென வருஉம்
> மாபெருந் தானையர் மலைந்த பூவும் "[3]

---

1. சிலப்பதிகாரம், இந்திரவிழவூரெடுத்த காதை— வரி 28—34.
2. திருக்குறள் 955,
3. தொல்காப்பியம் : புறத்திணை இயல் 5.

என்ற பழந்தமிழ் மூவேந்தர்களின் அடையாளப் பூமாலையைச் சுட்டியுள்ளார். மூவேந்தர் நாடுகளும் எல்லை வகுத்துக் காணப்பட்டன. குறுநில மன்னர் பலர் இம் மூவேந்தர்களுக்கு உட்பட்ட சிற்றரசர்களாய் நாட்டின் சில பகுதிகளை ஆண்டு வந்தனர். திருக்கோவலூர்ப் பகுதியைச் சுற்றியுள்ள நாட்டை ஆண்ட மலையமான் திருமுடிக்காரி, வேங்கடமலையைச் சுற்றியுள்ள பகுதியை ஆண்ட புல்லி, திண்டிவனம் என்று சொல்லப்படும் மாவிலங்கைச் சூழ்ந்த பகுதியாம் ஓய்மா நாட்டை ஆண்ட நல்லியக்கோடன், பறம்புமலைப் பகுதியை ஆண்ட பாரி, பழனிமலை ஆண்ட பேகன், பொதியமலைப் பகுதியை ஆண்ட ஆய்வேள் முதலியோர் குறுநில மன்னரிற் சிலராவர். குறுநில மன்னர்கள் வேளிர் என்றும் வழங்கப் பட்டனர். இவ்வேளிர் குடும்பங்களுக்கும் வேந்தர் குடும்பங்களுக்கும் பெண் கொள்ளும் உறவு இருந்து வந்தது. போர்க்காலத்தில் வேளிர்கள் தாம் விரும்பிய முடிவேந்தர்க்குப் படைபலமாக நின்று உதவினர்.

**அரசு :** நாடு என்பது வளம் நிறைந்ததாக இருக்க வேண்டும்; முயன்று உழைத்து வளம் தரும் நாடு சிறந்த நாடாகக் கருதப்பட மாட்டாது என்கிறார் திருவள்ளுவர் :

> **"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல**
> **நாட வளந்தரு நாடு."** [4]

ஒரு நாடு எல்லா வளங்களையும், உணவுப் பண்டங்களையும் கைத்தொழில் சிறப்புக்களையும் பெற்றிருந் தாலும் அந்நாட்டினை மாற்றார் கவராதபடி காப்ப தற்கும், அந்நாட்டில் நீதி நிலவுவதற்கும், அந்நாட்டில் மிகுதியாக விளைந்த பொருள்களை வெளிநாட்டிற்கு

---

4. திருக்குறள்: 739

ஏற்றுமதி செய்து அந்த நாட்டில் கிடைக்கக் கூடிய பொருள்களில் வேண்டுவனவற்றை இந்த நாட்டிற்கு இறக்குமதி செய்து கொள்ளவும் உதவுவதான பொறுப்புள்ள ஓர் அமைப்புத் தேவைப்பட்டது. அதுவே அரசு என்பது. அந்த அமைப்பைத் தலைமை பூண்டு இயக்குபவனே அரசனாவன். அவனுக்கு உதவியாக இருந்து வேண்டும்போது தக்க அறிவுரைகளைக் கூறுபவரே அமைச்சர். அரசாங்கப் பணிகளை நிறைவேற்ற உதவியாக இருப்பவரே அரசாங்க அலுவலர்.

" நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் "[5]

என்ற புறநானூற்றுத் தொடர் தமிழ் வேந்தர்கள் நாட்டின் உயிராக மக்களால் போற்றி மதிக்கப்பட்ட பான்மையினை உணர்த்தும். குடிகளின் கருத்தை அறிந்து அவர்களின் நன்மைக்கான நெறியில் பழந்தமிழ் வேந்தர் ஆட்சி செலுத்தினர்.

" குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு "[6]

என்ற திருவள்ளுவர் வாக்கு, பழந்தமிழ் நாட்டு அரசியல் மேன்மையினை விளக்குவதாகும். ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்னும் இரண்டு பேரவைகள் மன்னர் அரசியலைச் செவ்வனே நடத்துவதற்குத் துணையாக அமைந்து உதவின. அமைச்சர், அந்தணர், சேனைத் தலைவர், தூதர், ஒற்றர் ஆகியவர்கள் சேர்ந்து அமைந்தது ஐம்பெருங்குழு. அரசாங்கத் தலைமைக் கணக்கர், அரசகருமம் நடத்தும் தலைவர், பண்டார (Treasury) அதிகாரிகள், நாடுகாவல் அதிகாரிகள், நகரத்

5. புறநானூறு : 186
6. திருக்குறள் : 544.

தலைவர்கள், காலாட்படைத் தலைவர், குதிரைப்படைத் தலைவர், யானைப்படைத் தலைவர் ஆகியவர் சேர்ந்து அமைந்தது 'எண்பேராயம்' என்னும் குழுவாகும்.

**அரண் :** நாட்டிற்கு உள்நாட்டில் கள்வராலும், வெளிநாட்டிலிருந்து பகைவராலும் ஆபத்துண்டு. இவற்றிலிருந்து மீள வீரம் சார்ந்த படையும், நல்ல அரணும் தேவை. நாடும், தலைநகரமும் மதிலரண், நிலவரண், நீரரண், காட்டரண், மலையரண் என்னும் ஐவகை அரண்களுள் சிலவற்றையேனும் பலவற்றையேனும் கொண்டிருந்தன. மதில்கள் உயரம், அகலம், திண்மை, அருமை ஆகிய இந்நான்கு இயல்பும் கொண்டனவாய் இருத்தல் வேண்டும் என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்.[7] ஆர்க்கிமெட்டீஸ் என்பவர் சைரக்யூஸில் உரோமரது முற்றுகையை எதிர்க்கப் பலவகை எந்திரங்களைக் கண்டுபிடித்தார் என்றும், அவையெல்லாம் 'யவனப் பொறிகள்' என்ற பெயரோடு தமிழ்நாட்டுக் கோட்டைகளில் இடம் பெற்று விளங்கின என்றும் அறிஞர் குறிப்பிடுவர்.[8]

**காவலரின் கடமைகள் :** பழந்தமிழ் நாட்டின் மக்கள் பெருமளவு பயிர்த்தொழிலில் ஈடுபட்டிருந்தனர். பயிர்த்தொழிலுக்கு மண்வளமும் நீர்வளமும் மிகுதியும் தேவை. எனவே நீர்நிலையை அகலப்படுத்துதலும், ஆழமாக்குதலும், அவற்றின் கரையை உயர்த்துதலும், ஆற்றின் குறுக்கே அணைகட்டுதலும், நீர் பல வழி

7. "உயர்வகலந் திண்மை அருமையிந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல்"

—திருக்குறள் : 743

8. பேராசிரியர் தெ. பொ. மீ. — 'தமிழா நினைத்துப் பார்' — பக்கம் 11.

களில் பிரிந்து பாயும்படி கால்வாய்களை வெட்டுதலும் அரசனுடைய கடமைகளாகக் கருதப்பட்டன.

" காடுகொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம்பெருக்கி "[9]

என்றபடி காட்டைத் திருத்திக் கழனியாக்கி, குளத்தை வெட்டி நீர்வளத்தைப் பெருக்கி உழவுத்தொழில் மேலோங்க அரசர் ஆவன செய்தனர் என்பதனை அறியலாம். அடுத்துக் கல்விச் செல்வத்தினை நாட்டு மக்கள் குறையறப் பெறுவதற்கு ஒருநாட்டு மன்னன் ஆவன செய்தல் வேண்டும். சங்க காலத்தில் ஆண்களோ டன்றிப் பெண்களும் கல்வி கற்றிருந்தனர் என்பதனை முப்பதிற்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் பாடல்கள் கொண்டு தெளியலாம். காவலராக அன்றிப் பாவலராகவும் விளங்கிய அரசர் பலர் சங்க காலத்தே வாழ்ந்தனர். அரச மாதேவியரும் பாடல்கள் பாடியுள்ள சிறப்பினைச் சங்கத் தொகை நூல்களில் காணலாம்.

நீதிநெறி திறம்பாது முறையான செங்கோல் செலுத்துதல் காவலன் கடமையாகக் கருதப்பட்டது. 'தமரெனக் கோல் கோடாது பிறரெனக் குணங் கொல்லாது' முறை வேண்டுவோர்க்கு முறை வழங்குதல் அரசனின் கடமையாகும். சோறு சமைக்கும் தீ அல்லது வேறு தீயின் கொடுமை அறியாமலும், ஞாயிற்றின் வெம்மை அல்லது வேறு வெம்மை அறியாமலும் குடி மக்கள் வாழ அவர்களைக் காக்கும் ஆட்சி முறையே சிறந்தது என்பது அக்காலக் கொள்கைகளாக இருந்து வந்தன. அரசன் காட்சிக்கெளியனாய் கடுஞ்சொல்லன்

9. பட்டினப்பாலை : வரி 283, 284.

அல்லனாய் விளங்குதல் வேண்டும் என்பர் திருவள்ளுவர்.[10]

**புலவரையும் கலைஞரையும் போற்றுதல்:** புலமைச் செல்வர்களை அக்கால அரசர்கள் பெரிதும் மதித்தனர்; தம் கண்ணினும் இனிய கேளிராகக் கருதினர். அரசியலில் நெருக்கடி நேர்ந்தபோது புலவர்களின் அறிவுரைகள் கேட்டும், அவர்களின் இடித்துரைகளால் திருந்தியும் செம்மை பிறழாமல் ஆட்சி புரிந்தனர். அரசனுக்கும் அவன் மக்களுக்கும் இடையிலும், ஓரரசனுக்கும் மற்றோர் அரசனுக்கும் இடையிலும் பிணக்கு நேரிட்டபோதெல்லாம் புலவர் இடை நின்று தக்க அறவுரை கூறித் திருத்தி அமைதி கோலியுள்ளனர். வீட்டுக் குழப்பமாயினும் சரி, நாட்டுக் குழப்பமாயினும் சரி, புலவர்கள் தலையிட்டு நன்மை புரிந்தனர். அரசர்களால் பொன்னும் பொருளும் பெற்று அதைப் பிறருக்கும் வாரி வழங்கி மகிழ்ந்து வாழ்ந்தனர். கலைஞர்கள்—பாணர், கூத்தர், விறலியர் முதலியோர் தாம் கற்ற கலைத் திறமையினை மன்னன் முன் காட்டி அரங்கேற்றிப் பெரும் பரிசு பெற்று, வறிய கலைஞர்க்கும் வளம் பெற வழிகாட்டி மற்றக் கலைஞர்க்கும் பகுத்தளித்து வாழ்ந்து வந்தனர். இயல் இசை, நாடகக்கலைகள் இவர்களாற் பெரிதும் வளர்ந்தன. மன்னனையே யன்றி மக்களையும் இவர்கள் தம் கலைத் திறமையால் மகிழ்வூட்டினர். சிற்றூர்களின் திருவிழாக்களிலும் இக்கலைஞர் கூட்டம் தம் கலைத்திறமையைக் காட்டி மக்களைக் களிப்பூட்டிய செய்தி பொருநராற்றுப் படையால் அறியக் கிடக்கின்றது.[11]

---

10. "காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்" — திருக்குறள் : 386

11. பொருநராற்றுப் படை-வரிகள் 1,-3.

**போர் முறை:** நாடு காவலுக்கு நல்ல படை தேவை. யானைப் படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட் படை ஆகிய நான்கே அந்நாளில் பெரிதும் போற்றப் பட்டன. உள்நாட்டுக் குறும்பையும், வெளிநாட்டுப் படையெடுப்பையும் அரசனின் படைகள் தடுத்து நிறுத்தின. போர்க்களத்திலும் ஓர் அறநெறியினைத் தமிழர் கையாண்டனர். படையெடுத்துச் செல்லுமுன் பகைவன் நாட்டில் வாழும் பசுக்கள், அறவோர், மகளிர், பிணியாளர், மகப்பேறு பெருதவர் முதலியோர் பாது காப்பான இடத்திற்குச் சென்று விடுக என்று அறிவுறுத்திவிட்டே மன்னர் பின்னர் படையெடுத்துச் சென்றனர். பகைவர் நாட்டின் பசுமந்தைகளைக் கவர்தலே போரின் தொடக்கமாக இருந்தது. பசுக்களைக் கவர்தலும் அப்பசுக்களுக்குரியவர் அவற்றை மீட்டலும் 'வெட்சி' எனப் பெயர்பெறும், அரசன் மாற்ருர் மண்ணை வெல்ல வேண்டும் என்று கருதிப் பகைவர் நாட்டின் மீது படையெடுத்துச் செல்லுதலும், படை யெடுக்கப்பட்டவன் எதிர்நின்று தாக்குதலும் 'வஞ்சி' எனப்படும். நகரத்தின் புறமதிலை முற்றுகையிடுதலும், முற்றுகையிடப்பட்ட அரசன் மதிலைக் காத்தலும், 'நொச்சி' என்று கூறப்படும். இருபெருவேந்தரும் களங்குறித்துச் செய்யும் பெரும்போர் 'தும்பை' எனப் பெயர் பெறும். போரில் வெற்றி பெறுதல் 'வாகை' எனப்படும். வெட்சி, வஞ்சி, நொச்சி. தும்பை, வாகை முதலியன பூக்களின் பெயர்கள். அரசரும் படை மறவரும் அப்பூக்களைச் சூடிக்கொண்டே போர் புரிவர். இதனல் தமிழர் அகவொழுக்கத்தில் இடம்பெற்ற பூக்கள் புறவொழுக்கத்திலும் இடம் பெற்றுள்ள சிறப்புப் புலனுகும். போர் செய்யும்போது சோர்ந்த மனம் உடையவனையும், குழந்தை பெருதோனையும்,

முன்வைத்த அடியைப் பின் பெயர்த்தவனையும், பெண் பெயர் கொண்டவனையும், படை இழந்தோனையும், ஒத்த படை எடாதோனையும் கொல்லாது விடுதலும், கூறிப் பொருதலும் உண்டு என்பது தொல்காப்பிய உரையினால் தெரியவருகின்றன.

**அரசாங்க வருவாய்:** அரசாங்க வருவாய் முறைகளுள் (Sources of Revenue) மூன்றைச் சிறப்பாகக் குறிக்கலாம். ஒன்று, குடிமக்களிடமிருந்து வாங்கும் வரி; இரண்டு, வாணிகப் பொருள்களுக்குரிய சுங்கம்; மூன்று, சிற்றரசரிடமிருந்து கிடைக்கும் திறை. இம்மூன்றும் அல்லாமல் தோல்வியடைந்த நாடுகளிலிருந்து கொண்டுவரப்படும் செல்வமும், தன் நாட்டில் கிடைத்த புதையல் பொருளும். வழித் தோன்றல்கள் இல்லாமையால் வரும் பொருளும் அரசனுக்குரிய பொருள்களாகும்.

குடிமக்களுடைய வருவாயில் ஆறிலொரு பங்கை அரசன் வரியாகப் பெறுவான். உள்நாட்டு வாணிகத்தாலும் வெளிநாட்டு வாணிகத்தாலும் சுங்கப் பணம் கிடைத்து வந்தது. உள்நாட்டு வணிகரிடம் சுங்கம் வசூலிக்கப்பட்டது என்பதனை. 'சாத்தொடு வழங்கும் உல்குடைப் பெருவழி'[12] என்னும் பெரும்பாணாற்றுப்படை அடிகள் கொண்டு அறியலாம். கடல் வாணிகத்துக்குரிய ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்களில் 'உல்கு' எனப்படும் சுங்கப்பொருள் மிகுதியாகக் கிடைத்து வந்தது என்பதனைப் பட்டினப் பாலை கொண்டு அறியலாம்.[13] பேரரசனுக்கு அடங்கிய சிற்றரசர் ஆண்டுதோறும் திறைப்பொருள் செலுத்தி வந்த செய்தியினை,

---

12. பெரும்பாணாற்றுப்படை - வரி 80, 81
13. பட்டினப்பாலை - வரி 120-125.

**"திறைசுமந்து நிற்கும் தெவ்வர் போல"**[14]

என்ற சிலப்பதிகாரத் தொடர் கொண்டு அறியலாம்.

கரிகால்வளவன் இமயம் சென்றபோது அவன் ஆட்சிக்கு அடங்கிய வச்சிர நாட்டு மன்னன் முத்துப் பந்தரையும், மகத நாட்டு மன்னன் பட்டி மண்டபத்தையும் தந்தான் எனச் சிலப்பதிகாரம் குறிப்பிடும்.[15]

**ஊர் மன்றங்கள்:** தமிழ்நாட்டுச் சிற்றூர்களில் பொதுமன்றங்கள் இருந்தன. ஆட்சி மன்ற உறுப்பினர் ஊர்ப் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஊரின் ஒவ்வொரு பகுதியினரும் தம் பகுதிக்குரிய ஒருவரை ஓலை மூலம் தேர்ந்தெடுத்தனர். வாக்காளரின் பெயர் பொறித்த ஓலைகள் குடத்தினுள் இடப்படும். அக்குடத்தின்மேல் அரசாங்க முத்திரை வைக்கப்படும். ஆவண மாக்கள். அம்முத்திரையை நீக்கி ஒவ்வோர் ஓலையாகப் படிப்பர். இச்செய்தியை,

**"கயிறுபிணிக் குழிசி ஓலை கொண்மார்**
**பொறிகண்டு அழிக்கும் ஆவண மாக்களின்"** [16]

என்னும் அகநானூற்றுப் பகுதியால் அறியலாம். இவ்வாறு ஊர்ப்பெருமக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர் ஊர் மன்றத்தின் உறுப்பினராகக் குறிப்பிட்ட காலம் வரை பணி புரிவர். இத்தேர்தல் முறை பிற்காலச் சோழர் ஆட்சியிலும் தொடர்ந்து வந்தது என்பதனைக் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. குற்றம் செய்தவரைத் தண்டிப்பது ஊர் மன்றங்கள் மேற்கொண்ட ஓர் கடமையாகும். ஊர் மன்ற உறுப்பினர்கள் ஐந்து

---

14. சிலப்பதிகாரம் காட்சிக் காதை – வரி 36
15. சிலப்பதிகாரம் இந்திரவிழவூரெடுத்த காதை: வரி 89-102
16. அகநானூறு: 77

பிரிவினராக இருந்து பணியாற்றுவர். குடிமக்களின் குறைபாடுகளையும் முறையீடுகளையும் நேர்முகமாகக் கேட்டறிந்து நீதி வழங்குதலும், அறநிலையங்களைப் பாது காத்தலும் ஒரு சாரார் கடமைகளாக இருந்தன. நீர் நிலைகளைக் கண்காணித்தனர் பிறிதொரு சாரார். நெல் முதலிய தானியங்களாகவும், காசாகவும் அரசாங்கத் திற்குக் குடிகள் செலுத்தும் நிலவரி முதலியவற்றை வாங்குவது மற்றொரு பிரிவினர் கடமையாகும். இவ்வாறு வாங்கப்பட்ட பொற்காசு, செப்புக்காசுகளை ஆராய்ந்து தொகுப்பர் வேறொரு பிரிவினர். இவ்வாறு இவ்வைந்து பிரிவினரும் (வாரியம்) யாதோர் ஊதியமு மின்றி ஊர் நலம் ஒன்றையே பொருளாகக் கருதி ஓர் ஆண்டிற்கு உழைப்பர். அவ்வப்போது அரசாங்க அதிகாரிகள் சிற்றூர்கட்கு வந்து இவற்றை யெல்லாம் மேற்பார்வையிட்டுச் செல்வர். இவ்வாறு நாடு முழுவதும் ஊர் மன்றங்களின் வாயிலாகச் சிற்றூர் ஆட்சி செம்மை யாக நடந்து வந்தது.

**மக்கள் வாழ்க்கை :** தமிழ்நாடு நிலவமைப்பால் ஐந்து பிரிவாகப் பகுக்கப் பெற்றது. மலையும் மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சி என்றும், காடும் காட்டைச் சார்ந்த இடமும் முல்லை என்றும், வயலும் வயலைச் சார்ந்த இடமும் மருதம் என்றும் கடலும் கடலைச் சார்ந்த பகுதியும் நெய்தல் என்றும், மழையின்றி வளம் குறைந்த காடும் மலையும் கொண்ட பகுதி பாலை என்றும் கூறப்பட்டன. மலையில் வாழ்ந்தவர் குறவர், குறத்தியர் எனப்பட்டனர். இவர்கள் வழிபட்ட கடவுள் முருகவேள் ஆவர். மலைநெல், மூங்கிலரிசி, தினை, கிழங்கு முதலிய வற்றை உணவாகக் கொண்டனர். வேட்டையாடுதலும் தேன் எடுத்தலும் இவர்களது தொழில். தொண்டகப்

பறையும், குறிஞ்சியாழும் இன்னிசைக் கருவிகள். இந்நிலத்திற்குரிய பண் குறிஞ்சியாகும்.

முல்லை நிலத்தில் வாழ்ந்தவர் ஆயர், ஆய்ச்சியர் ஆவர். இவர்கள் வழிபடு கடவுள் திருமால் ஆவர். வரகு, சாமை, முதிரை என்பன இவர்களது உணவுப் பொருள்களாகும். முல்லையாழும் சாதாரிப் பண்ணும், ஏறுகோட் பறையும் இவர்களுக்கு உரியவை. ஆனிரைகளை மேய்த்தல் இவர்களுடைய தொழில். 'ஏறு தழுவுதல்' என்ற வீர விளையாட்டு இவர்களுக்கே உரியது.

மருதநில மக்கள் உழவர், உழத்தியர் ஆவர். இவர்கள் இந்திரனை வழிபட்டனர். வெண்ணெல்லரிசியும், செந்நெல்லரிசியும் மருதநில உணவாகும். கிணை, முழவு, மருதயாழ் இந்நிலத்திற்குரிய இசைக் கருவிகள். இந்நிலத்துக்குரியது மருதப்பண். உழவுத் தொழில் செய்தல், புதுநீராடல், விழாக்கொண்டாடுதல் இந்நில மக்களின் தொழில்களாகும்.

பரதவர் நெய்தல்நில மக்களாவர். இவர்கள் வாழ்ந்த குடியிருப்புகள் 'பாக்கம்' என்றும், 'பட்டினம்' என்றும் பெயர் பெற்றிருந்தன. இவர்களுக்கு மீன் பிடித்தல் முக்கியமான தொழில். உப்பு விளைவித்து அதனை மருதநில நெல்லிற்கு விற்றலும், மருதநில நெல்லிற்குப் பண்டமாறு கொள்ளலும், மீன் உணக்கலும், மீன் விற்றலும், கடலாடுதலும் இவர்கள் தொழிலாகும். இவர்கள் 'வருணன்' என்ற தெய்வத்தை வணங்கினர்.

பாலை நிலத்தில் வாழ்ந்தவர் எயினர், மறவர் எனப் பெற்றனர். இந்நிலத்திற்குரிய தெய்வம் கொற்றவை. எயினர் வழிச்செல்வோரைத் துன்புறுத்திப் பொருள் பறித்து வந்தனர். துடி, பாலை யாழ் என்பன இந்நிலத்திற்குரிய இசைக்கருவிகள். இந்நிலத்திற்குரிய யாழ், பாலையாழ். இவர்கள் கொற்றவையை வழிபடும்

முறையைச் சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரியில் காணலாம்.

**நகர வாழ்க்கை :** சேரரது தலைநகரம் வஞ்சி சோழரது கோநகரம் உறையூர். பாண்டியரது கோநகரம் மதுரை. மன்னர்க்குரிய தலைநகரங்கள் மதில் முதலிய அரண்களுடன் அமைந்திருந்தன. அரசன் வாழ்ந்த அரண்மனை நகரத்தின் நடுவிடத்தே பொலிவு பெற்றுத் திகழ்ந்தது. அமைச்சர், படைத்தலைவர், வணிகர், பல திறப்பட்ட தொழிலாளர் முதலியோர் வாழ்வதற்கேற்ற பல்வேறு தெருக்கள் வரிசை வரிசையாக அமைந்திருந்தன. ஆங்காங்கே கோயில்களும், பொது மன்றங்களும், சோலைகளும் நிறைந்து நகரம் அழகாகத் துலங்கிற்று. நகரத்து அழுக்கு நீரை வெளியிற் கொண்டு செல்லும் சாக்கடைக் கால்வாய்கள் நிலத்தின் கீழே மறைவாக அமைக்கப்பட்டிருந்தன.

**இல்வாழ்க்கை:** ஒருவனும் ஒருத்தியும் தாமே உள்ளத்தால் ஈர்க்கப்பட்டுக் காதல் கொண்டு பின் கற்பு நெறியில் தலைப்படுவது அக்காலத்தில் சிறப்பாகப் போற்றப்பட்டது. தமிழர் காதல் வாழ்வு விழுமியது; போற்றத் தக்கது. காதலால் ஒன்றுபட்ட இருவரும் ஒருயிர் போல் அறநெறியில் தம் வாழ்வை நடத்துவதே 'இல்வாழ்க்கை' எனப் போற்றப்பட்டது. இல் வாழ்க்கையின் அடிப்படை அன்பாகும்; கட்டடம் அறமாகும். இது குறித்தே திருவள்ளுவரும்,

> " அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
> பண்பும் பயனும் அது "[17]

என்று கூறிப் போந்தார். இல்லறத்தில் மனைவியின் நிலை தலையாய இடம் பெற்றதாகும். 'மனைக்கு

17. திருக்குறள் : 45

விளக்கம் மடவார்' எனப் புலவர் பாடியுள்ளனர். தானே அன்புடன் ஆக்கிய உணவினைக் கணவன் மிக இனிதெனக் கூறி உண்ணுதலைக் கண்டு மனைவி மகிழ்வாள்.

" தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் று ஒண்ணுதல் முகனே.''[18]

விருந்தினரைப் போற்றலும், சுற்றம் தழுவலும், அறவோர்க் களித்தலும், துறவிகளை உபசரித்தலும் இல்லறக் கடமைகளாகப் போற்றப்பட்டன.

**பீடு நிறைந்த பெருவாழ்வு:** பழந்தமிழர் உழுதொழிலை மேற்கொண்டிருந்தனர். செய்யுந் தொழிலாக நெய்யுந் தொழிலைக் கொண்டு நேர்த்தியான உடைகளை நெய்து மேல் நாடுகளுக்கும் அனுப்பி வைத்தனர். மிக நுண்ணிய வேலைப்பாடு கொண்ட அணிகலன்களை அமைத்து அவற்றை அணிந்து தம்மை அழகுபடுத்திக் கொண்டனர். வெண்கலக் கண்ணார், தச்சர், கொல்லர், ஓவியர், சிற்பியர், மண்பாண்டத் தொழிலாளர், பொற் கொல்லர், தையற்காரர், தோல்வேலை செய்வோர், மலர் மாலை புனைவோர் முதலிய பலவகைத் தொழிலாளர்கள் சமுதாயத்தில் வாழ்ந்தனர் என்பதைச் சிலப்பதிகாரம் கொண்டு அறியலாம்.[19] உள்நாட்டு வாணிகம் உற்சாகந் தரும் நிலையில் இருந்தது. வெளி நாட்டு வாணிகம் பிளினி, தாலமி, பெரிப்பிளஸ் என்னும் நூலாசிரியர் ஆகியோர் வரைந்துள்ள குறிப்புக்கள்படி மிகச் சிறப்பான நிலையினை எட்டியிருந்தது. கட்டடக்கலை,

---

18. குறுந்தொகை : 167
19. சிலப்பதிகாரம்—இந்திரவிழவூரெடுத்த காதை—வரி 28—34.

ஓவியக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை, நடனக்கலை முதலிய நுண்கலைகளில் தமிழர் தலைசிறந்து விளங்கினர். தாம் ஈட்டிய பொருளைப் பிறர்க்கும் பகிர்ந்து கொடுத்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். உலகம் வாழவேண்டும் என்னும் உயரிய நோக்கு அவர்கள் செயல்களில் மிளிர்ந்தது. மெய்யுணர்வுத் துறையிலும் உயரிய கொள்கைகளை அவர்கள் உளங் கொண்டிருந்தனர். சுருங்கச் சொன்னால் தமிழர் வாழ்வு பீடு சான்ற வாழ்வாக, அறநெறி போற்றிய வாழ்வாக, செம்மை துலங்கிய வாழ்வாக, பண்பாடு நிலவிய வாழ்வாக மிளிர்ந்தது என்பது நன்கு புலனாகும்.

# 3

# தமிழர் பண்பாட்டின் வரலாறு

உலகம் தோன்றிப் பன்னெடுங்காலம் கழிந்து விட்டது. உலகம் தோன்றிய காலத்தில் தீக்குழம்பாக இருந்த மண் முதலில் குளிர்ந்து அமைந்த நிலப்பகுதி தென்னிந்தியாவே என்றும், இங்குத்தான் முதன் முதலில் மனித இனம் தோன்றி இருக்கக் கூடும் என்றும் புவி இயல் ஆராய்ச்சியாளர் பலர் கருதுகின்றனர். இப்போது இந்தியக் கடலாக உள்ள பகுதியில் பரப்பான நிலமும் மலையும் ஆறும் இருந்து பிறகு கடலில் ஆழ்ந்து மறைந்தன என்று கூறுகின்றனர். பழந்தமிழ் இலக்கியங்களும் குமரிமலை, பஃறுளியாறு முதலியன இருந்து கடல்கோளால் மறைந்தன என்று குறிப்பிடுகின்றன.[1] இதனால் பழந்தமிழ் நாட்டு மக்களே தொன்மையான மக்கள் இனம் என்ற கருத்து வலியுறுகின்றது. தமிழர் வாழ்வு பழமை உடைத்து ஆதலினால் தமிழர் வாழ்வும் படிப்படியே சிறப்பாக வளர்ந்து நல்ல வாழ்வு பெற்று நாளடைவில் அவ்வினத்திற் கென்றே ஒரு தனிப் பண்பாடு வளர்ந்தது.

பண்பாடு என்ற சொல் பண் + பாடு என அமையும். இதன் பொருள் சான்றாண்மையாகிய ஒழுக்கம் அல்லது உயர்ந்த வழிச் செல்லுதல் என்பது ஆகும்.

---

1. "பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள"

—சிலப்பதிகாரம்: 11: 19 20.

"பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்"[2] 'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்"[3] முதலான தொடர்புகள் "பண்பாடு" என்ற சொல்லின் பொருளை உணர்த்தும்.

**அகமும் புறமும்:** பண்டைத் தமிழர் தம் வாழ்வினை அகம் புறம் என இருபிரிவாகப் பகுத்து ஒழுகினர். அகம் என்பது, ஒத்த வயது, ஒத்த குணம், ஒத்த அழகு, ஒத்த திரு உடைய தலைவனும் தலைவியும் தம்முட் கூடித் தாமே அனுபவித்துப் பிறருக்குக் கூறப் படாததாய இன்பமாகும். புறம் எனப்படுவது வாழ்வின் பிற கூறு பாடுகளாகிய வீரம் கொடை முதலிய பண்புகளை உணர்த்தும். பழந்தமிழ் இலக்கியங்களாகிய பத்துப் பாட்டும் எட்டுத்தொகையும் பழந்தமிழர் வாழ் வினையும், அவர்தம் பீடு சார்ந்த பண்பாட்டின் பெருமையினையும் பரக்கப் பேசுகின்றன.

**அகவாழ்வு:** குடும்ப வாழ்விற்குப் பழங்காலத்தில் பெருமதிப்பு இருந்தது. கற்பு நெறியில் நின்று இல் வாழ்க்கை நடத்தி, வரும் விருந்தினரைப் பேணி, மக்களைப் பெற்று மாண்புற வளர்த்திடும் மனைவி குடும்பத் தலைவியாக மதிக்கப்பட்டாள். 'மனைக்கு விளக்கு ஆகிய வாணுதல்' என்று குடும்பத் தலைவி பாராட்டப் பெற்றாள். திருவள்ளுவரும் "மங்கலம் என்ப மனைமாட்சி"[4] என்று இத்தகைய அன்பு வாழ்க்கையினைப் போற்றிப் புகழ்ந்துள்ளார். குடும்ப வாழ்க்கை இல்லறம் என்ற நல்லறமாகப் போற்றப் பெற்றது. கணவன் மகிழும் வகையில் உணவு சமைத்து அளித்தலும், வரும் விருந்தினரை இன்முகத்தோடு

---

2. நெய்தற்கலி: 16
3. திருக்குறள் : 996
4. திருக்குறள் ; 60

வரவேற்று உபசரித்தலும், சுற்றத்தினரைக் காத்தலும் மனைவியின் கடமைகளாகக் கருதப்பட்டன. பண்பு நிறைந்த மனைவியை வாழ்க்கைத்துணையாகப் பெற்று வாழும் நெறியே ஒருவன் வாழ முயலும் நெறிகளுள் சிறந்தது என்று கருதப்பட்டது. சுருங்கச் சொன்னால் ஆண்களுக்குத் தாம் மேற்கொண்ட கடமையே உயிரா கவும், மகளிர்க்குத் தம் கணவனே உயிராகவும் கொள்ளப் பெற்றனர் என்பது அறியக் கிடக்கின்றது.[5]

**புறவாழ்வு :** புறத் துறையிலும் அறநெறி போற்றி வாழ்ந்த இனம் தமிழ் இனமாகும். புறத்துறையில் முதலாவது இடம் பெறுவது அரசியலாகும். மக்களுக் காகவே மக்கள் நலத்திற்காகவே மன்னர்கள் அக் காலத்தில் வாழ்ந்தனர். நீதியுடனும், நேர்மையுடனும் ஆளும் மன்னவன் மக்களால் "இறை" என மதிக்கப் பெற்றான். திருவள்ளுவரும்,

> **"முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
> **இறையென்று வைக்கப்படும்"** [6]

என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனால் மன்னனே நெல்லினும், நீரினும் உயிராகக் கருதப் பட்டான்.[7] பழந்தமிழ்நாட்டில் மன்னனிடத் தில் நால்வகைப் படையும் சிறப்புற அமைந்திருந் தாலும் அவன் வெற்றிக்கு அடிப்படை அப்படைகள்

---

5. "வினையே ஆடவர்க் குயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்"

—குறுந்தொகை: 135

6. திருக்குறள்—388

7. "நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே,
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"

—புறம்: 186

அல்ல என்றும், அறமே அடிப்படை என்றும் பழந்தமிழர் நம்பினர். தீமை செய்தவர் அறத்தின் தண்டனையிலிருந்தும் தப்ப முடியாது என்று உறுதியாக நம்பினர். போர்க்களத்திலும் அறத்தை மறவாமல் போற்றும் பண்பாடு தமிழரிடம் இருந்தது. ஓர் அரசன் பகை வேந்தன் நாட்டின் மீது படை எடுப்பதற்கு முன் அந்நாட்டிலுள்ள பசுக்கள், சான்றோர், மகளிர், நோயாளர், மகப்பேறு எய்தாதவர்கள் முதலியவர்களைப் பாதுகாப்பான இடத்திற்கு அப்புறப்படுத்திவிட்டுப் பின்னரே போர் மேற்கொண்டனர். இச்செங்நெறி "அறத்தாறு நுவலும் பூட்கை மறம்" என்று போற்றப்பட்டது.[8] போரில் புறங்காட்டி ஓடுவது பெருங் குற்றம் என்று அக்காலச் சமுதாயம் கருதியது. மகளிரும் வீர உணர்ச்சி பெற்றிருந்தனர். முதல் நாள் போரில் தம் தந்தையும், இரண்டாம் நாள் போரில் தம் தமையனும், மூன்றாம் நாள் போரில் தம் கணவனும் ஆண்மையோடு போரிட்டு இறந்திருக்கவும் அது குறித்துக் கலங்காது மறுநாள் போரில் கலந்து கொள்ளத் தன் சிறு வயது பாலகனை அழைத்துத் தலையில் எண்ணெயிட்டு வாரி வெள்ளுடை அணிந்து போருக்குச் சென்று வருக என்று விருப்போடு அனுப்பிய வீரத்தாய்மார் தமிழகத்தே நிறைந்திருந்தனர்.[9] போரிலே பெற்ற திறைப் பொருள்களைப் பாணர், கூத்தர், விறலியர் முதலிய கலைஞர்களுக்குப் பரிசிலாகக் கொடுத்து மகிழும் வழக்கம் அக்கால அரசரிடையே இருந்தது. ஒத்த வீரமுடைய பகைவர் அல்லாதவரோடு போர் புரிதலும், படைக்கலம் அற்றவரோடு போர் புரிதலும் ஆண்மைக் குறைவு என்று கருதப்பட்டது. முதுகில் புண்படுதல் மானக் குறைவாக மதிக்கப்பட்டது.

---

8. புறநானூறு : 96.
9. புறநானூறு : 279.

**நீதிமுறை :** நாட்டுப் புறங்களிலும் தனித்தனியே நீதி மன்றங்கள் அமைந்திருந்தன. ஒவ்வோர் ஊரிலும் ஊர்ப் பெருமக்கள் கூடி ஊரின் நலனை நாடி ஊரை ஒட்டிய பொதுக் கடமைகளைச் செய்து வந்தனர். அவர்கள் கூடி ஊர் வழக்குகளை, ஊர்ச் செய்திகளைத் தீர்மானித்த இடம் "மன்றம்" எனப்பட்டது, நகர மக்களுக்குள் வழக்கு நேரும்போது வழக்கைக் கேட்டுத் தீர்ப்புக் கூறுவதற்கு நீதி மன்றம் இருந்தது, இந்நீதி மன்றம் "அறங்கூறு அவையம்" என்று அந்நாளில் போற்றப்பட்டது. நாடு முழுவதும் அறங்கூறு அவையத்தார் நடுநிலை திரியாமல் நீதியைக் காக்குமாறு பார்த்து வருவது அரசனுடைய பொறுப்பாக இருந்தது. அக்காலத்தில் பத்திரங்களைப் பதிவு செய்யும் முறை சிறக்க அமைந்திருந்தது. பத்திரங்கள் பனையோலை, செப்பேடு முதலியவற்றில் வரையப் பெற்றிருந்தன. பெருஞ்சுவர்களின் கற்களிலும் சில ஆவணங்கள் பொறிக்கப் பெற்றிருந்தன. ஆவணங்களைப் பதிவு செய்து காக்கும் நிலையம் "ஆவணக் களரி" எனப்பட்டது.

**வாணிகம் :** ஒரு நாட்டின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாக விளங்குவது உள்நாட்டு, வெளிநாட்டு வாணிபமாகும். வாணிகத்துறை நெறியும் நேர்மையும் கொண்டதாக இலங்கியது. அங்குக் களவுக்கும் வஞ்சத்திற்கும் கடுகளவும் இடமுல்லை. அக்கால வாணிகர் நடுநிலைமை நாடிய நல்ல நெஞ்சினர் என்றும், பழிக்கு அஞ்சி உண்மையே உரைத்தார்கள் என்றும் தம் பொருளையும் பிறர் பொருளையும் ஒப்பவே கருதினர்கள் என்றும், பிறரிடமிருந்து கொள்வது மிகையாகக் கொள்ளாமலும் பிறருக்குக் கொடுப்பது குறைவாகக்

கொடாமலும், நடுநிலையாக இருந்து பல பண்டங்களை வாங்கி விற்றுவந்தனர் என்றும் பட்டினப்பாலை குறிப்பிடுகின்றது:

> " நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
> வடுவஞ்சி வாய்மொழிந்து
> தமவும் பிறவும் ஒப்ப நாடி
> கொள்வதூஉம் மிகை கொளாது
> கொடுப்பதூஉம் குறைகொடாது
> பல்பண்டம் பகர்ந்து வீசும்." [10]

தமிழ் நாட்டின் கடற்கரைப் பட்டினங்கள் உலக வாணிபச் சந்தையிலே சிறப்பிடங்களைப் பெற்று விளங்கி வந்தன. தமிழர் திரைகடலோடியும் திரவியம் தேடினர். கடற்பயிற்சி மிக்கிருந்த காரணத்தால் ஆழி, புணரி, முந்நீர், பௌவம், பரவை, ஆர்கலி, கடல் முதலான பல சொற்கள் "கடல்" என்னும் ஒரே பொருளைக் குறிக்கத் தமிழில் ஏற்பட்டன. கப்பல்களைத் திசை காட்டி அழைக்கும் கலங்கரை விளக்கங்கள் பழங்காலத்தில் சிறப்புற அமைந்திருந்தன.[11] கிறித்துவுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழரின் கப்பல்கள் சேர நாட்டுத் தேக்கு மரங்களை வெளிநாடுகளுக்குக் கொண்டு சென்று அந்நாட்டின் பல நகரங்களில் பல கட்டடங்கள்

---

10. பட்டினப்பாலை; வரிகள் 207-212

11. "வானம் ஊன்றிய மதலை போல
ஏணி சாத்திய ஏற்றருஞ் சென்னி
விண்ணுற நிவந்த வேயா மாடத்து
இரவின் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி
உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும்."
—பெரும்பாணாற்றுப்படை: 346—350

எழுப்பத் துணைபுரிந்திருக்கின்றன. யானை, மயில் தோகை, அகில், சந்தனம், முத்து முதலிய பொருள்கள் எகிப்துக்கும் சிரியாவுக்கும் பாபிலோனியாவுக்கும் இங்கிருந்து ஏற்றுமதியாயின. தமிழ் அரிசி, "அரிசா" என்று வழங்கப்பட்டு, கிரேக்க மொழியில் "ரைஸ்" ஆனது; சந்தனம் "சந்தல்" ஆனது; முத்து வடமொழியில் "முத்தா" ஆனது; தமிழ் நாட்டிலிருந்து முத்து, மிளகு, அரிசி, மயில், யானைத்தந்தம், பருத்தியாடை முதலியன வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி ஆயின. மது வகை, கருப்பூரம், மணநீர், குங்குமம், குதிரை முதலியவை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, முசிறி, தொண்டி முதலியன அக்காலத்தில் சிறந்த துறைமுகப் பட்டினங்களாக விளங்கின. ஓடம், பரி, பரிசல், புணை, கப்பல், கலன், வங்கம், நாவாய், தோணி, திமில், அம்பி முதலான பெயர்ச்சொற்கள் ஓடங்கள், கப்பல்கள் பல இருந்தன என்பதற்குச் சான்றுகளாகும். பண்டமாற்றோடு நாணயமாற்றும் ஓரளவு இருந்து வந்தது. தமிழ் நாட்டோடு உரோமர், கிரேக்கர், அராபியர் தமிழ் நாட்டுக் கடற்கரைப் பட்டினங்களுக்கு வந்து தங்கி வாணிபம் செய்தனர். உரோம நாட்டுக் குறிப்புக்களின்படி (Peutingerian Tables of 225 A.D.) ஈராயிரம் உரோமர்கள் அடங்கிய படை ஒன்று முசிறித் துறைமுகத்தில் தங்கியிருந்ததாகத் தெரிகிறது. தமிழ் நாட்டு முத்தை உரோம நாட்டுப் பெண்டிர் பெரிதும் விரும்பினர். உலோலா என்னும் உரோம நாட்டு அரசி 300,000 தங்க நாணயத்திற்கு ஈடான முத்துக்களை அணித்திருந்தாள். உரோம நாட்டு மக்களின் இத்தகைய ஆடம்பர வேட்கையால் அந்நாட்டுப் பொருளாதார நிலைமை மிகவும் பாதிக்கப்பெற்றதாகப் பெரிப்பிளஸ்

(Periplus) குறிப்பிடுகின்றது.[12] ஆண்டொன்றுக்கு உரோம நாடு, தான் இந்தியாவிலிருந்து பெறும் ஆடம்பரப் பொருள்களுக்காக மிலியன் பவுனுக்கு ஈடான பொன்னை வாரி வழங்கி வறுமையுற்று விடுகிறதே என உரோம நாட்டு வரலாற்றாசிரியர் பிளினி (Pliny) வருந்திக் கூறுவாராயினர். [13]

**தொழில் வளம்:** உழவும் நெசவும் பெரிதும் போற்றப் பட்டன. பாலாவி போன்றும் மூங்கிலின் மேல்தோல் போன்றும் மென்மையும் நுண்மையும் கொண்ட ஆடைகள் நெய்வதில் தமிழர் பெயர் பெற்றிருந்தனர். பட்டு, எலிமயிர் முதலியவற்றால் ஆகிய சிறந்த ஆடைகளும் நெய்யப் பெற்றன. ஆடைகளுக்குத் தமிழ்ப் பெயர்களே அழகுற அமைந்திருந்தன. தறிகளில் வெட்டுவது "வேட்டி" என்றும், குறைப்பது "கூறை" என்றும், துண்டு போடுவது "துண்டு" என்றும் கூறப்பட்டன. அக்கால மக்கள் மிக நுண்ணிய வேலைப்பாடுகள் அமைந்த அணிகலன்களை அணிந்திருந்தனர். பொன்னால் செய்த அணிகலன்களில் மணிகளைப் பதித்து அணிந்து வந்தனர்.

---

12. The extravagant importation of luxuries from the west without adequate production of commodities to offer in exchange, was the main cause of the successive depreciation and degradation of the Roman currency leading finally to its repudiation.

—P. T. Srinivasa Iyenger, History of the Tamils, P-308.

13. So that Pliny complained in 70 A. D. that India drained gold to the value of nearly a million pounds a year giving back her own wares, which are sold among as at fully a hundred times their first cost.

—Ibid p. 305

**தொழிற் பாகுபாடு:** பழந்தமிழரிடையே தாம் செய்யும் தொழிலால் பாகுபாடு இருந்ததே தவிரப் பிறப்பால் பாகுபாடு இல்லை. இதனைத் திருவள்ளுவரும்,

**" பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்"** [14]

என்று குறிப்பிட்டுள்ளார். தன் குடும்பத்திற்குத் தானே முயன்று பொருள் தேடிச் சேர்ப்பது ஒருவனுடைய கடமையாக அந்நாளில் கருதப்பட்டது. தாமாக உழைத்துப் பிழைக்க முடியாதவர்களுக்கும், திக்கற்றவர் களுக்கும், உணவு முதலியன தந்து சமுதாயம் உதவியது. குருடர், செவிடர், முடவர், பிணியாளர், வயது முதிர்ந் தோர் முதலியவர்கள் தங்கியிருக்க நகரங்களில் தனியே ஒதுக்கிடம் இருந்ததாகவும், அவ்வாறு காவிரிப்பூப் பட்டினத்தில் அமைந்திருந்த ஓரிடம் 'உலக அறவி' என வழங்கப்பட்டது என்றும் மணிமேகலைக் காப்பியம் குறிப் பிடுகின்றது.

**கல்வி:** தமிழர் கல்வியைக் கண்ணெனப் போற்றி னர். கற்றவர்களுக்குச் சென்றவிட மெல்லாம் சிறப் பிருந்தது. ஆண், பெண் இருபாலரும் கற்றனர். சங்க காலத்தில் ஔவையார், ஆதிமந்தியார், காவற்பெண்டு, வெள்ளிவீதியார், காக்கை பாடினியார், நன்முல்லை யார், மாசாத்தியார் முதலான பெண்பாற் புலவர்கள் பலர் வாழ்ந்து சிறந்த பாடல்களைப் பாடியுள்ளனர். ஔவையார், தூது முதலான பொறுப்பான அரசியல் கடமைகளையும் மேற்கொண்டிருந்தார் என்பது தெளிவா கின்றது. மதுரை, காஞ்சி முதலிய நகரங்கள் பெருங் கல்வி நிலையங்களாக அந்நாளில் விளங்கின. உடம்பு வேறு, உயிர்வேறு எனப் பிரித்து அறியும் மெய்யறிவு தமிழர்க்குப் பல்லாண்டுகட்கு முன்னரே வாய்த்திருந்தது.

14. திருக்குறள் : 972

தமிழில் மிகப் பழைய இலக்கணமாகிய தொல்காப்பியத்தில் எழுத்துக்களைப் பாகுபாடு செய்துள்ள தொல்காப்பியனார் எழுத்துக்களை உயிரெழுத்து மெய்யெழுத்து உயிர் மெய்யெழுத்து எனக் குறியீடுகள் தந்து வழங்கி யுள்ளார்.

**மருந்து :** திருவள்ளுவர் மருந்து என்றே ஒரு தனி அதிகாரம் வைத்துள்ளார். மருத்துவன் தாமோதரனார் என்ற புலவர் சங்க காலத்தே வாழ்ந்ததாக அறிகிறோம். பழந்தமிழர்கள் மூலிகைகளின் வேர், தண்டு, இலை, பூ, காய், விதை முதலியவற்றின் குணங்கள் இன்ன இன்ன என்று நன்றாக அறிந்திருந்தனர். சித்தர்கள் எனப்படும் அறிஞர் குழுவினர் 'சித்த மருத்துவம்' என்ற மருத்துவத் துறையில் சிறந்து விளங்கினர்.

**கலைகள் :** தமிழர்கள் கலை நுணுக்கம் மிகுந்தவர்கள்; கலைகளைப் போற்றி வளர்த்தவர்கள். முத்து, பவளம், மாணிக்கம் முதலிய மணிகளின் உயர்வு, தரம், தாழ்ச்சி முதலியனவைகளைத் தேர்ந்தறியும் முறைகளைத் தெளிவாக உணர்ந்திருந்தனர். திருடர்களின் தந்திரத்தை அறிந்து அவரைத் தண்டிக்கக் கருதும் காவலர் கரவடநூல் அறிந்திருந்தனர். யானை குதிரைகளைத் தமிழர் போரில் பயன்படுத்தியதால் யானைகளைப் பற்றியும் குதிரைகளைப் பற்றியும் ஆராய்ந்து தேர்ந்து அறிவதற்கு நூல்கள் இருந்தன. அவை யானை நூல், குதிரை நூல் எனப் பட்டன. யானை, குதிரைகளுக்கு வரும் நோய்களும் அவை தீர்க்கும் முறைகளும் அந்நூல்களில் கூறப்பட்டன. பாம்புகளின் இயல்புகள், வேறுபாடுகள், அவற்றின் நஞ்சை மாற்றும் மருந்துகள் முதலியவற்றை விளக்கும் நூல் ஒன்று இருந்ததாக நச்சினார்க்கினியர் எழுதிய உரையால் தெரிய வருகின்றது.[15] ஒரு நாளை அறுபது

15. சீவக சிந்தாமணி ; 1288-ஆம் செய்யுள் உரை.

நாழியாகப் பகுத்து நாழிகைகளை அறிவிப்பதற்குப் பயன் படுத்தப்பட்ட கருவி "நாழிகை வட்டில்" எனப்பட்டது. இக்கருவியைக் கொண்டு நாழிகையைக் கணக்கிட்டுப் பொதுமக்களுக்கு உரைப்போர் 'நாழிகைக் கணக்கர்' எனப்பட்டனர்.

தமிழரிடையே பலவகை விளையாட்டுக்கள் நிலவின. சிறு தேர் உருட்டல், சிறுபறை முழக்கல் முதலிய விளையாட்டுக்களைச் சிறுவரும், சிறுவீடு கட்டல், மணற் சோறு சமைத்தல் முதலிய விளையாட்டுக்களைச் சிறுமி யரும் நிகழ்த்தி வந்தனர். குரவைக் கூத்து, பந்தாடுதல், கழங்காடுதல், அம்மானை ஆடுதல், ஊசல், தெள்ளேணம் கொட்டுதல், கும்மி முதலியன மகளிர் விளையாட்டுக் களாக இருந்தன. நீர் விளையாட்டினை இருபாலரும் மேற்கொண்டிருந்தனர். ஆண்கள் யானையேற்றம், குதிரை யேற்றம், மற்போர், சிலம்புப் பயிற்சி முதலியவைகளைப் பழகி வந்தனர்.

தமிழர்க்கே உரித்தான பழைய இசை சிறப்பாகத் துலங்கியது. இசையும் நடனமும் ஆகிய கலைகள் தமிழரின் பழைய கலைகள். இக்கலைகளில் தேர்ச்சி பெற்ற பாணர், கூத்தர் முதலிய கலைஞர் தொன்றுதொட்டே வழிவழி வந்தனர். அரசரும் மக்களும் இக்கலைஞர்களுக்கு மதிப்புத் தந்து ஆதரித்தனர். இசைக்கருவிகள் பல வகைப்பட்டன. யாழ் சிறப்பாகப் போற்றப்பட்டது. தோற்கருவிகள், துளைக்கருவிகள், நரம்புக்கருவிகள், கஞ்சக் கருவிகள் என நான்கு வகை இசைக்கருவிகள் இருந்தன. தமிழர் வாழ்வே பாட்டாகப் பரிணமித்தது; கூத்தோடு இணைந்திருந்தது.

**நில அமைப்பும் மக்கள் வாழ்வும்:** தமிழ்நாட்டு நில அமைப்பையும் மக்கள் வாழ்க்கையையும் ஆராய்ந்து தொல்காப்பியனார் ஒவ்வொரு வகை நிலத்திற்கும் ஒவ்

வொருவகை யாழினையும் பறையினையும் கூறியுள்ளார். ஓவியக்கலை சிறப்புறத் துலங்கியது. நெய்த ஆடைகளிலும் செய்த பொருள்களிலும் தமிழர் ஓவியங்களை அமைத்தனர். தமிழர் வாழ்வில் அழகுணர்ச்சியும் கலையுணர்ச்சியும் நிரம்பித் ததும்பின. அந்நாளில் திருப்பரங்குன்றத்தின் கோயிற் சுவரில் சிறந்த ஓவியங்கள் எழுதப்பெற்றிருந்தன என்று பரிபாடல் கூறுகிறது. நாடகக் கலையிலும் தமிழர் கைவந்தவர்கள். நடனக்கலையின் சிறப்பினைச் சிலப்பதிகாரம் விரிவாகக் குறிப்பிடுகின்றது; நடன அரங்கு, நடன அரங்கின் அமைப்பு, இசையாசிரியரின் அமைதி, நடன ஆசிரியரின் அமைதி, தண்ணுமையாசிரியனுடைய அமைதி முதலியவற்றைப் பற்றியெல்லாம் சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றுகாதை விரிவாகக் குறிப்பிடுகின்றது. ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்து வரல் எழினி என்று மூவகையாகத் திரைச் சீலைகள் இருந்ததனைச் சிலப்பதிகாரம் கொண்டு அறியலாம்.

கட்டடக் கலையில் தமிழர்கள் பெரும்புலமை காட்டினர். வீடுகள் அமைப்பும், நகர அமைப்பும், தெருக்களின் அமைப்பும் அழகாகத் துலங்கின. அந் நாளைய மதுரைமாநகரின் அமைப்பினை நூல்கள் சிறப்புறக் கூறுகின்றன. நகரங்கள் நெடிய மதில்களைக் கொண்டிருந்தன. மதில்களைச் சுற்றிலும் அகழிகள் வெட்டப்பட்டு நீர்விடப்பட்டு அந்நீரில் கொடிய முதலைகள் விடப்பட்டன. மதில் மேல் பல எந்திரங்கள் பகைவர் படை எடுக்காதபடி தடுக்கும் வகையில் அமைந்திருந்தன. அந்நாளில் நகரமைப்பு முறை சிறப்பாக இருந்தது. ஆறு கிடந்தன்ன அகன்ற நெடுந்தெருக்கள் இருந்தன. நகரங்களில் பூங்காக்கள் ஆங்காங்கே விளங்கின. பல மாடிகளைக் கொண்ட

கட்டடங்கள் பல மதுரையில் அன்று விளங்கின. காற்று மெல்ல வந்து தவழ்கின்ற முறையில் சன்னல்கள் அமைக்கப் பெற்றிருந்தன. சாக்கடை நீர் கண்ணிற்குப் புலப்படாத வகையில் நிலத்தின் கீழ்ச் செல்லும் சாக்கடைகள் அமைக் கப்பட்டிருந்தன. பூங்காக்களிடையே வேண்டும்போது நீர் பொழியச் செய்யவும், வேண்டாதபோது நிறுத்தி விடவும், வேண்டிய அளவில் நீரைக் குறைத்துப் பொழியவும் கூடிய எந்திரவாவிகள் இருந்தன. பல்லவர் காலத்தில் மலைகளைக் குடைந்து அவற்றில் அழகான சிற்பங்களை அமைத்துக் கோயில்களைக் கட்டும் கலை வளர்ந்தது. அக்கலை பெரிதும் வளர்ந்து பிற்காலச் சோழர், பாண்டியர் ஆட்சிக் காலத்திலே பெரும் பெரும் கோவில்களாக உருப்பெற்றன. கல் காணப்பெறாத தஞ்சை மாவட்டத்தில் முதல் இராசராச சோழனால் பதினோராம் நூற்றாண்டில் கட்டப் பெற்றுள்ள பிரகதீசுவரர் கோயில் கட்டடக்கலையின் பெருமையினைப் பறை சாற்றுவதாகும். நாயக்க மன்னர்கள் காலத்தில் கோயில்களில் ஆயிரக்கால் மண்டபங்கள் அழகுற அமைக்கப்பட்டன.

**சமயம் :** சங்க காலத்தில் சிவபெருமான், திருமால், முருகன், கொற்றவை முதலியவர்களுக்குக் கோட்டம் அல்லது நகர் என்னும் பெயரால் கோயில்கள் அமைந் திருந்தன. அக்கோயில்களுக்குச் சென்று மக்கள் வழிபாடு நடத்தினர். சமணமும் பௌத்தமும் பழந்தமிழ் நாட்டில் ஓரளவு பரவியிருந்தன. சமயப் பொறை சங்க காலத்தில் விளங்கி இருந்தது. சமயக் காழ்ப்பு அன்று இல்லை. மக்கள் தத்தம் எண்ணத்திற் கேற்பச் சமயப் பற்றுக் கொண்டு தாம் விரும்பிய கடவுளரை அமைதியோடு வழிபட்டு வந்தனர். கடவுளுக்குத் திருவிழாக்கள் எடுத்துக் கொண்டாடுவது என்பது அந்நாளில் விளக்கம் பெற்றிருந்தது

என்பதனை அறிகிறோம். விழாக்களில் இசையும் கூத்தும் தப்பாது இடம் பெறும். மக்கள் மனம் மகிழ்ச்சியில் திளைத்திருக்கும்.

**முடிவுரை :** தமிழர் பண்பாடு பழமையானது; போற்றத் தக்கது; பல சிறப்புக்களை உடையது. குடும்ப வாழ்வில் துளிர்த்த பண்பாடு பொது வாழ்விலும் பொலிவுற்றுத் திகழ்ந்தது. பிறர் வாழவேண்டும், பிறருக்கு உதவ வேண்டும் என்ற பரந்துபட்ட மனப்பான்மையில் தமிழர் தம் சமுதாய அறம் அமைந்திருந்தது. "நாடெல்லாம் வாழக் கேடொன்று மில்லை" என்ற கருத்தின் அடிப்படை, பண்பாட்டின் உறைவிடமாகத் துலங்கியது. தனி மனிதன் செம்மையாக வாழ்ந்தால் சமுதாயம் வளர்ச்சி பெறும் என்ற கருத்தின் அடிப்படையில், உள்ளம் திருந்தினுல் உலகம் திருந்தும் என்ற உயரிய உண்மையில் பண்பாடு செழித்தது. "தமிழன் என்றோர் இனமுண்டு; தனியே அவர்க்கொரு குணமுண்டு" என்றபடி தமிர்தம் பண்பாடு தனித்தன்மை வாய்ந்ததாகும். "பண்பாளர்கள் பலர் வாழ்வதாலேயே இவ்வுலகம் வாழ்கிறது; வளர்கிறது" [16] என்று திருவள்ளுவர் கூறியதற்கு ஒப்பத் தமிழ்ப் பண்பாடு வரலாற்றிற்கெட்டாத அந்நாள் தொடங்கிப் பரவிச் செழித்து வருகின்றது. "யாதும் ஊரே; யாவரும் கேளிர்" [17] என்ற கணியன்பூங் குன்றனாரின் குரல் தமிழினத்தின் குரலாகும்.

---

16. "பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

—திருக்குறள்: 996

17. புறநானூறு: 192

# 4

# பெருமங்கலம்

## மூவேந்தர் குடியின் பழமை

0. 1. தமிழகம் வரலாற்றுத் தொன்மையும் பெருமையும் கொண்டது; வரலாற்றின் தொடக்க காலத்திலேயே இங்கு வாழ்ந்த தமிழர் நல்ல நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சிறந்திருந்தனர். காதலும் வீரமும் தமிழர்தம் வாழ்வின் நிலைக்களங்களாகத் துலங்கின. 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுகம்' [1] என எல்லை குறிக்கப் பட்ட தமிழகத்தினை முடியுடை மூவேந்தர் காத்தனர். எனவே 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' [2] என்றும் தமிழகம் சுட்டப்பட்டது. தொல்காப்பியனார் புறத்திணையியலில்,

> " ........................................ உறுபகை
> வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப்
> போந்தை வேம்பே ஆரென வருஉம்
> மாபெருந் தானையர் மலைந்த பூவும் " [3]

என்று பழந்தமிழ் வேந்தர்களான சேர சோழ பாண்டியர்களின் அடையாளப் பூமாலையாம் பனம்பூ, வேம்பு, ஆத்தி மாலையினைக் குறிப்பிட்டுள்ளார். "வழங்குவதுஉள் வீழ்ந்தக்கண்ணும் பழங்குடி பண்பின் தலைப்பிரிதல்

---

1. தொல்காப்பியம்; பனம்பாரனர் பாயிரம்.
2. தொல்காப்பியம்; செய்யுளியல்: 75.
3. தொல்காப்பியம்; புறத்திணையியல்: 5.

இன்று''[4] என்ற திருக்குறளுக்கு உரை கூறுமிடத்துப் பரிமேலழகர், ''தொன்றுதொட்டு வருதல் - 'சேர சோழ பாண்டியர்' என்றாற்போலப் படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டு வருதல்'' என்று விளக்கவுரை கண்டுள்ளார்.

### மன்னர்களை மக்கள் மதித்தமை

0. 2. மேற்கூறிய காரணங்களால் 'இமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்கத் தன்கோ னிறீஇத் தகைசால் சிறப்பொடு'[5] வாழ்ந்த முடியுடை மூவேந்தர்தம் தொன்மை அறியப்படும். மேலும்,

> **'' நெல்லும் உயிரன்றே நீரும உயிரன்றே**
> **மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம் ''[6]**

என்ற சங்ககாலப் புலவர் மோசிகீரனார் கூற்றுப்படி மன்னனே மக்களின் உயிராக ஒளிர்ந்தான். 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே'[7] என்ற நம்மாழ்வார் கூற்று இடைக்காலத்திலும் மன்னன் மக்களிடம் பெற்ற மதிப்பினை நுவலாநிற்கும். சேக்கிழார் பெருமானும்,

> **'' மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாம்**
> **கண்ணும் ஆவியும் ஆம்பெருங் காவலன் ''[8]**

என்று குறிப்பிட்டுள்ளார் கம்பநாடர் இம் மரபினை,

---

4. திருக்குறள்: 955
5. பதிற்றுப்பத்து: இரண்டாம் பதிகம்: 5-6.
6. புறநானூறு: 16 : 81-2.
7. நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்; நம்மாழ்வார் திருவாய்மொழி: 4:8.
8. பெரியபுராணம்; நகரச் சிறப்பு: 14.

> " செயிரிலா உலகினில் சென்று நின்றுவாழ்
> உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினுன் "[9]

என்று மன்னனை உடலாகவும் மக்களை அவ்வுடம்பில் உறையும் உயிராகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் மலைவளங் காண வந்த செங்குட்டுவனைக் கண்ட மலை வாழ்நர், 'ஏழ்பிறப்படியேம் வாழ்கநின் கொற்றம்'[10] என வாழ்த்தியதாக இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## தொல்காப்பியத்தில் பெருமங்கலம்

1. இவ்வாறு மக்களால் பெருமதிப்புடன் போற்றப் பட்ட மன்னனின் பிறந்த நாள் விழா பெருமிதமாகக் கொண்டாடப்பட்டது. 'தாவில் நல்லிசை' எனத் தொடங்கும் தொல்காப்பியப் புறத்திணையியல் நூற் பாவில் தொல்காப்பியனார்,

> " சிறந்த நாளினிற் செற்றம் நீக்கிப்
> பிறந்த நாள்வயின் பெருமங் கலமும் "[11]

என்று மன்னனின் பிறந்த நாள் விழாவினைப் 'பெருமங் கலம்' என்ற சொல்லால் குறிப்பிட்டுள்ளார்.

## நச்சினர்க்கினியர் தரும் விளக்கம்

2. இவ்வடிகளுக்கு உரைகண்ட நச்சினார்க் கினியர், "நாடோறுந் தான் மேற்கொள்ளுகின்ற செற்றங்களைக் கைவிட்டுச் சிறந்த தொழில்கள் பிறத் தற்குக் காரணமான நாளிடத்து நிகழும் வெள்ளணி யும்" என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர்,

---

9. கம்பராமாயணம்; பாலகாண்டம்; அரசியற் படலம்: 10.
10. சிலப்பதிகாரம்; காட்சிக் காதை: 56
11. தொல்காப்பியம்; புறத்திணையல்: 30.

"அரசர் நாடோறும் தாம் மேற்கொள்கின்ற செற்ற மாவன: சிறை செய்தலுஞ் செருச்செய்தலும் கொலை புரிதலும் முதலியன; சிறந்த தொழில்களாவன: சிறை விடுதலும் கொலை யொழிதலும் இறை தவிர்தலுந் தானஞ் செய்தலும் வேண்டியன கொடுத்தலும் பிறவு மாம்; மங்கல வண்ணமாகிய வெள்ளணியும் அணிந்து எவ்வுயிர்க்கண்ணும் அருளே நிகழ்த்தலின் அதனை வெள்ளணி யென்க" என்று விளக்கமும் கூறியுள்ளார்.

## புறப்பொருள் வெண்பாமாலையில் பெருமங்கலம்

3. 1. பிற்காலத்து இலக்கண நூலான புறப் பொருள் வெண்பாமாலை மன்னனுக்கு உரித்தான மங்க லங்கள் பலவற்றினைக் குறிப்பிடுகின்றது. வேந்தனின் செம் மாந்திருந்த வெற்றியினைச் சிறப்பித்தலை 'வீற்றினிதிருந்த பெருமங்கலம்'[12] என்றும், வேந்தனின் திருமணத்தினை விரிப்பதனை 'மணமங்கலம்'[13] என்றும், மன்னனின் மகன் பிறந்த நாள் விழாவினைப் 'பொலிவு மங்கலம்'[14] என்றும், மன்னன் பிறந்த நாள் விழாவினை 'நாண் மங்கலம்'[15] என்றும், அரசனின் குடைச் சிறப்பினைக் 'குடை மங்கலம்'[16] என்றும், வாட் சிறப்பினை 'வாண் மங்கலம்'[17] என்றும்,

12. புறப்பொருள் வெண்பாமாலை; பாடாண் படலம் : 20.
13. புறப்பொருள் வெண்பாமாலை; பாடாண் படலம் : 22.
14. புறப்பொருள் வெண்பாமாலை; பாடாண் படலம் : 24.
15. புறப்பொருள் வெண்பாமாலை; பாடாண் படலம் : 24,
16. புறப்பொருள் வெண்பாமாலை; பாடாண் படலம் : 34.
17. புறப்பொருள் வெண்பாமாலை; பாடாண் படலம் : 35.

மன்னன் மஞ்சனமாடும் மங்கல மிகுதிச் சிறப்பினை 'மண்ணும் மங்கலம்'[18] என்றும் புறப்பொருள் வெண்பா மாலை ஆசிரியர் சேரர் ஐயனாரிதனார் குறிப்பிட்டுள்ளார்.

3. 2. புறப்பொருள் வெண்பாமாலை இப்பிறந்த நாட் பெரு மங்கலத்தினை **நாண்மங்கலம்** என்று குறிப்பிடுகின்றது என மேலே கண்டோம்.

> '' **அறந்தரு செங்கோ லருள்வெய்யோன்**
> **பிறந்த நாட் சிறப்புரைத் தன்று** ''[19]

என்ற கொளு நாண் மங்கலத்தினைப் பிறந்த நாட் சிறப்பென்றே குறிப்பிடுகின்றது. மேலும் கொளுவின் கீழ்க் காணப்படும். வெண்பாவில் மன்னனின் ஈர நெஞ் சமும் வீரப் பண்பும் ஒருங்கே விளக்கப்பட்டுள்ளன. அவ் வெண்பா வருமாறு:

> '' **கரும்பகடுஞ் செம்பொன்னும் வெள்ளணிநாட் பெற்றார்**
> **விரும்பி மகிழ்தல் வியப்போ — சுரும்பிமிர்தார்**
> **வெம்முரண் வேந்தரும் வெள்வளையார் தோள்விழைந்து**
> **தம்மதில் தாம்திறப்பார் தாள்.''**

3. 3. இப் பாடலால் இரவலர் களிறும் கண்கவர் பொன்னும் பெருவேந்தனின் பிறந்த நாளிற் பெறுவர் என்பதனோடு, இதுநாள் வரை இம் மன்னனுக்குப் பயந் தொளிந்திருந்த பகையரசர் அச்சம் நீங்கித் தம் மதிலைத் திறந்து தம் மகளிரொடு இனிதிருப்பர் என்பதும் பெற்றாம்.

---

18. புறப்பொருள் வெண்பாமாலை; பாடாண் படலம் : 36.

19. புறப்பொருள் வெண்பாமாலை; பாடாண் படலம் : 24.

## பிறந்த நாள் விழா பற்றிய செய்திகள்

4. பெருமங்கலத்தினை நன்கு விளக்க நச்சினார்க்கினியர் மேற்கோள் காட்டும் பாடல்கள் பழந்தமிழ் மன்னர் தம் அறப்பண்புகளையும் வீரமாட்சியினையும் கொடை வளத்தினையும் எடுத்து மொழிகின்றன. மன்னனின் பிறந்த நாளன்று அந்தணர் பசுவும் பொன்னும் பெறுவர் என்றும், நாவலர் சிறந்த யானைப் பரிசில் பெறுவர் என்றும், மக்கள் தங்கள் வீட்டினையும் வெளியினையும் தூய்மைப்படுத்தி அணி செய்வர் என்றும் அறிய வருகின்றோம்.[20] மேலும் போரில் தோற்றுச் சிறைப்பட்டிருக்கும் பகைவேந்தர் அன்று விடுதலை செய்யப்பெறுவர் என்பதும் பிறிதொரு பாட்டால் புலனாகிறது.[21] மன்னனின் பிறந்த நாள் நட்சத்திரத்தில், பிறந்த நாள் விழாக் கொண்டாடப்படும் என்பதனையும், அன்று போர் தவிர்க்கப்படும் என்பதனையும், கீழ்க் காணும் முத்தொள்ளாயிரப் பாடல் உணர்த்தும்:

**" கண்ணார் கதவந் திறமின் களிறொடுதேர்**
**பண்ணார் நடைப்புரவி பண்விடுமின்—நண்ணாதீர்**
**தேர்வேந்தன் தென்னன் திருவுத் திராடநாள்**
**போர்வேந்தன் பூசல் இலன்.[22]**

சேரவேந்தன் ஒருவன் சதயநாளில் பிறந்தானாகையால் அன்று போர் நிகழாதென்றும், ஆதலின் பகையரசர் மதிற் கதவு திறந்து மகிழ்ச்சியோடிருக்கலாம் என்றும் பிறிதொரு பாடல் குறிப்பிடுகின்றது.

---

20. முத்தொள்ளாயிரம் : 82

21. ''சைய, மலைச்சிறைநீர் வாட்கண்டன் வெள்ளணி நாள் வாழ்த்த கொலைச் சிறைநீர் வேந்துக்குழாம்,''

22. முத்தொள்ளாயிரம் : 7,

"நின்று நிலை இயர் நின்நாண்மீன், நில்லாது
படாஅச் செலீயர் பகைவர் மீனே" [23]

என்ற புறப்பாட்டு அடிகளின் விளக்கம், ஒருவர் பிறந்த நாளன்று விண்ணில் மதிநின்ற இடத்திலிருந்த மீன்தான் நாள்மீன் எனப்படும் என்பதனைத் தெரிவிக்கின்றது.

## மதுரைக்காஞ்சியில் சேரனின் பெருமங்கலம்

5. பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாராட்ட வந்த புலவர் மாங்குடி மருதனார், சேர மன்னனொருவனின் பிறந்தநாள் விழாவின் மகிழ்ச்சி ஆரவாரத்தினை உவமையாக எடுத்துக் கையாண்டு பாராட்டியுள்ளார். பிறந்த நாளன்று சேர மன்னன், கூத்தரும் சுற்றத்தினரும் ஒருங்கே வாழ்த்த, எல்லாக் கலைகளையும் உணர்ந்த பல சமயத்தவர் மாறுபட்டுக் கூறும் சமய தருக்க வாதங்களை விரும்பிக் கேட்டுக் கொண்டிருந்தான் என்ற குறிப்பு மதுரைக்காஞ்சியால் [24] பெறப்படுகின்றது. மேலும் அந்நூலிலேயே நன்னன் என்னும் குறுநில மன்னனின் பிறந்தநாள் விழாவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

"..... ..................சேரிதோறும்
உரையும் பாட்டும் ஆட்டும் விரைஇ
வேறுவேறு கம்பலை வெறிகொள்பு மயங்கிப்
பேரிசை மன்னன் பெறும்பெயர் நன்னாள்
சேரி விழவின் ஆர்ப்பெழுந் தாங்கு" [25]

என்ற மதுரைக்காஞ்சிப் பகுதியால் முடியுடை வேந்த

---

23. புறநானூறு : 24: 24—25
24. "கொடும்பறைக் கோடியர் கடும்புடன் வாழ்த்துந்
தண்கடல் நாடன் ஒண்பூங் கோதை
பெருநாள் இருக்கை விழுமியோர் குழீஇ
விழைவுகொள் கம்பலை கடுப்ப"
—மதுரைக்காஞ்சி : 523—526.
25. மதுரைக்காஞ்சி : 615—619.

ருடையதேயன்றிக் குறுநில மன்னரின் பிறந்தநாள் விழாவும் பழந் தமிழகத்தில் கொண்டாடப்பட்டது எனத் தெரியவருகின்றது.

## சிலப்பதிகாரமும் செங்குட்டுவன் பிறந்த நாளும்

6. சிலப்பதிகாரத்தில் சேரவேந்தன் செங்குட்டுவனின் பிறந்த நாள் விழாப் பற்றிய குறிப்பு விரிவாகப் பேசப்படு கின்றது. கண்ணகிக்குச் சிலை வடிக்கக் கல் கொணர வடநாடு சென்ற செங்குட்டுவன் தன் பிறந்த நாள் நெருங்கு கின்றதனை யறிந்து விரைந்து தன் வஞ்சிமூதூர் திரும்பி வருகின்றான் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது:

> " வடதிசை மன்னர் மன்னெயின் முருக்கிக்
> கவடி வித்திய கழுதையே ருழவன்
> குடவர் கோமான் வந்தான் நாளைப்
> படுநுகம் பூணாய் பகடே மன்னர்
> அடித்தளை நீக்கும் வெள்ளணி யாமெனும்
> தொடுப்பேர் உழவ ரோதைப் பாணியும்." [26]

இவ் அடிகளால் மாடுகளும் செங்குட்டுவன் பிறந்த நாளில் உழுதலை யொழிந்து உவகையுடன் இருந்த செய்தி புலனா கின்றது. அமர்க்களத்தில் அஞ்சாது மாற்றார் மறம் சாய்த்த மறவர்களுக்கு மன்னன் பிறந்த நாளிலும் மிகுதியாகப் பொன்னாலாகிய வாகைப் பூமாலையினைப் பரிசளிப்பான் என்பதும் சிலப்பதிகாரத்தின் வழி அறிய முடிகின்றது. [27]

---

26. சிலப்பதிகாரம்: நீர்ப்படைக்காதை: 225—230.
27. "கூற்றுக்கண் ணோட அரிந்துகளங் கொண்டோர்
நிறஞ்சிதை கவயமொடு நிறப்புண் கூர்ந்து
புறம்பெற வந்த போர்வாள் மறவர்
வருக தாமென வாகைப் பொலந்தோடு
பெருநா ளமயம் பிறக்கிடக் கொடுத்து"
—சிலப்பதிகாரம் : நீர்ப்படைக்காதை: 40—44.

## பிற்கால நூல்களில் பிறந்தநாள் விழாக்கள்

**7. 1.** மணிமேகலைக் காப்பியம் "புவிகா வலன்றன் புண்ணிய நன்னாள்"[28] என்று மன்னனின் பிறந்த நாளினைப் புண்ணிய நன்னாள் என்று போற்றுகின்றது. அரசனுக்கு மகன் பிறந்திட்ட பொழுது, அவன் இறை தவிர்த்தலும் சிறைவீடு செய்தலும் உண்டென்பது சிந்தாமணிக் காப்பியத்தின் வழித் தெரியவருகின்றது.[29] கம்ப ராமாயணத்திலும் இதனை யொத்த செய்தி காணப் படுகிறது. இராம இலக்குமண பரத சத்துருக்கனர் பிறந்த செய்தியினைக் கேள்வியுற்ற தசரதன், நாடு முழுவதும் பதினான்கு ஆண்டுவரை வரியில்லாமல் ஆகுக என்றும். பொருள் நிறைந்த கருவூலங்களை ஏழைகள் அவரவர் விருப்பப்படி வாரிக் கொள்க என்றும், எவ்விடத்திலும் போர்த் தொழில் ஒழிக என்றும், சிறையிலடைப்பட்டுள்ள முடிபுனைந்த பகையரசர் விடுதலை செய்யப்பெற்றுத் தம்தம் ஊர் செல்க என்றும் கூறிப் பறையறையச் செய் விக்கின்றான்.

" இறைதவிர்ந் திடுகபார் யாண்டொர் ஏழொடுஏழ்
முறைநிதிச் சாலை தாழ்நீக்கி யாவையும்
முறைகெட வறியவர் முகந்து கொள்கஎன
அறைபறை என்றனன் அரசர் கோமகன்."

" படையொழிந் திடுகதம் பதிக ளேயினி
விடைபெறு குகமுடி வேந்தர் வேதியர்
நடையுறு நியமமு நவையின் றுகுக
புடைகெழு விழாவொடு பொலிக வெங்கணும்."[30]

மேலும் அப் பிறந்தநாள் விழா நாட்டு மக்களால்

---

28. மணிமேகலை : 28 : 9

29. சீவக சிந்தாமணி; நாமகள் இலம்பகம்: 277-280.

30. கம்பராமாயணம்; திருவவதாரப் படலம்: 112-113.

நலமுறக் கொண்டாடப் பெறவேண்டும் என்றும் பறை யறையச் செய்விக்கின்முன்:

" ஆலேயம் புதுக்குக வந்த ஞளர்தம்
சாலேயுஞ் சதுக்கமுஞ் சமைக்க சந்தியுங்
காலேயு மாலேயுங் கடவு ளர்க்கணி
மாலேயுந் தூபமும் வழங்கு கென்றனர்."[31]

மேலும் சூளாமணிக் காப்பியத்திலும் பிறந்தநாள் விழா பேசப்படுகின்றது. அந்நாளில் பகையொழித்து நல்லறம் செழிப்பதும், வெள்ளணி யணிந்து அரசர் விருந்தோம்பு தலும் நிகழும் என்பர். [32]

7. 2. மன்னரே யன்றிப் பட்டத்து யானேயும் வெள்ளணி யணிந்து விளங்கும் என்பது சிந்தாமணி யாலும்[33] பெருங்கதையாலும்[34] அறியப்படுகின்றது. 'மங்கல அணியினர்'[35] என்ற தொடருக்கு 'வெள்ளணி யணிந்தவர்' என நச்சிஞர்க்கினியர் உரையெழுதியுள்ளார். எனவே தமிழ் நாட்டு மக்களுக்கு வெள்ளேயுடையே மங்கல உடையாகும். இக்காலத்தும் திருவனந்தபுர அரசர்க்குள் சென்ம தினக் கொண்டாட்டம் சிறப்பாகவே நடைபெறுதலோடு, அவ்வரசர் 'மூலந் திருநாள்', 'விசாகந் திருநாள்' எனத்

31. கம்பராமாயணம் ; திருவவதாரப் படலம் ; 114.

32. சூளாமணி; சுயம்வரச் சுருக்கம்: 211-212

33. சீவகசிந்தாமணி: இலக்கணேயா ரிலம்பகம்: 10, 11, 54.

34. பெருங்கதை; 1 : 39 : 74. 'வெண்டுகில் பூட்டிய வேழக் குழவியும்.

35. சீவகசிந்தாமணி ; காந்தருவதத்தையா ரிலம்பகம்: 111.

தங்கள் பிறந்த நட்சத்திரங்களையே பெயர்களாகக் கொண்டு விளங்குதலும் ஒட்பிடற்பாலது.[36]

7. 3. "இக்காலத்து மேனாட்டார் போர்நிகழ்ச்சியிலும் வெள்ளைக்கொடி பிடித்துப் போரிடையே பகைவர் வருவாராயிற் அது சமாதானத்தைக் குறிப்பதாகக் கருதப்படுதல் ஈண்டு ஒப்பிடற்பாலது. போர் நிறுத்துதற் கறிகுறியாகத் "தூத்துகில் வீசும்' பண்டை வழக்கும் அறியத்தகும்" என்று பேராசிரியர் மு. இராகவையங்கார் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.[37]

## கல்வெட்டு உணர்த்தும் சோழர் பெருமங்கலம்

8. பிற்காலச் சோழர் காலத்திலும் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டதனைத் தமிழக வரலாறு கொண்டும் அறியலாம். கி. பி. 985 முதல் கி. பி. 1014 வரை சிறப்புடன் அரசாண்ட சோழப் பெருவேந்தன் முதலாம் இராசராச சோழன் ஐப்பசி சதயநாளில் பிறந்தவன். இவனைச் 'சதய நாள் விழா உதியர் மண்டலந் தன்னில் வைத்தவன்' என்று கலிங்கத்துப் பரணி[38] கூறும். மேலும் இவன் எடுப்பித்த தஞ்சை இராசராசேச்சுரத்திலும் இவன் பட்டத்தரசி திருவையாற்றில் கட்டுவித்த உலக மாதேவீச்சுரத்திலும் திங்கள்தோறும் சதயநாளில் சிறப்பாக விழா நடைபெறுவதற்கு நிவந்தங்கள் விடப்பட்டிருந்ததனைக் கல்வெட்டுச் செய்தி[39] கொண்டு அறியலாம்,

---

36. திரு. மு. இராகவையங்கார், சேரன் செங்குட்டுவன், ஐந்தாம் பதிப்பு, 1964, பக். 134.

37. திரு. மு. இராகவையங்கார், தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, மூன்றும் பதிப்பு, பக். 147.

38. கலிங்கத்துப்பரணி : 8 : 24.

39. S. I. I. Vol. II., No. 26.

"ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள் போல...செழியரைத் தேசு கொள் ஸ்ரீ கொ இராச கேசரிவன்மர்க்கு யாண்டு பதினெட்டாவது—இராசராசத் தென்னாட்டு வள்ளுவ நாட்டு முட்டம், முட்டமென்னும் பேரைத் தவிர்த்து மும்முடி சோழ நல்லூரென்று பேராக்கி இந் நாட்டுத் திருநந்திக்கரை மாதேவர்க்குப் பெருமான் ஐப்பிசைச் சதயத்திருள் திருவிழா வெடுத்து"

என வரும் கல்வெட்டுப் பகுதியும்,[40] திருவெண் காட்டுக் கல்வெட்டொன்றும்,[41] இராசராசன் பிறந்த ஐப்பசி சதய நாளில் ஆண்டுதோறும் விழா நடந்த செய்தியினை நுவலும். இதுபோன்றே இவன் மகன் முதலாம் இராசேந்திர சோழனின் பிறந்தநாள் விழா மார்கழித் திருவாதிரை நாளில் கொண்டாடப் பெற்றதனை, "திருவொற்றியூருடைய மாதேவர்க்கு உடையார் ஸ்ரீ இராசேந்திர சோழதேவர் திருநாள் மார்கழித் திருவாதிரை ஞான்று நெய்யாடியருள வேண்டுமென்று (6) மிசத்துக்குத் திருவொற்றியூர் திருமயானமும் மடமுடைய சதுரானன பண்டிதன் தேவர் பண்டாரத்து வைத்த காசு நூற்றைம்பது" என்ற திருவொற்றியூர்க் கல்வெட்டுப் பகுதி[42] அறிவிக்கிறது.

## கலிங்கத்துப்பரணி காட்டும் வெள்ளணி நாள்

9. "முதற் குலோத்துங்கன் பிறந்தநாள் போல் எந்த நாளிலும் பெரிய நிலமகளுக்கு நிழலாகப் பொருந்திய அவன் கொற்றக் குடையைப் பாடீர், குலோத்துங்க சோழனைப்

40. Travancore Archaelogical Series, Vol. I., P. 292.
41. S. I. I. Vol. V., No. 979.
42. S. I. I. Vol. V., No. 1354.

பாடீர்'' என்று கலிங்கத்துப் பரணி, முதலாம் குலோத்துங்க சோழனின் பிறந்த நாட் பெருஞ்சிறப்பினைப் பாராட்டு கின்றது:

"எற்றைப் பகலிலும் வெள்ளணிநாள்
இருநிலப் பாவை நிழலுற்ற
கொற்றக் குடையினைப் பாடீரே
குலோத்துங்க சோழனைப் பாடீரே." [43]

## பிற்காலப் பாண்டியரும் பிறந்தநாள் விழாவும்

10. 1. பிறந்தநாள் விழா பிற்காலப் பாண்டியர் ஆட்சியிலும் நிகழ்ந்ததனைப் பாண்டியர் வரலாறு காட்டு கின்றது. அரசர்கள் தம் பிறந்தநாள் விழாக்கள் ஆண்டு தோறும் கோவில்களில் நடைபெறுமாறு பொருள் வழங்கி வந்தனர் என்பதனைக் கல்வெட்டு ஆராய்ச்சிப் பேரறிஞர் திரு. வை. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் 'பாண்டியர் வரலாறு' என்னும் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.[44]

10. 2. "அரசன் பிறந்த நாளன்று ராஜப் பிரமுகர்கள் அரசருக்கு உதவித் தொகைகள் பரிசளிக்க வேண்டும். இதே போல அரசனின் குழந்தைகள் பிறந்த நாட்கள் முதலிய வற்றிற்கும் அளித்தாக வேண்டும்'' என்று வரலாற்றுத் துறைப் பேராசிரியர் திரு. க. அ. நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.[45]

---

43. கலிங்கத்துப்பரணி : 18 : 12.

44. திரு. தி. வை. சதாசிவப் பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு, நான்காம் பதிப்பு, 1962, பக். 191, 192,

45. திரு. க. அ. நீலகண்ட சாஸ்திரியார், தமிழர் பண்பாடும் வரலாறும்- முதற் பதிப்பு, பக். 96.

**முடிவுரை**

**11.** இவ்வாறு மன்னர்தம் பிறந்தநாள் விழா மக்களால் மகிழ்ச்சியோடு கொண்டாடப்படும் என்பதும், அன்று மன்னன் வெள்ளாடை அணிந்து மங்கலமாக விளங்கிப் பகையரசரைச் சிறைவீடு செய்வான் என்பதும், அந்தணர்க்கும் புலவர்க்கும் அன்புடன் பொன்னும் களிறும் போற்றிப் புரப்பான் என்பதும். போரில் அஞ்சாமை காட்டி ஆண்மையுடன் மலைந்த மறவர்க்குத் தண்ணடையும் பொன்னாலாகிய வாகைப் பூவும் வகையுற வழங்குவான் என்பதும், பொதுவாக அன்று அருளும் அமைதியும் அழகும் மகிழ்ச்சியும் பொலிந்து தோன்றும் என்பதும் இலக்கியங்கள்வழி இனிதுணரப்படும்.

## மேற்கோள் நூல் விவரப் பட்டியல் (Bibliography)

**தமிழ்:**


1. கம்பராமயணம் — பாலகாண்டம், அண்ணமலைப் பல்கலைக் கழகப் பதிப்பு, 1958.
2. கலிங்கத்துப்பரணி, திரு. ஆ. வீ. கன்னையநாயுடு, நான்காம் பதிப்பு, 1955.
3. சிலப்பதிகாரம், திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், நான்காம் பதிப்பு, 1953.
4. சீவக சிந்தாமணி, டாக்டர் உ. வே. சாமிநாதையர், ஐந்தாம் பதிப்பு, 1949.
5. சூளாமணி, டாக்டர் உ. வே. சாமிநாதையர், முதற்பதிப்பு, 1954.
6. திருக்குறள், கழகம், பத்தாவது பதிப்பு, 1956.

7. தொல்காப்பியம் — பொருளதிகாரம், நச்சினார்க்கினியம், பவானந்தம் பிள்ளை, பதிப்பு, 1916.

8. நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், திரு. மயிலை மாதவதாசன், இரண்டாம் பதிப்பு, 1962.

9. பத்துப்பாட்டு, டாக்டர் உ. வே. சாமிநாதையர், ஐந்தாம் பதிப்பு, 1953.

10. பதிற்றுப்பத்து, கழகம், இரண்டாம் பதிப்பு, 1955.

11. புறநானூறு, டாக்டர் உ. வே. சாமிநாதையர், ஐந்தாம் பதிப்பு, 1955.

12. புறப்பொருள் வெண்பாமாலை. டாக்டர் உ. வே. சாமிநாதையர், எட்டாம் பதிப்பு, 1953.

13. பெரியபுராணம், சமாஜப் பதிப்பு, 1950.

14. பெருங்கதை, டாக்டர் உ. வே. சாமிநாதையர், மூன்றாம் பதிப்பு, 1953.

15. மணிமேகலை, டாக்டர் உ. வே. சாமிநாதையர், ஐந்தாம் பதிப்பு, 1956.

16. முத்தொள்ளாயிரம், கழகம், இரண்டாம் பதிப்பு, 1952.

## (உரைநடை நூல்கள்)

1. திரு. மு. இராகவையங்கார். சேரன் செங்குட்டுவன், வள்ளுவர் பண்ணை, சென்னை, ஐந்தாம் பதிப்பு, 1964.

2. திரு. மு. இராகவையங்கார், தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, மூன்றாம் பதிப்பு.

3. திரு. தி. வை. சதாசிவப் பண்டாரத்தார், பிற் காலச் சோழர் சரித்திரம், அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு, மூன்றும் பதிப்பு, 1958.

4. திரு. தி. வை. சதாசிவப் பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு, நான்காம் பதிப்பு, 1962.

5. திரு. க. அ. நீலகண்ட சாஸ்திரி, தமிழர் பண் பாடும் வரலாறும், திரு. சிட்டி, மொழி பெயர்ப்பு, வாசகர் வட்டம், சென்னை வெளியீடு, முதற் பதிப்பு, 1965.

ஆங்கிலம்:

1. Thiru. Krishnamurthi, S. R., A study on the cultural Developments in the Chola period, Annamalai University, First Edition, 1966.

2. Prof. Nilakanta Sastri, K. A, The Colas, University of Madras, Second Edition, 1955.
South Indian Inscriptions
Travancore Archaeolygical Series.

# 5

# சேரர் கொடை வளம்

வேந்தர்க்கு வெற்றியை விளைவிப்பது வீரம்; புகழினையும் மாறா மகிழ்ச்சியினையும் அளிப்பது ஈரம் என்னும் கொடைப் பண்பு ஆகும். தமிழ் மன்னர்பால் வீரமும் ஈரமும் குறைவறக் குடிகொண்டிருந்தன. வீரம் விளைவித்த மன்னர்களே ஈர நெஞ்சம் வாய்ந்த மன்னர்களாக விளங்கிக் கொடைப் பண்பைப் போற்றியிருக்கிறார்கள். தொல்காப்பியனார் 'வண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பு' எனச் சேர சோழ பாண்டியர் ஆண்ட தமிழகத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், திருவள்ளுவர் தம்,

> "வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
> பண்பின் தலைப்பிரிதல் இன்று"[1]

என்ற குறளுக்கு உரையெழுதப் புகுந்த பரிமேலழகர், பழங்குடி என்பதற்குத் தொன்றுதொட்டு வருகின்ற குடி என்று உரையெழுதி, தொன்றுதொட்டு வருதலாவது, 'சேர சோழ பாண்டியர் என்றாற் போலப் படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டு வருதல்' என்று விளக்க வுரையும் கண்டுள்ளார். தொல்காப்பியனார் கருத்தும், பரிமேழலகரின் திருக்குறள் உரை விளக்கமும் பண்டைத் தமிழரசரின் ஈகைத் திறத்தினை எடுத்தியம்பவல்லன வாகும்.

---

1. திருக்குறள்: 955

திருவள்ளுவர் 'ஈகை' என்றே ஓர் அதிகாரம் வகுத்துள்ளார். 'வறியார்க் கொன் றீவதே ஈகை'[2] என்றும், 'மேலுலகம் இல்லெனினும், ஈதலே நன்று'[3] என்றும் ஈதலின் சிறப்பினை நன்கு விதந்தோதியுள்ளார்.

மேலும் 'இறைமாட்சி' என்ற அதிகாரத்தில்,

**" அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்**
**எஞ்சாமை வேந்தற் கியல்பு "** [4]

என்று குறிப்பிட்டுள்ளார். வேந்தர்க்கு வேண்டுவன திண்மையும் கொடையும் அறிவும் ஊக்கமும் ஆகிய நான்கு பண்புகளாகும் என்பது இதனால் தெரிய வருகின்றது. அஞ்சாமைக்கு அடுத்த நிலை ஈகைக்கு வழங்கப்பட்டிருப்பது நுண்ணின் அறியத் தக்கது. மேலும் இதே அதிகாரத்தின் இறுதிக் குறள் வருமாறு :

**" கொடைஅளி செங்கோல் குடியோம்பல் நான்கும்**
**உடையானும் வேந்தர்க் கொளி."** [5]

இக்குறளில் வேந்தர்க்கு எல்லாம் விளக்காக வேண்டுமெனில் ஓர் அரசன் வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்தலும், யாவர்க்கும் தலையளி செய்தலும், முறை செய்தலும், தளர்ந்த குடிகளைப் பேணலுமாகிய நான்கு செயல்களையும் உடையவனாக விளங்குதல் வேண்டும் என்பது வற்புறுத்தப் படுகிறது.

இவ்வாறு அரசர்க்கே உரியதெனச் சிறப்பாக நுவலப் படும் ஈகைப் பண்பினைப் பண்டை நாளைச் சேர மன்னர் சிறக்கப் பெற்றிருந்தனர் என்பதனைப் பதிற்றுப்பத்து எனும் சங்க நூல் கொண்டு நன்கு தெளியலாம்.

---

2. திருக்குறள் : 221
3. திருக்குறள் : 222
4. திருக்குறள் : 382
5. திருக்குறள் : 390

பதிற்றுப்பத்துப் பாடல்களில் கீழே காணப்பெறும் பதிகங்கள்வழி அங்நாளையச் சேர மன்னர் கொடுத்த கொடைப் பெருமையினை உணரலாம். ஆயினும் பதிகம், பாடல்களைப் பாடிய புலவர்களால் பாடப்பட்டது அன்று என்றும், பிற்காலப் புலவர் ஒருவர் எழுதிச் சேர்த்திருக்க வேண்டும் என்றும் அறிஞர் பலர் கருத்துக் கொள்கின்றனர். எனவே இக் கட்டுரையின்கண் பதிகவழி யன்றிப் பதிற்றுப் பத்துப் பாடல்கள்வழிப் புலனாகும் சேர வேந்தரின் ஈகை வளத்தினைக் காண்போம்.

> " உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
> தெறுபொருளும் வேந்தன் பொருள் " [6]

என்ற குறட் கருத்துப்படி, பகைவரைப் போரில் வென்று திறையாகக் கொள்ளும் பொருள் வேந்தனுக்கு உரிய பொருள் வருவாய் வகையில் ஒன்றென்பது புலப்படுகிறது. சேர மன்னர்களோ வீரத்தில் மிகவும் வல்லவர்கள். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்,

> " இருமுந்நீர்த் துருத்தியுள்
> முரணியோர்த் தலைச்சென்று
> கடம்பு முதல் தடிந்த கடுஞ்சின முன்பின் சேரன் "

என்றும்,

செங்குட்டுவன்,

> "...............................நீர்புக்குக்
> கடலொடு உழந்த பனித்துறைப் பரதவன்" [8]

என்றும்,

6. திருக்குறள் ; 757
7. பதிற்றுப்பத்து II; 10 : 2-4
8. பதிற்றுப்பத்து : V; 8 : 3-4

"வடதிசை எல்லை இமயம் ஆகத்
தென்னங் குமரியொடு ஆயிடை அரசர்
முரசுடைப் பெருஞ்சமம் ததைய ஆர்ப்பெழச்
சொல்பல நாட்டைத் தொல்கவின் அழித்த
போரடு தானைப் பொலந்தார்க் குட்டுவன்" [9]

என்றும்,

குடக்கோ இளஞ்சேரலிரும்பொறையை,

"வேந்தரும் வேளிரும் பின்வந்து பணியக்
கொற்றம் எய்திய பெரியோர் மருக" [10]

என்றும் கூறப்படுவதிலிருந்து சேர மன்னர்களின் செரு மேம்பாட்டினையும், வீர வென்றிச் சிறப்பினையும் நன்கு அறியலாம்.

இரண்டாம் பத்தில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் சிறக்கப் பாடியுள்ளார். அவர் பாடல்கள்வழிச் சேரனின் வீரமும் ஈரமும் ஒருங்கே புலனாகின்றன.

பசியால் வருந்திய இரவலர் கூட்டம் காடும் மலையும் கடந்து, துன்பம் பல பட்டுச் சேரன் தலைவாயிலை அடைந்தது; அவர்களுக்குச் சேரன், அரிவாளால் அறுத்த வெள்ளிய நிணத்தோடு கூடிய ஆட்டிறச்சியையும் நல்ல வெண்ணெலால் ஆக்கிய சோற்றிலே கலந்த உணவினையும், நல்ல கள்ளின் தெளிவினையும் கொடுத்தான் என்று குறிப்பிடுகின்றார் :

'எஃகுபோழ்ந்து அறுத்த வால்நிணக் கொழுங்குறை
மையூன் பெய்த வெண்ணெல் வெஞ்சோறு
நனையமை கள்ளின் தேறலொடு மாந்தி.' [11]

9. பதிற்றுப்பத்து : V: 3 : 7-11
10. பதிற்றுப்பத்து : IX; 8 : 13-13-14.
11. பதிற்றுப்பத்து : II; 2 : 16-18.

பருந்தின் கரிய சிறகு போன்று கருமை கொண்டும் கிழிந்தும் இருந்த கந்தல் உடையை நீக்கிப் பட்டுடை (நூலாக்கலிங்கம்) வழங்கினன். மகளிர்க்கு உணவோடும் உடையோடும் இன்றி நல்ல ஒளிவிடும் அணிகலன்களையும் அளித்தான் என்று மேலும் குறிப்பிடுகின்றார் குமட்டூர்க் கண்ணனார்.

**''நீர்ப்படு பருந்தின் இருஞ்சிற கன்ன**
**நிலந்தின் சிதாஅர் களைந்த பின்றை**
**நூலாக் கலிங்கம் வாலரைக் கொளீஇ**
**வணரிருங் கதுப்பின் வாங்கமை மென்றோள்**
**வசையின் மகளிர் வயங்கிழை யணிய**
**அமர்புமெய் யார்த்த சுற்றமொடு**
**நுகர்தற் கினிதுநின் பெருங்கலி மகிழ்வே.''** [12]

பிறிதொரு பாடலில் புலவர் குமட்டூர்க் கண்ணனார் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனை அக் காலத்தில் கொடையில் சிறந்திருந்த அக்குரனோடு உவமிக்கின்றார்.

**" அக்குரன் அனைய கைவண் மையே ".** [13]

'படையேருழவன்' என்றும், 'பாடினி வேந்தே என்றும், 'வயவர் வேந்தே' என்றும், 'பரிசிலர் வெறுக்கை' என்றும், 'பசும்பிணி மார்ப' என்றும், கூறிச் சேர வேந்தனின் வீரப் பண்பினையும் ஈரப்பண்பினையும் ஒருங்கே புலப்படுத்து கின்றார் புலவர்.

இம் மண்ணுலகில் வாழ்கின்ற உயிர்களுக்குத் தயங்காது வழங்குதலில் அவன் வல்லவனாய் உள்ளான் என அவன் கைவண்மையை மேலும் புகழ்கின்றார் புலவர்:

---

*12. பதிற்றுப்பத்து : II; 2 : 19-25*
*13. ,, II; 4 : 7*

" மண்ணுடை ஞாலத்து மன்னுயிர்க்கு எஞ்சாது
ஈத்துக் கைதண்டாக் கைகடுந் துப்பில்
புரைவயிற் புரைவயிற் பெரிய நல்கி."[14]

'வருநர்க்கு வரையாது பொலங்கலந் தெளிர்ப்ப' என்ற தொடரால் குமட்டூர்க் கண்ணனார் சேரனின் ஈர நெஞ்சத்தினை இன்புறக் கிளத்தி மகிழ்கின்றார். புலவர் புகழ்ப் புகழைத் தன்பால் நிலைநிறுத்தி வாழ்கின்றான் சேரன். கூத்தர்க்குக் குதிரையும், யானையும், தேரும் குறைவற வாரி வழங்குகின்றான் சேரன்.

" புலவர் ஏத்த ஓங்கு புகழ் நிறீஇ
விரியுளை மாவும் களிறும், தேரும்
வயிரியர் கண்ணுளர்க்கு ஓம்பாது வீசி."[15]

இவ்வண்ணம் வாரி வழங்கும் வள்ளற்றன்மையைக் 'கொடைக் கடன் அமர்ந்த கோடா நெஞ்சு' என்று போற்றிப் புகழ்கின்றார் புலவர். 'வயிறு பசி கூர ஈயலன்' என்ற தொடரும் சேரனின் மாண்ட கொடைப் பெருமையினையே குறிப்பிடுகின்றது. இவற்றிற்கெல்லாம் முடிமணியாக,

" மாரி பொய்க்குவ தாயினும்
சேர லாதன் பொய்யலன் நசையே."[16]

என்ற வரிகள் மாரி—மழையோடு சேரலாதனின் கொடைப் பண்பினை ஒப்பிட்டு நோக்கி, மாரி பொய்யினும் சேரலாதன் ஒரு நாளும் பொய்க்கமாட்டான் என்பதனை எடுத்துக் காட்டுகின்றன.

---

14. பதிற்றுப் பத்து : II; 5 : 35-37
15. பதிற்றுப் பத்து : II; 10 : 14-16
16. பதிற்றுப் பத்து : II; 8 : 11-12

இவ்வாறு இரண்டாம் பத்து இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனின் ஈகைத் திறத்தினை இனிதுறக் கிளத்து கின்றது.

அடுத்து, பல்யானைச் செல்கெழு குட்டுவனின் ஈகைப் பண்பினைக் காண்போம். பாலைக் கௌதமனார் 'நன்கலந் தரூஉம் மண்படு மார்ப' என்று மன்னனின் கொடைப் பண்பினைப் போற்றியுள்ளார். மேலும் அவர் "போரடு தானைப் பொலந்தார்க் குட்டுவனே! மழை பெயலைப் பொழி யாது மறந்தவழியும் நீ பெருவிருந்து அளிக்க வல்லை. அரிசியைக் குற்றிக் குற்றிப் பூண் தேய்ந்த உலக்கையினையும், அடைச் சேம்பு போன்ற சோறு சமைக்கும் மடாவினையும், கூர்மையான வாள் கொண்டு கொத்துதலால் ஊனும் குருதியும் படிந்து கோரமாய்ச் சிவந்து தோன்றும் மரக்கட்டையினையும் நின் அட்டிற் சாலையிற் காண்பார் மதி மருளும். உண்பாரும் தின்பாரும் எண்ணிக்கை மிகவும் உடையவராக உன் தலைவாயில் வந்தாலும் நீ புரந்தரும் விருந்துவளம் குன்றாத புதுமை கொண்டு பொலிவதாகும். இத்தகு விருந்து வளத்திற்குக் காரண மாக அமைந்திருக்கும் உன் செல்வளம் என்றும் வாழ் வதாக" என்று குட்டுவனின் குன்றாத கொடைவளத்தைக் குறையாத சொற்களால் குறிப்பிடுகின்றார் பாலைக் கௌதமனார்.

" உண்மருந் தின்மரும் வரைகோள் அறியாது
குரைத்தொடி மழுகிய வுலக்கை வயின்றோ
றடைச்சேம் பெழுந்த வாடுறு மடாவின்
எஃகுறச் சிவந்த வூனத் தியாவரும்
கண்டுமதி மருளும் வாடாச் சொன்றி
...........................................
பேரா யாணர்த்தால் வாழ்கநின் வளனே,"[17]

---

*17. பதிற்றுப் பத்து : III: 4 : 18-22, 80*

மேலும் இப்புலவரே பிறிதொரு பாடலில் நாடுவறங் கூர்ந்து பைதல் அற்று வற்கடம் எய்திய வறுமை மிகுந்த காலையிலும், வற்ருத வண்மையுடையோனும் ஓம்பா ஈகையினை உளமார மேற்கொள்ளுபவன் பல்யானைச் செல்கெழு குட்டுவன் என்று போற்றுகின்ருர். "இலை உதிர்ந்து வாடிப்போன உன்னமரத்தின் பொலிவற்ற சிறு சிறு கிளைகளிலே சிள்வீடென்னும் வண்டுகள் ஒலிக்கின்றன. நிலம் பசுமையற்று வளம் மாறிப்போன காலம். அங்நிலையில் இசைக் கருவிகளைச் சுருக்கிக் கட்டிய பையோடு ஊர்ப் பொதுவிடங்களை அடைந்து, கூத்தரும் பாணருமாகிய பரிசிலர்கள் மறுகுகளின் இறைக் கண்ணே நின்று பாடுவர். அவர்தம் கடும்பசி நீங்கக் களிப்புடன் உதவுவான் சேரன். பொன்னுலாகிய அணிகலன்கள் பலவற்றை அவர்களுக்கு வழங்கி அவர்களை மகிழ்விப்பான். அவற்றை மகிழ்வோடு புனைந்த கூட்டம் 'நெஞ்சுமலி உவகையோடு' ஆடிப்பாடும். அவ்வமயம் சேரவேந்தன் சிறிதே நறவுண்டு சிறு மகிழ்ச்சியோடு இருட்பினும் பெரும் விலைபோகும் அணிகலன்கள் பலவற்றை வயிரிய மாக்களுக்கு வாரி வழங்கி மகிழ்வான்."

" அலந்தலை யுன்னத் தங்கவடு பொருந்திச்
சிதடி கரையப் பெருவறங் கூர்ந்து
நிலம்பைதற்ற புலங்கெடு காலையும்
வாங்குபு தகைத்த கலப்பைய ராங்கண்
மன்றம் போந்து மறுகுசிறை பாடும்
வயிரிய மாக்கள் கடும்பசி நீங்கப்
பொன்செய் புனையிழை பொலியப் பெரிதுவந்து
நெஞ்சுமலி வுவகையர் உண்டுமகிழ்ந் தாடச்
சிறுமகி ழானும் பெருங்கலம் வீசும்
போரடு தானைப் பொலந்தார்க் குட்டுவ."[18]

18. பதிற்றுப்பத்து : III; 3 : 1-10

'வருநர் வரையார் வார வேண்டி விருந்துகண் மாறாது உணீஇய பாசவர்' சேரநாட்டில் வாழ்ந்தனர் என்பது பதிற்றுப்பத்தால் நாம் அறியும் செய்தியாகும்.

அடுத்தபடியாக, களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலின் கொடைப் பண்புகளாகக் காப்பியாற்றுக் காப்பியனார் குறிப்பிடுவனவற்றைக் காண்போம்.

நான்காம் பத்தின் முதற் பாடலிலேயே சேரவேந்தனை வரையாத வள்ளன்மை மிகுந்த வண்டன் என்பானோடு ஒப்பிட்டுப் பேசுகின்றார் புலவர்.

**" வெண்டிரை முந்நீர் வளைஇய வுலகத்து**
**வண்புகழ் நிறுத்த வகைசால் செல்வத்து**
**வண்டன் அனையைமன் நீயே."**[19]

காப்பியாற்றுக் காப்பியனார் நார்முடிச் சேரலைப் 'பரிசிலர் வெறுக்கை' என்றும் 'பாணர் நாளவை' என்றும் கூறி, அவன்தன் அளக்கலாகாக் கொடைப் பண்பினைக் காட்டுகின்றார். தனக்கு இனிமை நிறைந்த பொருள்கள் கிடைத்தாலும் அதனைத் தானே தனித்து நுகராது, பிறருக்குப் பகுத்துத் தந்து பாண் கடன் ஆற்றுகின்றான் நார்முடிச்சேரல் என்பதனை நயம்பட மொழிகின்றார் புலவர் :

**" இனியவை பெறினே தனித்தனி நுகர்கேம்**
**தருகென விழையாத் தாவில்நெஞ் சத்துப்**
**பகுத்தூண் தொகுத்த வாண்மைப்**
**பிறர்க்கென வாழ்திநீ யாகன் மாறே."**[20]

இதனால் 'செல்வத்துப் பயனே ஈதல்' என்பதனையும், 'இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத் தனித் துண்ணுமையே சால்பு என்பதனையும் நன்கு அறிந்

19. பதிற்றுப் பத்து : IV; 1 : 21-23
10. ,, IV; 8 : 13-16

சிறந்தவன் நார்முடிச் சேரல் என்பதனையும், தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெருந்தகையோன் அவன் என்பதனையும் இனிதின் அறியலாம்.

விறலி நார்முடிச் சேரலை நண்ணினால் பகைவர் நாட்டிலிருந்து கைப்பற்றிய 'தொழில்புகல் யானை' பலவற்றை நல்குவன் என்பதனையும் காப்பியாற்றுக் காப்பியனார் கவினுறக் கிளத்தியுள்ளார்:

**" செல்லா யோதில் சில்வளை விறலி**
**....................................**
**காடுதலைக் கொண்ட நாடுகாண் அவிர்சுடர்**
**அழல்விடுபு மரீஇய மைந்திற்**
**றொழில்புகல் யானை நல்குவன் பலவே. "[21]**

ஐந்தாம் பத்தின் பாட்டுடைத் தலைவனாகிய சேரன் செங்குட்டுவனைப் பரணர் அவன் கொடைப் பண்பெல்லாம் அழகுற விளங்கும் வண்ணம் வருணித்துள்ளார். 'துப்பா வீகையின் வண்மகிழ் சுரந்து கோடியர் பெருங்கிளை வாழ' அருள் சுரக்கும் நெஞ்சினன் செங்குட்டுவன் என்பதனைப் பரணர் பாடியுள்ளார். மேலும், அருவி அற்றுப் பெருவளம் சுருங்கிய காலையில் வானம் வளமான மழையைச் சொரிந்தது போலத் தன்னை அடைந்தவர்களுக்கு மாரி வழங்கி, நகைவர் ஆர நன்கலஞ் சிதறும் பண்பினன் செங்குட்டுவன் என்பதனையும் குறிப்பிட்டுள்ளார். விறலியர் பெண் யானைகளையும், கொண்டி மள்ளர் கொல்களிறுகளையும் அகவலர்கள் குதிரைகளையும், வயிரியர் கள்ளினையும் பெறுகின்றனர் எனச் சேரன் செங்குட்டுவனின் கொடைவன்மை சிறப்பித்துப் பேசப்பட்டுள்ளது.

21. பதிற்றுப்பத்து : IV 10 : 21-31

" உறுவர் ஆர ஓம்பாது உண்டு
நகைவர் ஆர நன்கலஞ் சிதறி
..........................
பாடு விறலியர் பல்பிடி பெறுக
..........................
கொண்டி மள்ளர் கொல்களிறு பெறுக
..........................
அகவலன் பெறுக மாவே.
..........................
நிறைந்து நெடிதிராத் தசும்பின் வயிரியர்
உண்டெனத் தவா அக் கள்ளின்
வண்கை வேந்தேநின் கலிமகி ழானே. " [22]

இப் பாட்டின் இறுதியில் சேரன் செங்குட்டுவன் கையினைப் பரணர் 'வண்கை' எனப் புகழ்ந்திருப்பதனைக் காண்க. மேலும் அவன் போர்க்களத்தில் முயற்சியால் பெற்ற பெரிய பொருள்களையும் அருமையுடைத்தென்று எண்ணுமல் தன்னைப் பாடி வந்த புலவர்க்கு வாரி வழங்கி விடுகின்ருன் என்று பரணர் புகன்றுள்ளார்:

" பெரிய வாயினு மமர்கடந்து பெற்ற
அரிய வென்னுது ஓம்பாது வீசி
கலஞ்செலச் சுரத்தல் அல்லது கனவினும்
களைகென வறியாக் கசடில் நெஞ்சம் " [23]

கரவாது கொடுத்துண்ணும் சேரனின் கொடை நெஞ்சத்தினைப் பரணர் 'கசடில் நெஞ்சம்' என்று பொருத்த முறக் குறிப்பிட்டுள்ளார். சேரனைப் பாடிய இழையரும் குழையரும் நறுந்தண் மாலையரும், மகளிரும்' போரில் வெல்லும் குட்டுவனைக் கண்டால் பெயர்ந்து பிறிதோரிடம் செல்லமாட்டார்கள் என்று புலவர் புகழ்ந்துள்ளார்.

---

22. பதிற்றுப்பத்து : V 3: 12—36
23. பதிற்றுப்பத்து : V 4:3 3-6

"வெல்புகழ் குட்டுவன் கண்டோர்
செல்குவம் என்னார் பாடுபு பெயர்ந்தே".[24]

தான் மேற்கொள்ளும் ஒவ்வொரு போரிலும் செங்குட்டுவன் வெல்கிருன். உடனே பரிசிலர் களிற்றினைப் பரிசிலாகப் பெறுகிருர்கள். நன்னுதல் விறலியர் அவன் வெற்றிச் சிறப்பிற்காக அவன் தொன்னகரில் ஆடிப்பாடி மகிழ்கின்றனர்.

"அட்டா ளுனே குட்டுவன் அடுதொறும்
பெற்ரு ளுரே பரிசிலர் களிறே
..................................
பாண்டில் விளக்குப் பரூஉச்சுடர் அழல
நன்னுதல் விறலியர் ஆடும்
தொன்னகர் வரைப்பின் அவன் உரையா ளுவே!"[25]

பாணர்களுக்குப் பொற்ருமரைப் பூவினையும், ஒளி பொருந்திய நெற்றியினையுடைய விறலியர்க்கு ஆரத்தினையும் அளிக்கின்ருன் செங்குட்டுவன்.

"பைம்பொற் ருமரை பாணர்ச் சூட்டி
ஒண்ணுதல் விறலியர்க்கு ஆரம் பூட்டி."[26]

பகைவர் நாட்டிலே திறையாகப் பெற்ற பொருள்களையெல்லாம் எளிதில் பாணர் பாடும் பாடல்களுக்குப் பரிசாக அளித்துவிடுகின்ருன் செங்குட்டுவன் என்று பரணர் வியந்து பாடுகின்ருர்.

"ஆண்டுநீர்ப் பெற்ற தாரம் ஈண்டிவர்
கொள்ளாப் பாடற்கு எளிதின்நீ ஈயும்."[27]

---

24. பதிற்றுப்பத்து : V 6 : 13-14.
25. பதிற்றுப்பத்து : V 7 : 1-8.
26. பதிற்றுப் பத்து ; V 8 : 1-2.
27. பதிற்றுப் பத்து : V 8 : 5-6.

கூட்டம் கூட்டமாக விறலியர்குழாம் செங்குட்டுவன் தன் அரண்மனை சென்று, சுற்றத்துடன் விருந்துண்கிறார்கள்.

**''பாமுஞ் சேறுகம் நீயிரும் வம்மின்**
**துயலுங் கோதைத் துளங்கியர் விறலியர்**
**கொளைவல் வாழ்க்கை நுங் கிளையினிது உணீஇயர்.''[28]**

மேலும், செங்குட்டுவன் தனக்கு என ஒருவகைச் சோறும் பரிசிலர்க்கு என வேறு ஒருவகைச் சோறும் சமைக்குமாறு தன் ஏவலரைப் பணிக்கின்ற வழக்கம் இல்லையென்பதனைப் பரணர்.

**''சோறுவேறு என்ஞு ஊன்றுவை அடிசில்.''[29]**

என்று நயம்படக் கிளத்திக் கூறியுள்ளார்.

இனி ஆறும் பத்தின் பாட்டுடைத் தலைவனுகிய ஆடு கோட்பாட்டுச் சேரலாதனிடத்துக் காக்கைபாடினியார் கண்டகொடை வள மாண்பினைக் காண்போம்.

போர்க்களத்தில் அஞ்சாது எதிர் நின்று பகைவரைக் கொன்று வெற்றி கொண்ட இடியன்ன வன்மைபெற்ற கைகள், இரப்போர் புன்கண் தீர ஈதற் பொருட்டு மட்டுமே கவியக் கற்றிருந்தன. எத்துணை அரும் பொருளாயினும் அதனை எவரிடத்திலுமிருந்தும் ஏற்பதற்கு அவர் கைகள் கூசி நின்றன. இதனை,

**''நல்லமர்க் கடந்த நின் செல்லுறழ் தடக்கை**
**இரப்போர்க்குக் கவிதல் அல்லதை இரைஇய**
**மலர்பறி யா.''[30]**

என்னும் வரிகள் விளக்கா நிற்கின்றன.

---

28. பதிற்றுப்பத்து : V 9 : 1-3,
29. பதிற்றுப்பத்து : V 5 : 5-13.
30. பதிற்றுப்பத்து : VI 2 : 11-13,

ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் இரப்பவர்தம் வறுமை நோய்க்குப் பகைவனாக விளங்கினான். அவர்தம் வறுமையைப் போக்கும் பொருட்டு, நாடோறும் நல்ல பல அணிகலன்களை அரியனவென்று பொருட்படுத்தாது வாரி வழங்கினான். இத்தகு வள்ளன்மை உள்ளம் வாய்ந்த காரணத்தினால் புலவர்கள் அவனுக்குப் பாராட்டு மொழிகள் பல புகன்றார்கள். இவ்வாறு இசை மேம்பட்டமையால் திசைபோய அவன்தன் வண்மையைக் கேள்வியுற்றே, தாம் அவனைக் காண வந்ததாகக் கவினுறக் கவிதையில் வடித்துக் காட்டுகின்றார் காக்கைபாடினியார் நச்செள்ளையார்:

**''வள்ளியை என்றலின் காண்குவந் திசினே**

**..................................................**

**இரவலர் புன்கண் தீர நாடொறும்**
**உரைசால் நன்கலம் வரைவில வீசி**
**அனையை ஆகல் மாறே.''** [31]

இவ்வாறு கொடைமடம் கொண்ட கோமகனின் நாட்டில் வறுமையும் தங்குமோ! வறுமை வற்றி வளம் நிறைந்தது அவன் திருநாட்டிலே. 'இல்லை' என இரப்போர் இல்லையாயினர்; ஆயினும் இரவலர் வாரா வைகலை அவன் சிறிதும் விரும்பவில்லை. எனவே பிற நாடுகளிலிருந்து இரவலர்களைத் தேரில் கொணர்ந்து, அவர்களுக்கு வேண்டுவனவற்றை விரும்பிக் கொடுத்து அவர்களை மாறா மகிழ்ச்சியில் திளைக்கச்செய்தான் மன்னவர் பெருந்தகை:

**'' வாரார் ஆயினும் இரவலர் வேண்டித்**
**தேரில் தந்தவர்க்கு ஆர்பதன் நல்கும்**
**நகைசால் வாய்மொழி இசைசால் தோன்றல்.''** [32]

31. பதிற்றுப்பத்து: VI 4: 1-9.
32. பதிற்றுப்பத்து: VI 5: 10-12 .

ஆடுகோட்பாட்டுச் சேரலாதனிடத்துக் கண்ட கொடை மடத்தின் சிறப்பு இம்மட்டும் அன்று; இதற்கு மேலும் புலனுகின்றது பிறிதொரு பாட்டிலே. இளங் குழந்தைகளைப் பெற்றெடுத்த சிலம்பணிந்த மகளிர்— ஆன்ற அறிவும், அடங்கிய கொள்கையும், திருந்திய நல்லிசையும் கொண்ட மகளிர்—ஊடற் கோலத்தோடு ஊடிய காலையில் துளிர்த்த கண்ணீருக்கு அவன் பெரிதும் அஞ்சினுன். ஆயினும் அதனைக் காட்டிலும் 'இரவலர் புன்கண்ணீர்க்குப் பெரிதும் கவன்றான்' என்று விறலி யாற்றுப்படையில் வைத்து விளங்கப் பாடுகின்றார் புலவர்:

" இளந்துணைப் புதல்வர் நல்வளம் பயந்த
வளங்கெழு குடைச்சூல் அடங்கிய கொள்கை
ஆன்ற அறிவில் தோன்றிய நல்லிசை
ஒண்ணுதல் மகளிர் துனித்த கண்ணினும்
இரவலர் புன்கண் அஞ்சும்
புரவெதிர் கொள்வனைக் கண்டனம் வரற்கே." 33

மேலும் அவன் காட்டில் சிறுகுடிமக்களாக வாழ்ந்த இரவலர்களின் வாழ்வு பொருள்வளம் கண்டு சிறக்க, வழிபல வகுத்துக் கொடை போற்றினுன் என்பதை,

" இரவன் மாக்கள் சிறுகுடி பெருக
உலகந் தாங்கிய மேற்படு கற்பின்
......................................
பல்வேறு வகைய நனந்தலை யீண்டிய
மலையவும் கடலவும் பண்ணியம் பகுக்கும்." 34

காதல் வாழ்வினும் ஈதல் வாழ்விற்கு ஒருபடி சிறப்பினை வழங்கிய காவலன் ஈண்டுச் சிறுகுடி மக்கள்

33. பதிற்றுப்பத்து: VI 7: 10-15
34. பதிற்றுப்பத்து: VI 9: 7-8: 14-15.

பெருங்குடிமக்களாக வளம் பல கண்ட வகை கூறப்படு கின்றது.

கொலைவினை கொண்ட சேனையும் இகல்வினை கொண்ட மன்னனும் பாணர்குடி வாழத் தண்டாது தரும் தகுதி பெற்றுள்ளனர்:

**"கொல்வினை மேவேற்றுத் தானை தானே**
**இகல்வினை மேவலன் தண்டாது வீசும்**
**செல்லா மோதில் பாண்மகள் காணியர்."[35]**

சங்க இலக்கியப் பாடல்களில் மிகுந்த அளவு பாடல்கள் பாடிய பெரும்புலவர் கபிலராவர். அவர் பதிற்றுப்பத்தின் ஏழாம்பத்தில் செல்வக்கடுங்கோ வாழி யாதனைச் சிறக்கப் பாடியுள்ளார். புலர்ந்த சாந்தும் புலரா ஈகையும் மலர்ந்த மார்பும் உடையவன் மாவண் பாரி என்றும், அவன் முழவுமண் புலர, இரவலர் இனைந்து வருந்த வாராத சேட்புலம் படர்ந்தனன் என்றும் உருக்கத் தோடு கூறி, 'அளிக்கென இரக்கும் உள்ளத்தோடு யான் வரவில்லை; உன் புகழை எஞ்சியும் யான் கூறமாட்டேன்' என்ற குறிப்போடு சேர வேந்தனின் செம்பொருட்கொடை நெறியினைச் செவ்விதின் கிளத்துகின்றார் 'பொய்யா நாவிற் கபிலர்.'

போரிலே அரிதாகப் பெற்ற பொருள்களைத் தன்னைத் தேடிவரும் இரவலர்க்கு வாரி வழங்குகிறான் வண்மை நெஞ்சம் சார்ந்த வாழியாதன். அதுபோது, "இவற்றை நாம் வைத்துக்கொள்ளாமல் கொடுத்துவிட்டோமே" என நினைத்து வருந்தவில்லை. "கொடுக்குந் தோறும் மகிழவும் மாட்டான். கொடுக்கும் பொழுதெல்லாம் கிள்ளிக் கொடுக்காமல் அள்ளிக் கொடுப்பான்" என்று அழகுறக் கபிலர் பாடுகின்றார்.

---

35. பதிற்றுப்பத்து: VI 10: 1-3.

"புலர்ந்த சாந்திற் புலரா ஈகை
மலர்ந்த மார்பின் மாவண் பாரி
முழவுமண் புலர இரவலர் இனைய
வாராச் சேட்புலம் படர்ந்தோன்!
............................அளிக்கென
இரக்கு வாரேன்! எஞ்சிக் கூறேன்
ஈத்தது இரங்கான், ஈத்தொறும் மகிழான்,
ஈத்தொறும் மாவள் ளியன்." 36

வயிரியரைக் கண்டால் வல்லே விரைந்து பொருள் வழங்குவான் என்றும், மழையினும் பெரும்பயன் பொழிவான் என்றும், 'பாணர் புரவலன்' என்றும், 'பரிசிலர் வெறுக்கை' என்றும், 'சேறுசெய் மாரியின் அளிக்கும்' சாறுபடு திருவினன் என்றும் பலவாறு செல்வக் கடுங்கோ வாழியாதன் புலவரால் புகழப்பட்டுள்ளான்.

இரவலர்க்குத் திறையாக வந்த களிற்றினையும், அம்பண அளவை நெல்லினையும் ஆர்பதமாக நல்குவன் என்றும் கபிலர் வாழியாதனின் வரையாத ஈகையுள்ளத்தினை உளமாரப் பாராட்டுகின்றார்:

"தொன்று திறை தந்த களிற்றொடு நெல்லின்
அம்பண வளவை விரிந்துறை போகிய
ஆர்பதம் நல்கும் என்ப." 37

"கல்லுயர் நேரிமலைக்குரிய பொருநனும் சான்றோர் பெருமகனுமான செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பாடிச் சென்றால், கடனறி மரபிற் கைவல் பாணனாகிய நீ, கொடுமணம் என்னும் ஊரிற் செய்யப்படும் வேலைப்பாடு மிகுந்த பொற்கலங்களையும், பந்தர் என்னும் ஊரிற் கிடைக்கும் நல்ல முத்துக்களையும் நின் சுற்றத்தார்

36. பதிற்றுப்பத்து: VII 1: 7-14.
37. பதிற்றுப்பத்து: VII 6: 7-9.

முடன் பெறுவாய்'' என்று பாணாற்றுப்படை யமைந்த பாடலில் கபிலர் செல்வக் கடுங்கோவின் மடங்காத கொடை நெஞ்சத்தினைக் கவினுறப் பாடியுள்ளார்.

" கொடுமணம் பட்ட நெடுமொழி ஒக்கலொடு
பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர்க்
கடனறி மரபிற் கைவல் பாண!
தெண்கடல் முத்தமொடு நன்கலம் பெறுகுவை!
.................................................................
பறைபண் ணழியும் பாடுசால் நெடுவரைக்
கல்லுயர் நேரிப் பொருநன்
செல்வக் கோமாற் பாடினை செலினே.'' [38]

இவ்வாறு செல்வக் கடுங்கோ வாழியாதன் அரசாட்சி நிழலில் மக்கள் 'நாமம் அறியா ஏம வாழ்க்கை' வாழ்வதாகக் கபிலர் கூறும் திறனை நினையுந்தொறும் நெஞ்சு உவக்கின்றது.

கபிலர்க்குச் செல்வக் கடுங்கோ வாழியாதன், சிறுபுறம் என நூறாயிரம் காணம் கொடுத்தான் என்றும், நன்று என்றும் குன்றேறித் தன் கண்ணிற் கண்ட நாடெல்லாம் காட்டிப் பரிசாகக் கொடுத்துப் போற்றிப் புகழ்ந்தான் என்றும் ஏழாம் பத்தின் பதிகம் பகருகின்றது. பெருங்குன்றூர் கிழார் பாடிய ஒன்பதாம் பத்தில்,

" அரசவை பணிய அறம்புரிந்து வயங்கிய
மறம்புரி கொள்கை வயங்குசெந் நாவின்
உவலை கூராக் கவலையில் நெஞ்சின்
நனவிற் பாடிய நல்லிசைக்
கபிலன் பெற்ற ஊரினும் பலவே.'' [39]

என வரும் பகுதி கொண்டு, கபிலர் ஊர்கள் பலவற்றைப் பரிசிலாகப் பெற்றார் என அறியலாம்.

---

38. பதிற்றுப்பத்து : VII 7 : 1-4, 21-23.
39. பதிற்றுப்பத்து : IX; 5 : 9-13.

அடுத்து, எட்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவன் பெருஞ்சேர லிரும்பொறையின் கொடைப் பண்புகளை அரிசில்கிழார் வழிநின்று காண்போம். பெருஞ்சேரல் இரும்பொறையின் வளமும் ஆண்மையும் கொடைச் சிறப்பும், சிந்தையும் மொழியும் செல்லா நிலைமையினை யுடையன;

> **" வளனும் ஆண்மையும் கைவண் மையும்**
> **மாந்தர் அளவிறந் தன." 40**

மேலும் நாளவை யன்றியும், பகைவர் நடுவின்கண் அமைந்த பாசறையின் கண்ணும் ஆடிப்பாடி வரும் இரவலர்க்கு, களிறும் குதிரையும் கணக்கின்றிக் கொடுக்கும் கொடைப் பண்புடைய கோடா நெஞ்சினன் பெருஞ்சேரல் இரும்பொறை என்று அரிசில் கிழார் அழகுறப் பாராட்டி யுள்ளார் :

> **" இரந்தோர் வாழ நல்கி இரப்போர்க்கு**
> **ஈதல் தண்டா மாசிதறு இருக்கை**
> **கண்டனென் செல்கு வந்தனென்." 41**

வரையாது வாரி வழங்கும் இவன் கைவண்மையினை,

> **" கொடை போற்றலையே இரவலர் நடுவண்" 42**

என்று கூறியிருப்பதும், பதிகம் அரும்பெறல் மரபின் அரசுகட்டிலையே அரிசில் கிழார்க்கு உவந்தளித்த நெஞ்சினன் இவன் என்று கூறுவதனையும் உன்னி நோக்கின் பெருஞ் சேரலிரும்பொறையின் கொடைப் பெருமிதம் குன்றிலிட்ட விளக்கென ஒளிரா நிற்கும்.

இறுதியாக, ஒன்பதாம் பத்தின் பாட்டுடைத் தலைவ னாகிய குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையின் ஈர

---

40. *பதிற்றுப்பத்து :* VIII 3 : 12-13.
41. *பதிற்றுப்பத்து :* VIII 6 : 7-9.
42. *பதிற்றுப்பத்து :* VIII 9 : 2.

வேந்தத்தினைக் காண்போம். பெருங்குன்றூர் கிழார் பாடிய இப்பத்தால் மன்னனின் மாண்புயர்ந்த கொடைப் பண்பு வெளிப்படுகின்றது.

'பாடுநர், கொளக் கொளக் குறையாச் செல்வம்' உடையவன் சேரன் என்பதனை முதற்கண் தெரியப்படுத்து கின்றார் புலவர். இல்லோர் துன்பம் தொலைய ஈர நெஞ்சோடு நல்கும் நயனுடையன் நனந்தலை யுலகத்தில் நல்லிசையை நிலை நிறுத்திய இச் சேரன் என்பதனை விளங்க உரைக்கின்றார் பொல்லாங்கு அறியாது வடியாநாவின் வல்லாங்கு பாடும் பெருங்குன்றூர் கிழார் :

> " நல்லிசை நிலைஇய நனந்தலை யுலகத்து
> இல்லோர் புன்கண் தீர நல்கும்
> நாடல் சான்ற நயனுடை நெஞ்சின்
> பாடுநர் புரவலன் ஆடுநடை அண்ணல்."[43]

'நீரினும் தீந்தண் சாயல'னாகிய இளஞ்சேரல் இரும் பொறை பாடினிக்கு நன்கலம் நல்கும் நயனுடைய நெஞ்சினன். ஆற்றினைக் கடக்க உதவும் வேழக் கரும்பினும் வல்லவன்.

> " சென்மோ பாடினி நன்கலம் பெறுகுவை
> சந்தம் பூழிலொடு பொங்குநுரை சுமந்து
> தெண்கடன் முன்னிய வெண்டலைச் செம்புனல்
> ஒய்யு நீர்வழிக் கரும்பினும்
> பல்வேற் பொறையன் வல்லனல் அளியே." [44]

வேழக் கரும்பு ஒருவர் ஆற்றினைக் கடக்கும் வரை தான் பயன்படும்; ஆயினும் சேர மன்னன் புலவர்க்கும் மற்றவர்க் கும் எப்பொழுதும் உதவும் இளகிய ஈகை நெஞ்சினனாக

---

43. பதிற்றுப்பத்து IX. 6 : 5-8
44. பதிற்றுப்பத்து IX. 7 : 1-5

உள்ளான் என்பதனை இப்பகுதியால் புலவர் எடுத்துக் காட்டும் நயம் அறிந்து மகிழத்தக்கதாகும்.

'வருநர் வரையாச் செழும்பல் தாரம், கொளக் கொளக் குறையாது தலைத்தலைச் சிறப்ப' என்றும், 'ஈரம் உடைமையின் நீரோர் அனையை' என்றும், 'கொளக்குறைபடாமையின் முந்நீர் அனையை' என்றும் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையின் ஈகைப்பண்பினை இனிமையுறப் புலப்படுத்தியுள்ளார் பெருங்குன்றூர் கிழார் என்னும் புலமைச் சான்றோர்.

இவ்வாறு பதிற்றுப்பத்து என்னும் சங்கத் தமிழ் நூலில் சேர வேந்தர் எண்மரின் இனிய ஈகை வளம் இனிமையுற இயம்பப்பட்டுள்ளது. பாடல்களை இயற்றிய புலவர் பெருமக்கள் பெற்ற பரிசில்களைப் பதிகவழி அறியும் பொழுது சேர வேந்தரின் கொடை வளத்தினைக் கண்டு வியக்கத்தோன்றுகின்றது. வீரத்தின் விளைநிலமான அவர் தம் நெஞ்சமே, ஈரத்தின் பிறப்பிடமாகவும் துலங்கிய செம்மை அறிந்து போற்றத் தக்கது.

# 6

# சேரர் தொண்டி

பண்டைத் தமிழகத்தில் நாடும் நகரமும் நனி சிறப் புற்றிருந்தன. நானில வளங்களும் நன்கியைந்து நாடு நாடாக விளங்கிய காலம் சங்ககாலம் என்பதனைச் சங்க இலக்கியம் பயில்வோர் நன்குணர்வார். 'வண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பு' எனக் கூறப்பட்ட—முடியுடை வேந்தரால் முறைமையுடன் ஆளப் பெற்ற தமிழகத்தின் நகரங்களும் நல்ல வாழ்வு நிலையைப் பெற்றுத் துலங்கின. நாட்டுப்புறங்களில் உழவர் குடிப் பெருமக்களின் வாழ்வு பீடுறப் பிறங்கியது. முல்லையம் புறவில் ஆயர் வாழ்வு அழகுற மிளிர்ந்தது. நெய்தலங் கானலில் பரதவர் வாழ்வு பயனுற அமைந்திருந்தது. மலைவாழ் மக்களின் வாழ்வும் மாண்புறத் துலங்கியது. நாட்டுப்புற வாழ்வில் அமைதி கொலு வீற்றிருந்தது நகர வாழ்க்கையில் மனித முயற்சி யின் முன்னேற்றம் விளங்கியது; உழைப்பின் உருவ நிலைகள் உயர்ந்து நகரங்களில் விளக்கம் பெற்றன. ஆரவார நிலை, வேகமான பரபரப்பு நிறைந்த வாழ்க்கை நகரங் களில் காணப்பட்டன. எனவேதான் பண்டைத் தமிழ்ப் புலவர் பெருமக்கள் நகரங்களைக் குறிப்பிடும் பொழுது அந்நகரங்களில் எழும் ஒலியினையும் விடாது குறித் துள்ளனர் :

> " மாட மதுரையும்
> பீடார் உறந்தையும்
> கலிகெழு வஞ்சியும்
> ஒலிபுனற் புகாரும். "[1]

என்ற பாடற் பகுதியினைக் காண்க.

1. சிலப்பதிகாரம்; வேனிற்காதை: 3-4

சங்க காலத்தில் பாண்டிய மன்னருடைய தலைநகர மாகப் புகழ் பெற்று ஓங்கியது மதுரைமா நகரமாகும். சோழ நாட்டின் கோநகரமாகச் சிறந்து நின்றது உறந்தை யம்பதியாகும். இவை போன்றே சேர நாட்டிற்குச் செழும் பதியாக, தலைநகராக வாய்த்தது வஞ்சிமாநகரமாகும். தலைநகரங்களன்றியும் கடற்கரைப் பட்டினங்களும் வாணிப மையங்களாகப் பெருவாழ்வு பெற்றுச் சீரும் சிறப் புடன் துலங்கின. பாண்டி நாட்டின் துறைமுகப் பட்டின மாக அந்நாளில் சிறந்து நின்றது கொற்கைத் துறைமுக மாகும். பாண்டி நாட்டின் தாமிரபரணியின் சங்கமத் துறையில் அமைந்த பழம்பெரும் துறைமுகப் பட்டினம் இதுவே.

இக்கொற்கை 'முத்துப்படு மரபிற் கொற்கை' என்றும், 'நற்றேர் வழுதி கொற்கை முன்துறை' என்றும், 'புகழ்மலி சிறப்பிற் கொற்கை முன்துறை' என்றும் சங்க இலக்கியங்கள் கொற்கையின் புகழ் பாடுகின்றன. 'முட்டாச் சிறப்பின் பட்டினம்' எனப் பட்டினப்பாலை புகார் நகரைப் புகழ்ந்து பேசும். சேர மன்னர்க்கு 'வளங்கெழு முசிறி'யை யடுத்த நிலையில் தொண்டி சிறப் புற்று விளங்கியது.

கி பி. 60-இல் வாழ்ந்தவனாகக் கருதப்படும் எகிப்திய கிரேக்க னொருவன் எழுதிய 'பெரிப்ளூஸ்' என்னும் பிரயாண நூலில் தொண்டியைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. அக்குறிப்பினின்று தொண்டி சேர நாட்டைச் சேர்ந்த சிறப்புமிக்க நகரம் என்பதனையும், முசிறித் துறைமுகத் திற்கு ஐந்நூறு ஸ்டேடியா (ஏறத்தாழ ஐம்பத் தேழரை மைல்) தொலைவில் அமைந்திருந்தது என்பதனையும், முசிறியையும் தொண்டியையும் இணைத்து ஆறு ஒன்று ஓடியது என்பதனையும் அறியலாம். பெரிப்ளூஸ் நூலில் தொண்டி 'திண்டிஸ்' (Tyndis)

ளைக் குறிப்பிடப் பெறுகின்றது. காலத்தால் முற்பட்ட இந் நூலிலேயே தொண்டியின் பெருமை சுட்டப் படுகின்றது.

இதன் பின்னர் கி. பி. 150-இல் வாழ்ந்த தாலமி எழுதிய நில வரலாற்று நூலில் தொண்டி குறிப்பிடப் பெறுகின்றது. டாக்டர் யூல் என்பார் 'திண்டிஸ்' என்னும் கிரேக்கப் பெயரின் மூலம் 'தனுர்' ஆகலாம் என்பர். டாக்டர் பர்ணல் இக்காலத்தில் 'கடலுண்டி' என வழங்கும் ஊரே தொண்டி என்பர். பெரிப்ளூஸ் நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த டாக்டர் ஷாவ் 'பொன்னணி' என்பதே தொண்டி நகராகலாம் என்பர். இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமநாதபுரத்திற்கு அண்மையில் தொண்டி என்னும் சிற்றூர் ஒன்று இன்று உளது. தொண்டி என்பது கடலின் கழிக்கு - கடலின்றும் உட்பாய்ந்த கழிக்கு ஒரு பெயராக இன்றும் தஞ்சைப் பகுதிகளிலும் ஈழ நாட்டிலும் வழங்குவதனால் மேலைக் கடற்கரையைச் சார்ந்த ஊராக இத் தொண்டி விளங்கியிருக்க வேண்டும் என்று முடிவு கட்டலாம்.

பண்டை நாளில் சேர நாடு பல உள்நாட்டுப் பிரிவுகளைக் கொண்டிருந்தது. குட நாடு, குட்ட நாடு இரண்டும் தொடக்கத்தில் அமைந்து சிறந்து விளங்கின. சேர நாட்டின் வடபகுதி குடநாடு என்றும், தென்பகுதி குட்ட நாடு என்றும் வழங்கின. குடநாட்டுத் தொண்டியும் குட்ட நாட்டு வஞ்சியும் அன்று கோநகரங்களாக மிளிர்ந்தன. பிற்காலத்தே குடநாட்டுப் பிரிவில் அடங்கிய பொறை நாடு தொண்டியைத் தலைநகராகக் கொண்டு விளங்கியது. குறும்பொறை நாட்டில் இன்று சிற்றூராக விளங்கும் இத் தொண்டியைப் பிளினி (Pliny) எனும் யவன அறிஞரும் குறிப்பிட்டுள்ளார். இந்நகரின் வடக்கிலும் தெற்கிலும் நல்ல நன்செய் நிலங்களும், கிழக்கில்

மலையும், மேற்கில் கடற்கரைச் சோலையும் அமைந் திருந்தன என்பது இலக்கியம் உணர்த்தும் காட்சி களாகும். நானில வளமும் மயங்கிய நல்லதோர் நகராகத் தொண்டி துலங்கிய காரணத்தினால் சேரமான் கோக் கோதை மார்பனைப் பொய்கையார் என்னும் சங்ககாலப் புலவர்,

" நாடன் என்கோ
ஊரன் என்கோ
பாடிமிழ் பனிக்கடல்
சேர்ப்பன் என்கோ
யாங்கன மொழிகோ
வோங்குவாட் கோதையை "[2]

என்று பாடினார். செந்தமிழ் வழங்கிய சேரநாடு நானில வளங்களும் நன்கு கெழுமியது என்பதனைப் பிற்காலத்தே தெய்வப் புலமைச் சேக்கிழார் பெருமானும்,

" திரைசெய் கடலின் பெருவளனுந்
திருந்து நிலனின் செழுவளனும்
வரையின் வளனு முடன்பெருகி
மல்கு நாடு மலை நாடு"[3]

என்று பாடியுள்ளார். பண்டைத் தமிழர் வரலாற்றினைப் பாங்குற அறியப் பெருந்துணை நல்கும் புறநானூறும் தொண்டியின் வளத்தினை எஞ்சாது போற்றியுரைக் கின்றது.

" குலையிறைஞ்சிய கோட்டாழை
அகன் வயன் மலைவேலி
நிலவுமணல் வியன்கானல்
தெண்கழிமிசைச் சுடர்ப்பூவில்
தண்தொண்டி "[4]

என்ற குறுங்கோழியூர் கிழார் பாடல் கொண்டு, 'குலை

---

2. புறநானூறு: 49: 1-3
3. பெரிய புராணம் விறன் மிண்ட நாயனர் புராணம்: 1
4. புறநானூறு: 17:9-13

தாழ்ந்த முற்றிய தெங்கினையும், அகன்ற மருதநில வயலகளையும், மலையாகிய வேலியையும், நிலாப் போன்ற மணலையுடைய அகன்ற கடற்கரையையும், தெளிந்த கழியிடத்துத் திப்போலும் மலர்ந்துள்ள பூவினையுமுடைய குளிர்ந்த 'தொண்டி மாநகரம்' என்ற குறிப்புப் பெறப்படுகின்றது. இக்கருத்திற்கு அரண் செய்யும் வகையிலேயே சங்கத் தொகை நூல்களில் சான்றுகள் அமைந்திருக்கக் காணலாம்.

மலர்கள் காண்பார் கண்களைப் பிணித்து நெஞ்சை யள்ளும் நீர்மையன. இத்தகு மலர் நிறைந்த சோலைகள் தொண்டி நகரில் அமைந்து இயற்கைக் காட்சிகள் செறிந்த இனிமை நிறைந்த இடமாகக் காட்சி தந்தன. ஐங்குறுநூற்றின் நெய்தல் நூறில் 'தொண்டிப் பத்து' என்னும் பகுதியில் தொண்டியின் நலம் விளங்கப் பேசப்படுகின்றது.

**" தொண்டித் தண்கமழ் புதுமலர். "[5]**

**" முண்டக நறுமலர்**
**கமழும் தொண்டி.. "[6]**

**" கள்நா றும்மே கானலந் தொண்டி.. "[7]**

தொண்டி நகரம் சேரனுக்கு உரியதாயிருந்தது என்ற செய்தியும் பாடல்களில் கூறப்படுகிறது, மேலும், அது அவனுடைய பெருநகராகவும் விளங்கியது என்பதும் அறியப்படுகிறது.

**" கண்போல் நெய்தல்**
**போர்வில் பூக்கும்**

---

5. *ஐங்குறுநூறு: 176: 1-2*
6. *ஐங்குறுநூறு: 177; 3-4*
7. *புறநானூறு: 48 : 4*

திண்டேர்ப் பொறையன்
தொண்டி. "[8]

" திண்டேர்ப் பொறையன்
தொண்டி முன்றுறை "[9]

" செங்கோற் குட்டுவன் தொண்டி. "[10]

" வெண்கோட்டு யானை
விறற்போர்க் குட்டுவன்
தெண்திரைப் பரப்பில்
தொண்டி முன்றுறை. "[11]

என்றும் எட்டுத் தொகை நூல்கள் குறிப்பிடுவதனால் தொண்டி சேர மன்னர்களின் செங்கோன்மை செலுத்திய நகரென அறியலாம்.

தொண்டி துறைமுகப் பட்டினமாக விளங்கிய காரணத்தால் கடலலைகளின் ஆரவாரம் காதில் விழுந்து கொண்டிருந்தது என்பதும், அக்கடல் முழக்கம் முழவோசையினை நினைவூட்டியது என்பதும் சங்கச் சான்றோர் செய்யுட்களால் செவ்விதின் அறியப்படும்:

" திரையிமிழ் இன்னிசை
யளைஇ யயலது
முழவிமி ழின்னிசை
மறுகுதொ றிசைக்கும்
தொண்டி. "[12]
" வண்டிமிர் பனித்துறைத்
தொண்டி. "[13]

---

8. நற்றிணை: 8: 8-9
9. குறுந்தொகை: 125:2
10. ஐங்குறுநூறு: 178: 2-3
11. அகநானூறு: 290:13-14
12. ஐங்குறுநூறு: 171:1-3
13. ஐங்குறுநூறு: 172:2

"அலவன் தாக்கத்
துறையிருப் பிறமும்
இன்ஞெலித் தொண்டி."[14]

"பெருநீர், வலைஞர் தந்த
கொழுமீன் வல்சிப்
பறைதபு முதுகுரு கிருக்கும்
துறைகெழு தொண்டி."[15]

"வளைகடல் முழவின் தொண்டி."[16]

தொண்டித்துறை அயிரை மீனுக்குப் பெயர் போனது. தலைமகளைக் குறியிடத்துக் காணாது வறிதே சோர்ந்த நெஞ்சுடன் மீளும் தலைமகன் தன் நெஞ்சை நோக்கிப் பின்வருமாறு கூறினான்: "கீழ்க்கடல் ஓரத்தில் அலைகள் அடிக்கும் இடத்தில் அமர்ந்திருக்கும் சிறகுகள் இழந்த நாரை, திண்ணிய தேரையுடைய சேரனுக்குரிய மேலைக் கடற்கரையில் அமைந்த தொண்டி என்னும் கடற்கரைப் பட்டினத்தின் கடற்றுறையின்கண் உள்ள அயிரை மீனை உணவாகப் பெறும்பொருட்டுத் தன் தலையைச் சிறிது மேலே நிமிர்த்தி அணவந்தது போல, நெஞ்சமே! நீ பெறுதற்கரியளாகிய தலைமகளை நினைத்தாய்; அவ்வாற்றான் நீ வருந்துதற்குரியை," அப்பாடல் வருமாறு:

"குணகடல் திரையது பறைதபு நாரை
திண்டேர்ப் பொறையன் தொண்டி முன்றுறை
அயிரை யாரிரைக்கு அணவந் தாங்குச்
சேயள் அரியோட் படர்தி
நோயை நெஞ்சே நோய்ப்பா லோயே."[17]

---

14. ஐங்குறுநூறு: 179: 2-3
15. ஐங்குறுநூறு: 180: 1-4
16. பதிற்றுப்பத்து: 88:21
17. குறுந்தொகை: 125

இக் குறுந் தொகைப் பாட்டில் தொண்டியின் மீன் வளம் சுட்டப்படுகின்றது. மேலும் தொண்டிப் பட்டினத்தில் வாழும் பரதவர்குல மக்கள் உப்பு விளைவித்தலையும் மீன் பிடித்தலையும் தொழிலாகக் கொண்டிருந்தனர். நெய்தல்நிலக் குறுமகள் ஒருத்தி உப்பை விற்று அதற்கு மாற்றாகத் தொண்டி நெல்லினைப் பெற்றாள். அந்நெல்லினைக் குற்றி அரிசியாக்கி வெண் சோறு பொங்கினாள். கொழுவிய மீன் கொண்டு குழம்பு வைத்தாள். மீன் வேட்டம் மேற்கொண்ட தன் தந்தைக்கு இவ் உணவினைப் படைத்தாள் என்று அகநானூற்றுப் பாடலொன்று குறிப்பிடுகின்றது:

" பெருங்கடற் பரப்பில் சேயிறுல் நடுங்க
கொடுந்தொழில் முகந்த செங்கோல் அவ்வலை
நெடுந்திமில் தொழிலொடு வைகிய தந்தைக்கு
உப்புநொடை நெல்லின் மூரல் வெண்சோறு
அயிலை துழந்த அம்புளிச் சொரிந்து
கொழுமீன் தடியொடி குறுமகள் கொடுக்கும்
திண்டேர்ப் பொறையன் தொண்டி. "[18]

தொண்டித் துறைகளில் மீன் வளம் மிகுதியாக இருந்த காரணத்தால் பழைய படகுகளைச் சிதைவு போக்கிய புதுவலைப் பரதவர் மோட்டு மணல் அடைகரைகளில், வலைப்பட்ட மீன்களைப் பகுத்துப் பாக்கத்து வாழும் மக்கட்கெல்லாம் வழங்குகின்றனர்.

" பழந்திமில் கொன்ற புதுவலைப் பரதவர்
மோட்டு மணல் அடைகரைக் கோட்டுமீன் கெண்டி
மணங்கமழ் பாக்கத்துப் பகுக்கும் வளங்கெழு தொண்டி: "[19]

அடுத்துத் தொண்டி நெல் குறுந்தொகைப் பாட்டொன்றில் சிறப்பித்துப் பேசப்பட்டுள்ளது. தலைமகளை

18. அகநானூறு: 60: 1-7
19. அகநானூறு: 10: 10-13

விட்டுப் பிரிந்த தலைமகன் குறித்த காலங் கடந்து மீண்டான் தன் பிரிவை ஆற்றியிருந்த தலைமகளைக் கண்டு உவந்தான். தலைமகளை ஆற்றிய அருமைப்பாடு தோழியுடையது எனக் கருதினன். தோழியைப் பாராட்டத் தொடங்கினன். தோழியோ அப்பாராட்டுரைக்குத் தான் தகுதிப்பாடு உடையவள் அல்லள் என்றாள். காக்கை நாளும் தலைமகன் வருவன் என்று உணர்த்தும் வழிக் கரைந்ததனால் தலைமகள் ஆற்றியிருந்தனள் எனப் புகன்றான். அத்தகு காக்கைக்கு நள்ளியின் காட்டுப் பசுக்கள் பயந்த நெய்யினையும், தொண்டி நெல்லாலான வெண்ணெல்லரிசிச் சோற்றினையும், கலந்து ஏழு பாத்திரங்களில் ஏந்திக் கொடுத்தாலும் விருந்தினர் வருவர் எனக் கரைந்த காக்கைக்குரிய சிற்றளவு பலியே யாகும் என மொழிந்தாள்.

> " திண்டேர் நள்ளி கானத் தண்டர்
> பல்லா பயந்த நெய்யிற் றொண்டி
> முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு
> எழுகலத் தேந்தினுஞ் சிறிதென் தோழி
> பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு
> விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே." [20]

காக்கையை இங்ஙனம் பாடிய சிறப்பால் இப்பாடலைப் பாடிய நல்லிசைப் புலமை மெல்லியலார் காக்கை பாடினியார் என்ற பெயர் பெற்றார்.

பச்சை அவலை இடித்த வயிரம் பாய்ந்த கரிய உலக்கை யைக் குழந்தையெனப் பாவித்து, அழகிய கதிரையுடைய நெற்பயிர் நிறைந்திருக்கும் வயல்களின் வரப்பாகிய அணையில் படுக்கவைத்து, அதைக் கண் வளரச் செய்து விட்டு விளையாட்டயர்வர் என்று ஒண்டொடியணிந்த தொண்டி நகர்ச் செல்வ மகளிரின் சிந்தை யினிக்கும் சீரிய

---

20. குறுந்தொகை: 210

விளையாட்டினைக் குன்றியன் என்ற புலவர் குறிக்கின்றார்:

"பாசவல் இடித்த
கருங்காழ் உலக்கை
ஆய்கதிர் நெல்லின்
வரம்பணைத் துயிற்றி
ஒண்டொடி மகளிர்
வண்டல் அயரும் தொண்டி." [21]

மேலும் நலம் பல பெற்ற நன்னகர் தொண்டி என்பது பல பாடல்கள் வழி நிறுவப்படுகின்றது. "எம்மை நயந்து போந்து நின் நலனை நல்குவையாயின் எல்லாச் சிறப்பினையுமுடைய தொண்டிநகர் போலும் நின்னுடைய பலவாகிய குணங்களைக் கைக்கொண்டு பெரிய தோளையும் நல்ல நெற்றியையுமுடைய அரிவை யாகிய தோழியுடன் மெல்ல நடந்து வருக" என்ற கருத்தமைந்த ஐங்குறுநூற்றுப் பாடல் (175) வழி நங்கையரின் நலத்தினை நன்னகரோடு ஒப்பிட்டுப் பேசும் பழைய வழக்குண்மை உணரலாம். பின்வரும் சான்றுகளும் இக்கருத்தினை வலியுறுத்தக் காணலாம்;

"தொண்டி யன்னவென்
நலம் தந்து
கொண்டனை சென்மோ
மகிழ்நநின் சூளே." [22]

"வளங்கெழு தொண்டி
யன்னவிவள் நலனே." [23]

---

21. குறுந்தொகை: 238:1-4
22. குறுந்தொகை: 238:4-5
23. அகநானூறு: 10:13

"திண்டேர்ப் பொறையன்
தொண்டி யன்னவெம்
ஒண்டொடி." [24]

இவ்வாறு வளம் பல பெற்றுப் பெரு வாழ்வுடன் இலங்கிய தொண்டியினை ஒரு காலத்தில் ஆண்ட கணைக் கால் இரும்பொறை, மூவன் என்னும் சிற்றரசனை வென்று அவனுடைய பற்களைப் பிடுங்கித் தன் தொண்டியம்பதிக் கோட்டைக் கதவில் பதித்து மகிழ்ந்தான் என்னும் தமிழர் தம் வீர வாழ்விற் கியைந்திருந்த அந்நாளைய செய்தியினை நற்றிணைப் பாடலொன்று நவிலுகின்றது.

"மூவன்............
முழுவலி முள்ளெயிறு
அழுத்திய கதவின்
கானலந் தொண்டிப்
பொருநன் வென்வேல்
தெறலருந் தானைப் பொறையன்." [25]

இவ்வாறு வளம் சிறந்து நலங்கெழுமிப் பெருவாழ்வு பெற்றிருந்த தொண்டி கி.பி. மூன்றும் நூற்றாண்டிற்குப் பின் தாழ்நிலை யடைந்தது. சேரரின தொண்டியின் புகழை யொட்டியே பாண்டியர் தம் நாட்டிலும் ஒரு தொண்டியை அமைத்துக் கொண்டனர் எனலாம்.

சிலப்பதிகாரத்தில் ஊர்காண் காதையில் வரும் 'ஓங்கிரும் பரப்பின் வங்க ஈட்டத்துத் 'தொண்டியோர்' என்ற தொடருக்கு, 'கீழ்த்திசையிலே தொண்டி என்னும் பகுதியில் உள்ள அரசர்' என்றும், 'தொண்டியோர்—சோழ குலத்தோர்' என்றும் அடியார்க்கு நல்லார்

---

24. அகநானூறு: 61: 7-8
25. நற்றிணை: 18: 2-5

எழுதியுள்ள உரை கொண்டு சோபூருக்கு உரித்தாகக் கீழைக் கடற்கரையில் ஒரு தொண்டிருந்ததென ஊகிக்கலாம். ஆயினும் இத் 'தொண்டி சுமித்ரா, ஜாவா முதலிய பிரதேசங்களில் சோழ குலத்தோரால் அமைக்கப்பட்ட ஒரு நகரமாதல் வேண்டும்' என்பர் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை.[26]

ஐந்தாம் நூற்றுண்டில் தோன்றிய பாண்டியர் தொண்டியினை நந்திக் கலம்பகம் கொண்ட நாயகன் மூன்றும் நந்திவர்மன் பொருது கைப்பற்றினுன் என நந்திக் கலம்பகம் 38 ஆம் செய்யுள் உணர்த்தும்.

கி. பி. பன்னிரண்டாம் நூற்றுண்டில், இரண்டாம் இராசாதிராசன் ஈழப் படையால் தோற்கடிக்கப்பட்ட குலசேகர பாண்டியனுக்குத் துணையாகப் படை நடத்தித் தொண்டியில் கடும் போர் செய்து ஈழப் படைகளைப் பின்வாங்கச் செய்து பாண்டியர் ஆட்சியை மீட்டும் நிலைநாட்டினுன் என ஆர்ப்பாக்கம் கல்வெட்டு அறிவிக்கின்றது.

முடியுடை மூவேந்தர்க்கும் தொண்டி என்ற பெயரில் இருந்த மயக்கமும், பிற நாட்டினரும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தொண்டியைத் தம் நூலில் புகழ் படக் குறிப்பிட்டுள்ளனர் என்ற செய்தியும், தொண்டி நெல்லுக்கும் மீன் வளத்திற்கும் சிறந்திருந்தது என்கின்ற உண்மையும் மேற்குறிப்பிடப் பெற்ற பழம் பாடல்கள் வழி நன்கு புலனுகக் காணலாம்.

---

26. இலக்கிய தீபம் : பக்கம்: 174

# 7

# காதல் உணர்த்திய பண்பாடு

பெண்ணின் பெருமையைப் போற்றிப் பாடல்கள் பாடிய கவிஞர்கள் பலர். பெண்ணின் பெரு நலத்தினையும் மாண்பினையும் சங்கக் கவிஞர்கள் சிறப்புறப் பாடியுள்ளனர். பழந்தமிழ் மகளிர் அழகாலும் பண்பாலும் மாட்சியுற்றிருந்தனர். பெண்ணின் பெரும் பண்புச் சிறப்புக் காரணமாகவே இல்வாழ்க்கையின் இனிமை அமைந்திடுகின்றது. 'மனைக்கு விளக்கம் மடவார்' என்றும், "மனைக்குவிளக் காகிய வாணுதல்' என்றும் பெண்ணின் பெருமை கிளத்தப்படுகின்றது.

" பூவொடு புரையுங் கண்ணும் வேயென
விறல்வனப் பெய்திய தோளும் பிறையென
மதிமயக் குறூஉ நுதலும் "[1]

கொண்டு பெருவனப்புடன் பெண்மை நலம் விளங்குவதாக மதுரை எழுத்தாளன் சேந்தம் பூதன் என்னும் சங்ககாலக் கவிஞர் சாற்றுகின்றார்.

தொல்காப்பியனார்.

" அச்சமும் நாணும் மடனும்முந் துறுதல்
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப "[2]

என்று பெண்ணின் பெரும் பண்புகளைச் சுட்டுகின்றார். மேலும் அவர்,

---

1. குறுந்தொகை : 266 : 1-3
2. தொல்காப்பியம் : களவியல்: 8

'செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பா லான''[3]

என்று பெண்ணிடம் குடிகொண்டிருக்க வேண்டிய தன்மைகளைக் குறிப்பிடுவர். இவ்வடிகளுக்கு உரை கண்ட உரையாசிரியர் இளம்பூரணவடிகள், "செறிவு என்பது அடக்கம்; நிறைவு என்பது அமைதி; செம்மை என்பது மனங்கோடாமை; செப்பு என்பது சொல்லுதல்; அறிவு என்பது நன்மை பயப்பனவுந் தீமை பயப்பனவும் அறிதல்; அருமை என்பது உள்ளக் கருத்து அறிதலருமை" என்று அருமைப்பாட்டுடன் பெண்மை நலத்தின் சிறப்பினை எடுத்து மொழிந்துள்ளார்.

இத்தகு பெண்மை நலம் வாய்க்கப் பெற்ற பெண்கள் பெருமையும் உரனுங் கொண்ட ஆடவரைக் களவின் வழிக் கண்டு, காதலில் கட்டுண்டு, பின் இல்லற வாழ்வில் தலைப் படுவர். இல்லறம் இனிமையுற நடைபெற வேண்டுமாயின் பொருள் மிகுதியும் தேவைப்படுகின்றது. 'பொருளில்லார்க் கிவ்வுலகம்' இல்லையன்றோ? மேலும் தம் சுற்றத்தினரைப் புரத்தலும், தம்பால் ஒன்று இரப்பார்க்கு இல்லையெனாது ஈதலும் தலைவனின் தகுதி சான்ற கடன்களாகும். இதனைத் தலைவி,

"தங்கடன் நிறீஇய ரெண்ணி யிடந்தொறும்
காமர் பொருட்பிணிப் போகிய
நாம்வெங் காதல்''[4]

என்று குறிப்பிடுகின்றாள். இதனையே 'கற்றறிந்தார் ஏத்தும் கலி'

3. *தொல்காப்பியம்: பொருளியல்*: 15
4. *குறுந்தொகை*: 255: 6-8

"அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணுரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்"[5]

என்று பொருட்பொருத்தமுறப் புலப்படுத்துகின்றது. அகநானூற்றுப் பாடலொன்று தலைவன்,

"கேள்கே டூன்றவுங் கிளைஞ ராரவும்
கேளல் கேளிர் கெழீயின ரொழுகவும்
ஆள்வினைக் கெதிரிய வூக்கமொடு"[6]

பொருள்வயிற் பிரிந்ததாக மொழியும்.

இந்த நிலையில் பொருள் தேடத் தன் நெஞ்சை வலிக்கின்றான் தலைவன். 'வினையே ஆடவர்க் குயிரன்றோ?' தலைவியை விடுத்துத் தனியே பாலை வழியைக் கடந்து செல்லும் தலைவனைப் பாலையின் கொடிய வெப்பம் துன்புறுத்துகின்றது. சிறுபாணாற்றுப்படையில் வரும்,

"வேனில் நின்ற வெம்பத வழிநாள்
காலைஞா யிற்றுக் கதிர்கடா வுறுப்பப்
பாலை நின்ற பாலை"[7]

என்ற வரிகளுக்குப் பொருள் எழுதும்பொழுது உரையாசிரியர் நச்சினார்க்கினியர், "இளவேனில் நிலைபெற்ற காலத்திற்கும் பின்னாகிய நாளிலே ஞாயிற்றினுடைய கதிர் வெம்மையைச் செலுத்துதலைச் செய்கையினாலே வெய்ய செவ்வியையுடைய பாலைத்தன்மை நிலைபெற்றமையாற் பிறந்த பாலை நிலமாகிய தொலையாத வழியினையுடைய சுரமெனன்க" என்று உரை கண்டுள்ளார். மேலும், அவர் பாலைத் தன்மையினைத் தொல்காப்பியப்

---

5. கலித்தொகை: 11: 1-4
6. அகநானூறு; 93:1-3
7. சிறுபாணாற்றுப்படை.9-11

பொருளதிகார உரையில் நன்கு புலப்படுத்தியுள்ளார். அது வருமாறு:

> "பாலைத்தன்மையாவது, காலையும் மாலையும் நன்பகலன்ன கடுமை கூரச் சோலை தேம்பிக் கூவல் மாறி நீரும் நிழலுமின்றி நிலம் பயம் துறந்து புள்ளும் மாவும் புலம்புற்று இன்பமின்றித் துன்பம் பெறுவது." [8]

என்று குறிப்பிட்டுள்ளமை கொண்டு பாலை நிலத்தின் கொடிய தன்மையினை ஒருவாறு உணரலாம். இம்மட்டோடன்றி வழிப்போவோரைத் தாக்கித் துன்புறுத்தும் ஆறலைகள்வர்கள் ஆங்கே வாழ்கின்றனர் என்றும், அவர்கள் வழிச்செல்வோரிடம் கைப்பற்றிக் கொள்வதற்குப் பொருள் இல்லையெனினும் நஞ்சு தோய்ந்த அம்பெய்து அவர் தம் உயிர்நிலைகளிற் பாய்ச்சிக் கொல்லுகின்றனர் என்றும், அத்தகு கொடிய வழிகளிற் பறவைகளும் பறவா என்றும் பாலை பாடிய பெருங்கடுங்கோ தம் பாலைக்கலியில் கூறியுள்ளார்:

> " அற்றம்பார்த் தல்குங் கடுங்கண் மறவர்தாங்
> கொள்ளும் பொருளில ராயினும் வம்பலர்
> துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வெளவலிற்
> புள்ளும் வழங்காப் புலம்கொள் ஆரிடை "[9]

இத்தகைய நிழல் அடங்கி அற்றுப் போன நீரில்லாத கடத்தற்கரிய பாலை வழியிலே செல்லும் தலைவன் ஒளி விடுகின்ற நெற்றியையுடைய தன் தலைவியை எண்ணுகின்றான். அவளை நினைக்குந்தோறும். நீண்ட மூங்கில்கள் உலறுமாறு வேனில் நீடுதலால் மிக்க கதிர்களையுடைய ஞாயிறு, கற்களும் பிளவெய்துமாறு காய்தலின் முன்பு

---

8. தொல்காப்பியர்; அகத்திணையில் :9.
9. கலித்தொகை: 4: 3-6.

வெம்மையுடையனவாகத் தோன்றிய பாலைநிலம் குளிர்ச்சியைக் குறைவின்றித் தந்து தண்ணியவாக நின்றன என்று குறிப்பிடுகிறான்.

> "நெடுங்கழை முளிய வேனில் நீடிக்
> கடுங்கதிர் ஞாயிறு கல்பகத் தெறுதலிற்
> வெய்ய வாயின முன்னே யினியே
> ஒண்ணுத லரிவையை யுள்ளுதொறும்
> தண்ணிய வாயின சுரத்திடை யாறே."[10]

இத்தன்மை வாய்த்த பாலை நிலத்தின் தலைவன் தன் நீர்விடாயினைத் தீர்த்துக்கொள்ளத் தண்ணீரைக் கண்டிலன். வேட்டையை மேற்கொண்ட செந்நாய் தோண்டி உண்டு எஞ்சியதாகிய காட்டுமல்லிகைப்பூ மூடிய அழுகல் நாற்றத்தையுடைய சிலவாகிய நீரே காணப்படுகின்றது. அந்நீரினைத் தலைவன் குடிக்கும் பொழுது தன் நெஞ்சின் கண் விரும்பிப் பொருந்திய தலைவி தன்னோடு வந்திருப்பின் அந்நீரையல்லவா பருகியிருக்க வேண்டும் என்று தன் தலைவிக்காக இரங்குகின்றான்.

> "வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சிற்
> குளவி மொய்த்த வழுகற் சின்னீர்
> வளையுடைக் கைய ளெம்மொ டுணீஇயர்
> வருகதில் லம்ம தானே
> அளியளோ வளியளெந் நெஞ்சமர்ந் தோளே" [11]

தலைவன், தலைவி தன்னோடு அருஞ்சுரம் கடக்க ஆற்றுநள் அல்லள் என்று நினைக்கையில், 'மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்' என்ற கொள்கை வழி வாழும் தலைவி தலைவனோடு 'துன்பத்திற்குத் துணையாக நாடின் அதுவல்லது இன்பமும் உண்டோ எமக்கு?' என்று கருது

---

10. ஐங்குறுநூறு. 322
11. குறுந்தொகை: 56

கின்முள். எனவே தலைவனோடு அருஞ்சுரம் கடக்க முனை கின்முள். தன் வீட்டில் இளமையில் செம்பொன்னாலாகிய பாத்திரத்தில் பொரியொடு கலந்த பாலினைச் செவிலியர் தரவும் அதனை மிக்கது வேண்டா என மறுத்த தலைவி இப்பொழுது நிழலற்ற நீரற்ற கடத்தற்கரிய பாலை வழியில் தலைவனே தன்னைப் பாதுகாப்ப விரைந்து சென்று நீர்வள மற்ற சுனையின் பக்கத்தில் உலர்ந்து வெம்மையைக் கொண்ட மிக்க வெப்பத்தையுடைய கலங்கல் நீரைத் தவ்வென்னும் ஓசைபடக் குடிக்க வல்லுநளாகின்முள்.[12] ஐங்குறுநூறு அன்னுய் வாழிப்பத்தில் வரும் பாடலொன்று இக் கருத்தினைச் சிறப்புறப் புலப்படுத்தி நிற்கும். இப்பாட்டு உடன்போய் மீண்ட தலைமகள், 'நீ சென்ற நாட்டு நீர் இனிய வல்ல; நீ எங்ஙனம் நுகர்ந்தாய்?' எனக்கேட்ட தோழிக்குச் சொல்லியதாகும். அப்பாட்டு வருமாறு :

> " அன்னுய் வாழிவேண் டன்னைநம் படப்பைத்
> தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு
> உவலைக் கூவற் கீழ
> மானுண் டெஞ்சிய கலுழி நீரே." [13]

தன் தோட்டத்து மரத்தில் தொடுத்துள்ள தேன் கூட்டிக் கலந்த பாலிலும் தலைவன் நாட்டுத் தழையை யுடைய கிணற்றின் அடியிலுள்ள, மிருகங்கள் உண் டெஞ்சிய கலங்கல்நீர் இனிமையாக இருந்தது என்று தோழிக்குத் தலைவி கூறும் கூற்றில் தலைவன்மாட்டுத் தலைவி கொண்டுள்ள காதலின் பெருக்கும் ஆற்றலும் புலனுகின்றன.

தன்னுடைய வளம் நிறைந்த செல்வமனையில் தன்னைப் பெற்றெடுத்த தாய் ஒருமருங்கு அமர்ந்திருப்ப செவிலித்தாய்

12. குறுந்தொகை: 356

13. ஐங்குறுநூறு: 203

தேன்கலந்த பாற்சோற்றினைப் பொற் கிண்ணத்தில் வைத்துக்கொண்டு, சிறுகோலாச்சி அச்சமூட்டவும், நல் கூர்ந்தார் செல்வமகள் ஆன காரணத்தினால், பசியற்ற காரணத்தாலும் செல்வமனைப் பிறந்த சிறப்பாலும் உண்ண மறுத்துக் காற்சிலம்பு 'கலீர் கலீர்' என ஒலிப்பத் தோட்டத்து முல்லைப் பந்தலின் கீழ் ஓடி ஓடி விளையாடும் தலைவி, இன்று புகுந்த வீட்டிலே வறுமை வாட்டிய நிலையினும், தந்தை கொடுத்தனுப்பிய கொழுவிய சோற்றினைக் கொள்ளாது திருப்பியனுப்பி விடுகின்றாள் என்னும் சீரிய செய்தியினைப் பூதனார் என்னும் சங்கப் புலவர் நற்றிணைப் பாடலொன்றில் நயமுற நவின்றுள்ளார் :

**" பிரசங் கலந்த வெண்சுவைத் தீம்பால்**
**விரிகதிர்ப் பொற்கலத் தொருகை ஏந்திப்**
**புடைப்பிற் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்**
**உண்ணென் றோக்குபு புடைப்பத் தெண்ணீர்**
**முத்தரிப் பொற்சிலம் பொலிப்பத் தந்துற்று**
**அரிநரைக் கூந்தற் செம்முது செவிலியர்**
**பரிமெலிந் தொழியப் பந்தர் ஓடி**
**ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி**
**அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந் தனள் கொல்**
**கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்**
**கொடுத்த தந்தை கொழுஞ்சோ றுள்ளாள்**
**ஒழுகுநீர் நுணங்கறல் போலப்**
**பொழுதுமறுத் துண்ணும் சிறுமது கையளே."[14]**

உண்டற்குரிய பொழுதில் உணவு இன்மையின், உணவு கிடைத்தபோது பொழுது நோக்காது உண்கின்ற வறுமை

---

14. நற்றிணை : 110

நிலையிலும் அறிவும் ஒழுக்கமும் கொண்டு வாழும் தலைவியின் உயர்ந்த பண்புதான் என்னே? மகளிரின் மாண்புறு பண்புகளன்றோ இம் மண்ணுலகை வாழ்விப்பன! தொல்காப்பியனார் கற்பியலில்,

> " கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
> மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்
> விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்
> பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்" 15

என்று மகளிர்க்கு இன்றியமையாது வேண்டப்படும் பண்புகளைக் குறிப்பிட்டுள்ளார்.

> " ஒன்றன்கூ றுடை யுடுப்பவரே யாயினும்
> ஒன்றினர் வாழ்க்கையே வாழ்க்கை" 16

என்றபடி, காதலிருவர் கருத்தொருமித்து வாழும் இனிய எளிய அன்பு வாழ்வினை நம் பழந்தமிழ் இலக்கியங்கள் நுவலாநிற்கின்றன. அச் சீர்சால் இலக்கியங்கள் வழிப் புலனாகும் காதலின் பேராற்றலினைக் காணும்பொழுது அக்கால இல்வாழ்க்கையின் செம்மையும் சிறப்பும் இனிமையுறத் துலங்குகின்றன.

---

15. தொல்காப்பியம் : கற்பியல், 11
16. கலித்தொகை 16 : 10-11

# 8

# பழந்தமிழ் இலக்கியத்தில் குழந்தை

பெரிய போர் ஒன்று தொடங்க விருக்கின்றது- பகையரசன் நாட்டின்மீது படையெடுத்துச் செல்ல வேண்டுமென்று ஒரு நாட்டரசன் துணிகின்ருன். அவனோ பேராற்றல் பொருந்திய அரசன்; வீரம் விளையாடும் வெற்றித் தோளினன்; அவன் படையெடுத்துச் சென்ருனென்ருல் வெற்றி உறுதி. அத்தகு வீரம் செறிந்த வேந்தனின் மார்பில் முத்து மாலைகளும் பிற அணிகளும் பொலிந்து தோன்றுகின்றன. தாமரை மலரினையொத்த அவனுடைய செக்கச் சிவந்த கண்கள் பகையரசன் மீது கொண்ட இகலாலும் சினத்தாலும் மேலும் சிவந்தன. இக்காட்சியினைக் கண்டார் ஒரு பைந்தமிழ் புலவர். அவரோ நல்லருளுள்ளம் வாய்ந்த புலவர். தன் நாட்டு மன்னனின் வீரச் செயல்களை பன்முறை நேரில் கண்டவர். எனவே அவருக்குப் பகைவர் நாடு அழிந்துபடுமோ என்ற எண்ணம் எழுந்தது. அவ்வெண்ணம் தோன்றியதும் அவருக்கு நினைவில் தோன்றிய காட்சி பகைவர் நாடு பாழ்பட்டு விடுமோ என்ற நிலைதான். அதிலும் குறிப்பாகப் பகைவர் நாட்டிலே பயமின்றி வாழும் பச்சிளம் குழந்தைகள் — நடைத் தேரொலி கறங்க நடைத்தேர் உருட்டும் குழந்தைகள் பாழ்பட்டுப் போகுமே என்று உள்ளம் பதைக்கின்ருர், யாழைப் போல மென்சொல் மழலை பேசும் அழகுச் சிருர் அவர்கள். அவர்களின் பொலிவு

நிறைந்த கண்கள் கண்டார் பார்வையைக் கட்டுப்படுத்தி மீண்டும் மீண்டும் அவர்களையே பார்க்க வைக்கின்றன. அத்தகு செல்வச் சிறுர் மகிழ்ந்து நடைத்தேர் உருட்டி வாழும் நாடு பாழ்பட்டு விடுமோ என்று புலவர் கலங்குகின்ருர். கழிபேரிரக்கம் கொள்ளுகின்ருர். நாட்டில் பலர் வாழப் புலவரின் ஈரநெஞ்சமும் இளகிய சிந்தையும் அந்நாட்டில் வாழும் இளஞ்சிருர்பால் சென்றது. குழந்தைச் செல்வத்தின் மாண்பினை மட்டின்றி உணர்த்துகின்றதன்ருே? அந் நயமான பாடலைக் காண்போம்:

**"தாழார மார்பினுன் தாமரைக்கண் சேந்தனவால்**
**பாழாய்ப் பரிய விளிவதுகொல்—யாழாய்ப்**
**புடைத்தேன் இருங்கண்ணிப் பூங்கட் புதல்வர்**
**நடைத்தே ரொலிகறங்கு நாடு"[1]**

கற்பின் செல்வி கண்ணகி மதுரை மாநகரை எரிக்க முற்படுமுன் யார் யாரைத் தீக்கடவுள் ஒறுக்க வேண்டும்? யார் யாரை விடுத்தல் வேண்டும் என்று கூறும் பொழுது,

**"பார்ப்பா ரறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்**
**மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டுத்**
**தீத்திறந்தார் பக்கமே சேர்கென்று."[2]**

கூரியதாக இளங்கோவடிகள் கூறுவதனின்றும் குழந்தைச் செல்வத்தின் சிறப்பினை நன்கறியலாம். மேலும் பண்டை நாளில் பகைவர்மாட்டுப் படையெடுத்துச் செல்லும் மன்னர்களிடம் 'அறத்தாறு நுவலும் பூட்கை' யொன்று இருந்ததாக நெட்டிமையார் என்னும் பெண்பாற் புலவர் குறிப்பிடுவர். பசுக்கள், பசு நிகர்த்த அந்தணர், பெண்கள்,

1. புறப்பொருள் வெண்பாமாலை : வஞ்சி : கொற்றவள்ளை
2. சிலப்பதிகாரம் : வஞ்சினமாலை : 53-55

நோயாளிகள், தென்புல வாழ்நர்க்குப் பிதிர்க்கடன் செலுத்தும் நற்பிள்ளைகள் பெருதோர் ஆக இத்திறத்தார் பாதுகாப்பான இடத்திற்கு முன்கூட்டியே சென்று விடுதல் வேண்டு மென்னும் அறத்தாறு காரண மாக அறிவிக்கும் உயர் குறிக்கோள் ஒன்று இருந்ததாகப் பின் வரும் புறநானூற்றுப் பாடல் கொண்டு அறியலாம்.

"ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெருஅ தீரும்
எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மினென
அறத்தாறு நுவலும் பூட்கை மறம்."[3]

பாண்டியன் அறிவுடை நம்பி சங்க காலத்தில் பீடுற அரசோச்சிய பெருமன்னனுவான். புவி காவலனுக விளங்கிய அவன் கவி நாயகனுகவும் விளங்கியிருக்கின்றுன். அத்தகு அரசன் செல்வச் சிறப்பில் திளைத்திருந்திருப்பான் என்பதில் ஐயமில்லை. அம்மன்னன் பல செல்வங்களைப் படைத்திருப் பினும் குழந்தையாகிய குறைவற்ற செல்வம் ஒன்றனைப் பெருதவரிருட் பின் பயனில்லை என்று திட்டவட்டமாகத் தெளிவுற மொழிகின்றுன். அவ்வாறு அவன் குழந்தைச் செல்வத்தின் மாண்பினைக் குறிப்பிடும்பொழுது குழந்தையின் ஓவியத்தினை நம் மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்தி விடுகின்றுன். இதோ அவன் வழங்கும் எழிற்காட்சி:

"படைப்புப பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுங் தொட்டுங் கவ்வியும் துழந்தும்

---

3. புறநானூறு: 9:1-6

**நெய்யுடை அடிசில் மெய்படல விதிர்த்தும்**
**மயக்குறு மக்களை இல்லோர்க்குப்**
**பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே.''[4]**

'குறுகக் குறுக நடந்து சென்று, சிறிய கையை நீட்டிக் கலத்தின்கட் கிடந்ததனைத் தரையிலே யிட்டும் கூடப் பிசைந்து தோண்டியும் வாயாற் கவ்வியுங் கையால் துழாவியும் நெய்யையுடைய சோற்றை உடப்பின்கட் படச் சிதறியும் இங்ஙனம் **அறிவை இன்பத்தான் மயக்கும் புதல்வரை'** என்று உரையெழுதுவர் புறநானூற்றுப் பழைய உரைகாரர்.

மேலும் சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ் சேர விருப்பொறையைப் பாடிய நரிவெரூஉத் தலையார் என்னும் புலவர் பெருமகனார் அம்மன்னனுக்குச் செவியறிவுறூஉவாகக் கூறும் கூற்றில், ஒரு நாட்டினை ஆட்சி செய்கின்றவர் ஒரு சிறு குழந்தையினை எவ்வளவு கவனமாக வளர்க்க வேண்டுமோ அவ்வாறு பாதுகாக்க வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார். அருளையும் அன்பையும் நீக்கிப் பாவஞ் செய்தாரை, நீங்காத நரகத்தைத் தமக்கிடமாகக் கொள்பவரோடு பொருந்தாது. நீ குழவியை வளர்ப்பாரைப் போலத் தேயத்தைப் பாதுகாப்பாயாக" என்று புலவர் குறிப்பிடும் கூற்றினின்றும் அருளும் அன்பும் கொண்டு குழவி ஓம்புநரின் கடப்பாடு புலனாகின்றது!

**'' அருளு மன்பு நீக்கி நீங்கா**
**நிரயங் கொள்பவரொ டொன்றுது காவல்**
**குழவி கொள்பவரி னோம்புமதி ''[5]**

இந்தச் குழந்தைச் செல்வத்தின் மாண்பினை அகநானூற்றுப் பாடல் ஒன்று அழகுற வடித்துக் காட்டு

---

4. புறநானூறு: 188
5. புறநானூறு: 5:5-7

கின்றது இந்த உலகில் நல்ல பிள்ளைகளைப் பெற்றவர்கள் இவ்வுலக இன்பம் மட்டுமின்றி மறுமை உலக இன்பமும் மட்டின்றிப் பெறுவர் என்றும், பகைவரும் விரும்பிப் பாராட்டும் குற்றமற்ற காட்சியினை யுடையவர்கள் குழந்தைகள் என்றும் எடுத்து மொழிகின்றார். இவ்வாறு தொன்றுதொட்டுப் பலரும் கூறிவரும் மொழி உண்மை யாகவே துலங்குவதைக் காண்கின்றாராம் புலவர். இத்தகு பாராட்டுரையினைப் புலவர் வாக்காலேயே காண்போம்:

" இம்மை யுலகத் திசையொடும் விளங்க
மறுமை யுலகமும் மறுவின் றெய்துப
செருநரும் விழையும் செயிதீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப்
பல்லோர் கூறிய பழமொழி யெல்லாம்
வாயே யாகுதல் வாய்த்தனம்."[6]

இத்தகு குழந்தை, தந்தையின் தவறான வொழுக் கத்தையே தடுத்து நிறுத்தியது என்பதனை இப்பாட்டின் பிற்பகுதி உணர்த்தும்.

யாழும் குழலும் தமிழர்தம் இன்னிசைக் கருவி களாகும். இவை இந்நாட்டின் பழைய இசைக்கருவிகள்; இலக்கியங்களில் இடம்பெற்றவை, சிறந்த இனிமை பயக்கும் இக்கருவிகளினும் மக்கள்தம் மழலைச் சொல் பயக்கும் இனிமையே பாராட்டப் படுவதாகத் திருவள்ளுவர்,

" குழலினிது யாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்"[7]

என்று பாராட்டியுள்ளார். 'யாழோசைபோல இசையால்

---

6. அகநானூறு : 66 : 1-6
7. திருக்குறள் : 66

இன்பமும் செய்யா; காலத்தோடு கூடியிரா; பொருளும் அறிய வாரா; ஆயினும் தந்தையர்க்கு அருளுதல் வந்தன பிள்ளைகளுடைய இளஞ்சொல்' என்று ஒளவையாரும் மக்கட் செல்வத்தின் - மழலை மொழியின் மாண்பினைப் பாராட்டியுள்ளார்:

"யாமொடுங் கொள்ளா பொழுதொடும் புணரா
பொருளறி வாரா வாயினுந் தந்தையர்க்கு
அருள்வந் தனவாற் புதல்வர் தம்மழலை."[8]

ஒளவையாரின் இப்பாடலைப் பின்பற்றியே திருக்கழுமல மும்மணிக்கோவை யாசிரியர்,

"எழுத்தி னுறழாது வழுத்து பொரு ளின்றிக்
குறிப்பொடு படாஅது வெறித்தபுன் சொல்லே
ஆயினும் பயந்தநஞ் சேயவர் சொலுமொழி
குழலினு யாழினு மழகிதாம்"[9]

என்று கூறியுள்ளார். திருவள்ளுவர் பெருமானும்,

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற"[10]

என்று பொருத்தமுறப் புகன்றுள்ளார். ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான வளையாபதியைச் சார்ந்த செய்யுளாய்ப் பின்வரும் செய்யுள் புறத்திரட்டில் தொகுக்கப்பட்டுள்ளது:

"பொறையிலா வறிவு போகப்
புணர்விலா விளமை மேவத்
துறையிலா வனச வாவித்
துகிலிலாக் கோலத் தூய்மை

8. புறநானூறு : 92 . 1-3
9. திருக்கழுமல மும்மணிக் கோவை : 28 : 2-5
10. திருக்குறள் : 61

**நறையிலா மாலை கல்வி**
**நலமிலாப் புலமை நன்னர்ச்**
**சிறையிலா நகரம் போலும்**
**சேயிலாச் செல்வ மன்றே.''**

பொறுமை யில்லாத அறிவு, கலந்துறையாத இளமை, துறையிலாத குளம், துகிலிலாத கோலம், மணமில்லாத மாலை, கல்வி நலஞ் செறியாத புலமை, அரணில்லாத நகரம், சேயிலாத செல்வம் இவை யனைத்தும் குறைபாடுடையன என்பது நன்கு புலனுதல் வளையாபதி வழிநின்று காணலாம்.

குழந்தைக்கு அம்புலி காட்டி அழுகையை மாற்றுவது என்பதும், உணவு மறுக்கும் குழந்தைக்கு உணவூட்டச் சந்திரனை அழைக்கும் செயலும் நந்தமிழ் நாட்டில் தொன்று தொட்டு நிகழ்ந்து வருவனவாகும். வினை முடித்து மீளும் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லும் கூற்றில் வைத்து அழகான குடும்பக் காட்சியினைப் புலவர் மாற்றூர்கிழார் மகனுர் கொற்றங் கொற்றனுர் உரைப்பர். நெல்லிக்காய் தின்றவர் உடன் தண்ணீர் குடித்தால் தீவிய சுவை உணர்வரன்றோ? அத்தகு சுவை வாய்ந்த சொல்லால் தலைமகள் நிலவைப் பார்த்துப் பேசுகின்றாள். 'அம்புலியே! நீ என் மகனிடத்து இங்கு வருவையாயின் உனக்கும் தீம்பால் தருவன்' என மொழிகின்றாள்:

**'' முகிழ்நிலாத் திகழ்தரும் மூவாத் திங்கள்**
**பொன்னுடைத் தாலி என்மக னொற்றி**
**வருகுவை யாயின் தருகுவன் பாலென**
**விலங்கமர்க் கண்ணள் விரல்விளி பயிற்றி**
**திதலை யல்குலெம் காதலி**
**புதல்வற் பெயர்க்கும் பூங்கொடி நிலையே.''** [11]

---

11. அகநானூறு : 54 : 17-22

குழந்தையினை வருணிக்கும் புலவர்கள் அவர்களின் தோற்றத்திலும் பொலிவிலும் பெரிதும் ஈடுபட்டுப் பாடியுள்ளனர்.

" நாயுடை முதுநீர்க் கலித்த தாமரைத்
தாதின் அல்லி அவிரிதழ் புரையும்
மாசில் அங்கை மணிமருள் அவ்வாய்
நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்
யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனை." [12]

தேர்வழங்கு தெருவிற் தமியோனைக் கண்ட பரத்தை மாற்றாள் மகனென்றும் பாராது முயங்க, பெற்ற தாய் கண்ட நிலையில் 'களவு உடன்பட்டு, கவிழ்ந்து நிலம் கிளையா நாணி நின்ற' நிலை சாகலாசனார் தரும் சொற் சித்திரமன்றோ?

இன்பக் காட்சியினை வருணிக்கப் புகும் புலவர்கள், புதல்வர்கள் தேருருட்டி விளையாடும் காட்சியினைப் படமாகத் தீட்டியுள்ளனர். வினைமுடித்துத் திரும்பி வந்த தலைவன் காதலின் இனிய சூழலில் அமர்ந்து முறுவலின் இன்னகை பயிற்றிச் சிறுதேர் உருட்டும் செல்வனைக் கண்டு மகிழ்கின்றான்.

" புணர்ந்த காதலியிற் புதல்வன் தலையும்
அமர்ந்த வுள்ளம் பெரிதா கின்றே
அகன்பெருஞ் சிறப்பின் தந்தை பெயரன்
முறுவலின் இன்னகை பயிற்றி
சிறுதேர் உருட்டும் தளர்நடை கண்டே." [13]

தும்பிசேர் கீரன் என்ற குறுந்தொகைப் புலவரும் தோழி தலைமகனுக்கு வாயிலாக உரைக்கும் கூற்றில் வைத்து இளையோர் தேர் உருட்டியாடும் இன்ப விளையாட்டினைக் கூறியுள்ளார்.

12. அகநானூறு : 16: 1-5
13. ஐங்குறுநூறு : 403

" தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்தின் புறூஅ ராயினும் கையின்
ஈர்த்தின் புறூஉம் இளேயோர்."[14]

பரத்தையர் நெஞ்சத்தினையும் நெகிழ்த்துக் கவர்ந்து கொண்ட புதல்வன் திறத்தினை,

" ......................... தண்நடைக
கலிமா கடைஇ வந்தெம் சேரித்
தாரும் கண்ணியுங் காட்டி ஒருமைய
நெஞ்சம் கொண்டமை விடுமோ"[15]

என்று கடுவனிள மள்ளனுர் கழறுவர். அன்னையின் சிறு கோல் அலைக்கும் பொழுதும், 'அம்மா! அம்மா!' என்று அலறி அவள் அருள் வேண்டி நிற்கும் நிலையினை,

" தாயுடன் றலைக்கும் காலையும் வாய்விட்டு
அன்னய் என்னும் குழவி"[16]

என்பர் நெய்தல் திணை பாடவல்ல புலவர் அம்மூவன். குலசேகராழ்வார் திருமாலோடு தாம் கொண்ட ஆராத அன்பினைப் புலப்படுத்தும் வகையில்,

" அரிசினத்தா லீன்றதாய்
அகற்றிடினும், மற்றவள்தன்
அருள்நினைந்தே யழுங்குழவி
அதுவேபோன் றிருந்தேனே"[17]

என்று தம்மைக் குழந்தையாகவும் திருமாலைத் தாயாகவும் எண்ணிப் பாடுகின்றார்.

மந்திகளும் சிறு மகார்மேல் அன்புகொண்டு விளையாட்டுக் காட்டும் வியத்தகு காட்சியினைச் சிறுபாணாற்றுப்படை தந்த நல்லூர் நத்தத்தனுர் காட்டுவர். கொற்கைத் துறையோரத்தில் கிடைக்கும் கிளிஞ்சிலை

14. குறுந்தொகை : 61 : 1-3
15. நற்றிணை : 150 : 6-9
16. குறுந்தொகை : 397 : 4-5
17. பெருமாள் திருமொழி : 5 :1

யெடுத்து, அதன் வயிற்றினுள் நன்முத்துக்களை யிட்டு, உமட்டியர் ஈன்ற கிளர்பூண் புதல்வர்க்குக் கிலிகிலியாட்டி மகிழ்கின்றதாம் 'மகாஅர் அன்ன மந்தி.'

" மகாஅர் அன்ன மந்தி மடவோர்
நகாஅர் அன்ன நளிநீர் முத்தம்
வாள்வாய் எருந்தின் வயிற்றகத் தடக்கி
தோள்புறம் மறைக்கும் நல்கூர் நுசுப்பின்
உளரியல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற
கிளர்பூண் புதல்வரொடு கிலுகிலி யாடும்." [18]

இத்தகு சிறப்பியல்புகள் பலவற்றினை நந்தமிழ் இலக்கியங்கள் குழந்தைச் செல்வத்திற்குக் குறைவற அளித்த பான்மையினை நன்கு காணலாம். திருவள்ளுவர் தனி அதிகாரமே வகுத்துக் குழந்தைச் செல்வத்தின் மாண்பினை வாயாரப் போற்றியுள்ளார். இடைக்காலத்தில் பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாக எண்ணிப் பாடிய பாடல்கள் பலவும் நயமும் சுவையும் கெழுமியனவாகும். பிற்காலத்தில் சிறுபிரபந்த வகைகளில் ஒன்றாகப் 'பிள்ளைத் தமிழ்' என்னும் இலக்கிய வகை முகிழ்த்தது. இறைவனையே குழந்தையாக எண்ணித் திங்கள்தோறும் குழந்தையின் வளர்ச்சியினையும் வாழ்வினையும் படிப்படியே வகுத்து வகை பெறக் கூறிக் கவிஞர்கள் பாடிய பாடல்கள் கற்றோர்க்குக் கழிபேரின்பந் தருவனவாகும். பாரதியாரின் 'கண்ணம்மா— என் குழந்தை'ப் பாடல்களும், பாரதிதாசனாரின்' குடும்ப விளக்கு'ம் குழந்தைச் செல்வத்தின் மாண்பினைக் குறைவறக் கூறி நிற்பனவாகும். குழந்தைகளின் கொள்ளையழகினிலும், கொட்டும் மழலையிலும், சுட்டுச் சுடர் விழிப் பார்வையிலும், பட்டுத்திருமேனியிலும், ஒட்டுறவின் உறுதியிலும் நம்மை நாமே மறக்கின்றோமே, அந்த இன்பத்திற்கு நிகரேது? வாழ்க மழலைச் செல்வங்கள்!

---

18. சிறுபாணாற்றுப்படை : 56-61

# 9

# பொருள்வயிற் பிரிவு

பழந்தமிழர் தம் அகவாழ்வு பீடு சான்றது. காதலர் 'இருதலைப் புள்ளின் ஒருயி ரம்மே' என்றபடி அன்பின் ஐந்திணையில் தலைப்பட்டுக் காதல் நெஞ்சுடன் கருத்தொருமித்து இல்வாழ்க்கையில் நிற்பர். இல்வாழ்க்கையில் ஈடுபட்ட தலைமக்கள் இடையீடற்ற இன்பம் விழைந்து தொடக்க நாட்களில் வாழ்வர். இவ்வின்ப நிலையினைத் தொல்காப்பியனார்,

> " கரணத்தின் அமைந்து முடிந்த காலை
> நெஞ்சுதளை யவிழ்ந்த புணர்ச்சி " [1]

என்று குறிப்பிடுவர். இந்த இன்ப நிலையே நெடிதும் நீடிக்க உலக வாழ்க்கைக்கு உயிர்நாடியாக உள்ள பொருள் தேவை. 'காதலரின் அன்பு வாழ்க்கைக்குப் பொருள் ஒரு சிறந்த கருவியாகும்' என்பர்.

பொருட்பாலில் 'பொருள் செயல் வகை' என்னும் அதிகாரத்தில்,

> " அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
> தீதின்றி வந்த பொருள் " [2]

என்று பொருளின் பயனைக் குறிப்பிட்ட திருவள்ளுவர் அறத்துப்பாலில் 'அருளுடைமை'யினைச் சொல்லுமிடத்திலும்,

---

1. தொல்காப்பியம் : 1092.
2. திருக்குறள் : 754.

" அருளிலார்க் கவ்வுலகம் இல்லை பொருளிலார்க்
கிவ்வுலகம் இல்லாகி யாங்கு "[3]

என்று பொருளின் இன்றியமையாமையினை நினைவூட்டுகின்றார். மேலும் அவர் அருளும் பொருளால் வளர்வது என்றும், அன்பு பெற்ற அருள் என்னும் குழந்தையைப் பொருள் செவிலித்தாயாக இருந்து வளர்த்தால்தான் வளரும் என்றும் சொல்கின்றார். திருவள்ளுவர் மூத்தாய்ப்பாக, "நெறியான் வரும் பொருளை இறப்பமிகப் படைத்தார்க்கு மற்றை அறனும் இன்பமும் ஒருங்கே எளிய பொருள்களாய்"[4] என்ற கருத்தில்,

" ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்
ஏனை யிரண்டும் ஒருங்கு "[5]

என்று கூறுகின்றார். இக்கருத்தினையே அறநூலாம் நாலடியாரும்,

" வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த விருத லையு மெய்தும் "[6]

என்று குறிப்பிடுகிறது. திவ்யப் பிரபந்தத்தில் அமைந்துள்ள சிறிய திருமடலும்,

" ஆராயிற் றானே யறம்பொரு ளின்பமென்
றாரா ரிவற்றி னிடையதனை யெய்துவர்
சீரா ரிருதலையு மெய்துவர் "[7]

என்று குறிப்பிடுகின்றது. சுருங்கச் சொல்லின் "வயிறு உள்ள வரையில் பொருள் தேடும் வாழ்க்கை இருந்தே தீரும். அரசியலிலிருந்து ஒருவரும் விலக முடியாது.

3. திருக்குறள் : 247.
4. திருக்குறள் : 757 பரிமேலழகர் உரை.
5. திருக்குறள் : 760.
6. நாலடியார் : 114.
7. சிறிய திருமடல் : 3-4.

ஆகையால் வீட்டு வாழ்க்கைக்கு அடிப்படையானது 'பொருள் நல்கும் நாட்டு வாழ்க்கை யென்பது பெரிய உண்மையாகும்'' என்பர்.[8]

## தொல்காப்பியம் உணர்த்தும் பிரிவுகள் :

பிற்காலத் தெழுந்த அகப்பொருள் இலக்கண நூல்கள் நுவலும் அறுவகைப் பிரிவுகளையும் தொல்காப்பியம் ஒருங்கே ஓரிடத்தில் குறிப்பிடவில்லை. தொல்காப்பியனார் அகத்திணையியலில்,

**'' ஓதல் பகையே தூது இவை பிரிவே ''** [9]

என்று தொடக்கத்தில் கூறிச் சில நூற்பாக்களுக்குப் பின்னர்,

**'' பொருள்வயின் பிரிதலும் அவர்வயின் உரித்தே**
**உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத்தான் ''** [10]

என்று குறிப்பிட்டுள்ளார். மேலும்,

**'' வேந்துறு தொழிலே யாண்டின தகமே ''** [11]

என்று கற்பியலில் பிரிவுக் காலத்தின் எல்லையைக் குறிப்பிட்டு, அடுத்த நூற்பாவில்,

**'' ஏனைய பிரிவும் அவ்வயின் நிலையும் ''** [12]

என்று கூறியுள்ளார். எனவே பொருள்வயிற் பிரிவு ஓராண்டு எல்லைக்குள் அமைவதாகும். களவுக்காலத்து அமையும் பிரிவு 'வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிதல்' என வழங்கும். திருமணத்திற்குரிய பொரு

---

8. டாக்டர் மு. வரதராசனார் : திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம். பக்கம். 81.
9. தொல்காப்பியம் : அகத்திணையியல் : 25
10. தொல்காப்பியம் : அகத்திணையியல்: 33
11. தொல்காப்பியம் : கற்பியல்: 48
12. தொல்காப்பியம் : கற்பியல்: 49

ளீட்டும் முயற்சியில் காதலன் காதலியைவிட்டு நீங்குவது என்பது இதன் பொருளாகும். கற்புக் காலத்து நேரும் பிரிவு 'பொருள்வயிற் பிரிதல்' என்று வழங்கும். கற்புக் காலத்து நிகழும் பொருள்வயிற் பிரிவுக்குத் தொல்காப்பியம் காட்டும் காரணங்கள் பின்வருமாறு :—

" நாளது சின்மையும் இளமையது அருமையும்
தாளாண் பக்கமும் தகுதியது அமைதியும்
இன்மையது இளிவும் உடைமையது உயர்ச்சியும்
அன்பினது அகலமும் அகற்சியது அருமையும்
ஒன்றுப் பொருள்வயின் ஊக்கிய பாலினும். "[13]

தொல்காப்பியனாரின் இக்கருத்தினை அடியொற்றியே சங்க இலக்கியங்கள் பொருள்வயிற் பிரிவுக்குரிய காரணங்களை அமைவுறப் புலப்படுத்தி நிற்கக் காணலாம்.

## தாயத்தின் வழி வரும் பொருள்களைத் துய்த்தல் சிறப்பன்று :

" மூத்தோர் மூத்தோர்க் கூற்ற முய்த்தெனப்
பாறர வந்த பழவிறற் றயம்
எய்தின மாயி னெய்தினஞ் சிறப்பெனக்
குடிபுர விரக்குங் கூரி லாண்மைச்
சிறியோன் பெறினது சிறந்தன்று மன்னே "[14]

என்னும் புறநானூற்றுக்குப் பழைய வுரைகாரர் எழுதியுள்ள உரையால்[15] தாய வழிவரும் பொருளினைத் துய்த்தலை அக்கால அரசர்கள் விரும்பவில்லை யென்பது புலனாகின்றது. அரசர் பொருளீட்டக் கூடிய வழிகளுள் ஒன்று குடிமக்களிடமிருந்து பொருள் திரட்டுவது என்பது

13. தொல்காப்பியம் : அகத்திணையியல்: 41: 7-11
14. புறநானூறு : 75 : 1-5.
15. புறநானூறு: 75 : 1-5 உரை

புலனுகின்றது. புலனுகவே 'குடிமக்களும் பொருளீட்ட வேண்டுமென்பது பெறப்படும்.'[16] இக்கருத்தினையே பாலை பாடிய பெருங்கடுங்கோ,

" உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர் "[17]

என்று குறிப்பிட்டுள்ளார்.

## இல்லோர்க்கு ஈதல் இயைதல் இல்லை :

'பொருளிலான் இளமைபோற் புல்லென்ருள்'[18] என்னும் கலித்தொகைத் தொடர் கைப்பொருளிலா தான் வாழ்வின் இழிவினை உணர்த்தும். பொருள் கடைக்கூட்டிய நெஞ்சினை நோக்கித் தலைமகன் பின் வருமாறு கழறுகின்ருன் :

" இருள்படு நெஞ்சத் திடும்பை தீர்க்கும்
அருள்நன் குடைய ராயினும் ஈதல்
பொருளில் லோர்க்கஃ தியையா தாகுதல்
யானு மறிவன் மன்னே. "[19]

இவ் அகநானூற்றுப் பாடற்பகுதியால் பிறர் துன்பத் தீர்ந்து அருள் சுரக்கும் நிலை பொருளில்லாதோர்க்கு இயைவதன்று என்பது புலனுகக் காணலாம். இதனையே 'இல்லோர் வாழ்க்கை யிரவினும் இளிவு'[20] என்று குறுந்தொகை குறிப்பிடும்.

16. டாக்டர் அ. சிதம்பரநாதன் : தமிழ் காட்டும் உலகு: பக்கம் 41.
17. குறுந்தொகை: 283 : 1
18. கலித்தொகை : 38 : 15
19. அகநானூறு : 335 ; 1-4.
20. குறுந்தொகை : 283 : 2

**முயற்சியால் பெறும் பொருளைத் துய்த்தலே இன்பம் :**

உகாய்க்குடி கிழார் என்னும் சங்கத்துச் சான்றோர்,

**" ஈதலுந் துய்த்தலு மில்லோர்க் கில்லென "** [21]

என்று குறிப்பிட்டுள்ளார்.

இக்கருத்தினையே நற்றிணை,

**" இசையு மின்பமு மீதலு மூன்றும்**
**அசையுடன் இருந்தோர்க் கரும்புணர் வின்மென "**[22]

என்று குறிப்பிடுகின்றது. திருவள்ளுவர் பெருமானும் 'அழகிய மாமை நிறம் பொருந்திய தலைவியது முயக்கம். தமக்கு உரிய இல்லின்கண் இருந்து தன் தாளான் வந்த பொருளைத் துய்த்தற்கு இணையானது' என்ற கருத்துப் பட,

**" தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்**
**அம்மா அரிவை முயக்கு "**[23]

என்று குறிப்பிட்டுள்ளார்.

**அறச் செயல்களுக்கு அமைவது பொருள் :**

அறத்தினின்று பிறழாத வாழ்க்கையும், பிறர் தலை வாயிலிற் சென்று இரக்காத நிலையும் பொருளால் பிறங்கும் என்பதனை,

**" அறன்கடைப் படாஅ வாழ்க்கையும் என்றும்**
**பிறன் கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்**
**பொருளி னாகும் "**[24]

என்று அகநானூறு அறிவுறுத்துகின்றது.

---

21. குறுந்தொகை : 53-1
22. நற்றிணை : 214 : 1-2
23. திருக்குறள் : 1107
24. அகநானூறு : 155 : 1-3

## கலித்தொகை காட்டும் பொருட் பிரிவு :

கற்றறிந்தோர் ஏத்தும் கலியின் ஒரு பிரிவான பாலைக்கலி பொருள்வயிற் பிரிதலைப் பாங்குறக் கிளத்தி யுள்ளது. தலைமகன் பொருள்வயிற் பிரியக் கருதுவது, அறத்தாற் பொருளீட்டி அருளாளர்க்கு அளிக்கவும், பகை வென்று மேம்படவும், காதல் இன்பந் துய்க்கவும் ஆய காரணங்களின் பொருட்டே என்று தலைவி தோழிக்கு மொழிகின்றாள்.

" அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலில் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் பிரிந்தநங் காதலர்."[25]

மேலும், 'தொலைவாகி யிரந்தோர்க்கொன் றீயாமை யிளிவென'க் கருதியும், 'இல்லென விரந்தோர்க்கொன் றீயாமை யிளிவென'க் கருதியும், 'இடனின்றி யிரந் தோர்க்கொன் றீயாமை யிளிவெனக்' கருதியும் தலைமகன் பொருள்வயிற் பிரிந்ததாகத் தோழி தலைமகட்குக் கூறுவதாகக் கலித்தொகை[26] கவினுறக் காட்டும்.

## உரையாசிரியர்கள் கூறும் விளக்கம்

இறையனார் களவியல் உரையாசிரியர் பொருள் வயிற் பிரிவுக்குரிய காரணத்தைப் பின்வருமாறு குறிப்பிடுவர்:

"இனி, பொருட்பிணி என்பது பொருளிலனாய்ப் பிரியு மென்பதன்று; தன் முதுகுரவாற் படைக்கப்பட்ட பல்வேறு வகைப்பட்ட பொருளெல்லாம் கிடந்துமன்; அதுகொடு

25. கலித்தொகை: 14: 1-4
26. கலித்தொகை: 2:11. 15 -19

துய்ப்பது ஆண்மைத்தன்மை அன்றெனத் தனது தாளாற்றலாற் படைத்த பொருள் கொண்டு வழங்கி வாழ்தற்கும் பிரியுமென்பது; அல்லதூஉந் தேவர் காரியமும் பிதிரர் காரியமும் தனது தாளாற்றலாற் படைத்த பொருளாற் செய்தன தனக்குப் பயன்படுவன; என்னை? தாயப் பொருளாற் செய்தது தேவரும் பிதிரரும் இன்புறுர், ஆதலான்; அவர்களையும் இன்புறுத்தற்குப் பிரியுமென்பது."[27]

திருச்சிற்றம்பலக் கோவையின் உரைகாரர் பின்வரும் விளக்கத்தினைத் தந்துள்ளார்:

"பொருள்வயிற் பிரிதலென்பது, குரவர்களாற் படைக்கப்பட்ட பொருள்கொண்டு இல்லறஞ் செய்தால் அதனுல் வரும் பயன் அவர்க்கு ஆம் அத்துணையல்லது தமக்காகாமையால் தமது பொருள் கொண்டு இல்லறம் செய்தற்குப் பொருள்தேடப் பிரியா நிற்றல்."[28]

இப்பொருள்களால் முயன்று தேடும் பொருளின் நோக்கமும் மேன்மையும் விளங்கக் காணலாம்.

## பொருளும் அருளும் :

பொருள் தேடும் முயற்சிக்குத் தன் நெஞ்சைக் கடைக்கூட்டும் தலைவன் 'வினையே ஆடவர்க் குயிரே'[29] என்றபடி செயலில் மேம்பட்டு நிற்க முடிவு செய்கிருன். ஆயினும் அவன் காதல் நெஞ்சத்தில் போராட்டம் எழுகின்றது. 'வாணுதல், மனையுறை மகளிர்க் காடவர் உயிர்[30] என்று தன் அகம் நிறை காதலியிடம் உரைத்தவனே அவனுயிற்றே! எனவே 'மறப்பருங் காதலி

27. இறையனர் களவியல் உரை: 35
28. திருசிற்றம்பலக் கோவையார் உரை: 382
29. குறுந்தொகை: 135 : 1
30. குறுந்தொகை: 135 : 2

யொழிய யிறப்ப லென்பதிண் டிளமைக்கு முடிவே'[31] என்று அவன் கருதுகின்றான். எனினும், 'அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்' வீட்டோடு நின்றுவிட்டால் வந்தெய்துமோ? வினை விழைவார் மனை விழைந்து மடிமை யோடு தாளாண்மையற்றுக் கிடந்தால் இல்லறக் கடமைகள் இனிது நிறைவெய்துமோ? கை கடந்த காமத்தால் வருவன நேரே பகையல்லவாயினும் ஆக்கஞ் சிதைத்தல் அழிவுதலைத் தருதல்'[32] உறுதியே அன்றோ! மேலும்,

"பெருமையும் உரனும் ஆடூஉ மேன"[33]

என்றபடி உள்ளத்தின் உரம் காரணமாகத் தன் தலைமை தோன்ற,

"கேள்கே டூன்றவும் கிளைஞர் ஆரவும்
கேளல் கேளிர் கெழீஇயினர் ஒழுகவும்
ஆள்வினைக் கெதிரிய வூக்கமொடு புகல்சிறந்து[34]

பொருள் தேடல் இன்றியமையாமையன்றோ!

ஆயினும் பெண்டிர் இயல்பு,

"அச்சமும் நாணும் மடனும்முந் துறுத்தல்
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப"[35]

என்று தொல்காப்பியத்தில் கிளத்தப்பட்டுள்ளது. 'நம் பிரிவு அறியா நலன்' என்றபடி பிரிவென்பது ஒன்று உண்டெனவே அறியாத பேதை தலைமகள் ஆவள். எனவே தன்மாட்டு அன்பும் அறிவுமின்றித் தலைமகன்

31. குறுந்தொகை : 151: 5-6
32. திருக்குறள், பெண்வழிச்சேறல்; பரிமேலழகர் விளக்கம்.
33. தொல்காப்பியம்: 1044
34. அகநானூறு: 93 : 1-2
35. தொல்காப்பியம்: 1045

பொருள்வயிற் பிரியின் பொருளே பொருளுடையது போலும் எனப் புலம்புகின்றாள்.

" அத்த மரிய வென்னூர் நத்துறந்து
பொருள்வயிற் பிரிவா ராயினிவ் வுலகத்துப்
பொருளே மன்ற பொருளே
அருளே மன்ற வாருமில் லதுவே! '[36]

தன் தோழியிடம் பேசும்போதும் தலைமகள்,

" பொருளே காதலர் காதல்
அருளே மற்று என்றி நீயே "[37]

என நெகிழ்ந்து மொழிகின்றாள்.

உரவோரும் மடவோரும் :

" அருளும் அன்பும் நீங்கித் துணைதுறந்து
பொருள்வயிற் பிரிவோர் உரவோ ராயின்
உரவோர் உரவோர் ஆக
மடவம் ஆக மடந்தை நாமே"[38]

என்று தலைமகள் கூறும் கூற்றில்தான் எத்துணைப் பொருளாழம், அவலம், சோர்வு, நகை முதலியன நிறைந்து காணப்படுகின்றன!

" இளமை பாரார் வளநசைஇச் சென்றோர்
இவணும் வாரார் எவணரோவெனத்"[39]

தலைமகனின் பொருள் நசையினைத் தன் இளமையினையும் புறக்கணித்துவிட்ட கடும் நெஞ்சினை ஆற்றாமையோடு குறிப்பிடுகின்றாள்.

---

36. குறுந்தொகை: 174: 4-7
37. அகநானூறு: 53
38. குறுந்தொகை: 20
39. குறுந்தொகை: 126:1

"நறுநுதல் நீத்தல் பொருள்வயிற் செல்வோய்
உரனுடை உள்ளத்தை"[40]

என்றும் தலைமகனைக் குறிப்பிடுகின்றாள்.

"பொருள்வயிற் பிரிதல் வேண்டு மென்னும்
அருளில் சொல்லு நீசொல் லினையே"[41]

என்று தலைமகன் கூற்றினை 'அருளில் சொல்' என்று கூறி அரற்றுகின்றாள்.

தன் நெஞ்சம் நிறை கடந்து நெக்குருகவும், தலைமகன் அன்பின்மை காரணமாக அருளைப் பொருளாக எண்ணாமல் பொருளைப் பொருளாக எண்ணுவதாகக் குறிப்பிடுகின்றாள்.

"நெஞ்சே நிறையொல் லாதே யவரே
அன்பின் மையி னருள்பொரு ளென்னார்
வன்கண் கொண்டு வலித்துவல் லுநரே"[42]

## இருபேராண்மை செய்த பூசல்:

தன்மாட்டுக் கொண்ட அன்பு காரணமாகத் தலைமகன் தன்னைவிட்டு ஒருநாளும் பிரியான் எனத் தலைமகள் உறுதியாக எண்ணினாள். தலைமகனோ தலைமகளிடம் கூறிப் பிரிந்து செல்வதென்றால் தலைமகள் அதற்கு உறுதியாக உடன்படமாட்டாள் என எண்ணினான். ஒருநாள் சொல்லாது பிரிந்தான்; தலைமகள் பிரிவை உணர்ந்தாள்; நல்ல பாம்பு கடித்தால் நஞ்சு எப்படி விரைய ஏறுமோ அது போன்று அவள் அல்லல் நெஞ்சம் சுழன்று திரிந்து

40. கலித்தொகை: 12 : 9-10
41. கலித்தொகை : 21 : 4-5
42. குறுந்தொகை: 395 : 1-3

தடுமாறியது. செல்வார் என்று அவள் எண்ணுதலும் ஒல்லாள் என்று தலைவன் எண்ணுதலும் இரு பேராண்மைப் பூசலாக நின்று இடர் விளைவித்தன.

> " ...................அருஞ்சுரம்
> இறந்துநீர் செய்யும் பொருளினும் யாமுமக்குச்
> சிறந்தன மாத லறிந்தனி ராயின் " [43]

என்று தோழி தலைமகனுக்குக் கூறிச் செலவழுங்க முயற்சி மேற்கொள்கிறாள்.

## செலவழுங்கல்:

தலைமகளை ஆற்றிவிட்டுப் பிரிய எண்ணும் தலைமகன் தன் செலவினைச் சின்னாள் தள்ளிப் போடுவான். அது போது தலைமகள்மாட்டு மிகுந்த தலையளி செய்வான்.[44] 'கழிபெரு நல்கல் ஒன்றுடைத்து;'[45] 'அழாஅல் என்று நம் அழுதகண் துடைப்பர்:'[46] 'நறுநுதல் நீவுவர்! கூந்தற் கோதுவர்' என்றெல்லாம் தலைமகன் செய்த தலையளியினைப் பாராட்டுவள்.

தலைமகனும்,

> " முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
> வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
> வாரேன் வாழிய நெஞ்சே " [47]

என்று தன் நெஞ்சிற்குக் கூறிச் செலவழுங்குவான். ஆயினும் இவ்வாறு செலவழுங்குவது செல்லாமைக் கன்று; அன்பு காட்டித் தலைமகளைத் தெருட்டிப்

---

43. கலித்தொகை: 5 . 4-5
44. Dr. V. SP. Manickam,; The Tamil Concept of love, page-64
45. கலித்தொகை : 4 : 22
46. குறுந்தொகை : 82 : 2
47. பட்டினப்பாலை : 218-220

பின் செலவு ஒருப்படுவதற்கேயாகும் என்பர் தொல்காப்பியனார்.

> " செலவிடை யழுங்கல் செல்லாமை யன்றே
> வன்புறை குறித்தல் தவிர்ச்சி யாகும்." [48]

தலைமகன் செலவொழிந்ததனைத் தோழி, 'நின், தொல்கவின் தொலைத லஞ்சியென் சொல்வரைத் தங்கினர் காதலோரே' [49] என்று தலைமகட்குக் கூறுவள்.

## தெளிந்த நெஞ்சம்:

தலைமகள் குடும்பக் கடமையினை அறியாதவள் அல்லள். ஆயினும் தலைமகன்மாட்டுக் கொண்ட அளவற்ற அன்பு காரணமாகப் பிரிவுக்கு அஞ்சிய அவள் பேதை நெஞ்சம் பேதுறுகின்றது. தான் தன் பிரிவுத் துயரைத் தாங்கியிருக்கத் தலைமகன் பொருள் வயிற் பிரிந்து பொருளீட்டிச் செய்வினை முடித்துச் செம்மல் உள்ளமொடு திரும்ப வேண்டுமென விழைகிறாள்.

> " 'அறன்கடைப் படாஅ வாழ்க்கையும் என்றும்
> பிறன்கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்
> பொருளி னாகும் புனையிழை' என்று நம்
> இருளோர் ஐம்பால் நீவி யோரே,
> நோய்நாம் உழக்குவ மாயினும் தாம்தம்
> செய்வினை முடிக்க; தோழி." [50]

## முடிவுரை:

இதுகாறும் கூறியவற்றால் இல்லோர் வாழ்க்கை இளிவு என்பதும், இல்லோர்க்கு ஈதற்குப் பொருள் இன்றியமையாதது என்பதும், அறச்செயல் ஆற்றவும் காதல்

---

48. தொல்காப்பியம் : கற்பியல் : 185
49. கலித்தொகை : 2 : 27 - 29
50. அகநானூறு : 155 : 1 - 6

இன்பம் துய்க்கவும் பொருள் பெரிதும் வேண்டற் பாலது என்பதும், பொருள்வயிற் பிரியக் கருதும் தலைமகன் கடமையிற் கருத்தூன்றியவன் என்பதும், கடமைக்கும் காதலுக்கு மிடையே ஒரு போராட்டம் நிகழும் என்பதும், தலைமகனைத் தெருட்டிப் பிரியத் தலைமகன் செலவழுங்கினும், பின் சின்னாட்கள் கழித்துக் கருதியபடியே கொண்ட கடமையினை மேற்கொண்டு குறைவற முடிப்பன் என்பதும், தலைமகள் தலைமகன்மாட்டுக் கொண்ட எல்லையில்லாத அன்பு காரணமாக உள்ளம் பேதுறுவள் என்பதும், பின்னர்த் தலைவன் பொருளீட்டிவர ஒருப்படுவள் என்பதும் ஒருவாறு அறியப்பட்டன. 'பொருள்வயிற் பிரிவு' பழந் தமிழர் தம் வாழ்க்கையின் ஒரு கூறினைச் சிறப்பித்து நிற்கக் காணலாம்.

# 10

# வற்றிய பாலையில் வற்றாத அன்பு

பழந்தமிழர் சீரான செம்மையான வாழ்வு வாழ்ந்தவர்கள். அவர்களின் அகவாழ்வு அன்பு நிறைந்ததாகவும், புறவாழ்வு புகழ் நிறைந்ததாகவும் விளங்கியதனைச் சங்கப் பாடல்கள் கொண்டு தெளியலாம். விழுமிய குறிக்கோள் நிறைந்த உயரிய வாழ்வாக அவர்கள் வாழ்வு துலங்கியது. காதல் நெஞ்சங்கள் இரண்டு அன்பால் ஈர்க்கப்பட்டுப் பின் குடும்ப வாழ்வில் தலைப்படும் பொழுது இன்பமும் துன்பமும் வாழ்வில் மாறி மாறி அலைக்கழிக்கும். இதனைப் பழந்தமிழ் மக்கள் நன்கு உணர்ந்திருந்தனர்.

> **"இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்**
> **நன்பகல் அமையமும் இரவும் போல**
> **வேறு வேறு இயல ஆகி மாறெதிர்ந்து**
> **உளஎன உணர்ந்தனை ஆயின்,"[1]**

இன்பமும் துன்பமும் கூடி வாழ்தலும் பிரிந்து துன்புறுதலும் பகலும் இரவும் போல மாறி மாறி வரும் என்பதனைத் தமிழர்கள் நன்கறிந்திருந்தமையான், இன்பம் வந்த காலையில் இறுமாந்து விடாமலும் துன்பம் வந்த பொழுது சோர்ந்து விடாமலும் தூய நல்வாழ்வினை வாழ்ந்து காட்டினார்கள். அவர்கள் மேற்கொண்ட கொள்கைகள் தூயனவாய் இருந்தன; அவர்கள் வாழ்ந்த வாழ்வும் விழுமியதாய் அமைந்திருந்தது. பிறநாடுகள்

1. அகநானூறு : 327 : 1-4

நாகரிகம் பெருத காலத்திலேயே தமிழர்கள் தமக்கென்று தனித்தவொரு தூய நாகரிகத்தினை மேற்கொண்டு ஒழுகி வந்தனர் என்பது வரலாற்றின்வழி நன்கு புலனுகின்றது.

அகவாழ்வு-வீட்டு வாழ்வு அன்பின் அடிப்படையில் முகிழ்த்தாலும், அவ்வாழ்விற்கு அடிப்படைத் தேவையாய் அமைவது பொருளே. இது குறித்துத் திருவள்ளுவரும்,

**" அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு "[2]**

என்று பொருத்தமுறப் புகன்றுள்ளார்.

காலம் பல கடந்த நிலையிலும் பொருளின் தேவை குறைந்ததாகக் காணேம்; மாருக மிகுவதனையே காண்கிறேம். சங்க காலத்தில் பொருளின் தேவையைப் பழந் தமிழர் நன்கு உணர்ந்திருந்தனர். ஆயினும் அப்பொருளை அவர்கள் என்னென்ன மேற்கோள்களுக்காக ஈட்டினர் என்பதனை நோக்கும் பொழுதுதான் அவர்கள் வாழ்ந்த விழுமிய வாழ்வு புலனுகின்றது. இன்றைய வாழ்வில் பொருளீட்டல் என்பது, தன் மனைவி மக்கள் சுற்றம் என்பவர்களை ஓம்ப மட்டுமே பயன்படுகின்றது. தன்னல நோக்கு—தான் வளமாக வாழ வகை செய்வதற்குப் பொருள் என்ற அளவில் இன்று பொருளின் தேவை கருதப்படுகின்றது. ஆனல், அன்று அத்தகைய குறுகிய மனப்பான்மை இல்லை. அன்பும் பண்பும் பாசமும் நேசமும் பின்னிப் பிணைந்து அரசோச்சிய காலம் அது. எனவே தனி மனிதர் வாழ்விலும் சமுதாயத்தின் கூட்டுறவைப் பற்றிய எண்ணம் இலங்கியது. 'ஒருவர் பொறை; இருவர் நட்பு' என்ற நிலை—விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையே

2. திருக்குறள் : 247

உயரிய வாழ்விற்கு உறுதுணையாவது என்னும் சீரிய நோக்கு—மக்கள் உள்ளத்தை—குறிப்பாகக காதல் நெஞ் சங்களைச் செம்மைப்படுத்தியது. காதலனும் காதலியும் ஒருவர்க்கொருவர் விட்டுக் கொடுத்து—ஒருவர் இன்பத் திற்காகத் துன்பம் நேரிடுமானாலும் அதனைத் தாங்கிக் கொள்வது என்னும் விழுமிய பண்பாடு நிலவிய காலமே சங்க காலம். சுருங்கக் கூறின் உள்ளத்தின் பண்பாடு உயர் நிலையில் துலங்கிய காலம் வளமான சங்க நற் பொற் காலமாகும்.

தொடக்கத்தில் இளைய காதல் நெஞ்சங்களின் காதற் புது வாழ்வு கவலையின் சிறு கீறல்களு மின்றிப் புதுப் புன்னகையுடன் பொலியும்; பின் கைப்பொருள் சுருங்கும். அதனால் இளமை உள்ளங்களில் துன்பத்தின் நிழல் வந்து படியும். கவலை இன்னதென்று அறியாமல் வாழ்ந்த வாழ்க்கையில் அவலத்தின் ஓலம் கேட்கத் தொடங்கும். பொருள் வேண்டும் என்ற புதுக் கவலை தொடங்கும். தங்களின் தன்னல வாழ்வின் இன்பத்திற்கு மட்டுமா பொருள் தேவை? இல்லை. 'அறங்குன்றாத நல் வாழ்வும், பிறர்தம் வீடு சென்று இரக்காத செல்வமும் ஆகிய இரண் டும் பொருளால்தான் ஆகும்'' என்று நம்பினர்.

> " அறன் கடைப் படாஅ வாழ்க்கையும் என்றும்
> பிறன்கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்
> பொருளின் ஆகும். "[3]

இது மட்டுமன்று; அக் காலத்தில் வீட்டின் தலைவன் பொருளீட்டிக் கொண்டு வருதல் வேண்டும் என்பதில் பெரிதும் நாட்டம் கொண்டான். தலைமுறையாக வழி

---

3. அகநானூறு : 155 : 1-3

வழி வந்த செல்வமாக இருந்தாலும் அதனைச் செல வழித்தலை இழிவுடையதாகக் கருதினான். அதனையும்விட 'இல்லை' என்று வந்தவர்க்கு 'இல்லை' யென்னாது ஈதல் வேண்டும் என்பதும் அவனுடைய உயரிய குறிக்கோளாக இருந்தது:

"உள்ளது சிதைப்போர் உளர்எனப் படாஅர்
இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு."[4]

மேலும், "நண்பரின் வறுமையினையும், சுற்றத்தவரின் துன்பத்தினையும் ஒருபுறம் கண்டு, பகைவரின் மேம்பாட்டினையும் ஒருபுறம் பார்த்துக் கொண்டே, ஊரில் அமைதியாக வாழ யாரால் முடியும்? வாழ்க்கைத் துணைவி யாகிய மனைவியை விட்டுப் பிரிய முடியாதவர்களால், கடமை உணர்ச்சி குன்றியவர்களால்தான் அது முடியும். கடமையில் மேம்பட்ட என்றால் அது முடியாது, முடியாது என்று நள்ளிரவிலும் பகலிலும் இதனையே திரும்பத் திரும்ப எண்ணி வருந்தினேன், இது ஒரு தீயாய் வளர்ந்து என் வலிமையைச் சுட்டெரித்தது" என்று சங்க காலத் தலைமகன் கூற்றாக அகநானூற்றுப் பாடல் ஒன்று அமைந் துள்ளது.

"நட்டோர் இன்மையும் கேளிர் துன்பமும்
ஒட்டாது உறையுநர் பெருக்கமும் காணூஉ
ஒரு பதி வாழ்தல் ஆற்றுப தில்ல
பொன்னவிர் சுணங்கொடு செறிய வீங்கிய
மென்முலை முற்றம் கடவா தோர்என
நள்ளென் கங்குலும் பகலும் இயைந்தியைந்து
உள்ளம் பொத்திய உரம்சுடு கூர்எரி."[5]

---

4. குறுந்தொகை : 283 : 1-2
5. அகநானூறு : 279 : 1-7

அறநெறியைக் கைவிடாது போற்றி ஒழுகுவதும் அன்பின் சிறந்த உறவினர் உற்ற துன்பத்தைத் தாங்கி நிற்றலும், ஊக்கமும் முயற்சியும் இன்றி நாளைக் கழிப்பவர்க்கு முடியாதனவாகும்! எனவே கடமையைக் கலங்காது ஆற்ற முனைந்த தலைவன் தலைவியை மிக நெருங்கி, "நான் மேற்கொண்டுள்ள இப்பொருளீட்டும் முயற்சி உனக்குத் துயர் விளைவிக்கும் என்பது உண்மைதான். ஆயினும் நீ துன்புற்று வருந்துவதைச் சில காலம் எப்படியாவது பொறுத்துக் கொள்ள வேண்டும்" என்று அவளுடைய மெல்லிய கையைப் பற்றிக்கொண்டு சொன்னான். இவ்வாறு சொல்லிக் கொண்டே கை வளையல்களைத் திருத்தினான்.

**" அறந்தலைப் பிரியாது ஒழுகலும் சிறந்த**
**கேளிர் கேடுபல ஊன்றலும் நாளும்**
**வருந்தா உள்ளமொடு இருந்தோர்க்கு இல்லெனச்**
**செய்வினை புரிந்த நெஞ்சினர் நறுநுதல்**
**மையீர் ஓதி அரும்படர் உழத்தல்**
**சின்னாள் தாங்கல் வேண்டும் என்றுநின்**
**நன்மாண் எல்வளை திருத்தினர்." [6]**

இவ்வாறுபழங்காலத்தில் தலைவன் மேற்கொண்ட பொருளீட்டும் முயற்சி தன் வாழ்வின் நலத்திற்கே என்பது மட்டுமேயன்றிப் பிறர் நலத்திற்கு உதவ வேண்டும் என்பதும் பற்றி நின்றது எனத் தெளியலாம். உறவினரும் நண்பரும் இரவலரும் வறுமையில் உழலாமல் வளமாக வாழவேண்டும் என்பதிலே தலைவனின் கருத்துத் திளைத்திருந்தது.

**" ஏதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்லெனச்**
**செய்வினை கைம்மிக எண்ணுதி." [7]**

---

6. அகநானூறு : 173 : 1-7
7. குறுந்தொகை : 63 : 1-2

ஆயினும் தலைவியை விடுத்துத் தனிமையோடு சென்று துயர் கூர்ந்து பொருளீட்டித் திரும்பும் நிலையில் அவன் உற்ற துயர் பெரிது; உழன்ற துன்பம் மிகுதி. அவன் செல்ல வேண்டிய கொடிய பாலை வழியினும் தன் ஆருயிர்த் துணைவியை விட்டுச் செல்வதில் அவன் அடைந்த துன்பம் சொல்லொணுதது.

''கொடிய காட்டு வழியில் கிளை விட்டுப் படர்ந்துள்ள கவர்த்த வழிகளை நம்பி வழிப்போக்கர்களைக்கொள்ளையடித்து வாழ்தலைத் தவிர, மழை வளத்தை எதிர்பார்த்து வாழாத ஆறலை கள்வர்கள் அங்கே பலர் வாழ்கின்றூர்களாம். அவ்வாறு வாழ்ந்தாலும் என்ன? ஓங்கி உயர்ந்து வாழ்ந்துள்ள யா மரத்தின் உயர்ந்த கிளையில் உள்ள தன் குஞ்சுகளுக்குத் தாய்க் கழுகு உணவு தேடி எடுத்துச் செல்லுமாம். அக் கழுகு போரில் மாண்ட வீரரின் கண் தசையை எடுத்துச் சென்று தன் குஞ்சுகளுக்கு ஊட்டுங் காலையில் தசை வழுக்கிக் குஞ்சுகளின் வாய் தவறிக் கீழே விழுமாம். அப்பொழுது அவ் யா மரத்தின் அடியில் மிகுந்த பசியால் நலிந்து வாடி வருந்தும் கிழ நரி கீழே விழும் அத் தசையினை உணவாகக் கொண்டு மகிழுமாம். அத்தன்மை வாய்ந்த கொடிய பாலை வழியும் நமக்கு எளிய வழிதான். ஆயினும் மென்மையும் இனிய மொழியும் புன்முறுவலும் கொண்ட இளமை நிறைந்த என் துணைவியைப் பிரிந்து செல்வதுதான் அருமையான செயலாக இருக்கிறது'' என்று தலைவன் பொருள் வலித்த தன் நெஞ்சிற்குச் சொல்லி வருந்தியதாக மதுரை மருதன் இளநாகனுர் பாடியுள்ளார்:

'' கானுயர் மருங்கில் கவலை அல்லது
வானம் வேண்டா வில்லேர் உழவர்
நெடுநாள் வேட்டம் கிளைஎழ வாய்த்த

பொருகளத்து ஒழிந்த குருதிச் செவ்வாய்ப்
பொறுத்த போலும் வானிற எருத்தின்
அணிந்த போலும் செஞ்செவி எருவை
குறும்பொறை எழுந்த நெடுந்தாள் யாஅத்து
அருங்கவட்டு உயர்சினைப் பிள்ளை ஊட்ட
விரைந்துவாய் வழுக்கிய கொழுங்கண் ஊன்தடி
தொல்பசி முதுநரி வல்சி ஆகும்
சுரன்நமக்கு எளிய மன்னே; நன்மனைப்
பன்மாண் தங்கிய சாயல் இன்மொழி
முருந்தேர் முறுவல் இளையோள்
பெருந்தோள் இன்துயில் கைவிடு கலனே.'' [8]

''நல்ல நல்ல செயல்களைச் செம்மையாகச் செய்து முடிப்பதில் முனையும் மனம் உடையவர்கள் ஆண்கள்; எனவே பொருள் தேடவேண்டும் என்னும் வேட்கை மீதூர அவர்கள் நம்மைப் பிரிந்து செல்வார்கள்; அவ்வாறு பிரிந்து செல்வது ஆண்களுக்கு இயற்கையாக இயைந்த பண்பாகும்'' என்று தலைவி தன் தோழியிடம் கூறுகின்றாள்:

'' செயல்படு மனத்தர் செய்பொருட்கு
அகல்வர் ஆடவர் அதுஅதன் பண்பே.'' [9]

வளமான வாழ்வு வாழ்ந்த தலைவன் வறட்சி மிகுந்த பாலை வழியே தன் பயணத்தைத் தொடர்ந்து மேற்கொள்கின்றான். மலைச் சுனைகள் எல்லாம் நீர் வற்றி வறண்டு காணப்படுகின்றன. மரங்களில் இலைகள் எல்லாம் கீழே உதிர்ந்துபோய் வெய்யிலின் வெம்மையால் கிளைகள் எல்லாம் தீய்ந்து வாடியுள்ளன. நிழலும் நீரும் அற்றநிலையில் எங்கும் வறட்சியே குடிகொண்டுள்ள பாலை அது. நீர் வேட்கை மிகுந்த யானை வற்றிய சுனையைத் துழாவிப் பார்த்து நீர்

8. அகநானூறு : 193
9. நற்றிணை : 24 : 8-9

காணுமையால் வருந்துகின்றது. பின்னர் அங்கே உலர்ந்து கிடக்கும் பாசியைத் தின்று, அயர்வு தரும் பசித் துன்பத்துடன் வருத்த மிகுந்திருக்கும் பெண் யானையுடன் ஒரு சிறை ஒடுங்கிக் கிடக்கின்றது. மூங்கில்களின் கணுக்கள் முறிந்து போகும் வண்ணம் அந்தப் பாலை நிலத்தில் வெயிலின் வெம்மை மிகுந்துள்ளது.

" அருவி ஆன்ற பெருவரை மருங்கில்
சூர்ச்சுனை துழைஇ நீர்ப்பயம் காணது
பாசி தின்ற பைங்கண் யானை
ஒய்பசிப் பிடியொடு ஒருதிறன் ஒடுங்க
வேய்கண் உடைந்த வெயிலவிர் நனத்தலை." 10

வளம் வற்றிய பாலையிலும் வற்ருத அன்பு வாழ்வு வாழ்கின்றன அப்பாலையில் வாழும் யானை, புலி, குரங்கு, பருந்து, பல்லி, புரு மான் முதலிய உயிரினங்கள் என்பதனைப் பழந்தமிழ் இலக்கியங்கள் கொண்டு தெளியலாம்.

கொடிய பாலைநிலத்தில் உண்ண உணவு கிடைக்காமல் யானைக் குடும்பம் ஒன்று பெருந்துயர் உழக்கின்றது. பெண் யானையின் மிகுபசியைப் போக்க ஆண் யானை முயல்கின்றது. அவை ஆர்வமாகச் சுவைக்கும் தழை யுணவோ, மூங்கிலோ கிடைக்காத காரணத்தால் யா மரத்தின் மென்மையான கிளையை யொடித்து அதன்மேற் பட்டையை உரித்துத் தன் பெண் யானை தின்னுமாறு தந்து மகிழ்கின்றது.

" பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழி அவர் சென்ற ஆறே." 11

10. அகநானூறு : 91 : 3-7
11. குறுந்தொகை : 37 : 2-4

தலைவன் பயணம் செல்லும் வழியில் புறக்காட்சிகளில் வறட்சி தோன்றினும், அந்நிலத்தில் வாழும் உயிரினங்களின் வாழ்வில் அன்பின் உயிர்த் துடிப்பைக் காண்பான். வறட்சிக் கிடையே ஒரு மலர்ச்சி; கொடிய வெம்மைக் கிடையே தண்ணிய தன்மை. புறக் கொடுமைக் கிடையில் மனத்தின் மகிழ்ச்சி நிறைந்த குளிர்ச்சி. இவை உயிர்களின் அன்பான—அமைதியான காதல் வாழ்வினைப் படம் பிடித்துக் காட்டும் புறச் சூழ்நிலைகள். இயற்கை கொடுமை மிகுந்த காட்சிகளை வழங்கினும் அப்புறக் கொடுமையும் வெப்பமும் அவ்விளைய நெஞ்சங்களில் சுரக்கும் அன்புக்கு அணைபோட முடியாது என்பதனைப் பல பாடல்களில் சங்ககாலக் கவிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கொடுமை நிறைந்த புலிகளின் வாழ்விலும் வறண்ட பாலையில் வற்றாத அன்பு நிலவுவதனை ஔவையார் அகநானூற்றுப் பாடல் ஒன்றால் விளக்கிக் காட்டியுள்ளார்.

குகையின் பிளப்பின் ஓர் முடுக்கான இடத்தில் மூன்று குட்டிகளை ஈன்றது பெண் புலி. குட்டிகள் வேங்கை மரத்தின் மணமுள்ள மலர்களோடு உள்ள தழையைத் தனித்தனியே வகுத்தாற் போன்று காட்சி யளிக்கின்றன. வளைந்த நகங்களைக் கொண்ட குட்டிகளை ஈன்ற தாய்ப்புலி ஈன்ற இளைப்பாலும் பசியாலும் மிகவும் துன்புற்றுக் காணப்படுகிறது. அதனை யறிந்த ஆண் புலி, பெண் புலியின் பசியைப் போக்க இரை தேடி வரச் செல்ல நினைந்து, எங்காவது ஆண் மானின் குரல் கேட்கின்றதா என்று ஆர்வத்தோடு கவனமாக உற்றுக் கேட்கின்றது.

**“ வேங்கை வெறித்தழை வேறுவகுத் தன்ன**
**ஊன்பொதி அவிழாக் கோட்டுகிர்க் குருளை**

மூன்றுடன் ஈன்ற முடங்கர் நிழத்த
துறுகல் விடரளைப் பிணவுப்பசி கூர்ந்தெனப்
பொரிகிளர் உழுவைப் பேழ்வாய் ஏற்றை
அறுகோட்டு உழைமான் ஆண்குரல் ஓர்க்கும். "[12]

நிழலும் நீரும் அற்ற கொடிய பாலை வழியில் ஓங்கி வளர்ந்த மரம் ஒன்று இனிய கனிகளைக் கொண்டு நின்றது. குட்டியை ஈன்ற மந்தி அக்கனிகளை உண்ண வேட்கை கொண்டது. ஆயினும் மரம் ஏறிக் கனிகளைப் பறித்துண்ணும் ஆற்றல் இன்றி மரத்தின் கீழே நின்று உயரே அங்காந்து பார்த்து ஏங்கியது. மந்தியின் விருப்பத்தை உணர்ந்த ஆண் குரங்கு விரைந்து மரத்தின் மீது ஏறிக் கிளைகளை அசைத்துக் கனிகளை உதிர்க்கத் தொடங்கியது. மரத்தடியில் ஆவலோடு அமர்ந்திருந்த மந்தி கீழே உதிர்ந்த கனிகளில் சிறந்தனவற்றைத் தேர்ந்தெடுத்து உண்டது.

" ..........................................
ஊழுறு தீங்கனி உதிர்ப்பக் கீழிருந்து
ஏற்பன ஏற்பன உண்ணும்
பார்ப்புடை மந்திய மலையிறந் தோரே. "[13]

காதல் நெஞ்சங் கொண்ட அன்பான பருந்துகள் இரண்டு பாலை நிலத்திலே வாழ்ந்து வந்தன. அந்தப் பாலை நிலத்திலே பயணம் செய்யும் வழிப்போக்கரை வழி மறித்துக் கொள்ளையிட்டு அவர் பொருள் கைக்கொண்டு கொடுமை வாழ்வு நடத்தும் ஆறலை கள்வர்கள் அங்கு நிறைந்துள்ளனர். அவர்கள் இரக்க மின்றிக் கொன்று குவிக்கும் பிணங்கள் பருந்துகளுக்கு விருந்தாகின்றன. கொடிய செயலால் மாண்டுபோன மாண்புடையோரின் பிணங்களைப் பருந்துகள் உண்ணும் நிலையிலும் அவைகளின்

---

12. அகநானூறு : 147 : 2-7

13. குறுந்தொகை : 278 : 5-7

அன்பால் பின்னப்பட்ட அருள் நெஞ்சங்கள் மாறாமல் துலங்குகின்றன. ஆண் பருந்து தன் விரல்களால் பிணங்களின் கண்களைப் பெயர்த்துப் பெண் பருந்தின் வாயில் இட்டு ஊட்டி மகிழ்கின்றது. வற்றிய பாலையிலும் வளமார்ந்த நெஞ்சம் கொண்ட பருந்துகளின் இடையே மலர்ந்துள்ள இவ் அன்பு வாழ்க்கையினை இறங்குகுடிக் குன்ற நாடன் என்னும் அகநானூற்றுப் புலவர் அழகுறப் புனைந்து காட்டியுள்ளார்.

'' கொடுமரம் பிடித்த கோடா வன்கண்
வடிநவில் அம்பின் ஏவல் ஆடவர்
ஆளழித்து உயர்த்த அஞ்சுவரு பதுக்கைக்
கூர் நுதிச் செவ்வாய் எருவைச் சேவல்
படுபிணப் பைந்தலை தொடுவன குழீஇ
மல்லல் மொசிவிரல் ஒற்றி மணிகொண்டு
வல்வாய்ப் பேடைக்குச் சொரியும்.'' [14]

கள்ளி மரங்கள் கணக்கின்றி நிறைந்துள்ள பாலைக் காட்டிலே கரந்துறையும் ஆறலை கள்வர்கள் வழிப் போவாரைக் கொல்ல அம்பு முனைகளைத் தீட்டிக் கூர்மைப் படுத்தி, அக் கூர்மையின் சிறப்பினைக் காணத் தம் நகத்தின் முனையில் அந்த அம்புகளைப் புரட்டிப் பார்ப்பர். அந்த ஓசையைப் போன்றே கள்ளி மரங்களில் உறையும் ஆண் பல்லியும் தன் பெண் துணையை அன்போடு அழைக்க மெல்ல அத்தகைய ஒலியினை எழுப்பும்.

" பொன்புனை பகழி செப்பம் கொண்மார்
உகிர் நுதி புரட்டும் ஓசை போலச்
செங்காற் பல்லி தன்துணை பயிரும்
அங்காற் கள்ளியங் காடு ''[15]

---

*14.* அகநானூறு : 215 : 9-15

*15.* குறுந்தொகை : 16 : 2,5

களர் நிலத்தில் உயர்ந்தோங்கி வளர்ந்துள்ள கள்ளி மரத்தில் கட்டிய கூட்டில் பெண் புறா முட்டையிட்டுக் காவல் செய்கிறது; பசியால் வருந்தும் அதன் துன்பம் தீர ஆண் புறா பாழ்நிலத்தில் உதிர்ந்த நெல்லைப் பொறுக்கிக் கொண்டு வருகின்றது.

“ வன்புறப் புறவின் செங்கால் சேவல்
களரி ஓங்கிய கவைமுட் கள்ளி
முளரியங் குடம்பை ஈன்று இளைப் பட்ட
வயவுநடைப் பேடை உணீஇய மன்னர்
முனைகவர் முதுபாழ் உகுநெல் பெறூஉம். ”[16]

இறுதியாக மென்மையும் மிரட்சியும் அன்பும் அமைதியும் நிறைந்த மான் கூட்டங்களின் அன்பு வாழ்க்கையினை ஒரு சிறிது காண்போம்.

பாலை நிலத்தின் வெம்மையால் மரங்கள் பல பட்டுப் போயின. நெடு நாள் வெப்பத்தைத் தாங்கி வாழும் ஆற்றல் உடைய மரங்கள் மட்டுமே நின்றன. அம் மரங்களும் பசுமையற்று வாடிக் கிடந்தன. அம் மரங்களின் அடி வேர்களிலும் பட்டைகளிலும் மட்டுமே ஓரளவு ஈரம் கசிந்து நின்றது. ஆண் மான் காலால் உதைத்துப் பெரு மரப் பட்டைகளை வளைத்தெடுத்துத் தன் பெண் மான் தின்ன விரும்பிக் கொடுத்தது. அது தின்று மிகுந்ததைத் தானும் தின்று ஒருவாறு பசி தணியப் பெற்றது. அடுத்து. வெய்யோனின் வெப்பந் தாங்கும் ஆற்றல் இன்றி வாடிப் பெரிதும் வருந்திய தன் குட்டிக்கு நிழல் இல்லாமை கண்டு, உருகி வெயில் எரிக்கும் பக்கத்தில் தான் நின்று தன் நிழலைக் குட்டிக்குத் தந்து மகிழ்ந்தது.

“ கவைத்தலை முதுகலை காலின் ஒற்றிப்
பசிப்பிணிக்கு இறைஞ்சிய பருஉப் பெருந் ததரல்
ஒழியின் உண்டு வழுவில் நெஞ்சில்

---

16. நற்றிணை : 384

தெறித்துநடை மரபின்தன் மறிக்குநிழ லாகி
நின்றுவெயிற் கழிக்கும் என்பநம்
இன்துயில் முனிநர் சென்ற ஆறே." [17]

இதற்கு அன்பு வாழும் ஆண்மானின் அன்பு நெஞ்சினைக் குற்றமற்ற நெஞ்சு என்று—'வழுவில் நெஞ்சு' என்று பாராட்டுகின்றார் புலவர்.

இத்தகைய அன்பு வாழ்வினைக் 'கற்றறிந்தார் ஏத்தும் கலி' பின்வருமாறு கூறும்.

" அரிதாய அறனெய்தி அருளியோர்க்கு அளித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலின் புணர்ச்சியும் தரும்என
பிரிவுஎண்ணிப் பொருள்வயிற் சென்றநம் காதலர்" [18]

என்று தலைவன் மேற்கொண்ட செலவின் காரணத்தினையும்,

" துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறெனவும் உரைத்தனரே" [19]

என்று வற்றிய பாலையில் வற்றாத அன்பு கொண்டு வாழும் யானைக் குடும்பத்தினையும்,

" அன்புகொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை
மென்சிறக ரால்ஆற்றும் புறவெனவும் உரைத்தனரே" [20]

என்று இணைப் புறாக்களின் இனிய காதல் நெஞ்சத்தினையும்,

---

17. குறுந்தொகை: 213
18. பாலைக்கலி ; 11 : 1-4
19. பாலைக்கலி; 11 : 8-9
20. பாலைக்கலி; 11 : 12-13

**" இன்னிழல் இன்மையான் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்கும் கலையெனவும்
உரைத்தனரே"** [21]

என்று மாண்பு நிறைந்த மான் குடும்பத்தின் மலர்ச்சி வாழ்வினையும் கலித்தொகை கொண்டு நன்கு தெளியலாம்.

இதுகாறும் கூறப்பெற்றவற்றால் பொருளின் இன்றி யமையாமையினையும் பொருள் ஈட்டுவதன் நோக்கத் தினையும், வற்றி வளஞ் சுருங்கிய கொடிய பாலையின் தன்மையினையும், வளம் வற்றிய பாலையிலும் வற்றாத அன்புள்ளம் கொண்டு இன்புடனும் மனநிறைவுடனும் வாழும் யானை, புலி, குரங்கு, பருந்து, பல்லி, புறா, மான் முதலிய உயிரினங்களின் வாழ்க்கையினையும் ஒருவாறு தெளிந்தோம்.

**" அன்பின் வழியது உயிர்நிலை.' "** [22]

---

21. பாலைக்கலி; 11 : 16-17
22. திருக்குறள் : 80

# 11

# மடலேறுதல்

தொல்காப்பியனார் பழந்தமிழர் தம் வாழ்வு நிலையினைப் பொருளதிகாரத்தில் கூறிப் போந்தார். நாடக வழக்கம், புலநெறி வழக்கம் என்று அவர் இரு வழக்கத்தினைச் சுட்டிக் காட்டியுள்ளார்: சங்க இலக்கியப் பாடல்களைப் படிக்கின்றபொழுது தொல்காப்பியனார் கருத்து நன்கு விளக்கமுறுகின்றது. அக்காலத்து ஒழுகலாறுகளாகத் தொல்காப்பியனார் தம் இலக்கணத்தில் கூறிப்போந்த பல செய்திகள் சங்கப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. 'இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்' என்ற மரபுக் கிணங்க, இலக்கணத்தை விளக்குவன போன்று இலக்கியச் செய்திகள் இடம் பெற்றுள்ள சிறப்பினைச் சங்க இலக்கியத்தில் காண்கிறோம்.

தொல்காப்பியனார் அகத்திணையியலில்,

> "ஏறிய மடற்றிற மிளமை தீர்திறந்
> தேறுத லொழிந்த காமத்து மிகுதிறம்
> மிக்க காமத்து மடலொடு தொகைஇச்
> செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே" [1]

என்றொரு நூற்பாவினைத் தந்துள்ளார். இந்நூற்பா பெருந்திணை இலக்கணம் கூறுகின்றது. இதில் மடலேறுதல் பெருந்திணைக்குரிய செய்தி என்பது புலனாகிறது. ஆயினும் களவியலில் 'மெய் தொட்டுப் பயிறல்' என்ற நூற்பாவில், 'மடன்மா கூறும் இடனுமா ருண்டே'

---

1. தொல்- அகத்திணையியல் : -51

என்று ஒரு குறிப்பினையும் பெற வைத்துள்ளார். இதற்கு விளக்கமாக, 'இது மேல் இயற்கைப் புணர்ச்சிப் பகுதி யெல்லாங் கூறி அதன்வழித் தோன்றும் இடந்தலைப் பாடும், அதன்வழித் தோன்றும் பாங்கற் கூட்டமும், அவற்றுவழித் தோன்றுந் தோழியிற் கூட்டமும் நிகழு மிடத்துத் தலைவன் கூற்று நிகழ்த்துமாறும், ஆற்றுமை கையிகந்து கலங்கியவழி அவன் மடன்மா கூறுமாறும் கூறுகின்றது' என்ற விளக்கம், நூற்பாவின் கீழ்க் காணப்படுகின்றது. "தோழி தலைவனைக் காவலர் கடுகுவரெனக் கூறிச் சேட்பட நிறுத்தலிற் தலைவன் தனக்கு உண்டாகிய வருத்தத்தைப் பார்த்து அச்சேட் படையான் மடலேறுவன் எனக் கூறும் இடனுமுண்டு", என்ற விளக்கத்தினை உரையாசிரியர் நச்சினார்க்கினியர் தருகின்றார். மேலும் 'மடன்மா கூறுதல் கைக்கிளையாம்' என்றும், 'மடல் திறம் என்றதனால் அதன் திறமாகிய வரை பாய்தலும் கொள்க' என்றும் குறிப்பிட்டுள்ளார். இவை பெருந்திணைக் குறிப்பு என்று சொல்லப்பட்ட காரணத்தால் மடலேறுதலைப் பற்றிய பாடல்கள் ஒரு சிலவே இலக்கியங்களில் அமைந்திருக்கக் காண்கிறோம்.

பெறற்கரிய தலைவியினைக் காணும் தலைவன் தன் கருத்தை இழக்கின்றான். அவனைக் கண்ட பொழுதிலேயே 'பள்ளத்தில் பாயும் வெள்ளம் போல்' தன் நெஞ்சம் அவள் பின் சென்ற பான்மையினைத் தன் பாங்கனுக்கு எடுத்துரைக்கின்றான். "பெரிய மலையினிடத்து வீழும் அருவி, பாறைகளின் வெடிப்புக்களில் ஒலிக்கும் பல மலரையுடைய சாரலில் அமைந்த சிற்றூரில் உள்ள குறவனுடைய பெருந்தோள் சிறுமகளினது நீரைப் போன்ற மென்மை, தீயையொத்த என் வலியைக்கெடச் செய்தது" என்று நெஞ்சம் சோரக் குறிப்பிடுவான்:

" மால்வரை யிழிதருந் தூவெள் ளருவி
கன்முகைத் ததும்பும் பன்மலர்ச் சாரற்
சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்
நீரோ ரன்ன சாயல்
தீயோ ரன்னவென் னுரனவித் தன்றே" [2]

தலைவிமேல் தலைவன் கொண்ட காமம் மிகுகின்றது. காமம் மிகமிகக் காமத்திற்கும், நாணத்திற்கும் மனத்துக்குள்ளேயே ஒரு போராட்டம் நிகழ்கின்றது. "தாங்கும் அளவைத் தாங்கிக் காமம் நெறிதரக் கைநில்லாதே" என்றபடி காமம் பொறுக்கும் எல்லையையும் கடக்கின்றது.

" அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீ டுழந்தன்று மன்னே யினியே
.........................................
தாங்கு மளவைத் தாங்கிக்
காம நெரிதரக் கைந்நில் லாதே" [3]

நாணம் மிகுந்த தலைவன் இப்பொழுது காமத்தின் பொறுக்கலாற்றாமையால் நாணம் நலிகின்ற கட்டத்தை அடைகின்றான்.

" கௌவை யஞ்சிற் காம மெய்க்கும்
எள்ளற விடினே யுள்ளது நாணே." [4]

காமத்தால் நாண் அழியத் தலைப்படுகின்றது.

" மிகுபெயல், உப்புச்சிறை நில்லா வெள்ளம் போல
நாணுவரை நில்லாக் காம நண்ணி" [5]

---

2. குறுந்தொகை : 95
3. குறுந்தொகை : 149
4. குறுந்தொகை : 112 : 1-2
5. அகநானூறு : 208: 18-20

" காமங் கைம்மிகச் சிறத்தலின் நாணிழந்து" [6]

மேற்காணும் குறிப்புகளெல்லாம் காமத்து ஆற்றலினையும், அதனால் நாணம் அழிகின்ற பான்மையினையும் புலப்படுத்துவனவாம்.

'மடலேறுதல்' என்பதற்கு விளக்கமாக இலக்கியத்தின் வழிச் சில செய்திகளை அறிகின்றோம். மடலேறுதலாவது: "தன்குறை தீரப்பெறாத தலைமகன் பனங்கருக்காற் குதிரையும், பனையிலுள்ள மற்றவற்றான் வண்டி முதலியனவும் செய்து, தன் உடம்பு முழுதும் நீறு பூசிக்கொண்டு பூளைப்பூ, எலும்பு, எருக்கம் பூ ஆகிய இவற்றை மாலையாகக் கட்டித் தரித்துக் கொண்டு அம் மாவிலேறி அதனைச் சிலர் ஈர்த்துச் செல்ல வீதியிற் செல்லுதல்" என்று கூறப்படும். இதனை இலக்கியங்களின் வழி விளங்கக் காண்போம்.

"மா என மதித்து மடல் ஊர்ந்து ஆங்கு மதில் என மதித்து வெண்தேர் ஏறி' என்ற குறிப்பினை மோசிகீரனார் என்னும் புலவர் நற்றிணைப் பாடல் ஒன்றில் தந்துள்ளார். மடல் பாடிய மாதங்கீரனார் என்னும் புலவர் நற்றிணையில் ஒரு பாடலும் (377), குறுந்தொகையில் ஒரு பாடலும் (182) மடலேறுதல் பற்றிச் சிறப்பாகப் பாடியுள்ளார். 'சேட்படுக்கப்பட்டு ஆற்றானாகிய தலைமகன் தன்னுள்ளே சொல்லியது' என்ற குறிப்பு நற்றிணைப் பாடலின் கீழே காணப் பெறுகின்றது.

" மடல்மா ஊர்ந்து, மாலை சூடிக்
கண்ணகன் வைப்பின் நாடும் ஊரும்
ஒள் நுதல் அரிவை நலம் பாராட்டி
பண்ணல் மேவல மாகி, அரிதுற்று,
அதுபிணி ஆக விளியலம் கொல்லோ."

---

6. அகநானூறு: 266; 8
7. நற்றிணை: 377 : 1-5

இக் குறுந்தொகைப் பாட்டும் தலைவன் கூற்றாக அமைந்துள்ளது. 'தோழியால் குறைமறுக்கப்பட்ட தலைமகன் தன் நெஞ்சிற்கு உரைத்தது' என்ற துறை யமைந்த அப்பாடலின் கருத்து வருமாறு: "நெஞ்சே! அழகு ஒழுக விளங்கும் அசைந்த நடையை உடைய தலைவி நம்மாட்டு நெஞ்சம் நெகிழ்ந்திலள். நாம் அத் தலைவியினிடத்து விடுதற்கமைந்த தூது, சிறந்த உச்சியையுடைய பனையின்கண் முதிர்தலையுடைய பெரிய மடலால் செய்த குதிரைக்கு மணிகளமைந்த பெரிய மாலையை முறைமையோடு அணிந்தும் வெள்ளிய எலும்பை அணிந்தும் பிறர் இகழும்படி அம்மடல்மாவின் மேல் தோன்றி ஒருநாளில் பெரிய நாணத்தை விட்டுவிட்டுத் தெருவின் கண் செல்லவும் தகுவதோ?" என்பதாகும். இனி அக்குறுந்தொகைப் பாடலைக் காண்போம்:

> "விழுத்தலைப் பெண்ணை விளையன் மாமடல்
> மணியணி பெருந்தார் மரபிற் பூட்டி
> வெள்ளென் பணிந்துபிற ரெள்ளத் தோன்றி
> ஒருநாண் மருங்கிற் பெருநா ணீக்கித்
> தெருவி னியலவுந் தருவது கொல்லோ
> கலிழ்த்தவி ரசைநடைப் பேதை
> மெலிந்தில ளாம்விடற் கமைந்த தூதே." [8]

மடலேறுதல் பற்றி நல்ல விளக்கம் அமைந்த இவ்விரு பாடல்களைப் பாடிய சிறப்பினால் இப்பாடல்களைப் பாடிய புலவர் 'மடல் பாடிய' என்ற சிறப்போடு 'மடல் பாடிய மாதங்கீரனார்' என அழைக்கப்பெற்றார்.

தலைவிமேல் காமுற்ற தலைவன், தலைவியின் அழகு உருவத்தினை ஒரு கிழியில் எழுதிக்கொண்டு அதைத் தன் கையில் தாங்கிப் பிடித்து, தன்னைத் துன்புறுத்தியவள்

---

8. குறுந்தொகை: 182

இன்னுள் என்பதைப் பலரும் அறிந்து கொள்ள மடல்மா ஊர்ந்து மறுகிற் செல்வான்.

" ............... .........அரிவையைப்
பெறுகதில் லம்ம யானே பெற்றுங்
கறிகதில் லம்ம விவ்வூரே மறுகில்
நல்லோள் கணவ னிவனெனப்
பல்லோர் கூறயா நாணுகஞ் சிறிதே" [9]

இந்தக் கருத்து 'கற்றறிந்தார் ஏத்துங் கலி'யிலும் இடம் பெற்றுள்ளது. காமநோய், 'உளனுவென் னுயிரை யுண் டுயவுநோய்' என்றும், 'நடைமெலிந் தயர்வுறீஇ நாளு மென் நலிவுநோய்' என்றும், 'அல்லல் கூர்ந் தழிவுற அணங்காகி அடருநோய்' என்றும் கபிலரால் கூறப் பெற்றுள்ளது. தன் நோயினை எடுத்துக் கூறிய தலைவன் இறுதியில், "யான் ஒறுத்துக் கூறில் ஒறுப்பது புறத்துப் போதரவிட்ட நும்முடைய சுற்றத்தாரை; நின்னையன்று. பின்னை இக் காமநோய் பொறுக்கலாம் அளவையுடைத் தன்றி மிகுமாயிற் பொன்னுற் செய்த குழையினையுடையாய்! யான் இங்ஙனம் வருந்துகின்ற நிலைமையைப் போக்கி இவ்வூரின் மன்றத்தின்கண்ணே மடலேயேறி நீ எய்துவ தொரு பழியை யான் உனக்கு நிறுத்துவேன் போலே இராநின்றேன்; நீ அதனை அறி", என்று தோழியிடம் சொல்வான்;

" ஒறுப்பின்யான் ஒறுப்பது நுமரையான் மற்றிந்நோய்
பொறுக்கலாம் வரைத்தன்றிப் பெரிதாயிற் பொலங்குழாய்
மறுத்திவ்வூர் மன்றத்து மடலேறி
நிறுக்குவென் போல்வல்யான் நீபடு பழியே." [10]

மடலேறுதல் குறித்துக் குறுந்தொகையின் உரையில் டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள், எளிய தமிழில்

9. குறுந்தொகை: 14: 2-6
10. குறிஞ்சிக்கலி : 22: 20-23

இனிய விளக்கம் தந்துள்ளார். "காமம் மிக்க தலைவன் பனைமடலால் குதிரையைப் போல் ஓர் உருவம் அமைந்துள்ள அதன் கழுத்தில் மணி, மாலை முதலியவற்றைப் பூட்டித் தன் உருவத்தையும் தலைவியின் உருவத்தையும் ஒரு படத்தில் எழுதிக் கையிலேந்தி அதன்மேல் யாவரும் அறிய ஊர்ந்து வருதலை மடலேறுதலென்பர்; அங்ஙனம் அவன் வருவதைக் கண்ட ஊரினர் படமுதலியவற்றால், 'இன்னவருக்கும் இவனுக்கும் நட்பு உண்டு' என்பதை அறிந்து அதனை வெளிப்படக் கூறிப் பழிப்பர்; அது கேட்டுத் தமர் மணம் புரிவிப்பர். மடலேறும் தலைவன் நீறு, எருக்கமாலை, ஆவிரம்பூமாலை முதலியவற்றை அணிந்து வருதல் வழக்கமென்று தெரிகின்றது."

இக்கூற்றின் விளக்கமாக, சில குறுந்தொகைப் பாடல்களும், சில கலித்தொகைப் பாடல்களும் மடலூர் தலைப் பற்றிய விளக்கங்களை நயமுறத் தருகின்றன.

அப்பாடல்கள் வருமாறு:

" மாவென மடலு மூர்ப பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ்க் கொளினே"[11]

" பொன்னே ராவிரைப் புதுமலர் மிடைந்த
பன்னூன் மாலைப் பனைபடு கலிமாப்
பூண்மணி கறங்க வேறி நாணட்
டழிபட ருண்ணோய் வழிவழி சிறப்ப
இன்னல் செய்த திதுவென முன்னின்
றவள்பழி நுவலு மிவ்வூர்
ஆங்குணர்ந் தமையினீங் கேகுமா றுளெனே"[12]

---

11. குறுந்தொகை: 17
12. குறுந்தொகை : 173

" மணிப்பீலி சூட்டிய நூலொடு மற்றை
அணிப்பூளை ஆவிரை எருக்கொடு பிணித்தியாத்து
மல்லலூர் மறுகின்கண் இவட்பாடும் இஃதொத்தன்
எல்லீருங் கேட்டிமின் என்று''[13]

" அணியலங் காவிரைப் பூவோ டெருக்கின்
பிணையலங் கண்ணி மிலைந்து மணியார்ப்ப
ஓங்கிரும் பெண்ணை மடலூர்ந்தென் எவ்வநோய்
தாங்குதல் தேற்று இடும்பைக் குயிர்ப்பாக
வீங்கிழை மாதர் திறத்தொன்று நீங்காது
பாடுவேன் பாய்மா நிறுத்து''[14]

" புனவரை யிட்ட வயங்குதார்ப் பீலி
பிடியமை நூலொடு பெய்ம்மணி கட்டி
அடர்பொன் அவிரேய்க்கும் ஆவிரங் கண்ணி
நெடியோன் மகன் நயந்து தந்தாங் கனைய
வடிய வடிந்த வனப்பினென் நெஞ்சம்''[15]

மேலும், 'படரும் பனையீன்ற மாவும் சுடரிழை நல்கியாள் நல்கியவை' என்றும், 'பூளை மென்மலர் ஆவிரை வேய் வென்ற தோளான் எமக்கீத்தபூ' என்றும் தலைவன் தன் ஆற்றாமையினைக் கூறுகின்ற அவலம் நெஞ்சைத் தொடுவனவாகும்.

'மடலேறுவன்' என்று தலைவன் தோழியிடம் கூறுவானே தவிர, உண்மையில் மடலேற மாட்டான் என்று உரைப்பர். ஆயினும் நெய்தற்கலியின் (24) பாடலொன்றின்கீழ் "இஃது இரந்து பின்னின்ற தலைவன் மடலேறிய வழி அவள் தமர் அஞ்சித் தலைவியைக் கொண்டு வந்து கொடுத்தலைக் கண்டோர் கூறியது" என்ற கொளு காணப்படுகிறது.

---

**13.** *நெய்தற்கலி* : 21 : 18-11
**14.** *நெய்தற்கலி* : 22 : 8-13
**15.** *நெய்தற்கலி* : 23 : 5-9

"சான்றீர்! வாழ்வீராக. 'ஓரிடத்து வெற்றியினை யுடைய குதிரையின் மேலேயிருந்து போர்த்தொழிலை நடத்துவோனாகிய என்னை அம் மாவல்லாத மடன் மாவிலே ஏறி அக்களத்தே யன்றி மன்றின்கண்ணே தன்னை உள்ளுவித்தவள்" என்றும். "உலகத்தையெல்லாம் பாதுகாத்தலை முயலும் உள்ளத்தை உடையோனாகிய என்னை ஒருவர்பால் ஒன்றை இரத்தலை முயலும் இன்னா தாகிய வருத்தத்தைச் செய்தவள்" என்றும், "வழுவின சொற்கள் சொல்லாதபடி தெள்ளிய நாவினாலே வார்த்தை சொல்லவல்லார் முன்னே சொல்லுதல் என்னைப் பிறர் முன்னே ஒன்றையும் கல்லாத தன்மை யனாகக் காட்டியவள்" என்றும் தலைவன் குறிப்பிடு கின்றான்.

" அடன்மாமேல் ஆற்றுவேன் என்னை மடன்மாமேல்
மன்றம் படர்வித் தவள்; வாழி சான்றீர்"

" புரவூக்கும் உள்ளத்தேன் என்னை இரவூக்கும்
இன்னா இடும்பை செய் தாள்; அம்ம சான்றீர்"

" வல்லார்முற் சொல்வல்லேன் என்னைப் பிறர்முன்னர்க்
கல்லாமை காட்டியவள்; வாழி சான்றீர்." [16]

இவ்வாறு சொல்லி அவ்வூரிடத்து மறுகின்கண்ணே கண்டார் வருந்த 'மடன் மாவை ஏறிப்பாட, திருந்தின இழையினை உடையாளைத் தான் பெறுதற்குப் பொருந் தின வார்த்தைகளைத் தான் கூறக்கேட்டு, பகைவர் போர்த்தொழிலை வல்ல பாண்டியனுக்கு அஞ்சி அரிய திறை கொடுக்குமாறு போல, தமர் குடிப்பழுதாம் என்று அஞ்சி, தலைமகளை அவ்விடத்தே கொடுத்தார்:

---

16. நெய்தற்கலி : 24 : 9-10; 13-14; 19-20

" வருத்தமா ஊர்ந்து மறுகின்கண் பாடத்
திருந்திழைக் கொத்த கிளவிகேட் டாங்கே
பெருந்தாதார் போர்வல் வழுதிக் கருந்திறை
போலக் கொடுத்தார் தமர்.[17]

இதனால் பிற்காலத்தில் மடலேறுகின்ற மரபு இருந்தது என்பது புலனாகின்றது. ஆயினும் இஃது அருகிய வழக்கே என்பதும் நன்கு போதரும்.

திருவள்ளுவர் காமத்துப்பாலில் 'நாணுத்துறவுரைத்தல்' என்ற அதிகாரத்தில் ஆறுபாடல்களில் மடலேறுதல் குறித்துப் பாடியுள்ளார். 'காமத்தால் துன்புற்றுக் காதலியின் காதலைப் பெறுமல் வருந்தினவர்க்குக் காவலான மடலூர்தலல்லாமல் வலிமையான துணை வேறொன்றும் இல்லை' என்றும், 'காதலியின் பிரிவாலாகிய துன்பத்தைப் பொறுக்காத என் உடம்பும் உயிரும் நாணத்தைத் துறந்து மடலூரத் துணிந்தன' என்றும், 'நாணமும் நல்ல ஆண்மையும் முன்பு பெற்றிருந்தேன்; காதலியைப் பிரிந்து வருந்துகின்ற இப்போது காமம் மிக்கவர் ஏறும் மடலையே பெற்றுள்ளேன்' என்றும், மடலேறுதலோடு மாலைக்காலத்தில் வருந்தும் துயரத்தை மாலைபோல் தொடர்ந்த சிறு வளை யணிந்த காதலி எனக்குத் தந்தாள்' என்றும், 'மடலூர்தலைப் பற்றி நள்ளிரவிலும் உறுதியாக நினைக்கின்றேன்; காதலியின் பிரிவின் காரணமாக என் கண்கள் உறங்காமலிருக்கின்றன' என்றும், 'கடல்போன்ற காமநோயால் வருந்தியும் துன்பத்தைப் பொறுத்துக்கொண்டு மடலேறுமலிருக்கும் பெண் பிறப்பைப்போல் பெருமையுடைய பிறவி பிறிதில்லை' என்றும் தலைவன் கூற்றாகவும் தன் கூற்றாகவும் திருவள்ளுவர் கூறியுள்ளார்.

---

17. நெய்தற்கலி : 24 : 19-20

"காமம் உழந்து வருந்தினர்க்கு ஏமம்
மடலல்லது இல்லை வலி" [18]

"நோனா உடம்பும் உயிரும் மடலேறும்
நாணினை நீக்கி நிறுத்து" [19]

"நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்
காமுற்றார் ஏறும் மடல்" [20]

"தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை உழக்குந் துயர்" [21]

"மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற
படல்ஒல்லா பேதைக்கென் கண்" [22]

"கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்கது இல்" [23]

தொல்காப்பினர் "கைக்கிளை முதல் பெருந்திணை இறுவாய் அமைந்த ஏழு திணையின்கண்ணும் தலைவி மடலேறினளாகக் கூறும் புலனெறி வழக்கம் பொலிவுடைமை இல்லை; ஆதலின் அது கூறப்படாது" என்று குறிப்பிட்டுள்ளார்.

"எத்திணை மருங்கினும் மகடூஉ மடற்மேற்
பொற்புடை நெறிமை இன்மையான." [24]

இதனை யொட்டியே திருவள்ளுவரும்,

---

18. திருக்குறள் : 1131
19. திருக்குறள் : 1132
20. திருக்குறள் : 1133
21. திருக்குறள் : 1135
22. திருக்குறள் : 1136
23. திருக்குறள் : 1137
24. தொல்-அகத்திணையியல் - நூ - 35

" கடலன்ன காமம் உழ்ந்தும் மடலேருப்
பெண்ணின் பெருந்தக்கது இல்'' [25]

என்று கூறியுள்ளமை தொல்காப்பியனர் கருத்துக்கு அரண் செய்வதாகும். இருப்பினும் இடைக்காலத்தில் இம்மரபு பிறழ்ந்ததனைக் காண்கின்றோம், திருமங்கையாழ்வார், மடலென்னும் துறையைப் பெருக்கி 'சிறிய திருமடல்', 'பெரிய திருமடல்', என்று பிரபந்தமாக்கினர்.

'' சீரானே, செங்க ணெடியானைத் தேன் துழாய்த்
தாரானே, தாமரைபோல் கண்ணுனே எண்ணருஞ்சீர்
பேரா யிரமும் பிதற்றி, பெருந்தெருவே
ஊரார் இகழினும் ஊரா தொழியேன்நான்
வாரார்பூம் பெண்ணை மடல்'' [26]

என்று சிறிய திருமடலிலும்,

'' ..............................மற்றிவைதான்
உன்னி யுலவா வுலகறிய வூர்வன்நான்
முன்னி முளைத்தெழுந் தோங்கி யொளிபரந்த
மன்னியபூம் பெண்ணை மடல்'' [27]

என்று பெரிய திருமடலிலும் வருகின்ற குறிப்புகள் நயமுடையன. இவை 'கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கத்தில்' அமைவனவாகும். இவ்வாறு இவற்றிற்கு அமைதி கூறலாம். நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் 'மாசறுசோதி' என்ற பாசுரத்தில்.

---

25. திருக்குறள் : 1137
26. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம். சிறிய திருமடல் : 76-87
27. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் : பெரிய திருமடல் : 147-149

" நாணும் நிறையும் கவர்ந்தென்னை நன்னெஞ்சம் கூவிக்
கொண்டு
சேணுயர் வானத் திருக்கும் தேவபி ரான்றன்னை
ஆணையென் தோழி! உலகு தோறலர் தூற்றி; ஆம்
கோணைகள் செய்து குதிரி யாம்மட லூர்துமே" [28]

என்ற பாடலில் மடலேறுதல் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

நம்பியகப்பொருள் களவியல் பகுதியில் பாங்கியிற் கூட்டத்தில், 'மடற்கூற்றும் மடல் விலக்கும்' என்ற பகுதி காணப்படுகின்றது.

இரந்து குறைபெறாது வருந்திய தலைவன் மடலே பொருளென மதித்தலும், பாங்கிக்குத் தலைவன் மடலேறுதலை உலகின்மேல் வைத்து உரைத்தலும், அம் மடலேற்றினைத் தலைவன் தன்மேல் வைத்துச் சாற்றலும், பாங்கி, தலைவி யவையத்து அருமை சாற்றலும், தலைவன் தன்னைத்தானே புகழ்தலும், பாங்கி அருளியல் கிளத்தலும், கொண்டு நிலை கூறலும் இத்துறையைச் சார்ந்தன வாகும்.

பிற்காலத்தில் சிறு பிரபந்த வகைகள் வளர்ந்த பொழுது. மடலும் வளர்ந்தது. 'பன்னிரு பாட்டியல்', 'இலக்கண விளக்கம்', 'வெண்பாப் பாட்டியல்', முதலியன மடலின் இலக்கணத்தை வகைப்படுத்திக் கூறுகின்றன. 'வருணகுலாதித்தன் மடல்', 'சித்திர மடல்' 'உலா மடல்' முதலியன பிற்காலத்தில் மடல் குறித்து எழுந்த இலக்கியங்களாகும். ஆயினும் பிற்கால நூல்களில் சங்கப் பாடல்களிலும், ஆழ்வார் பாசுரங்களிலும் மடலேறுதல் குறித்த பாடல்களில் காணப்பெறும் இலக்கிய நயம் இல்லாமையைக் காணலாம். இவ்வாறு தொல்காப்பியனுர் குறிப்பிட்ட மடலேறுதல் காலத்திற்குக் காலம் வளர்ந்தும், பிறழ்ந்தும் இலக்கிய வகையாக வளர்ந்துள்ள நிலைமையினை இலக்கியவரலாறு படிப்போர் நன்குணர்வர்.

---

28. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் : திருவாய்மொழி : மாசறு சோதி : 9

# 12

# குறள்வழி நடப்போம்

தமிழ்நாடு செய்தவப் பயனாய்த் தோன்றிய திருவள்ளுவர் பெருமானின் இரண்டாயிரம் ஆண்டுத் திருநாள் இது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வள்ளுவர் பெருமான் தமிழ்மொழியில் வழங்கியருளிய கருத்துக்கள் காலம், இடம், இனம் முதலிய அனைத்தையும் கடந்து ஒளிரும் கருத்துக் கருவூலங்களாகும். "அவர் தொடாத துறை ஒன்றுமில்லை; தொட்ட துறைகளை அழகுபடுத்தாமல் விட்டதில்லை" என்ற மேனாட்டு அறிஞர் கூற்றிற்கு இயைய வள்ளுவர் பெருமான் வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் நுணுகிக் கண்டுள்ளார். தம் அறிவால், அனுபவத்தால் கண்ட உயர்ந்த உண்மைகளை ஒளியாது நமக்கு எடுத்துத் தந்துள்ளார். எனவேதான் "எல்லாப் பொருளும் இதன் பாலுள, இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்" என்று மதுரைத் தமிழ் நாகனார் என்னும் புலவர் பாராட்டு மொழியும் பிறந்தது.

நூற்களை இருவகையாகப் பகுப்பர் அறிஞர். ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டுமே பயன்படும் நூல்களை Books for the hour என்றும், எஞ்ஞான்றும் துணையாக விளங்கிடப் பயன்படும் நூல்களை Books for ever என்றும் வழங்குவர். வள்ளுவர் வழங்கிய வான்மறை, உலகம் உள்ளளவும், மனித சமுதாயம் உயிர்க்கும் வரையிலும்

வாழ்க்கைக்கு வழிகாட்டியாக நின்றிலங்கும் கீர்த்தி படைத்தது ஆகும். எனவே

" வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு "

என்று பாரதியாரும் பொருத்தமுறப் பாடினர்.

திருவள்ளுவர் பெருமான் வாழ்வியல் உண்மைகளை நன்கறிந்தவர்; வாழ்க்கையை உற்று நோக்கியவர்; உறுதிப் பொருள்களைப் பிறர் உளங் கொளும் வண்ணம் எடுத்துரைத்தவர். கீதைப் பெருநூலைப் பற்றி அண்ணல் காந்தியடிகள், 'அந்நூல் மூளையைக் கொண்டு உணர்வதன்று; இதயத்தைக் கொண்டு உணர வேண்டிய நூல்' என்றனர், அவ்வாறே திருவள்ளுவர் பெருமான் இயற்றிய திருக்குறள் அறிவு வேட்கைக்கும், விரிவுக்கும் ஆராய்ச்சிக்கும் மட்டும் படித்து அமைகின்ற நூல் அன்று. அதற்கும் மேலாக வாழ்க்கையை வாழ்ந்து காட்டுவதற்கு வழித்துணையாக அமைந்த நூலாகும்.

கல்வியறிவு என்பது உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் வேண்டற்பாலது. புறத்தே தோன்றும் பொருள்களைப் பார்ப்பதற்கு எப்படிக் கண்கள் இரண்டும் தேவையோ அது போன்றே அகவிருள் அகல நோக்குதற்குக் கல்விக் கண்களின் ஒளி பெரிதும் தேவை. 'கண்ணுடையர் என்பவர் கற்றோர்' என்றும், 'முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்' என்றும் அவர் கூறியிருப்பது இக் கருத்திற்கு அரண் செய்வதாகும். ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே என்றும், கல்வி தவிர மற்றப் பொருள்கள் அத்தகைய சிறப்புடைய செல்வம் அல்ல என்றும் திருவள்ளுவர் புகன்றுள்ளார். ஒரு பிறப்பில் ஒருவன் கற்ற கல்வியானது அப் பிறப்பிற்கு மட்டும் அல்லாமல், அக் கல்வி அவனுக்கு ஏழு பிறப்பிலும் உதவும் தன்மையுடையது

என்றும் குறிப்பிடுகின்றார். மணலில் உள்ள கிணற்றில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும்; அதுபோல் மக்களுக்குக் கற்ற கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும் என்பதனை,

**" தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு"** [1]

என்னும் குறட்பாவால் விளக்கியுள்ளார். கற்றவனுக்குத் தன்நாடும் ஊரும் போலவே வேறு எதுவாயினும் நாடாகும்; ஊராகும்; எனவே, ஒருவன் சாகும் வரையில் கல்லாமற் காலங் கழிப்பது எற்றுக்கு? எனச் சாடுகின்றார்.

இவ்வாறு பலவாறாகக் கல்வியின் இன்றியமையா மையினை இயைபுற வற்புறுத்தும் வள்ளுவர் கற்கத் தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும்; அவ்வாறு கற்ற பிறகு, கற்ற கல்விக்குத் தக்கவாறு நன்னெறியில் நிற்கவேண்டும் என்னும் மிகப் பெரிய வாழ்வியல் உண்மையை,

**" கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக "** [2]

என்னும் குறளால் வெளிப்படுத்தியுள்ளார்.

வாழ்க்கையின் சிறப்பு கற்றலில் மட்டும் இல்லை; கற்ற பின் கற்றபடி நடத்தலிலேயே இருக்கின்றது என்பதே ஈண்டுச் சுட்டப்படும் கருத்தாகும்,

**" சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்"** [3]

என்ற குறளும் நடந்து காட்டுதலின்-அருமையை-வெளி யிடுகின்றது.

---

1. திருக்குறள் : 396
2. திருக்குறள் : 391
3. திருக்குறள் : 664

'சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய வந்த இருவினைக்கும் மாமருந்து' என்று போற்றிப் புகழப்படும் குறள், சொல்லும் சொல்லால் மட்டும் உயர்ந்ததன்று; வற்புறுத்தும் வாழ்க்கை நெறியாலும் மேம்பட்டதாகும். அதனாற்றான் 'ஊழ்' என்னும் அதிகாரத்தில்,

" நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும் " [4]

என்றார். மேலும் 'கொல்லாமை' என்னும் அதிகாரத்தில் அறநூலார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையாய அறம் தமக்குக் கிடைத்ததைப் பகுத்துக் கொடுத்துத் தானும் உண்டு பல உயிர்களையும் காப்பாற்றுதல் என்று குறிப்பிட்டுள்ளார். இக்கருத்துக் கொண்டு கற்றலினும் கற்றவழியிற் கருத்திருத்தி நிற்பதே தலையாய அறமாகப் போற்றப்படும் என்ற கருத்து விளக்கமுறுகின்றது அன்றோ?

நூல்களைக் கற்பதால் வரும் அறிவினும் ஒழுகலாற்றாற் பெறுகும் பண்பினையே பெரிதும் போற்றியவர் வள்ளுவர். எனவேதான்,

" அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர் " [5]

என்று அறிவினும் மக்கட் பண்பைப் போற்றி மொழிந்தார்.

சான்றோரின் சால்பு என்னும் நிறைந்த பண்புநலன் குறைபடுமானால், இந்தப் பெரிய நிலவுலகமும் தன் பாரத்தைத் தாங்க முடியாமற் போய்விடும் என்பதனை,

4. திருக்குறள் : 373
5. திருக்குறள் : 997

" சான்றவர் சான்ருண்மைகுன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை "[6]

என்னும் குறளால் விளக்கியுள்ளார். சான்ருண்மை என்னும் நற்பண்பு சான்றவர்கள் ஊழி பெயர்ந்தாலும் தாங்கள் கைக்கொண்ட நெறியினின்றும் நீங்கார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாந்தர் தாம் இருந்த உயர்நிலையினின்றும் தாழ்ந்து விட்டால், தலையிலிருந்து விழுந்து தாழ்வுற்ற மயிரினைப் போன்றவர் ஆவர் என்று நடைமுறை வாழ்க்கை நடையற்றுப் போனவரை—ஒழுகலாற்றில் பிறழ்ந்தவர்களைத் தலையின் இழந்த மயிரோடு ஒப்பிட்டுப் பெரியோர் வாழ்வியல் உண்மையினைப் புலப்படுத்தியுள்ளார்.

'கடவுள் வாழ்த்து' அதிகாரத்தில் கற்றபின் அதன் வழி நிற்றலை வள்ளுவர் கவினுறக் கிளத்தியிருக்கக் காணலாம்.

" கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்ருள் தொழா அர் எனின் "[7]

என்று ஓர் வினாவையே எழுப்பியுள்ளார் வள்ளுவர். இறைவன் இயற்றிய அறமாகிய பொதுச் சட்டத்தினை மதித்து நடப்பதே கற்றதன் பயன் எனக் கழறியுள்ளார். நீத்தார் பெருமையில் ஒழுக்கத்தில் நிலைத்து நின்று பற்றுவிட்டவர்களின் பெருமையைச் சிறந்ததாகப் போற்றிக் கூறுவதே நூல்களின் துணிபாகும் என்று ஒழுக்க வாழ்க்கையில் தலைப்பட்டுச் சிறந்தவரின் பெருமையைப் புகன்றுள்ளார். "ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கமுடைமை' என்பது நீதி நூல். படித்தலினும் பண்

6. திருக்குறள் : 990

7. திருக்குறள் : 2

பாட்டின் வழி நடப்பதே சிறந்தது என்பதனை இம்முது மொழி உணர்த்தும்.

> " பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
> மண்புக்கு மாய்வது மன்''[8]

என்ற குறள் மொழியும்,

> " மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
> பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்[9]''

என்ற குறள் தொடரும்,

> " உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
> கல்லார் அறிவிலா தார்'' [10]

என்ற குறளும் கற்றபின் நிற்பதில்தான் ஒருவனின் உயர்வு நிலைபெறுகின்றது என்பதனை வற்புறுத்தி மொழியக் காணலாம்.

உடலில் உயிர் இன்றேல் உடல் நிலைக்காது. உடலே ஐம்புல இன்பங்களின் சுவைக்கு இருப்பிடமாய் இலங்கு வது. எனவே வாழ்வினைச் சுவைக்க உடல் தேவை. உடல் இயங்க உயிர் தேவை. உடலைவிட்டு உயிர்நீங்கினால் 'குடம்பை தனித்தொழியப் புள்பறந்த' நிலைமையாகிவிடும். ஆயினும் வள்ளுவர் உயிரினும் ஒழுக்கமே ஓம்பப்படுதல் வேண்டும் என்பதனை ஆணித்தரமாகக் கூறியுள்ளார். மேலும் ஒழுக்கத்தை வருந்தியும் போற்றிக் காக்கவேண்டும்; பலவற்றையும் ஆராய்ந்து போற்றித் தெளிந்தாலும், அந்த ஒழுக்கமே வாழ்க்கையில் துணையாக விளங்கும் என்பதனை.

---

8. திருக்குறள் . 996
9. திருக்குறள் : 134
10. திருக்குறள் : 140

"பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை"[11]

என அழகுற மொழிந்துள்ளார். 'ஒழுக்கம் உடைமையே குடிமை' என்றும் போற்றுகின்றார். உலகம் பழிக்கும் தீயொழுக்கத்தை விட்டுவிடுவதே வேண்டப்படும் நெறி என்கிறார்.

அம்பு நேராகத் தோற்றமளிக்கின்றது. ஆயினும் அது கொடியதேயாகும். யாழின் கொம்பு வளைந்து தோன்றினும் அது நன்மையானதாகும். எனவே மக்களின் பண்புகளையும் செயல் வகையால் (கற்ற படிப்பால் அன்று) உணர்ந்து கொள்ள வேண்டும் என்னும் உயர்ந்த கோட்பாட்டினை,

"கணைகொடிது யாழ் கோடு செவ்விது ஆங் கன்ன
வினைபடு பாலால் கொளல்"[12]

என்ற குறள்வழி விளக்கியுள்ளார்.

நடத்தையில் மேப்பட்டவரையே சான்றோர் என மொழிவர். தாயும் தன் மகனைப் பிறர் சான்றோன் எனப் புகழ்ந்து மொழியும்பொழுதே 'ஈன்ற பொழுதிற் பெரிது வக்கும்' என்கிறார் வள்ளுவர். "மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனுஞ்சொல்" தானே!

'கற்றபின் நிற்பதில்' என்னும் கருத்திற்குப் பெரிதும் அரண் செய்வதாக விளங்கும் குறள் 'பேதைமை' அதிகாரத்தில் வருகின்றது:

"ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல்."[13]

---

11. திருக்குறள் : 132
12. திருக்குறள் : 279
13. திருக்குறள் : 834

நூல்களை ஓதியும் அவற்றின் பொருளை உணர்ந்தும் பிறர்க்கு எடுத்துச் சொல்லியும் தான் அவற்றின் நெறியில் அடங்கி ஒழுகாத பேதை போல் வேறு பேதையர் இல்லை என்று வள்ளுவர் பெருமான் கற்றவழியில் நிற்காதவரைப் பேதையர் என அழுத்தந் திருத்தமாகக் கண்டிக்கும் நிலையில் 'ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்' என்னும் பிசிராந்தையாரின் புறநானூற்றுத் தொடர் பளிச்சிடுகின்றது.

நல்ல நூல்கள் உணர்த்தும் நெறியில் நிற்பதே வாழ்க்கை எனல் அமையும், 'மற்றக் கலைகளின் தாயகம் வாழ்க்கைக் கலையே' என்பர் தமிழ்ப்பெரியார். வாழ்க்கைக் கலையை உலகிற்கு உதவிய பண்டைச் சான்றோர் மனு, அரிஸ்டாட்டல், சாக்ரடீஸ், மார்க் அரேலியஸ், திருவள்ளுவர் முதலான அறிஞர் பெருமக்கள் பலராவர். மனத்தின் முழுத்தூய்மையே அறம் என்னும் வள்ளுவரின் கருத்து 'மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்' என்னும் குறள் தொடரால் விளங்குகின்றது. அறத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்வு ஒருநாளும் சிதையாது.

திருக்குறள் படிப்பதற்கு மட்டும் அமைந்த வொரு நூல் மட்டுமன்று; உள்ளம் செம்மைப்பட்டு உயர்வடைய-ஒழுக்கத்தை-ஒழுகலாற்றினைப் பற்றுக்கோடாகக் கொண்டு வாழும் வாழ்க்கைக்கு வழித்துணையாக அமைந்த நூலுமாகும். அதனாற்றான் திருவள்ளுவர் கற்க வேண்டும், அதுவும் கசடறக் கற்க வேண்டும் என்றும், அவ்வாறு கற்றலினும் கற்றபின் நிற்பதே சாலச்சிறந்தது என்றும் தம் திருக்குறளிற் பலவிடங்களிற் பாங்குற மொழிந்திருப்பது உற்று உணரத்தக்கதாகும். கற்றபின் நிற்பதல் குறள்வழி நடப்போமாக!

# 13

# திருவள்ளுவர் தெளிவுறுத்தும் வாழ்க்கை

இலக்கியத்தினை வாழ்க்கையின் உரைகல் என்பர் அறிஞர். தமிழின் பழம்பெரும் இலக்கியங்களாகிய சங்க இலக்கியத்தில் ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த பழந்தமிழரின் பீடு நிறைந்த பெருவாழ்வினைக் காணலாம். வாழ்வின் செழுமை ஒருபுறமும், வறுமையின் வாட்டம் பிறிதொருபுறமும் விளங்கின என்பது சங்க இலக்கியங்கள் நமக்கு உணர்த்தும் செய்தியாகும். வரலாற்றின் தொடக்க காலத்திலேயே நல்ல நாகரிகத்தினைப் பெற்றிருந்த தமிழகப் பெருமக்களின் வாழ்வு, குறிக்கோளினைக் குறிக்கொண்டிருந்தது. சங்க காலப் பண்பாடு தமிழகத்தின் மாண்புயர்ந்த பண்பாடு எனப் போற்றிப் புகழப்படும் அளவுக்கு அமைந்திருந்தது.

> " புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்
> உலகுடன் பெறினும் கொள்ளலர்"[1]

என்பது புறநானூறு. எனவே பழியற்ற வாழ்வு வாழ்வதே அன்று ஆன்றோரால் பாராட்டப்பட்டது.

திருவள்ளுவர் தமிழ்நாடு செய்தவப் பயனாய்த் தோன்றிய சான்றோர்; அறவோர்; அறிஞர்; பண்பாட்டினர். எனவே அவர் இயற்றிய திருக்குறளில் ஒரு முழுமை நிறைந்த குறிக்கோள் வாழ்வினைக் காணலாம்.

---

1. புறநானூறு ; 182 : 5-6

வள்ளுவர் தெள்ளத் தெளிவாக வாழ்க்கையின் பண்பினையும் பயனையும் உணர்த்திய சான்றோர் ஆவர். எனவே தம் அறம்கூறு நாவால்,

> " அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
> பிறன்பழிப்பது இல்லாயின் நன்று" [2]

என்றார். அறம் எனப்பட்டதே என்பதிலுள்ள ஏகாரத்தை நோக்குக. அஃது தேற்றேகாரமாகும். அது தெளிவுப் பொருளில் வந்துள்ளது. இதிலிருந்து அறத்தின் நெறியிலிருந்து பிறழாமல் வாழ்வதே இல்வாழ்க்கை என்று திருவள்ளுவர் கருத்துக் கொண்டார் என நன்கு தெளியலாம். இத்தகைய இல்வாழ்க்கை பழியினின்றும் முற்ற நீங்கியதாக இருக்க வேண்டும் என்பதனையும், தமக்குக் கிடைத்த பழியின் நீங்கிய பொருளைப் பிறர்க்கும் பகிர்ந்து தந்து வாழ வேண்டும் என்பதனையும் திருவள்ளுவர் பெருமான் பின் வரும் குறளில் திறம்படக் கூறியுள்ளார்.

> " பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
> வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்." [3]

மேலும் அவர் இல்வாழ்க்கையில் அன்பும் அறனும் இணைந்து இயங்க வேண்டும் என்பதனைக் குறிப்பிட்டு, அவ்வாறு விளங்குவதே வாழ்க்கையின் பண்பும் பயனும் ஆகுமென்றும் விளக்கியுள்ளார். திருவள்ளுவர் அன்பிலும் அறத்திலும் கொண்டிருந்த நம்பிக்கை பெரிதாகும். உலக உயிர்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து தொடர்பு கொள்வதற்கு அன்பு, வாழ்க்கையின் அடித்தளமாக அடைய வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளார். அவ்வாறு இணைந்த உயிர்க்குலம் இன்பத்தோடும் அமைதியோடும் வாழ வேண்டுமானால், அவை மேற்

---

2. திருக்குறள் : 49
3. திருக்குறள் : 44

கொள்ள வேண்டிய நெறி அறத்தின் ஆருக விளங்குதல் வேண்டும் என்று கருதினர்' எனவே 'அன்புடைமை' என்ற அதிகாரத்தில் அருமையான உயிர்க்கு உடம்போடு பொருந்தியிருக்கும் உறவே அன்போடு பொருந்தி வாழும் வாழ்வின் பயன் என்று கூறுமுகத்தான்,

" அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு" [4]

என்று குறிப்பிட்டுள்ளார். அன்புடையதாகிப் பொருந்தி வாழும் வாழ்க்கையினை உடையவர் உலகத்தில் எஞ்ஞான்றும் இன்புற்று வாழும் சிறப்பினைக் கொண்டவராவர் என்ற கருத்துப்பட,

" அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்ருர் எய்துஞ் சிறப்பு" [5]

என்னும் குறளை யாத்துள்ளார். அன்பிலே அவர் கொண்டிருந்த அளவு கடந்த ஆர்வம் மேற்கூறப்பட்ட குறட்பாக்களால் குறைவற இலங்கக் காணலாம். இதனற்ருன் புறத்துறுப்புக்கள் சிறக்கப்பெற்ற ஒருவனை விட அகத்து உறுப்பாகிய அன்பு சிறந்த ஒருவனைப் பாராட்டுகின்ருர்.

" புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு." [6]

எலும்பில்லாத உடம்பினையுடைய புழு ஒன்றினை வெயில் வாட்டி வதைத்தல் போல, அன்பு இல்லாத உயிரை அறம் தவருது வருத்தும் என்றும் திருவள்ளுவர் எச்சரிக்கை விடுக்கின்ருர்.

---

4. திருக்குறள் : 73
5. திருக்குறள் : 75
6. திருக்குறள் : 79

" என்பி லதனை வெயில் போலக் காயுமே
அன்பி லதனை அறம்'' [7]

'அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர் நின்ற உடம்பு' என்று உறுதிப்பட மொழிந்து அன்பின் சிறப்பினை அறிவுறுத்துகின்றார் திருவள்ளுவர்.

" அன்பின் வழியது உயிர்நிலை.'' [8]

இத்தகு மாட்சிமைப்பட்ட அன்பும், ஆண்டவனின் கட்டளையாம் அறமும் உடைத்தாயிருந்தால் இல்லற வாழ்வு பண்போடும் பயனோடும் பொலிந்து 'தோன்றும் என்பதனை அன்போடு கூறும் வள்ளுவர் வாக்கு ஒள்ளிய தெள்ளிய கருத்துடைய வாக்கே அன்றோ?

வளமான வாழ்க்கைக்கு ஒரு வாழ்க்கைத் துணை வேண்டுமன்றோ? மனைவியின் மாண்பே இல்லற இன்பத்தினையும் அமைதியினையும் இயைவிப்பதாகும். மனைவி மாண்புடையவளானல் வாழ்க்கையில் இல்லாமைக்கு இடமில்லை. மனைவி குணக்கேடளாயின் அனைத்தும் இருந்தும் ஒன்றும் இல்லாமைக்கு நேராகும்;

" இல்லதென் இல்லவள் மாண்பானல் உள்ளதென்
இல்லவள் மாணக் கடை.'' [9]

எனவே நற்பண்பு வாய்க்கப்பெற்ற நங்கை நல்லாளே இல்வாழ்க்கை இனிமையுடன் இயங்கப்பெற முதன்மையுடையவள் ஆகின்றாள். அத்தகு நற்பண்பு குறைவறக் குடிகொண்டுள்ள—கொண்கன் குறிப்பறிந்து நடக்கும் குணம் நிறைந்த மனைவி ஒருவனுக்கு வாய்க்கவில்லையெனின் அவன் வாழ்க்கை பிற துறைகளில் எவ்வளவுதான்

---

7. திருக்குறள் : 77
8. திருக்குறள் : 80
9. திருக்குறள் : 53

சிறப்புற்று விளங்கினாலும் அதனால் யாதொரு பயனு மில்லை.

> " மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
> எனைமாட்சித் தாயினும் இல்." [10]

ஆதலால் மனைவி எனப்படுபவள் இல்வாழ்க்கைக்கு இயைந்த நற்பண்பு உடையவளாகவும். கணவனுடைய வருவாய்க்குத் தக வாழ்க்கை நடத்துபவளாகவும் முதற் கண் துலங்கவேண்டும். இத்தகு பண்புநலம் பரக்க வாய்க்கப் பெற்றவளே 'வாழ்க்கைத் துணை' என வாயார உவகையுடன் அழைப்பதற்குத் தகுதி உடையவளாவள்:

> " மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
> வளத்தக்காள் வாழ்க்கைத் துணை." [11]

நல்ல வாழ்க்கைத் துணைவிக்கு அடுத்து வேண்டுவது கற்பென்னும் திண்மையாகும். கற்பு நெறியில் தன்னையும் காத்துக்கொண்டு, தன்னைத் திருமணத்திற் கொண்ட கணவனையும் காப்பாற்றித் தகுதி சான்ற புகழையும் மங்காமல் காத்து உறுதி தளராமல் வாழ்கின்றவளே பெண் எனத் தக்கவளாவள் என்பது திருவள்ளுவர் உணர்த்தும் தெளிந்த கருத்தாகும்.

> " தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண் " [12]

இவ்வாறு நிறைந்த பண்புகளுடன் கணவனைப் போற்றிக் கடமையைச் செய்து வாழும் மகளிர் பெருஞ் சிறப்பிற்குரிய வீட்டுலக வாழ்வினைப் பெறுவர். எனவே

---

*10.* திருக்குறள் : 52
*11.* திருக்குறள் : 51
*12.* திருக்குறள் : 56

மாண்பு பொருந்திய மனைவியின் நற்பண்பே இல்வாழ்க்கை மங்கலமாக அமைகின்றது.

' மங்கலம் என்ப மனைமாட்சி "[13]

காதல் மனையாளும் காதலனும் கருத்தொன்றித் தீதில் கருமம் நிகழ்த்தி வாழும் வாழ்வே வடிவும் வனப்பும் கொண்டு துலங்கும் வாழ்க்கையாகும். அவ்விருவரும் பெறத்தக்க பேறுகளில் நன்மக்களைப் பெறுவதே பெரும் பேருகும்.

" பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற. "[14]

கணவனும் மனைவியும் நன்மக்களோடு அன்பில் அடித்தளம் அமைத்து, அறத்தின் நெறியில் ஒழுகிவரும் வாழ்வில் 'விருந்தோம்புதல்' எனும் விரும்புகின்ற பண்பு முதலிடம் பெறுகின்றது. வீட்டில் இருந்து பொருள்களைக் காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் வரும் விருந்தினரைப் போற்றி உதவி செய்தற்பொருட்டேயாகும் என்பர் திருவள்ளுவர்:

" இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. "[15]

இவ்வாறு விருந்தோம்பி நன்ருற்றி வாழும் பொழுது இனியவை கூறல் என்னும் இனிய பண்பும் இல்வாழ்வானிடம் இயையப் பெறுதல் வேண்டும். வணக்கம் உடையவனுகவும் இனிய சொல்லை வழங்குவோனுகவும் ஆதலே ஒருவனுக்கு அணிகலமாகும். மற்ற பிற அணிகள் அணிகளாகா.

---

13. திருக்குறள் : 60
14. திருக்குறள் : 61
15. திருக்குறள் : 81

**" பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு**
**அணியல்ல மற்றுப் பிற. "[16]**

பிறர்க்கு நன்மை பயப்பனவற்றை நாடி இனிமை தோய்ந்த சொற்களேயே சொல்லின், பாவங்கள் தேய்ந்து குறையும்; அறம் வளர்ந்து பெருகும்.

**" அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை**
**நாடி இனிய சொலின். "[17]**

இல்வாழ்வில் தலைப்பட்டு வாழ்கின்றவர்களுக்குப் பலருடைய துணையும் உதவியும் வேண்டற்பாலன. ஆதலின் குற்றமற்றவர்களுடைய உறவு வேண்டும். துன்பம் வந்த காலத்தில் துணையாக நின்று உதவியவர்களின் நட்பைக் கைநெகிழவிடாமல் போற்ற வேண்டும். அந்நட்பினை இனி வரும் பிறவிகளிலும் மறவாமல் போற்றுதலே பெரியோர் கடன் என்பர். எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்கும் வழி உண்டு. ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்து அழித்தவனுக்கு மட்டும் உய்வு இல்லை என்று உறுதியாகக் கூறுகின்றார் வள்ளுவர்:

**" எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு. "[18]**

நன்றியுணர்வோடு வாழும் வாழ்க்கையில் நடுவு நிலைமைக்குத் தனியிடம் தருதல் வேண்டும். நடுவு நிலைமை பிறழ்ந்து நடந்தால் ஆக்கம் வந்து இயையும் என்ற நிலை ஏற்பட்டாலும் அவ் ஆக்கத்தினை அப்பொழுதே கைவிட வேண்டும். நடுவுநிலைமையினின்றும் வழுவாது நின்று,

---

16. திருக்குறள் : 95
17. திருக்குறள் : 96
18. திருக்குறள் : 110

அறநெறியில் நிலைத்து வாழ்கின்றவன் அடைந்த வறுமை நிலையினைச் சான்றோர் உலகம் கேடு என்று கொள்ளாது.

> "கெடுவாக வையாது உலகம் நடுவாக
> நன்றிக்கண் தங்கியான் தாழ்வு."[19]

நன்றியுணர்வும் நடுவுநிலை நெஞ்சமும் மட்டும் நல்வாழ்விற்குப் போதுமா? உடன் அடக்கமும் வேண்டும். அடக்கம் ஒருவனை உயர்த்தித் தேவருள் சேர்க்கும்; அடங்காமை ஒருவன் வாழ்வில் பொல்லாத இருளைப் புகுத்திவிடும். எனவே அடக்கத்தை உறுதிப் பொருளாகக் காக்க வேண்டும். ஏனெனில் அந்த அடக்கத்தைவிட மேம்பட்ட ஆக்கம் உயிர்க்கு இல்லை.

> "காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
> அதனினூங் கில்லை உயிர்க்கு."[20]

அடக்கத்தோடு ஒழுக்கத்தினையும் ஒருவன் கொள்வானேயானால் பொன்மலர் நாற்ற முடைத்த தாகுமன்றோ? ஒழுக்கத்தால் எவரும் மேம்பாட்டை அடையலாம்; ஆயின் ஒழுக்கத்திலிருந்து தவறுதலால் அடையத்தகாத பெரும் பழியும் ஒருவர்க்கு வந்து சேரும் என்பதனையும் நன்கறிதல் வேண்டும்.

> "ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
> எய்துவர் எய்தாப் பழி."[21]

எனவே அத்தகு ஒழுக்கத்தினை உயிரைவிடச் சிறந்ததாகப் போற்ற வேண்டும். பிறருடைய மனைவியை விரும்பி நோக்காத பெரிய ஆண்மையினைச் சான்றோர் நிறைந்த ஒழுக்கமாகக் கருதுவர்.

---

19. திருக்குறள் : 117
20. திருக்குறள் : 122
21. திருக்குறள் : 137

**" பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு. "[22]**

'ஒருவர் பொறை இருவர் நட்பு' என்று கூறுகிறது நாலடியார். ஒருவன் நிறை மனிதனாக விளங்க வேண்டுமானால் பொறுமையைப் போற்றி ஒழுக வேண்டும். பொறுமைப் பண்பே இல்வாழ்க்கையின் மகிழ்ச்சிக்கும் அமைதிக்கும் உறுதுணையாக அமைவதாகும், எனவே தகுதியில்லாத செயல்களைப் பிறர் தனக்குச் செய்த காலையிலும், அதனால் வரும் துன்பத்திற்காக வருந்தி, அறமல்லாத செயல்களை அவர்பால் செய்யாதிருத்தல் நல்லதாகும் என்று தெளிவுறுத்துகின்றார் திருவள்ளுவர்.

**" திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று. "[23]**

பொறுமைப் பண்பைக் கொள்ளும் மனம் பொறாமைப் பண்பினை விலக்க வேண்டும். பொறாமை செல்வத்தைக் கெடுத்து ஒருவனைத் தீய வழியில் செலுத்தும் திறனுடையதாகும். பிறர் பொருளை விரும்பாமலும், பிறரைப் புறங் கூறாமலும், பயனற்ற சொற்களைப் பாராட்டாமலும் ஒருவன் வாழ்தல் வேண்டும். ஒப்புரவு எண்ணமும், இல்லை என வந்தவர்க்கு இல்லை என்று கூறாமல் ஒன்று ஈகின்ற பணிவும் கொண்டு ஒருவர் புகழ் வாழ்வு வாழ்தல் வேண்டும். 'தோன்றின் புகழொடு தோன்றுக'[24] என்பது வள்ளுவர் வாக்காகும்.

துறவு வாழ்க்கையோடு மட்டுந்தான் அருள் தொடர்புடையது என்றில்லை; இல்வாழ்விற்கும் இயைபுடையதே அருளாகும். பொருள் இல்லாதவரும்

---

22. திருக்குறள் : 148
23. திருக்குறள் : 157
24. திருக்குறள் : 236

ஒருகாலத்தில் வளம் பெற்று வாழலாம்; ஆனால் அருள் இல்லாதவர் வாழ்க்கையின் பயன் அற்றவரே யாவர். அவர் ஒரு காலத்திலும் சிறந்து விளங்குதல் என்பது இல்லை.

"பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்
அற்றார்மற் றாதல் அரிது." [25]

புலால் மறுத்தல், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை முதலிய அதிகாரங்களில் திருவள்ளுவர் பெருமான் வாழ்க்கையின் தெளிவான வடிவத்தினை வகையுற வடித்துக் காட்டுகின்றார். இம்முறையில் 'அறத்தான் வருவதே இன்பம்' என்று, 'மனத்துக்கண் மாசிலன்' ஆகி ஒருவர் வாழ்ந்தால் அவர் வாழ்வு சான்றோர் பாராட்டும் செம்மையும் சீர்த்தியும் உடையதாகும்; 'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை' [26] என்ற உயரிய கொள்கைக்கு உறுதி நலம் சேர்ப்பதாகும். இத்தகைய உயர்ந்த — தெளிந்த — உண்மையான வாழ்வினையே திருவள்ளுவர் பெருமான் தம் அறத்துப்பாலில் வலியுறுத்திக் கூறியுள்ளார். அவ் அறவோர் உணர்த்தும் வாழ்க்கைத் தெளிவின் வழியே நம் வாழ்வு அமைந்து சிறப்பதாக!

---

25. திருக்குறள் : 248

26. திருக்குறள் : 49

# 14

# சிலப்பதிகாரத்தில் வரும் போர்க்களங்கள்

''நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்' தமிழில் எழுந்த முதற் பெருங்காப்பியமாகும். காவிரி கடலொடு கலக்கும் புகார் நகரில் வணிகக் குடியில் செல்வ மகளாகப் பிறந்த கண்ணகி, இறுதியில் மண்ணவரும் விண்ணவரும் போற்றும் தெய்வநிலைக்கு உயர்ந்த வரலாற்றினை வண்ணமுற வடித்துக் காட்டுவதே சிலப்பதிகாரத்தின் செய்தியாகும். கற்புக் கடவுளாம் கண்ணகியின் வரலாற்றினைப் பரக்கக் கூறும் சிலப்பதிகாரம் முடியுடை மன்னர் மூவரின் செய்திகளையும், சிறப்பாகச் சேரன் செங்குட்டுவனின் இணையற்ற வீரத் தினையும் சிறக்க மொழிகின்றது. பல்வேறு சுவைகள் பாங்குறக் கலந்துவந்து சிலப்பதிகாரம் ஓர் உயரிய காப்பியம் என்னும் உண்மைக்குச் சான்றாக இலங்கு கின்றது. காதலின் இனிய செவ்வியும் ஆண்டு உண்டு; வீரத்தின் விம்மிதமும் ஆங்கு உண்டு; இன்பத்தின் சிறப்பும் பேசப்படுகின்றது; அதே நேரத்தில் அவலத்தின் ஆழமும் நன்கு புலனாகின்றது.

வஞ்சிக் காண்டம் சிலப்பதிகாரத்தின் இறுதிக் காண்டமாகும். வஞ்சிக் காண்டத்திலேயே கண்ணகி தெய்வநிலைக்கு உயர்ந்து, பூசையும் விழாவும் பெற்ற பான்மை பேசப்படுகின்றது. ஊடே பத்தினிக்கடவுளுருக் குரிய படிமம் சமைக்கக் கல்வேண்டி வடபுலம் சென்ற

காவா நாவிற் கனகவிசயரை வென்று திரும்பிய வீர வரலாறும் விளங்கப் பேசப்படுகின்றது. சுருங்கச் சொல்லப் புகின் தமிழர்தம் அடிப்படைப் பண்புகளான காதலும் வீரமும் சிலப்பதிகாரத்தில் சுவை மல்கச் சொல்லப்படு கின்றன.

வாடா வஞ்சியாம் கலிகெழு வஞ்சி மாநகரில் இலவந்திகை வெள்ளிமாடம் என்னும் மாளிகையில் தன் கோப்பெருந்தேவி இளங்கோ வேண்மாளுடன் சேரன் செங்குட்டுவன் வசித்துவந்த காலையில், ஒருநாள் மலைவளம் காண விரும்பிப் பல்வகை மரங்களாலும் அழகு மிக்க மலையை ஊடறுத்துக் கொண்டு இழியும் பேரியாற்றங்கரை யின் மணல் மிக்க எக்கரிலே தன் பரிவாரங்களுடன் தங்கினான். அதுபோது குன்றக் குறவர்கள் மலைபடு பொருள்கள் பலவற்றைத் திறைப்பொருளாகத் தந்து 'ஏழ்பிறப் படியேம் வாழ்கநின் கொற்றம்' என்று வழிபாடேத்தி நின்றனர். பின்னர், கண்ணகி அவர் தம் கண்கள் காண விண்ணுலகு சென்று செய்தியை விளம்பினர் மன்னவன் மருங்கிருந்த தண்டமிழாசன் சாத்தன் நடந்தன அனைத்தும் நவையற மொழிந்தனர். கண்ணகி வரலாற்றை விளங்கக் கேட்ட வேந்தர் பெருந்தகை அருகிருந்த தன் அருமைத் துணைவியை விளித்து,

> "உயிருடன் சென்ற ஒருமகள் தன்னினும்
> செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினும்
> நன்னுதல் வியக்கும் நலத்தோர் யாரெனக்"[1]

கேட்டான். அதற்கு விடையாக இளங்கோ வேண்மாள், 'காதலன் துன்பம் காணாது கழிந்த பாண்டியன் பெருந் தேவி விண்ணாட்டில் பெருந்திரு வுறக்கடவள்; அது நிற்க; நம் உள்நாட்டை யடைந்த பத்தினிக் கடவுளை

1. சிலப்பதிகாரம் : காட்சிக்காதை : 107-109

நாம் வழிபடுதல் இன்றியமையாதது' என்று கூறினுள். அதுகேட்ட மன்னன் பத்தினிக் கடவுளுக்குரிய படிமம் சமைத்தற்குரிய கல்லை இமயத்தினின்றும் கொணர்ந்து, கங்கையாற்றில் தூய்மைப் படுத்துதல் மிகவும் பொருந்திய செயல் என்ற முடிவுகட்டினுன். இமவான் அவன் விருப்பத்திற் கிணங்காவிடின் வஞ்சியினின்றும் வஞ்சி மாலை சூடித் தானையுடன் சென்று புறத்துறைக் கமைந்த வீரச் செயல்கள் பலவற்றையும் ஆங்கு அவற்குக் காண்பிப்பேன் என்று வீரமொழி விளம்பினுன். இதுகேட்ட தானைத் தலைவனும் வில்வவன் கோதை சேரனின் வீரத்தினை விளங்க எடுத்துரைத்தான்.

"வேந்தர் வேந்தே! நம்மையொத்த வேந்தரான சோழ பாண்டியர் தம்மொடு இகல்கொண்டு கொங்கர் செங்களத்தே தம் புலிக்கொடியையும் மீனக் கொடியையும், போர்க்களத்தே புறம்விட்டு ஓடினராயினும், அச் செய்தி திக்கயங்களின் செவிக்கு எட்டி எங்கும் பரவிற்று. கொங்கணர், கலிங்கர், கருநாடர், பங்களர், கங்கர், கட்டியர், வடவாரியர் இவர் களுடன் தமது தமிழ்ச் சேனை கலந்து பொருத செருக் களத்தில் தாம் யானையை விட்டுப் பகைவரை யழித்த அரிய வீரச் செயல் இன்னும் எங்கள் கண்களைவிட்டு நீங்கவில்லை. அன்றியும், எங் கோமகளாய் விளங்கிய தம் தாயைக் கங்கையாற்றில் நீராட்டிவந்த அக்காலத்தே, எதிர்த்துவந்த ஆரியவரசர் ஆயிரவரைத் தாம் ஒருவராகவே நின்றுபொருத போர்க் கோலத்தைக் கடுங்கட் கூற்றமும் கண்விழித்து வியந்து கண்டதன்றே? நீவிர் நீர் சூழ்ந்த இவ் நிலவுலகத்தை வென்று தமிழ் நாடாக்க வேண்டி வடநாட்டுச் செலவு மேற்கொள்ளத் துணியின் ஆங்கு நும்மை எதிர்ப்பவர் எவருமே இல்லை என்பது உறுதி" என்று செங்குட்டுவன்

முன்னாளில் ஆற்றிய வீரப்போரின் சிறப்பினை விம்மிதத்துடன் மொழிந்தான்,

" நும்போல் வேந்தர் நும்மோ டிகலிக்
கொங்கர்செங் களத்துக் கொடிவரிக் கயற்கொடி
பகைப்புறத்துத் தந்தன ராயினும் ஆங்கவை
திசைமுக வேழத்தின் செவியகம் புக்கன
கொங்கணர் கலிங்கர் கொடுங்கரு நாடர்
பங்களர் கங்கர் பல்வேற் கட்டியர்
வடவா ரியரொடு வண்டமிழ் மயக்கத்துன்
கழறலை வேட்டமென் கட்புலம் பிரியாது
கங்கைப் பேரியாற்றுக் கடும்புனல் நீத்தம்
எங்கோ மகளை யாட்டிய அந்நாள்
ஆரிய மன்னர் ஈரைஞ் நூற்றுவர்க்
கொருநீ யாகிய செருவெங் கோலம்
கண்விழித்துக் கண்டது கடுங்கட் கூற்றம்."[2]

இப்பகுதி கொண்டு செங்குட்டுவன் மேற்கொண்ட முதலாவது வடபுலப் போரினை அறியலாம்,

இனி, இளங்கோவடிகள் விளங்க வருணிக்கும் இரண்டாவது வடபுல எழுச்சி அல்லது குயிலாலுவம் என்னுமிடத்தில் ஆரிய அரசர்களோடு செங்குட்டுவன் நிகழ்த்திய வீரப்போரினைக் காண்போம்.

வஞ்சி மாநகரில் ஆசான் பெருங்கணி அமைச்சருடன் தானைத்தலைவர் தம்மொடுங் கூடிச் சேரன் செங்குட்டுவன் வீற்றிருந்தபோது தன் சேனைத்தலைவரை நோக்கிப் பின் வருமாறு கூறுவானாயினன்:

"ஆரிய மன்னர் பலரும் தம் நாட்டில் நிகழ்ந்த சுயம்வர மொன்றன் பொருட்டுக்குழுமி மகிழ்ந்திருந்த விடத்தே, 'தென்றமிழ் நாடாளும் வேந்தர் செருவேட்டுப் புகன்றெழுந்து மின்தவழும் இமயவெற்பில் விளங்குவிற்

2. சிலப்பதிகாரம் : காட்சிக்காதை : 152-164

புலி கயல் பொறித்த நாள், எப்போலும் முடிமன்னர் ஈங்கில்லை போலும்' என்று நகையாடி இகழ்ந்தனர் என்று இமையத் தாபதரால் அறிந்தேன். அவ்வசை மொழி எம் போன்ற சோழ பாண்டிய வேந்தர்க்கு இகழ்ச்சியைத் தருவ தாகும். ஆதலின், அங்ஙனம் இகழ்ந்த வடவாரிய மன்னர் தம் முடித்தலையில் பத்தினிக்கடவுளைச் சமைத்தற்குரிய கல்லை ஏற்றிக்கொண்டு வருவேன்; அங்ஙனம் செய்யாது என் வீரவாள் வறிதே மீளுமாயின். என்னோடும் மாறு பட்ட பகையரசை நடுங்கச்செய்து அடக்காமல், வளஞ் சான்ற என் நாட்டுக்குடிகளை வருத்தும் கொடுங்கோலனாகக் கடவேன்'' என்று தன் அத்தாணி மண்டபத்தே சினத் துடன் வஞ்சினம் கூறினான்.

அது கேட்ட ஆசான், அவன் தன் கோபம் தணிவதாக என்று கூறியவளவில், கணியெழுந்து வடதிசைப் பெயர்ச் சிக்கு உரிய நன்முகூர்த்தநேரம் அதுவே என எடுத்துரைத் தான். நிமித்திகன் கூறியதற்கு உடன்பட்ட செங்குட்டுவன், தன் வாளையும் குடையையும் அந்த நன்முகூர்த்தத்தில் வட திசைப் பெயர்த்து நாட்கொள்ளும்படி ஆணையிட்டான். அன்றிரவு போர் விருப்புற்றுத் தன்னுடன் வருதற்கிருக்கும் தானைகளுக்கும், தானைத் தலைவர்களுக்கும் பெருஞ் சோறளித்து உபசரித்து, உற்சாகப்படுத்தினான். மறுநாட் காலையில் முரசு முழங்கவும், சிவனருளை வேண்டி வலங் கொண்டு, திருமாலின் பிரசாதத்தினை வாங்கித் தன் மணிப் புயத்தேந்தியவனாய், நாடக மடந்தையர் துதிக்க, சூதரும் மாகதரும் வைதாளிகரும் மன்னனின் வெற்றிப் புகழைப் பாடி உடன் சென்றனர். யானை வீரரும் குதிரை வீரரும் வாட்படை மறவரும் வேந்தன் வாள்வலியை ஏந்தி ஆர்ப் பரித்தனர். கடலோரமாகச் சென்று, மலைமுதுகு நெளிய

நடந்து நீலகிரி மலையில் பாடிவீடு அமைத்துத் தன் பரிவாரங்களுடன் தங்கினான்.

சஞ்சயன் முதலாத் தலைக்கீடு பெற்ற கஞ்சுக முதல்வர் ஆயிரவர், நூற்றுவர் கன்னர் சார்பில் நாடக மகளிர் நூற்றிருவரும், குயிலுவர் இருநூற்றெண்மரும், தொண்ணூற்றறுவகைப் பாசண்டத் துறைகளிலும் வல்லவரும் நகைவிளைத்து மகிழச் செய்பவருமான வேழம்பர் நூற்றுவரும், நூறு கொடுஞ்சி நெடுந்தேர்களும், ஐந்நூறு களிறுகளும், பதினாயிரம் குதிரைகளும், இன்ன இன்ன சரக்கென்று எழுதப்பெற்று வடபுலச் செலவுக்கு வேண்டிய வடநாட்டுப் பண்டங்கள் ஏற்றப்பட்ட சகடங்கள் இருபதினாயிரமும் செங்குட்டுவனுக்குப் பரிசுப் பொருளாகக் கொண்டுவந்து நின்றனர். மேலும், 'இமயத்தினின்றும் கல் கொணர்ந்து கங்கையாற்றில் நீர்ப்படை செய்து தரவல்லோம்' என்று தம் மன்னர் சார்பில் தெரிவித்தனர். ஆயினும் செங்குட்டுவன், தமிழரசரை இகழ்ந்த காவா நாவிற் கனக விசயரை வெல்லவும் படை செல்வதால் கங்கையாற்றைக் கடத்தற்கு ஆவன காணுமாறு குறிப்பிட்டனன் :

"பாலகுமரன் மக்கள் மற்றவர்
காவா நாவிற் கனகனும் விசயனும்
விருந்தின் மன்னர் தம்மொடுங் கூடி
அருந்தமிழ் ஆற்றல் அறிந்தில ராங்கெனச்
கூற்றங் கொண்டிச் சேனை செல்வது
நூற்றுவர் கன்னர்க்குச் சாற்றி யாங்குக்
கங்கைப் பேர்யாறு கடத்தற் காவன
வங்கப் பெருநிரை செய்க தாமென."[3]

நூற்றுவர் கன்னர் உதவியுடன் கங்கைப் பேரியாற்றைக் கடந்து அதன் வடகரையை யடைந்த

---

3. சிலப்பதிகாரம் : கால்கோட் காதை : 158-165.

செங்குட்டுவனை அந்நாடாளும் நட்பரசரான நூற்றுவர் கன்னர் எதிர்கொண்டு உபசரித்தனர். செங்குட்டுவன் அங்கிருந்தும் சென்று நீர்வளஞ்சான்ற உத்தர தேசத்தை அடைந்து பாசறையில் தங்கினன். தம் நாட்டில் பகையரசனும் செங்குட்டுவன் படைவீடு கொண்டுள்ளான் என்ற செய்தியைக் கேள்வியுற்ற உத்தரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்திரன், சிவேதன் என்ற அனைத்து வடபுல வேந்தர்களையும் துணைக்கொண்ட கனகவிசயரென்ற ஆரியவரசர் 'தென்றமிழ் ஆற்றல் காண்குவம் யாமென'ப் போர்க்கெழுந்து வந்தனர். வடவாரியர் சேனையைக் கண்ட செங்குட்டுவன் இரைவேட்டெழுந்த அரிமா, யானைப் பெருநிரையைக் கண்டாற்போன்று மனஞ்செருக்கி ஆரவாரித்து அப்படையுடன் போரிடுவானாயினன்.

வடவாரிய வேந்தரும் செங்குட்டுவனும் பொரா நின்ற அப்பெரும்போரிலே துகிற் கொடிகளின் பந்தற்களாற் பல்லவனின் ஒளிக்கதிர்கள் மறைப்புண்டன. கொடும்பறைகளும் நீண்ட கொம்புகளும் சங்கங்களும் பேரிசைகளும் கஞ்ச தாளங்களும், மயிர்க்கண் முரசங்களும் எதிரொலி எழுப்பி யொலித்தன. வில்லையும் வேலையும் கேடயத்தையும் கொண்ட மறவர்களும், யானை குதிரை தேர்வீரர்களும் கலந்தெதிர்த்த அப்போர்க்களத்தில் பூமி தெரியாமலெழுந்த புழுதியானது யானைக் கழுத்திற் கட்டப்பட்ட மணிகளின் நாக்குகளிலும் கொடிகளிற் கட்டிய சங்குகளின் நாக்குகளிலும் புகுந்து அவற்றை ஒலிக்காவண்ணம் செய்துவிட்டன. தூசிப் படைகள் ஒன்றோடொன்று மோதின. அப்போரிலே தோளுந் தலையுந் துமிந்து வேறுபட்டவரது உடற்கும்பலில் துள்ளியெழுந்தாடிய குறையுடலங்கள் பேரியினது தாளத்துக் கொப்பக் கூத்தாடின. பிணக் குவிய

வினின்றும் வழிந்தோடிய ஊன் கலந்த குருதியிலே பெய்மகளிரின் நாக்குகளெல்லாம் ஆடலாயின. பகைவரைக் கொன்று குவித்து நூழிலாட்டிய சேரன் செங்குட்டுவன் கூற்றுண்ணும் இயமனாக அதுபோது விளங்கினான்.

"வெயிற்கதிர் விழுங்கிய துகிற்கொடிப் பந்தர்
வடித்தோற் கொடும்பறை வால்வளை நெடுவயிர்
இடிக்குரல் முரசம் இழுமென் பாண்டில்
உயிர்ப்புலி யுண்ணும் உருமுக்குரல் முழக்கத்து
மயிர்க்கண் முரசமொடு மாதிர மதிரச்
சிலைத்தோ ளாடவர் செருவேற் றடக்கையர்
கறைத்தோன் மறவர் கடுந்தேர் ஊருநர்
வெண்கோட் டியானையர் விரைபரிக் குதிரையர்
மண்கண் கெடுத்தவிம் மாநிலப் பெருந்துகள்
களம்கொள் யானைக் கவிழ்மணி நாவும்
விளங்குகொடி நந்தின் வீங்கிசை நாவும்
நடுங்குதொழில் ஒழிந்தாங் கொடுங்கியுள் செறிய
...........................................
எருமை கடும்பரி ஊர்வோன் உயிர்த்தொகை
ஒருபகல் எல்லையின் உண்ணு மென்பது
ஆரிய வரசர் அமர்க்களத் தறிய
நூழி லாட்டிய சூழ்கழல் வேந்தன்.' [4]

மற்றப் பகைவர்கள் தத்தம் படைக்கலன்களை எறிந்துவிட்டுச் சடை, காவி உடை, சாம்பல் இவற்றைத் தரித்த துறவிகளாகவும், பீலிகைக் கொண்ட சமண முனிவராகவும், பாடகராகவும், பற்பல இசைக் கருவிகளை இயக்குநராகவும், ஆடுவோராகவும் தாந்தாம் வல்ல துறைக்கேற்ற வேடம் பூண்டு மறைவிடங்களிலே பதுங்கி யொளிந்தனர்.

---

4. சிலப்பதிகாரம் : கால்கோட் காதை : 192-218.

"சடையினர் உடையினர் சாம்பற் பூச்சினர்
பீடிகைப் பீலிப் பெருநோன் பாளர்
பாடு பாணியர் பல்லியத் தோளினர்
ஆடு கூத்தர் ஆகி எங்கணும்
ஏந்துவாள் ஒழியத் தாந்துறை போகிய
விச்சைக் கோலத்து வேண்டுவயிற் படர்தர."[5]

இவ்வாறு வடபுல வேந்தர்கள் நடுநடுங்கும் வண்ணம், களிறுகளை எருதாகவும், வாளே பிடிக்கும் கோலாகவும், பகைவீரர்களே சூட்டடிக் கதிர்களாகவுங் கொண்டு, வாளையுடைய தான் உழவனாக நின்று அப் போரிலே அதரி திரித்துக் கலக்கினான், செங்குட்டுவன். இத்தகைய அரசனது மறக்கள வெற்றியினைப் புகழ்ந்து, பேய்களெல்லாம் நெடிய கைகளைக் கரிய தம் தலைமிசை யுயர்த்தி அசைத்தனவாய், திருமால் பாற்கடல் கடைந்த போது நிகழ்த்திய தேவாசுர யுத்தத்தையும், அவன் இலங்கையில் இராமனாக நடத்திய போரையும் கண்ணனாக நின்று தேரூர்ந்து நிகழ்த்திய பாரதச் செரு வையும் இதனோடு ஒருசேர வைத்துப் பாடி வாழ்த்திக் குரவைக் கூத்தாடின.

"கச்சை யானைக் காவலர் நடுங்கக்
கோட்டுமாப் பூட்டி வாட்கோ லாக
ஆளழி வாங்கி அதரி திரித்த
வாளே ருழவன் மறக்களம் வாழ்த்தித்
தொடியுடை நெடுங்கை தூங்கத் தூக்கி
முடியுடைக் கருந்தலை முந்துற ஏந்திக்
கடல்வயிறு கலக்கிய ஞாட்பும் கடலகழ்
இலங்கையி லெழுந்த சமரமும் கடல்வணன்
தேரூர் செருவும் பாடிப் பேரிசை
முன்றேர்க் குரவை முதல்வனை வாழ்த்தி."[6]

5. சிலப்பதிகாரம் : கால்கோட் காதை : 225-230
6. சிலப்பதிகாரம் : கால்கோட் காதை : 231-240

மேலும், அப் பேய்கள் போர்க்களத்தே பகை வேந்தரது தலைகளையே அடுப்பாகவும், பிடரித்தலைகளையே தாழியாகவும், வலயமணிந்த தோள்களையே துடுப்பாகவுங் கொண்டு துழாவிச் சமைத்த ஊன் சோற்றைப் பேய்மடையன் அவ்வப் பேயின் தகுதியறிந்து பரிமாற, வயிறார உண்டு களித்துத் தருமப் போரினால் தமக்கு இத்தகைய பெருவிருந்து வாய்க்கச் செய்த செங்குட்டுவன் 'ஊழியளவும் வாழ்க' என்று வாயார வாழ்த்தின:

"பின்றேர்க் குரவைப் பேயாடு பறந்தலை
முடித்தலை யடுப்பிற் பிடர்த்தலைத் தாழித்
தொடித்தோட் டுடுப்பிற் றுழைஇய ஊன்சோறு
மறப்பேய் வாலுவன் வயினறிந் தூட்டச்
சிறப்பூண் கடியினம் செங்கோற் கொற்றத்து
அறக்களஞ் செய்தோன் ஊழி வாழ்கென."[7]

இதன் பின்னர், செங்குட்டுவன் தன் தானைத் தலைவன் வில்லவன் கோதையை ஏவி, பத்தினிக் கடவுள் படிமம் சமைத்தற்குரிய கல்லை இமயமலையினின்று கொணரச் செய்து, தான் மேற்கொண்ட வினையினை நலமுற முடித்துக் கொண்டான்.

கூற்றுவன் தொழில் பெருக உயிர்த் தொகைகள் பலவற்றைக் கொன்று குவித்த தேவாசுரப் போர் பதினெட்டு ஆண்டிலும், இராம ராவணப் போர் பதினெட்டு மாதத்தும், பாரதப் போர் பதினெட்டு நாளிலும், செங்குட்டுவன் கனக விசயரோடு நடத்திய போர் பதினெட்டு நாழிகைகளிலும் நடந்து முடிந்தன வென்று உலகோர் செங்குட்டுவனின் வடபுலப் போரையும் கூட்டி எண்ணிக் கொள்ளும்படி தமிழரது

---

7. சிலப்பதிகாரம் : கால்கோட் காதை : 421-246

ஆற்றல் அறியாது தன்னுடன் மலைந்த ஆரியப் படைகளை ஒரு பகற்போதுக்குள் அழித்து வெற்றிவாகை சூடினன் செங்குட்டுவன்.

" செறிகழல் வேந்தன் தென்றமி ழாற்றல்
அறியாது மலைந்த ஆரிய மன்னரைச்
செயிர்த்தொழில் முதியோன் செய்தொழில் பெருக
உயிர்த் தொகை யுண்ட ஒன்பதிற் றிரட்டியென்
றியாண்டு மதியும் நாளுங் கடிகையும்
ஈண்டுநீர் ஞாலங் கூட்டி எண்கொள
வருபெருந் தானை மறக்கள மருங்கின்
ஒருபகல் எல்லை உயிர்த்தொகை யுண்ட
செங்குட் டுவன்......... "[8]

பின்னர்க் கனகவிசயர் முடித்தலையில் கல்லை ஏற்றி வரச் செய்து, கங்கைப் பேராற்றில் நீராட்டித் தூய்மை செய்து, கங்கையைக் கடந்து, நூற்றுவர் கன்னர் அமைத்துத் தந்த அழகிய பாடிவீட்டில் தங்கினன். வடபுலத்து நடந்த போரில் வீரம் மிக்க வினைகள் ஆற்றிய பலருக்கும் பொன்னாலாகிய வாகைப் பூக்களைத் தான் பிறந்த நாளிற் செய்யும் பெருங் கொடையினும் மிகுதியாக நெடும் போதிருந்து வழங்கி மகிழ்ந்தான்.

இவ் வமயத்தில் மாடல மறையோன் ஆண்டு தோன்றி அரசனை வாழ்த்தி,

" ......................மாதவி மடந்தை
கானற் பாணி கனக விசயர்தம்
முடித்தலை நெரித்தது "[9]

என்று கூறினன். பின்னர்ப் புகாரிலும் மதுரையிலும் நடந்த நிகழ்ச்சிகளை விளங்க எடுத்துரைத்தான். மேலும்

---

8. சிலப்பதிகாரம் : நீர்ப்படைக்காதை : 5-13
9. சிலப்பதிகாரம் : நீர்ப்படைக்காதை : 49-52

யசங்குட்டுவன் இதற்கு முன்னர் ஆற்றி வாகை சூடிய போர்களைப்பற்றியும் சிறப்பித்துப் பேசினான்.

சேரன் செங்குட்டுவன் இளைஞனா யிருந்தபோது ஆற்றிய கடம்பர்ப்போர் பதிற்றுப்பத்திலும் அகநானூற்றிலும் விரிவாகப் பேசப்பெற்றாலும் சிலப்பதிகாரத்தில்

**" கொடும்போர் கடந்து நெடுங்கட லோட்டி''[10]**

என்றும் சுட்டப்படுகின்றது.

சோழர் பாண்டியர் உதவியுடன் கொங்கர்கள் செங்குட்டுவனோடு பொருத போரில் செங்குட்டுவன் வெற்றி கொண்ட செயல்

**" நும்போல் வேந்தர் நும்மோடு இகலிக்**
**கொங்கர் செங்களத்துக் கொடுவரிக் கயற்கொடி**
**பகைப்புறத்துத் தந்தன ராயினும் ஆங்கவை**
**திசைமுக வேழத்தின் செவியகம் புக்கன''[11]**

என வரூஉம் வில்லவன் கோதையின் கூற்றால் விளங்குகின்றது.

செங்குட்டுவன் கொண்ட பிற களங்களாகச் சிலம்பு இசைக்கும் போர்க்களங்கள் இடும்பில், வியலூர், கொடுகூர் முதலியனவாகும்.

**" கொடுந்தேர்த் தானையொடு இடும்பில் புறத்திறுத்து''[12]**

என்று சிலம்பு குறிப்பிடும் இடும்பில் போரினைப் பதிற்றுப் பத்துப் பதிகம்,

**" மாறா வல்வில் இடும்பில் புறத்திறுத்து''[13]**

என்று குறிப்பிடுகின்றது. வியலூர் வெற்றி,

---

10. சிலப்பதிகாரம் : நீர்ப்படைக் காதை : 28 : 119
11. சிலப்பதிகாரம் : 28 : 152-155
12. சிலப்பதிகாரம் : 25 : 118
13. பதிற்றுப்பத்து : பதிகம் : 9

கறிவளர் சிலம்பில் துஞ்சும் யானையின்
சிறுகுரல் நெய்தல் வியலூர் எறிந்தபின்"[14]

என்ற அடிகளில் சுட்டப்படுகின்றது. பதிற்றுப்பத்துப் பதிகம் இதனை,

" உறுபுலி யன்ன வயவர் வீழச்
சிறுகுரல் நெய்தல் வியலூர் நூறி"[15]

என்று குறிப்பிடுகின்றது. கொடுகூர்ப்போர் அடுத்து உடன் நிகழ்ந்ததாகும்.

தன் மைத்துனன் கிள்ளிவளவனை எதிர்த்த சோழர் குடி இளவல்கள் ஒன்பதின்மரையும் ஒரு பகலில் வென்று கிள்ளிவளவனுக்குச் சோழர் மணிமகுடத்தினைப் புனைந் தான்:

"ஆர்புனை தெரியல் ஒன்பது மன்னரை
நேரி வாயில் நிலைச்செரு வென்று"[16]

என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. பதிற்றுப்பத்துப் பதிகமும்,

" வெந்திறல்
ஆராச் செருவில் சோழர்குடிக் குரியோர்
ஒன்பதின்மர் வீழ வாயிற்புறத் திறுத்து
நிலைச்செருவின் ஆற்றலை அறுத்து"[17]

என்று செங்குட்டுவனின் நேரிவாயிற் போரினைக் குறிப் பிடுகின்றது. மாடலன் கூற்றாகவும் இவ் வெற்றி பின் வருமாறு பேசப்பட்டுள்ளது:

" நின், மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர்

---

14. சிலப்பதிகாரம் : 28 : 114-115
15. பதிற்றுப்பத்து : 10 : 11
16. சிலப்பதிகாரரம் : 28 : 116-112
17. பதிற்றுப்பத்து : V பதிகம் : 18-20

இளவரசு பொருஅர் ஏவல் கேளார்
வளநா டழிக்கும் மாண்பின ராதலின்
ஒன்பது குடையும் ஒருபகல் ஒழித்தவன்
பொன்புனை திகிரி ஒருவழிப் படுத்தோய்.''[18]

செங்குட்டுவனின் வீரத்தினை விளங்கப் பேசும் பதிற்றுப்பத்தில் செங்குட்டுவனின் வடபுல வெற்றி பேசப்படவில்லையே என்பர் சிலர். பரணர் ஐந்தாம் பத்துப் பாடியபின் இவ்வடநாட்டுப் படையெடுப்பு நிகழ்ந்திருக்க லாம் என ஓரளவு அமைதி கூறினும், இக் குயிலாலுவப் போர் பொதுப்படையாகச் சுட்டப்பட்டிருப்பதை அந் நூலிற் காணலாம்:

''கடவுள் நிலைஇய கல்லோங்கு நெடுவரை
வடதிசை எல்லை இமய மாகத்
முரசுடைப் பெருஞ்சமம் ததைய ஆர்ப்பெழச்
தென்னங் குமரியொடு ஆயிடை அரசர்
சொல்பல நாட்டைத் தொல்கவி னழித்த
போரடு தானைப் பொலந்தார்க் குட்டுவ.''[19]

மேலும் அகநானூற்றில் பரணர்,

'' ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசைத்
தொன்றுமுதிர் வடவரை வணங்குவிற் பொறித்து
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்
வஞ்சி''[20]

என்று இச்செயலைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுகாறும் கூறியவற்றால் சேரன் செங்குட்டுவன் போர்க்களங்கள் பலவற்றைக் கண்டு வெற்றி வாகை சூடித் தமிழர் வீரங்காட்டி விளங்க நின்றவன் என்பது நன்கு புலனாகும்.

---

18. சிலப்பதிகாரம் : நீர்ப்படைக் காதை : 118-123
19. பதிற்றுப்பத்து : V 3 : 6-11
20. அகநானூறு : 396 : 16-19

# 15

# சேக்கிழார் கண்ட செம்பொருள்

என்று பிறந்தது என்று இயம்ப முடியாத இயல் பினதாய். முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்த் தமிழ்மொழி விளங்குகின்ற காரணத்தால் தமிழ்மொழி 'கன்னித் தமிழ்' என வழங்கப்பெறுகின்றது. "பாலேய் தமிழர் இசை காரர்"[1] என்பது ஆழ்வார் வாக்கு. பால் போலும் இனிமை நிறைந்த மொழி தமிழ்மொழி என்பது அப்பெரியார் கருத்தாகும். தெய்வப் புலவைச் சேக்கிழார் பெருமான் 'ஞாலமளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்'[2] என்பர். இதனால் தமிழ்மொழி தொன்மை துலங்கும் மொழி என்பதும், இசை இலங்கும் மொழி என்பதும், தெய்வத் தன்மை தோய்ந்த திருமொழி என்பதும் புலனாகும். 'தமிழெனும் இனிய தீஞ்சொற் றையல்'[3] என்று தமிழ்மொழியின் இனிமையைப் பாராட்டுவர் கம்பநாடர். 'இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்'[4] என்று நிகண்டு கூறும். பாரதியாரும் 'வான மளந்த தனைத்தும் அளந்திடும் வண் மொழி'[5] என்று தமிழைப் போற்றிப் பாடி மகிழ்ந்தார்.

---

1. திருவாய்மொழி : 1, 5, 11.
2. மூர்த்தி நாயனார் புராணம்: 3.
3. கம்பராமாயணம்; பம்பை வாவிப் படலம்: 29
4. பிங்கல நிகண்டு.
5. பாரதியார் பாடல்கள்: தமிழ்மொழி.

உலகிடைத் தோன்றி எண்ணற்ற மொழிகள் வாழ்கின்றன. ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு தனித்த தொட்பியல்பு உண்டு. "ஆங்கிலம் வணிகத்தின் மொழி என்றும், இலத்தீன் சட்டத்தின் மொழி என்றும், கிரேக்கம் இசையின் மொழி என்றும், பிரெஞ்சு தூதின் மொழி என்றும், இத்தாலியன் காதலின் மொழி என்றும் கூறுவது முறையுடை ஒக்குமெனின் தமிழ் இரக்கத்தின் மொழி எனக் கூறுவது இனிது பொருந்தும், பக்தியின் மொழி எனலுமாம்" என்று கூறி அளவிலும் சுவையிலும் தமிழிலுள்ள திருப் பாடல்கள் போல் பிற இலக்கியங்களில் இல்லை என்பர் மறைத்திரு தனிநாயக அடிகளார். இக்கூற்று முற்றிலும் உண்மை என்பதனைச் சேக்கிழார் தம் திருத்தொண்டர்புராணங் கொண்டு தெளியலாம்.

திருஞான சம்பந்தர் பெருமானைக் குறிப்பிடும் சேக்கிழார் 'திருமறையும் தீந்தமிழும் சிறக்க வரும் நாயகன்' என்றும், 'வண்டமிழ் செய்த நிரம்ப மாதவத்தோர் செயல் வாய்ப்ப'வும், 'அசைவில் செந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறைவெல்ல'வும் தோன்றியதாகக் குறிப்பிட்டுள்ளார். சேக்கிழார் பெருமானுக்கு எத்தோற்றமும் செயலும் இறைவனை—முழுமுதற் பொருளாம் சிவனை நினைவூட்டுவதாகவே அமையக் காணலாம்.

தலைவன் ஒருவன் பொருள்வயிற் பிரிய நினைக்கின்றான். தலைவி தன் பிரிவால் துயருற்று மெலிவாளே என்றும் கலங்குகின்றான். பிரிந்து சென்றால் தன்னால் துன்பமின்றி வினையைப்பட முடியுமா என்றும் நினைந்து பார்க்கின்றான். "இம் மெல்லிய தன்மையுடையாளைப் பிரிந்து செல்வோமாயின், இவளுடைய கண் நெய்தல் நிலத்திலே கயல் மீனாய்த் தோன்றிக் கலக்கும்; முல்லை நிலத்திலே கருவிளை மலராய்த் தோன்றி வருத்தும்; குறிஞ்சி நிலத்திலே மானாய்த் தோன்றி

மருட்டும்; பாலை நிலத்திலே வேடுவரது கையிலுள்ள கொடிய பாணமாய்த் தோன்றி நமது செலவைத் தடுக்கும்; ஆதலால் இவளைப் பிரிந்து செல்லுதல் பெரிதும் அரிதாகும்'' என்று குறிப்பிடுகின்றான். பாடல் வருமாறு:

'' கானற் கயலாம் வயலிற் கமலமாம்
ஏனற் கருவிளையா மின்புறவில்—மானும்
கடத்துமேல் வேடர் கடுஞ்சரமா நீங்கிக்
கடத்துமென் மெல்லியலாள் கண்.'' [6]

காதலில் தோய்ந்த நெஞ்சத்தினன் ஆயினமையின் அத் தலைவனுக்கு எங்குச் சென்றாலும் தலைவியின் கண்கள் தோன்றிக் கலக்கமுறச் செய்கின்றன. நானிலப் பொருள் களும் அவனுக்குத் தலைவியையே நினைவூட்டுகின்றன.

'பாண்டியன் பரிசு' எனும் காவியத்தில் பாவேந்தர் பாரதிதாசன், அன்னம் என்னும் தலைவிமாட்டுத் தலைவன் வேலன் கொண்ட காதலைக் கவினுற வடித்துள்ளார். தேனைப் போல் மொழியும், அன்றலர்ந்த செந்தாமரை மலர் போல் முகமும், கெண்டை மீனைப் போல் விழியும், விட்டதிர்ந்த மின்னைப் போல் நல்லிடையுங் கொண்டு, விண்ணிடையே பன்னூறாயிரம் மீன்கட்கு இடையில் வெண்ணிலவு போல், வானைப் போல் உயர் வாழ்வு வாழ்ந்த மங்கை அன்னம் என்று கூறி, அத்தகு அன்னத்தை நினைந்து நினைந்து நெக்குருகி நிற்கிறாள் வேலன். அப்போது காதல் கைம்மிகப் பின் வருமாறு அரற்றுகின்றான் வேலன்.

'' ஆடப்போம் புனலிலெலாம் அவளே, காற்றில்
அசையப்போம் பொழிலிலெலாம் அவளே, கண்ணால்
தேடப்போம் பொருளிலெலாம் அவளே! நேரில்

6. தண்டியலங்கார மேற்கோள் பாட்டு : உருவக தீவகம்.

'தின்னப்போம் சுவையிலெலாம் அவளே, வண்டு
பாடப்போம் மலரிலெலாம் அவளே! மேற்கில்
படுகதிரில் அவள்வடிவே காண்பேன் என்று
வாடக்கண் துயிலாமல் இருந்தான் வேலன்
மலர்ந்திட்ட காலையிலும் அவளைக் கண்டான்.'' [7]

இது 'காண்பவை யெல்லாம் அவளே போறல்' எனும் காதல் நிலையாகும்.

நிலவான் ஆடைக்குள் உடல் மறைத்து நிலா வென்று ஒளிமுகத்தைக் காட்டும் கவின் நிலவைக் காண்கின்றார் கவிஞர். வானச் சோலையிலே பூத்த தனிப்பூ வென்றும், சொக்கவெள்ளிப் பாற்குடமென்றும், அமுத ஊற்றென்றும், காலை வந்த செம்பருதிக் கடலில் மூழ்கிக் கனல் மாறிக் குளிரடைந்த ஒளிப்பிழம்பென்றும் நிலவை வருணிக்கும் கவிஞர் நிலவுத் தோற்றத்தில் ஓர் உயரிய கருத்தையும் வைத்துப் பாடுகின்றார், ஏழை மக்கள் நாடோறும் உழைத்து நலங்காணாது போகின்றனர். உழைத்த மக்களுக்கு உணவு வயிறாரக் கிடைக்க வில்லை. பசித்த மக்கள் சிறுகூழ் தேடுகின்றனர். பானையில் நிறைந்து கொதித்துக் கனத்திருந்த வெண்சோறு காணுகின்றனர். அப்போது அவர்கள் உறும் இன்பமே, நிலவைக் காணும்போது ஏற்படும் இன்பம் எனக் கூறித் தம் புரட்சிக் கருத்தை வெளியிட்டு நிற்கிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள்:

'' உனைக் காணும் போதினிலே என் உள்ளத்தில்
ஊறி வரும் உணர்ச்சியினை எழுதுதற்கு
நினைத்தாலும் வார்த்தைகிடைத் திடுவதில்லை
நித்திய தரித்திரராய் உழைத்துழைத்துத்
தினைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்
சிறிதுகூழ் தேடுங்கால் பானை ஆரக்

7. பாண்டியன் பரிசு : 76 : 7

**கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்**
**கவின் நிலவே உனைக்காணும் இன்பம் தானே!'' [8]**

இதனாற் கவிஞர் காணும் பொருள்களில் தம் கருத்தை ஏற்றிப் பாடுதல் வழக்குண்மை விளங்கும்.

சேக்கிழார் பெருமானை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் 'பத்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ' என்று பாராட்டிப் போந்தார். இக்கூற்றின் பொருத்தத்தினைப் பெரிய புராணங் கொண்டு நன்கு தெளியலாம்.

கயிலைமலையைக் காண்கிறார் கவிஞர் சேக்கிழார். 'புண்ணி யந்திரண் டுள்ளது போல்வது' [9] கயிலைமலை என்கிறார்.

**'' அண்ணல்பா கத்தையா ளுடைய நாயகி**
**உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது'' [10]**

காவிரி என்று பாடுகின்றார். வயலில் நெற்கதிர்கள் முற்றி விளைந்து சாய்ந்திருக்கும் காட்சி சேக்கிழாருக்குச் சிவனடியார்கள் பத்திமை நெறிநின்று தலையினால் வணங்குதல் போன்ற தோற்றத்தை யளிக்கின்றதாம்.

**'' பத்தியின் பால ராகிப் பரமனுக் காளாம் அன்பர்**
**தத்தமில் கூடி னார்கள் தலையினால் வணங்கு மாபோல்**
**மொய்த்த நீள்பத்தி யின்பால் முதிர்தலை வணங்கி மற்றை**
**வித்தகர் தன்மை போல விளைந்தன சாலி யெல்லாம்.'' [11]**

தேவாசிரிய மண்டபத்தின் சிறப்பினைப் புகல வந்த சேக்கிழார் துன்பந் தீர்க்கும் சிவனடியார்கள்

---

8. பாரதிதாசன் பாடல்கள் : முதற் தொகுதி : புரட்சிக்கவி.
9. திருமலைச் சிறப்பு : 2
10. திருநாட்டுச் சிறப்பு : 6
11. திருநாட்டுச் சிறப்பு : 22

மேனியிற் பொலியும் திருநீறு போல் தூயதாகவும் அவர்கள் 'சிவாய நம' என எஞ்ஞான்றும் ஓசை யெழுப் புதலினால் ஆயிரம் பாற்கடல் போல் விளங்குவதாகவும் தேவாசிரிய மண்டபத்தைக் காண்கிறார். பாற்கடலின் வெண்மைக்கு அடியார் மேனி முழுதும் பூசிய திருநீறும், பாற்கடலில் எழும் அலை ஓசைக்குச் சிவனடியார்களின் 'சிவ சிவ' ஒலியும் உவமைகளாம்.

**"அரந்தை தீர்க்கும் அடியவர் மேனிமேல்**
**நிரந்த நீற்றொளி யால்நிறை தூய்மையால்**
**பரந்த அஞ்செழுத் தோசை பொலிதலால்**
**பரந்த ஆயிரம் பாற்கடல் போல்வது."[12]**

மாலையில் மேற்றிசையில் மாணிக்கச் சுடராம் கதிரவன் மறைவதும், இருள் வருவதும் உலகில் இயல்பாக நடக்கும் நிகழ்ச்சியாகும். தயரதனிடம் வரம் பெற்ற கைகேயியின் கொடுமனச் செயலுக்கு நாணி இரவாகிய நங்கை ஓடியொளிந்தாள் என்பர் கம்பர்.

**"சேறு லாவிய நாளெ லாமுயி ரொன்று போல்வன செய்துபின்**
**ஏறு லாவிய தோளினானிட ரெய்த வொன்று மிரங்கிலா**
**வாணி லாநகை மாத ராள்செயல் கண்டு மைந்தர்முன் னிற்கவும்**
**நாணி னாளென வேகி னாளிர் கங்கு லாகிய நங்கையே."[13]**

கதிரவன் ஒளி மறைந்த பின்னர் வானம் இருண்ட செயலைச் சேக்கிழார் பெருமான், சிவபெருமானின் அஞ்செழுத்தாம் பஞ்சாக்கரத்தை உணர முடியாத அறிவிலார் நெஞ்சம் எவ்வாறு இருண்டு கிடக்குமோ அதுபோன்று நீண்ட வானம் இருண்டது என்று குறிப் பிட்டுள்ளார்.

12. திருக்கூட்டச் சிறப்பு : 3
13. கம்பராமாயணம் : கைகேசி சூழ்வினைப் படலம் : 46

" பரன், அஞ்செழுத்தும் உணரா அறிவிலோர்
நெஞ்சும் அன்ன இருண்டது நீண்டவான்."[14]

கங்குலாகிய நங்கை முன்கொண்ட புன்முறுவல் போலும், வெண்ணீற்றின் பேரொளி போன்றும் நிலா முகிழ்த்தது என்பர் சேக்கிழார்.

" நறுமலர்க் கங்குல் கங்கைமுன் கொண்டபுன்
முறுவ லென்ன முகிழ்த்தது வெண்நிலா."[15]

" ஆற்ற அண்டெம லாம் பரந் தண்ணல் வெண்
நீற்றின் பேரொளி போன்றது நீள் நிலா.[16]"

இதுபோன்றே கயிலை மலையைக் காணும் சேக்கிழார் பெருமான் கண்களுக்கு அம்மலை "பொன்னின் வெண் திரு நீறு புனைந்தது போன்று நீள்பனி பூசிய மால்வரை"[17] யாகக் காட்சி தரக்காணலாம். நீற்றொளியின் வெண்மை, பகல் போற் துலங்குவதாகக் குறிப்பிடுகின்றார் சேக்கிழார்.

" கிளர்ந்த திருநீற் றொளியிற் கெழுமிய நண்பகல்."[18]

இவற்றா லெல்லாம் சேக்கிழார் பெருமான் எம்பொருளைக் காணினும் அப்பொருளைச் சிவபெருமானோடும் அல்லது அவரோடு தொடர்புடைய பொருளாகவும் காண்கின்றார் என்பது புலனாகும். இவற்றால் பத்தி நெறியிற் றலைப்பட்ட அவர்தம் மனப்பண்பு விளங்கக் காணலாம்.

---

14. தடுத்தாட்கொண்ட புராணம் : 159
15. தடுத்தாட்கொண்ட புராணம் : 160
16. தடுத்தாட்கொண்ட புராணம் : 162
17. திருமலைச் சிறப்பு : 1
18. திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் புராணம் : 6

## அடியார் பெருமை

சேக்கிழார் தம் நூலிற்கு இட்ட பெயர் 'திருத்தொண்டர் புராணம்' என்பதாகும். தொண்டர் தம் பெருமையினைப் பரவிப் பாடிய காரணத்தால் இவர் 'தொண்டர்சீர் பரவுவார்' என்றும் அழைக்கப்பெற்ருர். இன்ப துன்பங்களை ஒன்ருக நோக்குபவர்கள் அடியார்கள் ஆவர். "மெய்த்திரு வந்துற்ருலும் வெந்துயர் வந்துற்ருலும் ஒத்திருக்கும் உள்ளத்து உரவோர்"[19] அவர்கள். நலக் கேடுகள் அவர்கட்கு ஒன்றே; ஓடும் செம்பொன்னும் ஒன்றே; இறைவனை வணங்கி ஏத்துதலன்றி வீட்டுப்பேறும் வேண்டி நிற்காத ஆற்றல் மிக்கவர்கள் அடியார்கள்.

**" கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்**
**ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்**
**கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி**
**வீடும் வேண்டா விறலின் விளங்கினர்."[20]**

## அடியார் போற்றப்படும் முறை

இல்வாழ்வார்க்குரிய கடமைகளாகத் திருவள்ளுவர் துறந்தவர்க்கும் நல்கூர்ந்தார்க்கும், இறந்தார்க்கும் உதவுதலைக் குறிப்பிட்டுள்ளார்;

**"துறந்தார்க்கும் துவ்வா தார்க்கும் இறந்தார்க்கும்**
**இல்வாழ்வான் என்பான் துணை."[21]**

இம்முறையில் வரும் அடியார்களை இளையான்குடி மாற நாயனர் எதிர்கொண்டு அழைத்து, கைகூப்பி வணங்கி, இன்சொல் வழங்கி, வீட்டிற்கு அழைத்து வந்து திருவடிகளைத் தூய்மை செய்து, அமர ஆசனமிட்டு

19. நளவெண்பா : 12
20. திருக்கூட்டச் சிறப்பு : 8
21. திருக்குறள் : 42

அருச்சித்து, நால்வகை உண்டியினை அறுவகைச் சுவைத் திறத்தில் முகமலர்ச்சியுடன் அளித்த நிலையினைச் சேக்கிழார் பின்வருமாறு பாடுவர்:

" ஆர மென்பு புனைந்த வையர்த மன்ப ரென்பதொர் தன்மையால்
நேர வந்தவர் யாவ ராயினு நித்த மாகிய பத்திமுன்
கூர வந்தெதிர் கொண்டு கைகள் குவித்துநின்று செவிப்புலத்
தீர மென்பது ரப்ப தம்பரி வெய்த முன்னுரை செய்தபின்

" கொண்டு வந்து மனைப்பு குந்து குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலி னாத னத்திடை வைத்தருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தி லாறு சுவைத்தி றத்தன வொப்பிலா
அண்டர் நாயகர் தொண்ட ரிச்சையி னமுது செய்ய

வளித்துள்ளார்."[22]

மங்கையர் மாண்பு

சேக்கிழார் தம் பெரிய புராணத்தில் மகளிர்க்குத் தனியிடம் கொடுத்துச் சிறப்பிக்கின்றார். நம்பியாரூரரின் தாயார் இசைஞானியாரைக் குறிப்பிடும்பொழுது,

" வேதியர் குலத்துள் தோன்றி மேம்படு சடையனார்க்கு
ஏதமில் கற்பின் வாழ்க்கை மனை இசை ஞானியார்"[23]

என்று கற்புநெறி யொழுகிய வாழ்வின் முறையார் எனக்குறிப்பிட்டுள்ளார். திருநீலகண்ட நாயனார் தம் மனைவியாரைக் குறிப்பிடும் பொழுது "மனைவியாரும் அருந்ததிக் கற்பில் மிக்கார்"[24] என்று பாராட்டியுள்ளார், இயற்பகை நாயனார் மனைவியாரைக் குறிப்பிடும்பொழுது, 'தேற்றம் மருவிய தெய்வக் கற்பின்

---

22. தடுத்தாட்கொண்ட புராணம் : 3, 4
23. தடுத்தாட்கொண்ட புராணம் : 3, 4
24. திருநீலகண்ட நாயனார் புராணம் : 4

மனைக்கிழத்தியார்'[25] என்று மொழிந்துள்ளார். மானக்கஞ்சாரநாயனார் மனைவியாரைக் குறிப்பிடும் பொழுது 'மழைக்குதவும் பெருங்கற்பின் மனைக்கிழத்தி'[26] என்று கூறுவர். திருவெண்காட்டு நங்கையினைப் பெண்மைப் பொலிவின் திறலாக வடித்துக் காட்டியுள்ளார்:

**"வேதகா ரணரடியார் வேண்டியமெய்ப் பணிசெய்யத்**
**தீதில்குடிப் பிறந்ததிரு வெண்காட்டு நங்கையெனும்**
**காதல்மனைக் கிழத்தியார் கருத்தொன்ற வரும்பெருமை**
**நீதிமனை யறம்புரியும் நீர்மையின் நிலைநிற்பார்."[27]**

மேலும் திருவெண்காட்டு நங்கையினைப் 'பெருகுதிரு மனையறத்தின் வேராகி விளங்கு திருவெண்காட்டு நங்கை'[28] என்றும், 'அன்புமிக்க பெருங்கற்பின் அணங்கு திருவெண் காட்டம்மை'[29] என்றும், "அரிய கற்பின் மனைவியார்"[30] எனறும் பலபடப் புகழ்ந்துரைத்துள்ளார்.

மேலும் சிவனடியார்களின் இல்லற வாழ்வும், பத்தித் தொண்டும் செம்மையுறத் துணைநின்று, மனத்தாலும் வாக்காலும் செயலாலும் செம்மை சிறக்க உழைத்தவர்கள் அவர்தம் மனைக்கு விளக்காகிய வாழ்க்கைத் துணைவியரே என்பதனைச் சேக்கிழார் யாண்டும் உணர்த்தக் காணலாம்.

## அரசியல் அறம்

சேக்கிழார் அமைச்சர் தொழிலைத் திறம்பட நடாத்தியவர். எனவே அரசியல் அறம் பிறழாத நெறி முறை

---

25. இயற்பகை நாயனார் புராணம் : 34
26. மானக்கஞ்சார நாயனார் புராணம் : 11
27. சிறுத்தொண்ட நாயனார் புராணம் : 12
28. சிறுத்தொண்ட நாயனார் புராணம் : 19
29. சிறுத்தொண்ட நாயனார் புராணம் : 53
30. சிறுத்தொண்ட நாயனார் புராணம் :.55

களைத் தம் காப்பியத்தின் ஊடே விளக்கியிருக்கக் காண லாம். அநபாய சோழனைக் குறிப்பிடும் பொழுது.

" மண்ணில் வாழ்தரு மன்னுயிர்கட் கெலாம்
கண்ணும் ஆவியுமாம் பெருங்கா வலான் "[31]

என்று மண்ணில் வாழும் உயிரினங்களுக்கு அரசன் கண் ணுகவும், உயிராகவும் ஒளிர்கின்றுன் என்று போற்றியுள் ளார். மேலும் அரசன் கடமை குடிகளுக்குத் தன்னாலும், தன் பரிசனத்தாலும், கள்வராலும், பகைவராலும், ஏனைய உயிர்களாலும் வரும் ஐவகைப் பயமும் வாராமற் காத்த லாகும் என்று குறிப்பிட்டுள்ளார்:

" மாநிலங்கா வலனுவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னுற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மால்
ஆனபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனே?"[32]

இவற்ருலும் "அருமந்த அரசாட்சி அரிதோமற் றெளிதோதான்"[33] என்று குறிப்பிட்டிருப்பதாலும் அரசியல் அறம் பாடிய அறவோர் சேக்கிழார் என்பதனை அறியலாம்.

## காவியச் சுவை

பத்திநெறியினைப் பாடவந்த சேக்கிழார் தந்த காப்பியம் காவியச் சுவை நிறைந்து மிளிர்கின்றது. இயற்கை வருணனையும், சொல்லாட்சியும், உவமை அழகும், அணிநலன்களும் ஆங்காங்கே அமைவுறப் பொருந்திக் காவியச் சுவையினைக் கூட்டுவிக்கக் காணலாம். மருத வளத்தை வருணிக்கும் போது வயல் வளம் சூழ்ந்த நாடு நம் கண்முன் நிற்கக் காணலாம்.

---

31. திருநகரச் சிறப்பு : 14
32. திருநகரச் சிறப்பு : 34
33. திருநகரச் சிறப்பு : 44

" சங்கங்கள் வயலெங்குஞ் சாலிகழைக் கரும்பெங்கும்
கொருகெங்கு நிறைகமலக் குளிர்வாசத் தடமெங்கும்
அங்கங்கே யுழவர்குழா மார்க்கின்ற வொலியெங்கும்
ஈங்கெங்கு மலர்ப்படுக ரிவைகழிய வெழுந்தருளி."[84]

"வாங்கினைப் பற்றிப் போதா வல்லுடும் பென்ன நீங்கான்"[85] என்று கண்ணப்ப நாயனார் புராணத்தில் இவர் கையாளும் உவமை தன்மை நவிற்சிச் சிறப்பும், வேடர் களுக்குள் நிகழும் பேச்சுத் தன்மையிலேயே அவரறி பொருளை உவமையாகக் காட்டியிருப்பதும் இவர் நுண்மாண் நுழைபுலத்தினை நுவலா நிற்கும். "பிள்ளைதைவரப் பெருகுபால் சொரிமுலைத் தாய்போல்"[86] என்று இவர் பிறிதோரிடத்திற் கையாளும் உவமை, எடுத்த பொருளின் சிறப்பினை ஏற்றமுற வடிக்கும் திறமும் செஞ்சொற்களை வழங்கி நிற்கும் சொல்லழகும் உணர்த்துவதாகும். சோலையை வருணிக்கும் போது.

" மொய்யளி சூழ்நிரை நீல முழுவலயங்களின் அலையச்
செய்யதளிர் நறுவிரலின் செழுமுகையின் நகஞ்சிறப்ப
மெய்யொளியின் நிழற்காணும் ஆடியென வெண்மதியை
வையமகள் கையணைத்தாற் போலுயர்வ மலர்ச்சோலை"[87]

என்று வருணித்திருப்பது காவியச் சுவையின் உரைகல் எனக் கொள்ளலாம். ஒரு சொல்லையே இருமுறை பெய்து ஒரு தனியழகினைச் சொல்லில் புகுத்திக் காட்டல் சேக்கிழார் இயல்பு. சான்றாகத் திருவாரூர்ச் சிறப்பினைச் செப்ப வந்த சேக்கிழார் பெருமான்,

84. திருஞானசம்பந்த நாயனார் புராணம்: 626
85. கண்ணப்ப நாயனார் புராணம்: 116
86. திருக்குறிப்புத் தொண்டர் புராணம்: 22
87. திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்: 9

"சைவநெறி ஏழுலகும் பாலிக்குந் தன்மையினல்
தெய்வநெறிச் சிவம்பெருக்குந் திருவாமூர் திருவாமூர்"[38]
என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பெரிய புராணமாகிய கலைக்கோயிலின் சிறப்பினைக் கூறிக்கொண்டே போகலாம். கொற்றவன் குடி உமாபதி சிவாச்சாரியார்,

"கருங்கடலைக் கைநீத்துக் கொளவெளிது; முந்நீர்க்
கடற்கரையி னெய்ம்மணலை யெண்ணியள விடலாம்;
பெருங்கடன்மேல் வருந்திரையை யொன்றிரண்டென் றெண்ணி
பிரித்தெழுதிக் கடையிலக்கம் பிரித்துவிட லாகும்;

"கருங்கடலின் மீனையள விடலாகும்; வானத்
தாரகையை யளவிடலாஞ்; சங்கரன்தா டமது
சிரங்கொடிருந் தொண்டர்புரா ணத்தையள விடநஞ்
சேக்கிழார்க் கெளிதலது தேவர்க்கும் அரிதே."

என்றபடி சேக்கிழார் கட்டிய காவியக் கலைக் கோயிலின் மாண்பினை முற்ற வுணர்த்த இயலாது.

## பெரியபுராணச் செய்தி

சிவபிரானிடத்துப் பத்தியும் வழிபாடும், அவன் அடியவரிடத்துப் பத்தியும் வழிபாடும் ஆகிய இவையே மண்ணிற் பிறந்தார் உய்தற்கு உரிய வழிகளாக மேற் கொள்ள வேண்டுமென்று சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்திற் பலவிடங்களில் வற்புறுத்தியுள்ளார்.

"மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லாரடி யார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணி னாலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனி னுலகர்முன் வருகென வுரைப்பார்."[39]

மேலும்,

38. திருநாவுக்கரச சுவாமிகள் புராணம் : 12

39. திருஞான சம்பந்த நாயனர் புராணம் : 1087

" சிந்தைசெய்வது சிவன்கழ லல்லதொன் றில்லார்
அந்தி வண்ணர்தம் மடியவர்க் கமுதுசெய் வித்துக்
கந்தை கீளுடை கோவணங் கருத்தறிந் துதவி
வந்த செல்வத்தின் வளத்தினுல் வரும்பயன் கொள்வார்"[40]

என்று அமர்நீதி நாயனுர் புராணத்திற் குறிப்பிட்டுள்ள படி சேக்கிழார் பெருமான்,

" அரசுகொள் கடன்களாற்றி மிகுதிகொண் டறங்கள் பேணிப்
பரவருங் கடவுட் போற்றிக் குரவரும் விருந்தும் பண்பின்
விரவிய கிளையுந் தாங்கி விளங்கிய குடிகள்"[41]

ஆக நாம் வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டுமென்று எமக்குப் பெரிய புராணத்தின்வழி அறிவுறுத்துகின்ருர். அவ்வழி நடந்து உய்வோமாக:

---

40. அமர்நீதி நாயனுர் புராணம், 3
41. திருநாட்டுச் சிறப்பு: 26

# 16

# கம்பர் காட்டும் இராமன் -- சகோதரன்

தமிழ்நாட்டில் எழுந்த கற்கோயில்களில் சில காலப் போக்கில் சிதைந்தும், மறைந்தும் போயினபோதுங்கூடக் கவிஞர்கள் சிலர் கட்டிய சொற்கோயில்கள், கலைக் கோயில்கள் கால வெள்ளத்தையும் கடந்து வாழ்ந்து வருகின்றன. அத்தகு பெருமை பெற்ற சொற்கோயில்களுள் ஒன்றாவதும், கவிதை வளத்தில் தலையாயதுமாகத் திகழ் வதும் கம்பர் இயற்றிய இராமாயணமாகும், இச்சிறப்புக் கருதியே 'கம்பநாடன் கவிதையிற்போற் கற்றோர்க் கிதயம் களியாதே' என்ற பாராட்டுரையும் தமிழகத்தே எழுந்தது.

வால்மீகி வடமொழியில் வழங்கிய கதையினைத் தம் காப்பியத்திற்குக் கம்பர் கருவாகக் கொண்டாலும் முழுவது மாக வால்மீகியைக் கம்பர் பின்பற்றிவிடவில்லை. சிற்சில விடங்களில் தமிழ்நாட்டின் தனித்த மரபும் பண்பாடும் மறவாது நினைந்து கம்பர் தம் காப்பியத்தைப் புனைந் துள்ளார்.

கம்பர் தம் காவிய நாயகனை ரகு குலச்செம்மல் ரகுநாயகனை—இராமபிரானை மனிதப்பண்புகள் நிறைந்த மாமனிதனாகச் சித்திரித்துள்ளார்: குரக்கினத் தலைவன் சுக்கிரீவன் முதன்முதலாகக் காட்டில் இராமனைக் கண்டதும்,

'' ஆறுகொள் சடிலத் தானும் அயனுமென் றிவர்க ளாதி
வேறுள குழுவை யெல்லாம் மானுடம் வென்ற தன்றே''[1]

என்று நினைக்கின்றான். இராவணனிடம் இராமனைப்பற்றிக் கூறும் அனுமன்,

'' அறந்தலை நிறுத்தி வேதம் அருள்சுரந் தறைந்த நீதித்
திறந்தெரிந்து உலகம் பூணச் செந்நெறி செலுத்தித் தீயோர்
இறந்துக நூறித் தக்கோர் இடர்துடைத் தேக வீண்டு
பிறந்தனன் தன்பொற் பாதம் ஏத்துவார் பிறப்பு
அறுப்பான்''[2]

என்றும், திருமாலின் அவதாரமான இராமன் மானிட யாக்கை கொண்டு 'கை வில்லேந்திச் சூலமும் திகிரி சங்கும் காரமும் துறந்து தொல்லை, ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும் விட்டு அயோத்தி வந்தான்' என்றும் குறிப்பிடுகின்றார். ஈண்டு, கம்பர் தம் காப்பியத்திற்கு இட்ட பெயர் 'இராமவதாரம்' என்பதே என்பதனையும் நினைவு கூற வேண்டும்.

இராமபிரானைக் கம்பர் உயர் பண்புகள் அனைத்தும் ஒன்று திரண்டு ஒளிர்கின்ற ஒப்பற்ற மனிதனாகக் காட்டுகின்றார். 'அறத்தின் மூர்த்தி' என்றும், 'கண்ணினும் நல்லவன்' என்றும் களிகூரப் போற்றுகின்றார். 'கற்றவர் கற்றிலா தவரும் உண்ணும் நீரினும் உயிரினும் அவனையே உவப்பார்' என்று குறிப்பிடுவதோடு, 'மைந்தனலாது உயிர் வேறிலாத மன்னன்' என்று தயரதன் இராமனை உயிராக மதித்து அன்பு பாராட்டிய நிலையினை உணர்த்தியுள்ளார்.

இராமாயணத்தின் மூலம் கம்பர் ஓர் உலக சகோதரத் துவத்தை, தேசிய ஒருமைப்பாட்டை உணர்த்திக் காட்டி

1. கிட்கிந்தா காண்டம்; நட்புக் கோட்படலம்; 19
2. சுந்தரகாண்டம்; பிணி வீட்டுப் படலம்: 76

யுள்ளார், தன் கதைக்கு நாயகன் இராமனை ஓர் உத்தம சகோதரனாகப் படைத்து அதன் வழி சகோதரன் என்ற நிலைக்கு ஓர் இலக்கணமே குறிப்பிட்டு விடுகிறார்.

இராமனுக்குத் தன் தம்பியர்தான் உயிர் என்று வாலியே குறிப்பிடுகின்றான். 'சுக்கிரீவனுக்கு இராமன் துணை வந்துள்ளான்' என்று தாரை சொல்ல, வாலி

**" தம்பியர் அல்லது தனக்கு வேறுயிர்**
**இம்பரின் இலதென எண்ணி யேய்ந்தவன்**
**எம்பியும் யானும் உற்றெதிர்ந்த போரினில்**
**அம்பிடை தொடுக்குமோ, அருளின் ஆழியான்?"[3]**

என்று கேட்கிறான். வாலியின் இக்கூற்றால் இராமன் உயிராக மதித்தது தம்பியரின் தொடர்பு என்பது புலனாகின்றது.

'பொய்யோ யெனும் இடையாளொடும் இளையானொடும் மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ ஐயோ இவன் வடிவு என்பதோர் அழியா அழகு'டைய இராமபிரான் காடு சென்றான். மிதிலையர்கோன் மகள் பூவின் மெல்லிய பாதம் மேவு கானம் நண்ணியதால் துயருற்றன என்று கவன்றான். பின் தன் அருமைத் தம்பி இலக்குவன் மெய்வருந்திச் சமைத்த தவச்சாலையைப் பார்வையிட்டு, 'தாவில் எம்பிகை சாலை சமைத்தன' என்று கூறி, 'என்று கற்றனை நீ இதுபோல்' என்று தன் தாமரைக் கண்களில் நீர் பனிக்க நெக்குருகி நின்றான்.

இவ்வாறு பிறர்படும் துயருக்கு இரங்கி உருகுவது என்பது இராமனின் பரிவு நிரம்பிய மனத்தினையும், சகோதர அன்பினையும் ஒருங்கே புலப்படுத்துவதாகும்.

---

3. கிட்கிந்தா காண்டம்; வாலிவதைப் படலம் : 35

இந்திரசித்து எய்த பிரம்மாத்திரத்தால் இலக்குவன் இறந்தானென்று இராமன் எண்ணிய போது பின்வருமாறு இராமன் புலம்புகின்றான்:

" இளையவன் இறந்தபின் எவரும் என்? எனக்கு
அளவறு சீர்த்தியென்? அறிவென்? ஆண்மை என்!
கிளையுறு சுற்றமென்? அரசென்? கேண்மையென்?
விளைவுதான் என்? மறை விதியென்? மெய்ம்மை என்?''[4]

இலக்குவன் உயிரோடு இல்லையானால், இராமனுக்கு எதுவும் வேண்டியதில்லையாம். புகழ், அறிவு, ஆண்மை, சுற்றம், அரசு, நட்பு, விளைவு, வேதம், மெய்ம்மை முதலியன எல்லாம் வேண்டாவாம்.

இராமன் மிதிலை மாநகரில் உள் நிறைந்த பேரன்பு மிக்கெழுக் கண்கள் நீரைச் சொரியத் தன்னைத் தொழுதெழுந்த பரதனை மார்புற அணைத்து உயிருறத் தழுவினான். தனயனைத் தழுவும் தந்தையின் அன்பு அதில் கலந்திருந்தது. இதனைக் கம்பர்,

" உன்னுபே ரன்புமிக் கொழுகியொத் தொண்கணீர்
பன்னுதா ரைகள்தரத் தொழுதெழும் பரதனைப்
பொன்னின்மார் புறவணைத் துயிருறப் புல்லினான்
தன்னையைத் தாதைமுன் தழுவினான் என்னவே.''[5]

மேலும், இராமனைக் காட்டிலிருந்து திரும்ப அழைத்துச் சென்று அயோத்தியை ஆளச் செய்ய வேண்டும் என்று எண்ணுகிற பரதன் தன் சேனை பரிவாரங்களுடன் சித்திர கூடம் நண்ணுகின்றபொழுது, இலக்குவன் பரதன் செயலில் ஐயங் கொள்கிறான். ஆனால் இராமனோ,

---

4. யுத்தகாண்டம்; மருந்துமலைப் படலம்: 77
5. பாலகாண்டம்; எதிர்கொள் படலம்; 26

'சேணுயர் தருமத்தின் தேவைச் செம்மையின்
ஆணியை அன்னது நினைக்க லாகுமோ''[6]

என்று கூறிப் பரதனின் பண்புநலனைப் பலபடப் பாராட்டுகின்றான்.

கைகேயி தயரதனிடமிருந்து இரு வரம் பெற்று, ஒரு வரத்தால் 'ஆழிசூழ் உலக மெல்லாம் பரதனே' ஆளவும், பிறிதொரு வரத்தால் இராமன் 'தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கருந் தவமேற்கொண்டு' காடு சென்று ஏழிரண்டாண்டுகள் கழித்துத் திரும்பி வர வேண்டும் என்றும் கூறிய அளவில் இராமனின் முகம் 'அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா' என்று கம்பநாடர் காட்டுகின்றார். உருளும் சக்கரம் கொண்ட வண்டியில் பூட்டப்பெற்ற காளையொன்று அருள் நிறைந்த மனத்தினன் ஒருவனால் அவ்வண்டியினின்றும் அவிழ்த்து விடப் பெற்ற பொழுது அக்காளை அடைகின்ற மகிழ்ச்சியினை அதுபொழுது இராமன் பெற்றான் என்பர் கம்பர். மேலும், கைகேயியிடம் இராமன் 'என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்ற தன்றோ?' என்றும் கூறித் தன் சகோதர அன்பைப் புலப்படுத்தினான் என்பது உன்னி உணரத்தக்கதாகும்.

இராமனுடைய சகோதரத்துவம் தன்னுடன் பிறந்த தம்பியரிடம் மட்டுந்தாம் என்றில்லாமல், வெவ்வேறு இடங்களைச் சார்ந்த வெவ்வேறு வாழ்க்கை முறையினையுடைய வெவ்வேறு இனத்தவர்பாலும் பரந்து விரிகின்றது.

ஆயிரம் அம்பிக்கு நாயகன் தூய கங்கைத் துறை விடும் தொன்மையான், காயும் வில்லினன், கல்திரள்

---

6. அயோத்தியா காண்டம்; திருவடி சூட்டு படலம்: 48

தோளினன். பேர்க்குகன் எனும் நாமத்தான், சிருங்கிபேரம் எனும் கங்கையின் மருங்கு தோன்றும் நகர் உறை வாழ்க்கையன்.' இளையாளொடும் இளையவனோடும் தவப் பள்ளியில் இருந்த இராமனைக் காணவந்தான். இலக்குவன் குகனைப் பார்த்து 'நீ யார்?' என்று கேட்ட அளவில், "தேவா! நின்கழல் சேவிக்க வந்தனென், நாவாய் வேண்டுவன் நாய் அடியேன் என்றான்". இலக்குவனும் இராமனிடம் சென்று, 'உள்ளம் தூயவன்; தாயின் நல்லான்; கங்கை நாவாய்க்கு இறை; குகன் ஒருவன் நின்னைக் காணக் குறுகினன்" என்று எடுத்து மொழிந்தான். இராமனும் குகனை விரும்பி யழைத்து 'இருத்தி ஈண்டு' என்றான் குகனோ அமராமல், "தேனும் மீனும் அமுதினுக்கு அமைவது ஆகத் திருத்தினென்; என்கொல் திரு உளம்?" எனக் கேட்டு நின்றான். குகனின் அளவற்ற அன்பை இராமன் பாராட்டி "நாளை காலைப் போதில் நாவாயுடன் வருக" எனக் கட்டளையிட்டான். குகனோ அவனோடேயே நின்றான்; "செய்குவன் அடிமை" என்று செப்பி நின்றான். கருணையின் மலர்ந்த கண்ணனாகும் இராமன் சீதையை நோக்கி, தம்பி திருமுகம் நோக்கி, "தீராக் காதலன் ஆகும்" என்று கூறிக் குகனை நோக்கி "யாதினும் இனிய நண்ப! இருத்தி ஈண்டு எம்மொடு" என்றான்.

மறுநாள் கங்கையைக் கடந்த பின்னரும் குகன் இராமனுடன் கூட வருவதாக வற்புறுத்திக் கூறுகின்றான். இராமனோ குகனைப் பார்த்து "என்னுடைய உயிர் நீயாவாய்; இலக்குவன் உன் தம்பி ஆவான்; சீதை உனக்கு அண்ணியாவாள்; இவ்வுலகெல்லாம் உன்னுடையது; நானும் உன் தொழில் உரிமையுடையவன்" என்று உரை பகர்கின்றான்.

"அன்னவன் உரைகேளா அமலனும் உரைநேர்வான்
என்னுயிர் அனையாய்நீ இளவலுன் இளையானிந்
நன்னுதல் அவள் நின்கேள் நளிர்கடல் நிலமெல்லாம்
உன்னுடை யதுநானுன் தொழிலுரி மையினுள்ளேன்."[7]

தன்னைப் போல் பிறரையும் ஒத்த உரிமை கொண்டு எண்ணி மதித்து உறவு கொண்டாடும் உயரிய உள்ள உணர்ச்சியே உண்மையான சகோதரத்துவமாகும்.

மேலும் இராமன் முன்பு நாங்கள் நால்வரே சகோதரர்கள் என்றிருந்தோம். இன்று தொடங்கி நாம் ஐவராகி விட்டோம் என்று மனம் நெகிழ்ந்து பேசுகின்றான்.

"துன்புளது எனினன்றோ சுகமுளது அதுவன்றிப்
பின்புளது இடைமன்னும் பிரிவுளது எனஉன்னேல்
முன்புளோம் ஒருநால்வேம் முடிவுளது எனஉன்னா
அன்புள இனிநாமோர் ஐவர்கள் உளராணோம்."[8]

மேலும், குகன் சுற்றத்தார் இராமனின் கிளைகளென்றும், இராமன் சுற்றத்தார் குகனுடைய கிளைஞர் என்றும் அவர்களைப் பாதுகாக்க அயோத்தியில் குகனுடைய தம்பி யாகிய பரதன் இருக்கிறான் என்றும், சிருங்கிபேரத்தில் வாழும் இராமனுடைய சுற்றத்தினரைப் பாதுகாவல் செய்யக் குகன் அவசியம் கங்கைக் கரையிலேயே தங்க வேண்டும் என்றும் இராமன் குறிப்பிடுகின்றான். அதனால் வேடுவர் குலத்தில் வந்த குகனிடம் சகோதர நேயங் கொண்டு ஒட்டி உறவாடிய இராமனின் உயர் பண்பு புலனாகின்றது.

அடுத்து, குரக்கினத் தலைவனாகிய சுக்கிரீவனையும் சகோதரனாக ஏற்றுக் கொள்ளும் மாண்பினை இராம

---

7. அயோத்தியா காண்டம்; கங்கைப்படலம்: 68
8. அயோத்தியா காண்டம்; கங்கைப்படலம்: 69

பீடத்திலே காண்கிறோம். வாலியால் கிட்கிந்தை நகரைவிட்டே துரத்தப் பெற்ற சுக்கிரீவன் ரிஷ்ய முக பர்வதத்திலே ஒளிந்து வாழ்கிறான். அவ்வழியே சீதையைத் தேடி வரும் இராமனையும் இலக்குவனையும் சொல்லின் செல்வனும் அனுமன் சந்தித்துச் சுக்கிரீவனுக்கு அடைக்கலம் வேண்டுகின்றான். "சரண் உனை அடைந்தேன்; என்னைத் தாங்குதல் கருமம்" என்று இராமனின் திருவடிகளைச் சரண் அடைகிறான் சுக்கிரீவன். இராமனும் தன்னைப் போலவே உரிமையாம் மனைவி யிழந்து துயருறுபவன் என்று எண்ணிச் சுக்கிரீவனை அடைக்கலமாக ஏற்றுக் கொள்கிறான். சுக்கிரீவனைத் தன் இன்னுயிர்த் துணைவன் என்றும், அவன் உறவினரைத் தன்னுடைய உறவினர் என்றும், அவன் இன்ப துன்பங்கள் எல்லாம் தன்னுடையன என்றும், அவனுக்குத் துன்பம் செய்தோர் தனக்குத் துன்பம் விளைவித்தவர் ஆவர் என்றும் குறிப்பிடுகின்றான்.

" என்றவக் குரக்கு வேந்தை இராமனும் இரங்கி நோக்கி
உன்றனக் குரிய இன்ப துன்பங்கள் உள்ள முன்னாள்
சென்றன போக்கி மேல்வந் துறுவன தீர்ப்பல் அன்ன
நின்றன எனக்கும் நிற்கும் நேரென மொழியும் நேரா."

" மற்றினி உரைப்ப தென்னே வானிடை மண்ணில் நின்னைச்
செற்றவர் என்னைச் செற்றார் தீயரே எனினும் உன்னோ
டுற்றவர் எனக்கு முற்றார் உன்கிளை எனதென் காதற்
சுற்றம்உன் சுற்றம், நீயே இன்னுயிர்த் துணைவ
வென்றான்."*

இவ்வாறு மனித இனத்தில் பிறவாத சுக்கிரீவனையும் இராமன் சகோதரனாகக் கொண்டு உறவாடுகின்றான்.

---

1. கிட்கிந்தா காண்டம்; மராமரப் படலம்: 64, 65

அடுத்து, 'செம்பிட்டுச் செய்த இஞ்சித் திருநகராம்' இலங்கை வேந்தனுகிய இராவணனின் தம்பி வீடணன் அரக்கர் குலத்தில் பிறந்தவன். சீதையைச் சிறையெடுத்த செயல் சீர்மை குலைக்கும் செயல் என்று கூறி, 'அசைவில் கற்பினுள் அணங்கை விட்டருளுதி' என்று எடுத்து மொழிந்தும் அதனை ஏற்றுக் கொள்ளாது வீடணனை இழித்தும் பழித்துப் மொழிந்தான் இராவணன். இதன் பின்னரும் அண்ணனிடம் இருந்தால் விளையப் போகும் பயன் ஒன்றுமில்லை என்று எண்ணிச் சீதையை மீட்கும் பொருட்டு வந்துள்ள இராமனைச் சரண் புகுவதே தக்கது என நினைந்து இராமன் தங்கியிருக்கின்ற பாசறையை வந்து சேர்கிறன். எதிரியிடமிருந்து வந்துள்ள வீடணனைத் தம்முடன் சேர்த்துக் கொள்வது பெரும்பிழை எனப் பலரும் கூறவும், மாருதி மறுத்து மொழிகிறன். இராமனும் ''மாருதி வடித்துச் சொன்ன பெற்றியே பெற்றி' என்று கூறி, வென்றலும் தோற்றலும் அடைக்கலம் கேட்கிறவனை ஆதரித்தலே கடன் என மொழிந்து அடைக்கலத்தின் சிறப்பினைப் பின்வருமாறு புகழ்ந்துரைக்கின்றன்;

**'' காரிய மாக யன்றே யாகுக கருணை யோர்க்குச்**
**சீரிய தன்மை நோக்கின் இதனின்மேல் சிறந்த துண்டோ,**
**பூரிய ரேனும் தம்மைப் புகல்புகுந் தோர்க்குப் பொன்ரு**
**ஆருயிர் கொடுத்துக் காத்தார் எண்ணிலா அரசர்**
**அம்மா.''**[10]

இவ்வாறு வீடணனுக்கு அடைக்கலம் கொடுத்து, அவனை அணைத்துத் தழுவித் தன் ஆருவது தம்பியாக

---

10. யுத்த காண்டம்; வீடணன் அடைக்கலப்படலம்: 116

ஏற்றுக் கொள்கிறுன். வீடணனுக்கும் தயரதன் தந்தையாம். மக்கட் பேறின்றி வருந்திய தயரதன் வேள்வியால் மக்களைப் பெற்றுக் காட்டில் இழந்தானும். ஆனல் காட்டிற்குத் தான் வந்ததும் நன்மையாகி விடுகிறதாம். முன்னாளில் நான்கு மைந்தர்களையே கொண்டிருந்த தயரதன் ஏழு பிள்ளைகளை யுடையவன் ஆகின்றுனும், குகனேடு நால்வரும் ஐவராயினர். சுக்கிரீவனேடு அறுவராயினர்! வீடணனேடு எழுவராயினர்.

" குகனெடும் ஐவ ரானேம் முன்புபின் குன்று சூழ்வான்
மகனெடும் அறுவ ரானேம் எம்முழை அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய நின்னெடும் எழுவ ரானேம்
புகலருங் கானம் தந்து புதல்வரால் பொலிந்தான்
உந்தை.'[11]

இவ்வாறு கங்கைக் கரையில் சிருங்கிபேரத்தில் கணக்கில் நாவாய் ஓட்டும் வேடுவர் குலக் குகனையும். கிட்கிந்தையை யடுத்து ரிஷ்யமுக மலையில் குரக்கினத்து வேந்தன் சுக்கிரீவனையும், இலங்கையில் அரக்கர் குலத் தோன்றலாகிய வீடணனையும் சகோதரனுக ஏற்றுக் கொண்டு இராமன் ஓர் உயர்ந்த சகோதரனுக-சகோதரத்துவம் எனும் பண்பிற்கு உறைவிடமாக-இலக்கியமாகக் குன்றிலிட்ட விளக்கென ஒளிவீசித் திகழ்கிறுன்.

" ஆவுக் காயினும் அந்தணர்க் காயினும்
யாவர்க் காயினும் எளியவர்க் காயினும்
சாவப் பெற்றவ ரேதகை வானுறை
தேவர்க் குந்தொழும் தேவர்க ளாகுவார்.''[12]

11. யுத்த காண்ட ; வீடணன் அடைக்கலப்படலப் : 146
12. ஆரணிய காண்டம் ; அகத்தியப்படலம் . 21.

தேவர்களையும் மானிடம் வெல்லும் முறையாக இராமனின் சகோதரப் பண்பு மிளிர்கின்றது. ஒரு தாயர் வயிற்றில் தோன்றாத இலக்குவன், பரதன், சத்துருக்கரிடத்தும் மட்டற்ற அன்பும், வேடுவர் குலக் குகனிடத்தும், குரக்கினச் சுக்கிரீவனிடத்தும், அரக்கர் குல வீடணனிடத்தும் சகோதர பாசமும் காட்டி வாழ்ந்த இராமனின் அன்பினை இராமாயணம் கூறிச் செல்கின்றது. சுருங்கக் கூறின், இராமாயணத்தின் நெடுகிலும் இராமனின் சகோதரத்துவப் பண்பு உணர்த்தப்படுகின்றது எனலாம்.

# 17

# கம்பர் காட்டும்

# இராமன்—கணவன்

இராமகாதை பன்னெடுங் காலத்திற்கு முன்பிருந்தே பாரத நாட்டில் வழங்கிவந்த பழைய கதையாகும். கதை வடிவில் நீண்ட காலம் வழங்கி வந்த இந்தக் கதை, பின்னர் நூல் வடிவம் பெற்றிருக்க வேண்டும் இராம காதையினைக் காவியமாகவும் நாடகமாகவும் கீர்த்தனை யாகவும் கதை படித்து மகிழ்ந்த புலவர் பலராவர். இந்திய மொழிகள் அனைத்திலும் எழுந்த ஒரு பொதுக் கதை ஒன்று உளது என்றால் அது இராமாயணமே ஆகும். காலதேசச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு, இச்சரிதம் பல மாறுபாடுகளுடனும் பல்வேறு கிளைக் கதைகளுடனும் பல்வேறு மொழிகளில் இன்றும் வழங்கிவருகிறது. நாடோடிப் பாடல்களிலும் பழமொழிகளிலும் கூட இச்சரிதம் இடம் பெற்றுள்ளது. உலக மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் இராமகாதை தொன்னெடுங் காலந் தொட்டு வழங்கி வந்தது என்பதனை அகநானூறு, புறநானூறு, சிலப்பதிகாரம் முதலிய பழந்தமிழ் நூல்கள் கொண்டு உணரலாம்.

'கவிச்சக்கரவர்த்தி' என்றும், 'கல்வியிற் பெரியர் கம்பர்' என்றும், 'கம்ப நாடுடைய வள்ளல் என்றும், பலபடியாகப் பாராட்டப் பெறும் கம்பர் தாம் இயற்றிய

இராமாயணத்திற்குத் தந்த பெயர் 'இராமாவதாரம்' என்பதாகும். ஆயினும் இராமாயணம் என்னும் வட சொற்றொடர்க்கு இராமபிரானுடைய வடிவழகினையும் குணநலன்களையும் சிறந்த செயல்களையும் அறிவிப்பது என்பது திரண்ட பொருளாகும்; சீதாபிராட்டியின் வடிவழகும் குணநலமும் ஒழுகலாறும் அறிவிப்பது எனவும் பொருள் கூறலாம். 'இராமாயணத்தால் சிறையிருந்தவளேற்றம் சொல்லுகிறது' என்னும் தொல்லாசிரியர் (ஸ்ரீ வசனபூஷணம்) கூற்றும் இதற்கு ஆதாரவாகும்.

எனவே இராமனின் திருக்கல்யாண குணங்களைக் கூறுவது இராமாயணம் எனலாம். பாத்திரப் படைப்பிலே கம்பர் ஈடு இணையற்று விளங்குகிறார்.

'கம்பர் கண்ட இராமன்—கணவன்'—என்ற தலைப்பினைச் சிறிது விளங்கக் காண்போம். இராமன் நல்ல மைந்தனாகவும், உத்தம சகோதரனாகவும். உயிர் நண்பனாகவும் விளங்கியது போன்றே, சீதைக்கு ஆருயிர்க் கணவனாகவும் விளங்குகிறான்.

" காவியும் ஒளிர்தரு கமலமும் எனவே
ஓவிய எழிலுடை ஒருவனை அலது ஓர்
ஆவியும் உடலமும் இலதுஎன அருளின்
மேவினன் உலகுடை வேந்தர்தம் வேந்தன்"[1]

என்ற செய்யுள் இராமன்பால் தசரதன் கொண்ட ஆரா அன்பினைப் புலப்படுத்துவதாகும்.

வேள்வியைக் காக்க விசுவாமித்திர முனிவர் 'சிறுவர் நால்வரினும் கரிய செம்மல் ஒருவனைத் தந்திடுதி' என்றே தசரதனிடம் கேட்டார். அதைக் கேட்ட தசரதன், 'கண்ணிலான் பெற்று இழந்தான்' எனக் கடுந்துயரம் உழந்தான்.

---

1. பாலகாண்டம்; திருவவதாரப் படலம்: 120.

விரிட்டன் தயரதன் கருத்திற்கு—இராமனுக்கு முடி சூட்ட வேண்டும் என்ற கருத்திற்கு—உடன்பட்டுப் பேசும் பொழுது,

“ மண்ணினும் நல்லள் மலர்மகள் கலைமகள் கலைஊர்
பெண்ணினும் நல்லள்பெரும்புகழ்ச் சனகி ஆம்நல்லள்
கண்ணினும் நல்லன் கற்றவர் கற்றிலா தவரும்
உண்ணும் நீரினும் உயிரினும் அவனையே உவப்பார்”[2]

என்று குறிப்பிடுகின்றார்.

பின்னர் வேள்வியை அழிக்கவரும் அரக்கி தாடகையை இராமன் தன் வில்லாற்றலால் கொல்ல வேண்டும் என்று சொன்ன அளவில், 'பெண் என மனத்திடைப் பெருந்தகை' நினைத்து வாளாயிருந்தான்.

இராமனுடைய பாததுளி பட்டதும் கல்லாய்க் கிடந்த அகலிகை உயிர்பெற்றெழுகிறாள். அவளுடைய வரலாற்றை முனிவர்வாய்க் கேட்ட இராமன் 'மாதவன் அருள் உண்டாக வழிபடு; படர் உறுதே: போது நீ, அன்னை?' என்று பகன்றான்.

இவ்விரண்டு செயல்களும் இராமன் பெண்குலத்தின் பால் கொண்டிருந்த பெருமதிப்பினைப் புலப்படுத்துவனவாம்.

முதலாவதாக. இராமனும் சீதையும் கண்களால் கண்டு காதல் கொண்ட நிலையினைக் காண்போம்.

கன்னிமாடத்தில் அன்னம் ஆரும் துறையை நோக்கிப் 'பொன்னின் சோதி' திண் கல்லும் புல்லும் கண்டு உருகப் பெண்மை' என மிதிலைச் செல்வியாம் சீதை நிற்கின்றாள். கண்ணுக்கு இனியது ஓர் மருந்தும் ஆயவளாய், அழகு அழகு பெற்ற நிலையில் கன்னிமாடத்தில் நின்ற சீதையை 'அல்லை யாண்டு அமைந்த மேனியனும்

2. அயோத்தியா காண்டம்: மந்திரப் படலம்: 39.

அழகன்' இராமன் காண்கின்றான். 'கண்ணொடு கண் இணை கவ்வி ஒன்றை ஒன்று உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்!. இவ்வாறு கண்வழி புகுந்து அவர்தம் கருத்தில் நிறைந்த காதல், பள்ளத்தில் பாயும் வெள்ளம்போல் உள்ளத்தில் ஓடி உறைந்தது. இதனைக் கம்பநாடர்,

" பருகிய நோக்கெனும் பாசத்தால் பிணித்து
ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினார்"[3]

என்று நயமுற நவில்கின்றார். இவ்வாறு 'ஒருங்கிய இரண்டு உடற்கு உயிர் ஒன்று ஆயினார்' போல் 'மருங்கிலா நங்கையும் வசையில் ஐயனும்' காதலில் கலந்து கட்டுண்டு நின்றனர்.

இதனைக் கம்பர்,

" கருங்கடல் பள்ளியில் கலவி நீங்கிப்போய்ப்
பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ"

என்று குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு ஆதிநூலான வான்மீகி ராமாயணத்தில் திருமணத்திற்கு முன்னர் இராமனும் சீதையும் கண்ட தில்லை என்றிருக்கவும், தமிழ் மரபில் வந்த கம்பர் 'கற்பெனப்படுவது களவின் வழித்தே' என்ற தொல்லோர் கூற்றுப்படி, திருமணத்திற்கு முன்னர் இராமனும் சீதை யும் ஒருவரை ஒருவர் கண்டு உளம் பறிகொடுத்த பான்மை யினைப் பண்பாட்டிற் கியைந்த முறையில் புலப்படுத்தி யுள்ளார்.

---

3. பால காண்டம் : மிதிலைக் காட்சிப் படலம் : 37
4. பால காண்டம் : மிதிலைக் காட்சிப் படலம் : 38

காதலில் கட்டுண்ட சீதையோ தழலிடு வல்லியே போலச் சாம்பியும், வழங்கிய கடலென வற்றியும் காணப் படுகின்றாள். கண்வழி நுழைந்து கருத்தைக் கவர்ந்த வள்ளலை எண்ணிக் கழிபடர் கொள்கின்றாள் சீதை.

இராமனும் இனிய பள்ளி எய்திய பின்னும் தையலைப் பற்றியே எண்ணி வருந்துகின்றான். 'இரு கண்ணினுள்ளும் கருத்துள்ளும்' சீதையையே காண்பதாக எண்ணிப்பொருமு கின்றான். 'உள்ளத்தாமரையுள் உறைவது அள்ளல் பூமகள் ஆகும் கொலோ?' என்றும், 'தெருளிலா உலகில் சென்று நின்றுவாழ் பொருளெலாம் அவள் பொன் உரு ஆய' தென்றும் கூறி அரற்றுகின்றான்.

வில்லை நாணேற்றி வெற்றி கொண்ட இராமனின் வீரச் செயலைத் தோழியர் சீதையிடம் சொல்ல, 'கோமுனி யுடன் வருகொண்டல்' என்றும், 'தாமரைக் கண்ணினன்' என்றும் சொன்ன அளவில் 'ஆம்' அவனே கொல்' என்று ஐயந்தீர்ந்து அகமகிழ்ந்தாள்.

பின்னர்த் திருமண மண்டபத்தில் மணத்தவிசை மேவி நெடுந்தகை வீரன் இராமனும், ஆர்வத்து இன் துணை அன்னமாம் சீதையும் எய்தி, ஒன்றிய போகமும் யோகமும் ஒத்த நிலையில் இருந்தபோது 'பூமகளும் பொருளும் என, நீ என் மாமகள் தன்னொடும் மன்னுதி' என்று சீதையின் கரப்பிடித்துத் தாமரை அன்ன இராமனின் தடக்கையில் ஈந்தான் சனகன்.

மையலின் தளிர்க்கையைத் தன் தடக்கையால் பிடித்தான் இராமன், அதுபோழ்து 'மாறுபிறப்பின் உடம்பு, உயிரைத் தொடர்கின்றதை ஒத்து' இருந்தாள் சீதை.

இவ்வாறு சீதை மிகவும் விருப்பிய நிலையில் இராமன் காட்சியளிக்கின்றான்.

இனி, சீதையின் கணவன் என்ற நிலையில் கம்பர் காட்டும் இராமன் எத்துணை அளவு சிறந்தவனாகக் காட்சியளிக்கின்றான் என்பதனைக் காண்போம். 'ஆழி சூழ் உலகமெல்லாம் பரதனே ஆள, நீ போய்த் தாழிருஞ்சடைகள் தாங்கித் தாங்கருந் தவமேற்கொண்டு பூழிவெம் கானம் நண்ணிப் புண்ணியத் துறைகளாடி ஏழிரண் டாண்டின் வாவென் றியம்பினன்' அரசன் தசரதன் என்று கூறினாள் கைகேயி. 'மன்னவன் பணியன்றாகில் நும்பணி மறுப்பனோ, என் பின்வவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்ற தன்றோ' என்று கூறி இராமன் அந்தப்புரம் விரைகிறான். கோசலையைக் கண்டுவிட்டுச் சீதையிடம் வரும் இராமன் மரவுரி புனைந்து வருதலைக் கண்டவுடன் சீதை துணுக்கமுற்று எழுகிறாள். நடந்தது இன்னதென அறியா நிலையிலும் அவள் நெடுங்கண்ணிலிருந்தும் நீர் வழிகின்றது. 'உற்றது என்னை?' என அவனை நோக்கி உருக்கத்தோடு உசாவினாள். அதற்கு மறுமொழியாக இராமன்,

"பொருவில் எம்பி புவிபுரப் பான்புகழ்
இருவர் ஆணையும் ஏந்தினென்; இன்றுபோய்
கருவி மாமழைக் கல்தடம் கண்டு நான்
வருவென் ஈண்டு வருந்தலை நீ என்றான்."[5]

'நீ வருந்தலை; நீங்குவென் யான்' என்ற தீயவெஞ் சொல் செவி சுடத் தேம்பினாள் சீதை. பாற்கடலில் உடன் உறைந்த காலத்தும், 'அறம் திறம்பல் கண்டு ஐயன் இராமன் அயோத்தியில் பிறந்த பின்பும் பிரியலள் என்ன' வாழ்ந்த சீதை, 'ஐயனும் அன்னையும் சொன்னது செய்யத் துணிந்தது தூயதே; என்னை

5. அயோத்தியா காண்டம் : நகர்நீங்கு படலம் : 216

என்னை இருத்தி' என்று கேட்டு உயிர் உமிழா நின்றாள். இதற்கு மறுமொழியாக இராமன் உரைத்த மாற்றம்தான் இராமன் மிகச் சிறந்த கணவன் என்பதனைத் தென்றெனப் புலப்படுத்தி நிற்கின்றது.

" வல்ல ரக்கரின் மால்வரை யூட்டெழும்
அல்ல ரக்கின் உருக்கழல் காட்டதர்க்
கல்ல ரக்குங் கடுமைய வல்லநின்
சில்ல ரக்குண்ட சேவடிப் போதென்றான்." [6]

இதனைக் கேட்ட சீதை,

" பரிவி கந்த மனத்தொடு பற்றிலாது
ஒருவு கின்றனை யூழி யருக்கனும்
எரியு மென்பது யாண்டையது ஈண்டுநின்
பிரிவி னுஞ்சுடு மோபெருங் காடென்றாள்." [7]

இக்கருத்து,

" ......ஓமையப் பெருங்காடு,
இன்னா என்றீ ராயின்
இனியவோ பெரும தமியோர்க்கு மனையே" [8]

என்ற குறுந்தொகைச் செய்யுளை நினைவுறுத்துவதாகும்.

சீதையின் கருத்தை மறுக்க மனம் இன்றி இராமன் சிந்தனையில் ஆழ்கிறான். அப்போது சீதை மரவுரி உடுத்து இராமனின் நீள்கரத்தைப் பற்றினாள். தூய தையலை நோக்கிய செங்கணான், பின் விளைவு கருதாது உடன் வருதல் இடர்தரும் எனச் சொன்னான். சீதை அதனை மறுத்து மொழி அளவில் மருது உடன்பட்ட இராமன் சீதையோடு காட்டிற்குச் செல்லத் தொடங்கினான்.

---

6. அயோத்தியா காண்டம் : நகர்நீங்கு படலம் : 220
7. அயோத்தியா காண்டம் : நகர்நீங்கு படலம் : 221
8. குறுந்தொகை : 124 : 2—4

இதனால் சீதையின் முகமும் அகமும் குளிர இராமன் அவள் பெரிதும் விரும்பும் கணவனாக வாழ்ந்தான் என்பது போதரும்.

பின்னர்க் கங்கைக் கரையில் ஆயிரம் நாவாய்க்குத் தலைவனான குகனைக் காண்கிறான் இராமன் தன்னிடத்துப் பக்தி கொண்ட குகனைப் பாராட்டி இராமன்,

**" என்னுயிர் அனையாய்நீ இளவல்உன் இளையான் இந்**
**நன்னுத லவள் நின்கேள்; நளிர்கடல் நிலம் எல்லாம்**
**உன்னுடை யது; நான்உன் தொழில் உரிமையின் உள்ளேன் "[9]**

என்றான், 'இந்நன்னுதலவள் நின்கேள்' என்று சீதையோடு தன் தோழமையினைத் தெளியவுரைத்த இராமன் கூறலால், இராமன் சீதைமாட்டுக் கொண்டிருந்த மதிப்புப் புலனாகின்றது.

இராமன் காட்டு வழியில் செல்லும்போது வனத்தின் வளங்களைக் காட்டிக் கொண்டே சென்றான். அப்பொழுதெல்லாம் அவன் சீதையை 'மன்றலின் மலி கோதாய்; மயிலியல் மடமானே' என்றும், 'கவினாரும் மாந்தளிர் நறுமேனி மங்கை' என்றும், 'செய்ஞ் ஞிறை நெடு வேலின் நிறம் உறுதிறம் முற்றிக் கைஞ்ஞிறை நிமிர் கண்ணாய்' என்றும், 'அருந்ததி அனையாளே அமுதினும் இனியாளே' என்றும், 'எழுதரு எழிலாளே' என்றும், 'அகில்புனை குழல் மாதே' என்றும் அவளை விளித்து இயற்கைக் காட்சிகளைக் காட்டிச் செல்வது இராமன் சீதைபாற் கொண்டிருந்த பேரன்பினையும் பெருமதிப்பினையும் புலப்படுத்துவனவாம்.

மூவரும் பின்னர் யமுனை நதியில் நீராடி கனி கிழங்கு உண்டு, நீர் அருந்தி தெப்பத்தால் நதியைக் கடந்து தென்கரை வந்த பின்னர், பாலைநிலம் ஒன்று

---

9. அயோத்தியா காண்டம்: குகப்படலம்: 40

குறுக்கிடுகின்றது. நில வெம்மையைச் சீதை தாங்காள் என்று இராமன் எண்ண, அப்பாலை நிலம் சோலைவன மாகமாறியது. 'நீங்கல் ஆற்றலள் சனகி' என்று அண்ணல் நினைந்து தன் அருளால் பாலை நிலத்தைச் சோலை நிலமாக்கியது. சீதையின் மென்மைத் தன்மையினையும் அவள் உறு துயரத்தினைத் துடைக்க வேண்டும் என்று இராமன் கொண்ட அருள் உள்ளத்தினையும் தெரிவிப்ப தாகும்.

சித்திரகூடத்தின் இயற்கை வளங்களை இராமன் சீதைக்குக் காட்டிச் செல்கின்றபோதும் அவள் குண நலன் களைப் புகழ்கிறான். 'வாளும் வேலும் விட்டு அளாயின அனைய கண் மயிலே' என்றும், 'குருநிவாள் எனச் செவ்வரி பரந்த கண் குயிலே' என்றும், 'உவரிவாய் அன்றிப் பாற் கடல் உதவிய அமுதே' என்றும், 'ஆடுகின்ற மாமயிலினும் அழகிய குயிலே' என்றும், 'வில்லி வாங்கிய சிலைஎனப் பொலி நுதல் விளக்கே' என்றும், 'ஒருவு இல் பெண்மை என்று உரைக்கிற உடலினுக்கு உயிரே' என்றும், 'வீறு பஞ்சில் நல்அமிழ்த நெய் மாட்டிய விளக்கே' என்றும், 'சீலம் இன்னது என்று அருந்ததிக்கு அருளிய திருவே' என்றும், 'வில்கொள்வாள் நுதல் விளங்குஇழை இளந் தளிர்க் கொழுந்தே' என்றும், 'நினைத்த போதினும் அமிழ்து ஒக்கும் நேரிழை' என்றும், 'மடந்தைமார்க்கு ஒரு திலகமே' என்றும், 'அலம்பு வார்குழல் ஆய் மயில் பெண் அருங்கலமே' என்றும், 'தெரிவைமார்க்கு ஒரு கட்டளை எனச் செய்த திருவே' என்றும் பாராட்டுவது பெண்ணின் உளத்தைப் பொருந்த உணர்ந்த கணவன் இராமன் என்பதனோடு அப்பெண்மையினைப் போற்றவுஞ்செய்யும் பண்பாளன் என்பதும் விளங்கா நிற்கும். பெண்கள் பொதுவாகப் புகழ்ச்சியை விரும்புபவர்கள். இதனை உணர்ந்து சீதையைப்

புகழும் கூற்றில் உண்மையிலேயே உளம் ஒன்றிய நிலை காணப்படுவதனை அறியலாம்.

மேலும் சீதை கான்வழி நடக்க நேர்ந்தமையை எண்ணி,

" மேவு கானம் மிதிலையர்கோன் மகள்
பூவின் மெல்லிய பாதமும் போந்தன" [10]

என்று கூறி வருந்துகின்றான். இதனால் மனைவியின் துன்பம் கண்டு உருகும் உயர் உளத்தன் இராமன் என்பது தெரிய வரும்.

கானகத்தில் காமவெறியோடு வந்த சூர்ப்பணகையின் காதலை எற்றுக் கொள்ளாமல் உறுதியான உள்ளத்தோடு இருந்தான் இராமன்—'சீதை ஓர் அரக்கி' என்று சூர்ப்பணகை சீதையை வெருட்டிய நிலையில் 'பருவக் கால மஞ்சிடை வயங்கித் தோன்றும் பவளத்தின் வல்லி என்ன குஞ்சரம் அனைய வீரன் குவவுத்தோள்' தழுவிக் கொண்டாள் சீதை. இதனால் சீதைக்கு உற்ற கணவனாக விளங்கி, அவள் உலைவிடத்து இராமன் ஆற்றிய தேறுதல் நிலை தெளிவாகின்றது. பின்னர்ச் சூர்ப்பணகையை அச்சுறுத்தி அங்கிருந்தும் அனுப்பிவிட்டு, மின்னொடு தொடர்ந்து செல்லும் மேகம் போல், மிதிலைவேந்தன் பொன்னொடும் புனிதனும் இராமன் பூம்பொழிற் சோலை புகுந்தான்.

சூர்ப்பணகையின் சொற்படி இராமன் மீது படையெடுத்துவந்த கரன் முதலிய அரக்கரை வெல்ல இராமன் போர்மேற் செல்லும்போதும், தன் இளவலாம் இலக்குவனை விளித்து, 'காத்தி தையலை' என்று சீதைக்குக் காவல் வைத்துவிட்டே சென்றான் என்கின்ற செய்தி

---

10. பாலகாண்டம்: சித்திரகூடப் படலம்: 50

பொன்னைப்போல் சீதையை அவன் போற்றினன் என்பதனைப் புலப்படுத்தும்.

இராவணன் ஏவலால் மாய மானாக மாரீசன் வர, அப்பொன் மானின் அழகில் மனத்தைப் பறிகொடுத்த சீதை அம் மானைப்பிடித்துத் தருமாறு இராமனைக் கேட்டாள். அது மாயமான் என்றான் இளையவன் இலக்குவன். ஆயினும் அதுபொழுது சீதை 'நாயக! நீயே பற்றி நல்கலை போலும்' என்று சிறிது சீறிப் பேசி அப்புறம் போனாள். சீதையின் சிறு சீறலையும் கண்டு மனம் பொறுக்காதவன் இராமன். எனவே போன சீதையின் புலவியை நோக்கி, இராமன் தன் தம்பியைப் பார்த்து "பொலன்கொள் தாராய்! மான் இது நானே பற்றி விரைவில் வருவேன்; அதுவரை காட்டுமயிலின் மென்மை கொண்ட சீதையைக் காத்து இருப்பாயாக!" என்று கூறி வேலும் வில்லும் தாங்கி மானின் பின்னே சென்றான்

இராமனின் இவ் இளகிய செயலைக் கவிச் சக்கரவர்த்தி கம்பர்,

" மந்திரத்து இளையோன் சொன்ன
வாய்மொழி மனத்துக் கொள்ளான்
சந்திரற்கு உவமை சான்ற
வதனத்தாள் சலத்தை நோக்கி
சிந்துரப் பவளச் செவ்வாய்
முறுவலன், சிகரச் செவ்விச்
சுந்தரத் தோளி னன்அம்
மானினைத் தொடர லுற்றான்" [11]

என்று குறிப்பிட்டுள்ளார். அரிய ஆலோசனை வழங்கும் இலக்குவன் சொல்லையும் மீறி, சந்திர வதன மன்ன

11. ஆரணிய காண்டம்: மாரீசன் வதைப் படலம்: 69

தையலாம் சீதை சொல் தேறி இராமன் மாய மான் பின் சென்ற நிலை மனைவியின் விருப்பத்தை மறுத்து நிறை வேற்ற எண்ணிய கணவனின் உள்ளத்தைக் காட்டு கின்றது அன்றோ! சீதை சிறிதும் வருந்தப் பொறுக்காதவன் இராமன் என்பதும் இதனால் புலனாகின்றது.

இராமன் அம்புவிட்ட அளவில் மாரீசன் 'இலக்குமணா' என்று இராமன் குரலிற் கூறி மடிகிறான். மாரீசனின் மாயக் குரலே என்று தெளிந்த இராமன் இக்குரல் கேட்டு மழைக் கண் ஏழை சீதை அயர்வு எய்துவாள் என்று எண்ணி உள்ளம் வருந்தி விரைந்து பன்னசாலைக்குத் திரும்பினான். இச்செய்தி சீதையின் உள்ளத்தை உள்ளவாறே உணர்ந் தவன் இராமன் என்பதனை உணர்த்தும்.

பன்னசாலையோடு சீதையைக் காணாத இராமன் உயிர் பிரிந்த யாக்கையென நின்றான். திகைத்து நின்றான். அப்போது மண் சுழன்றது. ஏழு கடல்களும் சுழன்றன. விண் சுழன்றது. விரிஞ்சன் சுழன்றது. சூரியனும் சந்திரனும் சுழன்றனர்.

இவ்வாறு சுழன்று மனம் மாழ்கி நின்றான் இராமன்: இது சீதைபால் இராமன் செலுத்திய ஆராக்காதலைப் புலப் படுத்துவதாகும்.

இதன் பின்னரெல்லாம் சீதையை எண்ணி ஏங்கும் நிலைக்கு வந்துவிடுகின்றான் இராமன். உறக்கம் அவன் விழிகளைத் தழுவவில்லை, உண்டி முதலியனவற்றில் பற்று இல்லை. 'வாங்கு வில்லன் வரும் வரும் என்று இருபாங்கும் நீள்நெறி பார்த்தனளோ' சீதை என்றும், இராவணன் 'நில் நில்' என்று நெருங்கியபோது அவள் என் நினைந் தனளோ என்றும் கூறி வெதும்பினான். 'வேண்டுமோ

எனக்கு இன்னமும் வில்?' என்று மொழிந்து வில்லை நோக்கி நகுதல் புரிந்தான் 'வேத வேள்வி விதி முறை மேவிய சீதை என்வயின் தீர்ந்தனளே' என்று ஆவி புழுங்க அழுங்கி, வாயும் நெஞ்சும் புலர மயங்கினான். இந்நிலையில்,

" பொழிலை நோக்கும் பொழில் உறையும்
புள்ளை நோக்கும்; பூங்கொம்பின்
எழிலை நோக்கும் இளமயலின்
இயலை நோக்கும்; இயல்பாளுள்
குழலை நோக்கிக் கொங்கை இணைக்
குவட்டை நோக்கி, அக்குவட்டின்
தொழிலை நோக்கி, தன்னுடைய
தோளை நோக்கி, நாள் கழிப்பான்" [12]

" வெள்ளம் சிலம்பு பாற்கடலின்
விரும்பும் துயிலை வெறுத்தளியும்
கள்ளும் சிலம்பும் பூங்கோலக்
கற்பின் கடலில் படிவாற்குப்
புள்ளும் சிலம்பும் பொழில் சிலம்பும்
புனலும் சிலம்பும் புனைகோல
முள்ளும் சிலம்பும் சிலம்பாவேல்
உயிருண் டாகும் வகையுண்டோ" [13]

என்றுபாடி இராமனன் புலம்பினான்.

பம்பைப் பொய்கைக் கரையில் இராமன் சீதை பிரிவை காணாப் பெரிதும் துன்புறுகின்றான்.

" விரிந்த குவளை சேதாம்பல்
விரைமென் கமலம் கொடிவள்ளை
தரங்கம் நெருங்கு வரால் ஆமை
என்று இத்தகையதமை நோக்கி

12. ஆரணிய காண்டம் : அயோமுகிப் படலம் : 31
13. ஆரணிய காண்டம் : அயோமுகிப் படலம் : 28

**மருந்தின் அனையாள் அவயவங்கள்**
**அவை நிற்கண்டேன் வல்லரக்கன்**
**அருந்தி அகல்வான் சிந்தினவோ**
**ஆவி உரைத்தி ஆம்அன்றே''** [14]

என்று பெரிதும் துன்புறுகின்றான்.

சீதை இட்ட அணிகல முடிப்பைக் கொணர்ந்து சுக்கிரீவன் காட்ட, 'எரிகனல் எய்திய மெழுகின் யாக்கை போல்' உருகினான்.

சுக்கிரீவனும் தன்போல் தன் மனைவியை வாலியின் வலிமையால் பிரிந்துள்ளான் என்பதனைக் கேட்ட அளவில்,

**" பொருந்துநன் மனைக்கு உரிய பூவையைப்**
**பிரிந்துளாய் கொலோ நீயும் பின்''** [15]

என்றான். சுக்கிரீவன் வாலிக்குப் பயந்து அவனுக்கு உரிய தாரத்தையும் துறந்து வாழ்கின்றான் என்று அனுமன் கூறக் கேட்ட இராமன், 'பரிவிலன் ஒருவன் தன் இளையோன் தாரம் வெளவினன் என்ற சொல் தரிக்குமாறு உளதோ?'' எனக்கொதித்தெழுந்தான். வில்லிடை வாளியைப் பூட்டி வலியுடைய வாளியைக் கொன்று நின் தாரத்தை உனக்கு இன்றே உறுதியாகத் தருவேன் என மொழிகின்றான் இராமன்.

இந்நிலை ஒருவன் ஒருத்தியாக வாழும் இராமனின் ஏக பத்தினி விரதத்தினை நன்கு காட்டும். தன் தந்தை தயரதன் பலதார மணம் கொண்டவனா யிருந்தும் இராமன் இறுதிவரை ஏகபத்தினி விரதத்தினைக் காத்து ஆணுலகிற்கு ஓர் எடுத்துக்காட்டாகத் துலங்கினான்.

மறைந்திருந்து இராமன் வாலியைக் கொல்ல, வாலி

14. கிட்கிந்தா காண்டம் : பம்பை வாவிப் படலம் : 25
15. கிட்கிந்தா காண்டம் : நட்புக்கோட் படலம் : 35

'' கோவியல் தருமம் உங்கள்
குலத்துதித் தோர்கட் கெல்லாம்
ஓவியத்து எழுத வொண்ணு
உருவத்தாய் உடைமை யன்றே!
ஆவியைச் சனகன் பெற்ற
அன்னத்தை அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னர்
திகைத்தினே போலும் செய்கை'' [16]

என்று சீதையைப் பிரிந்த பேதைமயால் இராமன் மறைந்திருந்து அம்பெய்தினனே எனக் கேட்கிருன். சீதையை இழந்த இராமனின் வருத்தம் வாலி கூற்றுலும் புலப்படுத்தப் படுகின்ற தன்றே?

இராமன் பின்னரும் சீதையின் பிரிவால் வருந்தி, மேகம் முதலியவற்றை நோக்கி இரங்கிக் கூறினுன்.

அசோகவனத்தில் சீதையைக் காண்கிருன் அனுமன். இராம இலக்குவரைப்பற்றிச் சீதை வினவ, 'மாய மானைக் கொன்று பன்னசாலே திரும்பிய இராமன் நின் திருவடிவு காணுது உயிர் ஊசலாடப் பல துன்பங்கள் பட்டான்' என்று அனுமன் கூறினுன். மேலும் அனுமன்,

'' ........................ ......எம்கோன், ஆகம்
பூண்டமெய் உயிரே போகப் பொய்யுயிர் போல நின்ற
ஆண்டகை நெஞ்சி னின்றும் அகன்றிலே அழிவுண் டாமோ
ஈண்டுநீ இருந்தாய்; ஆண்டு அங்கு எவ்வுயிர் விடுமிராமன்'' [17]

என்று சீதையிடம் கூறுகிருன். 'சீதையாகிய உயிர் அசோகவனத்தில் இருக்க, இராமன் காட்டில் அங்கு உயிர் விடுதல் எங்ஙனம்?' என்று கேட்கும் அனுமன் கூற்று, இராமன் தன் மனைவி சீதைமேல் ஆருயிரையே வைத்திருந்

16. கிட்கிந்தா காண்டம் : வாலிவதைப் படலம் : 84
17. சுந்தர காண்டம் : உருக்காட்டுப் படலம் : 78

தான் என்பதனைக் காட்டும். 'இன்னுயிர் இன்றி ஏகும் இயந்திரப் படிவம்' ஒத்து இராமன் சீதையைப் பிரிந்த பின்னர் இயங்கி வந்ததாகக் கூறுகிறான் அனுமன்.

" அருந்தும் மெல்லடகு யாரிட அருந்துமென் றழுங்கும்
விருந்து கண்டபோது என்னுறு மோவென்று விம்மும்
மருந்தும் உண்டுகொல் யான் கொண்ட நோய்க்கென்று
மயங்கும்
இருந்த மாநிலம் செல்லரித்தெழவும் ஆண்டு எழாதாள்."[18]

சீதையின் இக்கூற்றால், இராமன் நற்கணவனாக அமைந்து சீதையுடன் இல்லறத்தைத் திறம்பட நடத்தியவன் என்பது விளங்கும்.

இராமனுக்குச் செய்தி கேட்ட மாருதியிடம்,

" வந்து எனைக்கரம் பற்றிய வைகல்வாய்
இந்த இப்பிற விக்குஇரு மாதரைச்
சிந்தை யாலும்தொ டேன்என்ற செவ்வரம்
தந்த வாறு திருச்செவி சாற்றுவாய்" [19]

என்று வேண்டினாள் சீதை. இதனால் இராமன் மிகச்சிறந்த உத்தமக் கணவன் என்பது விளங்கும். மேலும் சீதை,

" ஈண்டு நானிருந்து இன்னுயிர் மாயினும்
மீண்டு வந்து பிறந்துதன் மேனியைத்
தீண்ட லாவதொர் தீவினை தீர்வரம்
வேண்டி னாள்தொழுது என்று விளம்புவாய்" [20]

என்று கூறியதிலிருந்து மறுபிறவியிலும் சீதை இராமனைக் கணவனாக விரும்பிய நிலையில் இராமன் வாழ்வு நடாத்திய நற்பண்பு புலனாகின்றது.

---

18. சுந்தர காண்டம் : காட்சிப் படலம் : 15
19. சுந்தர காண்டம் : சூடாமணிப் படலம் : 35
20. சுந்தர காண்டம் : சூடாமணிப் படலம் : 36

"இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரென் கணவர்
யானா கியரென் நெஞ்சுநேர் பவளே" [21]

என்ற அம்மூவனின் குறுந்தொகைத் தலைவி போன்றே சீதையின் மனநிலை உளது.

மேலும் சீதையைக் கண்டுவந்த செய்தியை அனுமன் இராமனிடம் கூறும்பொழுது,

"கண்ணினும் உளைநீ தையல்
கருத்தினும் உளைநீ; வாயின்
எண்ணினும் உளைநீ, கொங்கை
இணைக் குவைதன்னின் ஓவாது
அண்ணல்வெங் காமன் எய்த
மலரம்பு தொளைத்த ஆறாப்
புண்ணினும் உளைநீ, நின்னைப்
பிரிந்தமை பொருந்திற்று ஆமோ?" [22]

என்கின்றான். இதனால் சீதையின் கண்ணிலும் கருத்திலும் இதுவரை இலங்கிய நல்ல கணவன் இராமனே என்பது போதரும்.

சீதை தந்த சூடாமணியைப் பெற்ற இராமன், திருமணக் காலத்தில் பற்றப்பட்ட பிராட்டியின் திருக்கை என்னும்படி உவகை கொண்டனன்.[23]

இதன்பின்னரும் பல சமயங்களில் இராமன் சீதையை எண்ணித் துயருறுகின்றான்.

இராவணன், சீதை முன் நிலத்தில் விழுந்து வணங்கித் தன்னை ஏற்றுக் கொள்ளும்படி வேண்ட, கீழே கிடந்த அற்பப் பொருள் ஒன்றை நோக்கிச் சீதை உரைப்பாளாய்,

---

21. குறுந்தொகை : 49 : 3—5
22. சுந்தர காண்டம் : திருவடி தொழுத படலம் : 63
23. சுந்தர காண்டம் : திருவடி தொழுத படலம் : 82

இராவணனுக்குத் தன் உள்ளக் கருத்தை உரைக்கத் தொடங்கினுள் :

" ஊனிலா யாக்கை பேணி
உயர்புகழ் சூடாது உன்முன்
நாணிலாது இருந்தேன் அல்லேன்
நவையறு குணங்கள் என்னும்
பூணெலாம் பொறுத்த மேனிப்
புண்ணிய மூர்த்தி தன்னைக்
காணலாம் இன்னும் என்னும்
காதலால் இருந்தேன் கண்டாய்'' [24]

என்ற சீதையின் கூற்றில் இராமனிடத்துச் சீதை கொண்ட ஆரா அன்பு புலப்படுகிறது. தன் கணவன் வீரப் பண்பு மிகுந்த புகழ் மேம்பட்டவனுக விளங்க வேண்டும் என்பதில் மகளிர்க்கு வேட்கை மிகுதி. இம்முறையில் சீதையின்

" அல்லன் மாக்கள் இலங்கைய தாகுமோ
எல்லை நீத்த வுலகங்கள் யாவுமென்
சொல்லி ஞற்சுடு வேனது தூயவன்
வில்லி ஞற்றற்கு மாசென்று வீசினேன்'' [25]

என்ற கூற்று காண்க.

இதனையே பின்னரும், 'என் தன் பொருசிலை மேகம் தன்னைக் காணலாம் என்னும் ஆசை தடுக்க என் ஆவி காத்தேன் [26] என்று சீதை திரிசடையிடம் மொழி கின்ருள்.

இந்திரசித்து சீதையைத் தன் வாளால் வெட்டிக் கொன்ருன் என்ற செய்தியைக் கேட்ட அளவில் இராமன்,

---

24. யுத்த காண்டம் : மாயா சனகப் படலம் : 22
25. சுந்தர காண்டம் : சூடாமணிப் படலம் : 18
26. யுத்த காண்டம் : சீதை களங்காண் படலம் : 31

" துடித்திலன் உயிர்ப்பும் இல்லன் இமைத்திலன் துள்ளிக் கண்ணீர்
பொடித்திலன் யாதும் ஒன்றும் புகன்றிலன் பொருமி உள்ளம்
வெடித்திலன்; விம்மிப் பாரின் வீழ்ந்திலன் வியர்த்தான் அல்லன்
அடுத்துள துன்பம் யாவும் அறிந்திலர் அமர ரேயும்" [27]

" சித்திரத் தன்மை உற்ற சேவகன் உணர்வு தீர்ந்தான்
மித்திரர் வதனம் நோக்கான்; இளையவன் வினவப் பேசான்
பித்தரும் இறைபொ ருதபேரபி மானம் என்னும்,
சத்திரம் மார்பில் தைக்க உயிர் இலன் என்னச்சாய்ந்தான்" [28]

இத்தகு அன்பு கொண்ட இராமன் இறுதியில் சீதையைத் தீயில் புகச் செய்தது ஏன் என்ற கேள்விக்குத் துறக்க உலகத்திலிருந்து வந்த தசரதன் விடை தருகிறான். அது வருமாறு :

" அங்கை மற்றுநின் கற்பினை உலகுக்கு நாட்ட
அங்கி புக்கிடு என்று ணர்த்திய அது மனத்து அடையேல்
சங்கை உற்றவர் பெறுவது உண்டு அதுசரதம்
கங்கை நாடுடைக் கணவனை முனிவுறக் கருதேல்"

பொன்னைத் தீயிடைப் பெய்தல் அப்பொன்னுடைத் தூய்மை
தன்னைக் காட்டுதற்கு என்பது மனக்கொளல் தகுதி
உன்னைக் காட்டினன் 'கற்பினுக்கு அரசி' என்று, 'உலகில்
பின்னைக்காட்டுவது அரியது' என்று எண்ணி இப்பெரியான்"

பெண்பி றந்தவர் அருந்ததி யேமுதற் பெருமைப்
பண்பி றந்தவர்க் கருங்கல மாகிய பாவாய்
மண்பி றந்தக முனக்கு நீ வானின்றும் வந்தாய்
எண்பி றந்தநின் குணங்களுக் கினியிழுக் கிலையால்." [29]

இவ்வாறு தொடக்கம் முதல் இறுதி வரை இராமன் சீதையின் சிறந்த கணவனாக இராமாயணத்தில் காட்சி தருகின்றான் என்பது நன்கு போதரும்.

---

27. யுத்த காண்டம். மாயா சீதைப் படலம் : 58
28. யுத்த காண்டம் : மாயா சீதைப் படலம் : 60
29. யுத்த காண்டம் : பிராட்டி திருவடி தொழுத படலம் ; 108—110

# 18

# பண்டைய உரைநடை -
# இடைக்கால உரையாசிரியர்கள்

'திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும் மங்குல்கடல் இவற்றோடும் பிறந்த தமிழ்'[1] தொன்மைச் சிறப்பும் வரலாற்றுப் பெருமையும் கொண்டது; ஏறத்தாழ முப்பது நூற்றாண்டுகளாக முறையான இலக்கண வரம்புடனும், உயர்வான இலக்கியச் செல்வங்களுடனும் அமைந்து வருவது; இத்தகு தூய நாகரிகமும் தொன்மைச் சிறப்பும் கொண்டு மிளிரும் தமிழ்மொழியில் இதுகாறும் எழுந்துள்ள இலக்கியங்களோ எண்ணற்றவையாகும். இன்று கிடைக்கும் நூல்களில் காலத்தால் முந்திய நூல் தொல்காப்பியமே ஆகும்,

இக்காலம் போன்று விஞ்ஞான வசதிகள் அமைந்திராத பண்டைய நாளில் - ஏடும் எழுத்தாணியுமே விளங்கிய அந்நாட்களில் உரைநடையினும் செய்யுளே பெரிதும் போற்றப்படுவதாயிற்று. உரைநடையினும் செய்யுளே மனப்பாடம் செய்வதற்கு எளிதாகவும் அமைகின்ற காரணத்தால் அன்று உரையினும் செய்யுளே பெரிதும் வழக்கில் பயிலப் படுவதாயிற்று. நூல்கள் தோன்றிய காலத்தில் அவை எல்லோர்க்கும் எளிதில் விளங்கக் கூடிய நிலையில் இருந்திருக்கலாம்.

---

1. பாரதிதாசன் கவிதைகள்; முதல் தொகுதி : சங்கநாதம்

மூல நூல்களையே அனைவரும் கற்று மகிழ்ந்த நிலை இருந்தது என்பதனைப் பேராசிரியர், தம் தொல்காப்பியப் பொருளதிகார மரபியல் உரையில், "உரையின்றிச் சூத்திரத்தானே பொருள் நிகழ்ந்த காலமும் உண்டு என்பதாம்"[2] என்றும், "உதாரணங் காட்டல் வேண்டாமையை உணர்ந்து உரைநடந்த காலமும் உடையவாகும் முற்காலத்து நூல்கள் என்பது கருத்து"[3] என்றும் எழுதியுள்ள கருத்துக்கள் இக்கொள்கையினை வலியுறுத்துவனவாகும்.

தொடக்ககாலத்தில் எழுந்த உரை நூல்கள் சுருக்கமான முறையிலேயே அமைந்திருக்கக் காணலாம். "விரிப்பின் பெருகும்; விரிவஞ்சி விடுத்தாம்; வந்தவழிக் காண்க; வல்லார்வாய்க் கேட்டுணர்க" என்றெல்லாம் உரையாசிரியர்கள் இடையிடையே எழுதியுள்ளமை கண்டு அக் காலத்தே எழுதுவதில் இருந்த இடர்ப்பாடுகளை ஓரளவு உணரலாம். செவிவழிச் செல்வமாக ஆசிரியர் மாணவர் பரம்பரையாக அறிவு வளர்ந்து வந்த காலத்தில் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் முறை வழக்கில் இருந்தது. அரிய சொற்களுக்குப் பொருளும், சொற்களைக் கொண்டு கூட்டி முடிக்கும் வகையும், ஒரு சில வரலாற்றுக் குறிப்புக்களையுமே தொடக்கத்தில் சுருக்கமாக உரையாசிரியர்கள் எழுதிவைத்தார்கள் எனலாம். ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு முதல் தொண்ணூறு பாடல்கள், புறநானூறு, பெருங்கதை, சிலப்பதிகாரம் முதலியவற்றிற்கு முதற்கண் எழுந்த உரைகள் எல்லாம் சுருக்கமான முறையில் அமைந்த குறிப்புரைகளாகவே

2. தொல்காப்பியம்; மரபியல் 98 உரை
3. தொல்காப்பியம்; மரபியல் : 101 உரை

இலங்கக் காணலாம். சில நூற்களுக்குக் குறிப்புரை எழுதியவர்களின் பெயர்கள் கூட அறியப்படமுடியாத நிலையில் புகழ், பெயர் விரும்பாத தூய பெரியவர்களாகத் துலங்குகின்றார்கள் பண்டைய உரையாசிரியர்கள்

காலஞ் செல்லச் செல்லக் கருத்துக்கள் வளர்பிறையென வளர்ந்து பெருகின. குறிப்புரை யளவில் அமைந்திருந்த உரைகள், விளக்கமும் மேற்கோளும் கொண்டு விரிவடைந்தன. நூலாசிரியர் சிலர் தாம் எழுதிய நூல்களுக்குத் தாமே உரையுங் கண்டனர். தமிழில் புறப்பொருள் வெண்பாமாலை இயற்றிய சேரன் ஐயனாரிதனார் புறப்பொருள் இலக்கணத்தைக் கூறும் நூற்பாக்கள் எழுதி, அவற்றின் கீழே துறைகளை விளக்கும் கொளுக்களை அமைத்து, அவற்றின் கீழே ஒவ்வொரு துறையினையும் விளக்கும் வெண்பா அல்லது மருட்பாவினையும் இயற்றிப் பின்னர் உரையும் கண்டுள்ளார். ஈண்டு, குறிக்கத்தக்க மற்றொரு செய்தி உரையாசிரியர் சிலர் எழுதிய உரை விளக்கங்கள் காலப் போக்கில் பின்வந்தோர்க்கு விளங்காமற்போக உரைக்கு உரை எழுதவேண்டிய தேவை ஏற்பட்டு, அதன் விளைவாய்ப் பல உரைகளும் தமிழில் தோன்றின.

இனி, இடைக்கால உரையாசிரியர்களாக இளம்பூரணர், அடியார்க்கு நல்லார், சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் முதலான உரையாசிரியர்களைப் பற்றிய செய்திகளை ஒருவாறு காண்போம்.

உரையாசிரியர்கள் நந்தமிழ் மொழிக்குச் செய்துள்ள தொண்டு அளப்பரிதாம் காலம் பல கடந்தும் கன்னித்தமிழ் புகழ் குன்றாது பொலிந் திலங்குவதற்கு உரையாசிரியர்கள் ஆற்றிய பணி சொல்லுந்தரமன்று.

இலக்கணக்கொள்கைகளை இனிது விளக்கி, மொழித் திறத்தினை முட்டறுத்து, இலக்கியச் செல்வங்களை இணைத்துக் காட்டி, தமிழ்ப் பண்பாட்டினையும் மரபினையும் விடாது குறிப்பிட்டு விளங்க உரைத்தவர்கள் உரையாசிரியர்களே யாவர். நூலாசிரியரின் உள்ளக்கருத்தினை நுண்ணிதின் உணர்ந்து, தொகுத்தும் வகுத்தும் விரித்தும் முறைப்படுத்தியும் தெளிவுபெற எடுத்தெழுதும் புலமை சான்றவர்களாய் உரையாசிரியர்கள் விளங்கினர். தாம் கற்றுத் துறைபோய துறைகளில் அமைந்துள்ள நூல்களுக்கு நல்லுரை கண்டனர். நடுவு நிலைமை சான்ற நெஞ்சத்தோடு பல சமய உண்மைகளையும் கண்டு தெளிந்து உலக வழக்கும் உடன் உணர்ந்தவரா யிருந்தனர் உரையாசிரியர்கள். பல்கலைச் சிறப்பும், கல்வி கேள்விகளில் மேம்பாடுங் கொண்டு இவர்கள் நூல்களுக்கு உரை கண்ட சிறப்பால் இன்று புகழ்பூத்து நிற்கிறார்கள், தத்தமக்கே உரிய நடையினைக் கையாண்டு, தண்டமிழிற்குத் தளராது தொண்டாற்றிய நல்லராம் இடைக்கால உரையாசிரியர்களை இனி முறையே காண்போம்.

ஒல்காப் புகழ்த் தொல்காப்பியத்திற்கு உரைகண்ட பெருமக்கள் பலர்; இவர்களில் காலத்தால் முந்தியவர் இளம்பூரணர் ஆவர். இவர் 'உரையாசிரியர்' என்றே பின்வந்தோரால் சிறப்பாக அழைக்கப் பெறுகின்றார். இவரை மயிலைநாதர் 'உளங்கூர்க் கேள்வி இளம்பூரணர்' என்றும், 'ஓதமில் மாதவன்' என்றும், இலக்கணக் கொத்து ஆசிரியர் 'உளங்கூர் உரை ஆய் இளம்பூரணர்' என்றும் சிறப்பித்துக் கூறியுள்ளனர். 'இளம் பூரண அடிகள்'' என்றும் இவர் அழைக்கப்பெறுவது கண்டு இவரைச் சமணர் என்பர். 'பிறர் உட்புகுந்து காண முடியாவண்ணம் இருண்டு கிடந்த தொல்காப்பியம்

என்னும் சரக்கறையுள் தம் அறிவென்னும் அவியா விளக்கைக் கொண்டு துருவி, ஆங்கே குவிந்து கிடந்த அரதனக் குவியல்களை உலகிற்கு முதலில் விளக்கிக்காட்டிய பெருந்தகையாளர்"[4] என்று இவரைத் தமிழறிஞர் பாராட்டுவர். தொல்காப்பியமாகிய பழம்பெரும் இலக்கண நூல் தோன்றிய பல்லாண்டுகளுக்குப் பிறகு அந்நூலுக்கு உரை காண்பதென்பது அரிதானதோர் செயலாகும்.

இவருடைய உரைநடை தெளிந்த ஆழமான நீரோடை போன்று இருக்கும். எளிமையும் சுருக்கமும் இனிமையும் தெளிவும் கொண்ட உரையே இளம்பூரணர் உரையாகும். ஆரவாரத் தன்மையினை இவர் உரையில் பார்ப்பது அருமையாகும். பிறர் கருத்தை மதிக்கும் பெருந்தகைமையும், நடுவுநிலை பிறழாத நஞ்னெஞ்சமும் புலத்துறை முற்றிய புலமைப் பாங்கும் இவர் உரை முழுவதும் வெளிப்படக் காணலாம். தமிழ் நெஞ்சம் சான்ற இவரைப் பிற்காலத்துச் சிவஞான முனிவர் "தமிழ்நூல் ஒன்றே வல்ல உரையாசிரியர்" என்று பாராட்டியுள்ளார். இளம்பூரணர் உரைநடையின் எளிமையும் தெளிவும் பின்வரும் பகுதி கொண்டு அறியலாம்:

"இவ்வறுவகைப் பருவமும் அறுவகைப் பொழுதும் இவ்வைந்திணைக்கு உரியவாறு என்னையெனின், சிறப்பு நோக்கி என்க. என்னை சிறந்தவாறு எனின் முல்லையாகிய நிலனும் வேனிற்காலத்து வெப்பம் உழந்து மரனும் புதலும் கொடியும் கவினழிந்து கிடந்தன புயல்கள் முழங்கக் கவின் பெறும் ஆதலின், அதற்கு அது சிறந்ததாம். மாலைப்பொழுது இந்நிலத்திற்கு இன்றியமையாத முல்லை மலரும் காலம்

4. மு. இராகவையங்கார்: ஆராய்ச்சித் தொகுதி: ப. 398

ஆதலானும், அந்நிலத்துக் கருப்பொருளாகிய ஆனிரை வரும் காலம் ஆதலானும் ஆண்டுத் தனி யிருப்பார்க்கு இவை கண்டுழி வருத்தம் மிகுதலின் அதுவும் சிறந்தது ஆயிற்று.''[5]

இவர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை கண்டுள்ளார். இவ்வுரை 'இளம்பூரணம்' என்று வழங்கப்பெறும். இவர் காலம் பதினொன்ரும் நூற்ருண்டாகும்.

தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரை கண்ட உரையாசிரியர்கள் ஐவர் ஆவர். இளம்பூரணர், சேனுவரையர், நச்சினர்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடர் ஆகிய ஐவர் உரையினில் சேனுவரையர் உரையே சிறப்புடைத்தென்பர் அறிஞர். இவ்வுரை 'சேனு வரையம்' எனவும் வழங்கும். சேனுவரையர் உரையெழுதியதாக வேறு ஒரு நூலும் தெரிய வரவில்லை. சேனு வரையர் என்ற சொல் படைத்தலைவர் என்ற பொருளைத் தரும். இவர் 'வடநூற் கடலை நிலைகண் டுணர்ந்த சேனுவரையர் என்று கூறப்படுகின்ருர். அதற்கேற்பவே வடநூல் மரபை யொட்டிச் சிலவிடங்களில் இவர் பொருந்தாவுரை புகன்றுள்ளார்.

இவருடைய உரை திட்ப நுட்பஞ் செறிந்தது; ஆராய்ச்சி வன்மையும் கருத்துத் தெளிவும் புலமைச் சிறப்பும் கொண்டு மிளிர்வது. தருக்க நூல்முறை வழுவாமல் தடைவிடைகளான் தம் கருத்துக்களைச் சேனுவரையர் நிலைநாட்டியுள்ளார்; ஆற்றல் சான்ற சொற்களைக் கையாண்டு, ஆழமான பொருளை உணர்த்திப் பன்முறை பயின்ருர்க்கே பொருள் விளங்கும் நிலையில் இவர் உரை அமைந்திருக்கக் காணலாம். சான்ருக, ''பண்போடு இவற்றிடை வேற்றுமை என்னை எனின், இன்மை பொருட்கு மறுதலையாகலின்,

5. தொல்காப்பியம் ; அகத்திணையியல் : நூ 12 உரை

பொருளின்கண் கிடக்கும் பண்பு எனப்படாது! அன்மையும் உண்மையும் பண்பிற்கும் ஒத்தலின் பண்பு எனப்படா; என்னை? குணத்திற்குக் குணம் இன்மையின்'' என்று இவர் கண்டுள்ள உரைவிளக்கம் ஆழ்ந்து காணுவதற்குரியது.[6] இவர் தம் உரையால் அக்கால ஊர்கள், சாதிப்பிரிவுகள், போர் பற்றிய செய்திகள், மகளிர் மாண்புகள், கலைபற்றிய விளக்கங்கள், உழவு மற்ற பிறதொழில் வளங்கள் முதலியன விளங்கக் காணலாம்.

தென்பாண்டி நாட்டு ஆற்றூரில் வாழ்ந்த இவர் பதின்மூன்றும் நூற்றுண்டைச் சேர்ந்தவர் என்பது கல்வெட்டுச் செய்தி கொண்டு அறியலாம்,

போாசிரியர் என்னும் பெயரில் உரையாசிரியர் சிலர் உள்ளனர் என்பர். பேராசிரியர் தொல்காப்பியத்திற்கு உரை கண்டவர் என்பர். ஆயினும் இன்று அவ்வுரை முழுதும் கிடைத்திலது. தொல்காட்பியப் பொருளதிகாரத்தின் மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் முதலிய நான்கு இயல்களுக்கு மட்டுமே இவருரை காணப்படுகின்றது. இவர் தம் இயற்பெயர் யாதெனத் தெரியவில்லை. இவர் பேரறிவின் பெருந்திறத்தினை வியந்து பேராசிரியர் எனப் பின்வந்தோரால் வழங்கப்பெற்றிருக்கலாம். மதுரை ஆசிரியர் என்றும் இவரை அழைப்பர். இவர் உரையில் முச்சங்கத்தைப்பற்றிய செய்திகளும், சில வரலாற்றுக் குறிப்புக்களும் அமைந்திருக்கக் காணலாம்.

இவர் உரைநடை நயம் வாய்ந்தது; செப்பம் பொருந்தியது; சுருங்கச் சொல்லல், தெளிவுறுத்தல் என்னும் நலஞ்சான்றது. சில சொற்களுக்கு இவர் உரை காணும் நயமும் ஆராய்ச்சி வன்மையும் வியக்கத்

---

6. தொல்காப்பியம் ; சொல்லதிகாரம் : நூ 214 உரை

தக்கது. சான்றாக, 'வறுமை' என்னும் சொல்லுக்குப் 'போகம் துய்க்கப் பெறாத பற்றுள்ளம்' என்றும்[7] 'வனப்பு' என்னும் சொல்லுக்குப் 'பெரும்பான்மையும் பல உறுப்புத் திரண்டவழிப் பெறுவதோர் அழகு'[8] என்றும், 'மொழி பெயர்ப்பு' என்பதற்குப் 'பிறபாடையாற் செய்யப்பட்ட பொருளைத் தமிழ் நூலாகச் செய்வது' என்றும்,[9] 'அரற்று' என்னும் சொல்லிற்கு, 'அழுகையன்றிப் பலவும் சொல்லித் தன் குறைகூறுதல்'[10] என்றும் பொருள் விடுத்துள்ள பான்மை இவர்தம் நுண்மாண் நுழை புலத்தினை நுவலா நிற்கும்.

குறுந்தொகைக்கும் திருக்கோவையாருக்கும் உரை கண்டவர் பேராசிரியர் என்பர். குறுந்தொகை உரை இன்று கிடைக்கவில்லை. மணிவாசகப் பெருந்தகையார் எழுதிய திருக்கோவையாருக்குப் பேராசிரியர் கண்ட உரை இழுமென் மொழியால் விழுமிய பொருளும் கொண்ட சொல்லோவிய மாகத் துலங்குவதாகும். எடுத்துக் காட்டாகக் கீழ்வரும் பகுதியினைக் காண்க:

"செவிலிக்குத் தோழி அறத்தொடு நிற்றல் என்பது. வெறி விலக்கி நிற்ப, நீ வெறி விலக்குதற்குக் காரணம் என்னை என்று கேட்ட செவிலிக்கு, நீ போய்ப் புனங்காக்கச் சொல்ல, யாங்கள் போய்த் தினைக்கிளி கடியா நின்றோம்: அவ்விடத்து ஒரு யானை வந்து நின் மகளை ஏதஞ் செய்யப் புக்கது; அது கண்டு அருள் உடையான் ஒருவன் ஓடிவந்து அவளைத் தப்பிப் பிறிது ஒன்றும் சிந்தியாமல் யானையைக் கடிந்து அவளது உயிர் கொடுத்துப் போயினான்; அறியாப் பருவத்து நிகழ்ந்ததனை இன்று அறியும் பருவம் ஆதலான்,

7. தொல்காப்பியம்: மெய்ப்பாட்டியல்: நூ 5 உரை
8. தொல்காப்பியம்: செய்யுளியல்: நூ 235 உரை
9. தொல்காப்பியம்: மரபியல்: நூ 97 உரை
10. தொல்காப்பியம்: மெய்ப்பாட்டியல்: நூ 12 உரை

'உற்றார்க்கு உரியர் பொற்றொடி மகளிர்'—என்பதனை உட்கொண்டு இவ்வாறு உள்மெலியா நின்றாள்; இனி அடுப்பது செய்வாயாக—எனத் தோழி அறத்தொடு நில்லா நிற்றல்''.[11]

செறிந்த கருத்தினை எளிய முறையில் ஓசை நயஞ் செழும எடுத்துரைக்கும் இவர்தம் உரைநடை செவிக்கும் நல் விருந்தாகும்.

இவருடைய காலமும் பதின்மூன்றாம் நூற்றாண்டாகும்.

'உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர்' எனப் புலவர் பெருமக்களால் பாராட்டப் பெறும் நச்சினார்க்கினியர் உரையாசிரியர்களில் தனித்ததோர் இடத்தினைப் பெறுகின்றார். கல்வி வன்மை மிகுந்த இவர் ஒரு பாடலை எடுத்துக் கொண்டு இடையில் ஒடித்து மடக்கி முன்னும் பின்னும் கொண்டு கூட்டிப பொருள் கூறுவர். இவர் தொல்காப்பியம், பத்துப்பாட்டு, கலித்தொகை, சீவகசிந்தாமணி முதலிய அரிய நூல்களுக்கு உரை கண்டுள்ளார். "இவரது நடை எளிமையும் எழிலும் கொண்டது; சிலவிடங்களில் கவிதையாய்ப் பொலியும்; அளவான சமநிலை அமைப்புடன் சிலவிடங்களில் நிறையும்; தங்கு தடையற்ற உயிரோட்டம் நிறைந்திருக்கும். நச்சினார்க்கினியரிடமிருந்தே சிறந்த உரைநடை தொடங்கிற்று என்று சிறக்கக் கூறலாம்'' [12] என்பர் திரு. வ. வே. சு. ஐயர் அவர்கள். மேலைநாட்டு அறிஞரான தவத்திரு டாக்டர் போயர் அவர்கள் "நச்சினார்க்கினியர் உரை ஐரோப்பியர்களின்

---

11. திருக்கோவையார் ; பாட்டு : 293 உரை
12. V. V. S. Aiyer : Tamil—The Language and Literature : P 48

உரை விளக்கம் போன்று அமைந்துள்ளது. மூலப் பகுதியை விளக்கி வரைகிருர். இலக்கணச் சிறப்பினை எடுத்துக் காட்டுகிருர். தொல்காப்பியச் சூத்திரத்தினைத் தன் உரை முழுதும் மேற்கோள் காட்டுகின்ருர். முக்கியமான தொடருக்கு விளக்கம் தருகின்ருர். அவர் காலத்து வழங்கிய பாட பேதங்களைக் குறிப்பிடுகின்ருர். அவருடைய நடை சொல்லமைப்பு சுருங்கியும் உடைநடைப் போக்கு உயர்ந்தும் காணப்படுகிறது. வகைப்படுத்துதலின் சிறப்பை உணர்த்துவதாக அவருடைய உரை அமைந்துள்ளது'' என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்குக் காட்டாகப் ''பாலைத் தன்மையாவது காலையும் மாலையும் நண்பகல் அன்ன கடுமை கூரச் சோலை தேம்பிக் கூவல் மாறி நீரும் நிழலுமின்றி நிலம் பயந்துறந்து புள்ளும் மாவும் புலம்புற்று இன்பமின்றித் துன்பம் பெறுவது'' என்று இவர் பாலைக்குக் கூறியிருக்கும் இலக்கணத்தினைக் காணலாம்.[13]

பதினான்காம் நூற்ருண்டின் இறுதியில் வாழ்ந்த இவர் தம் வாழ்நாள் முழுதும் உரை வகுக்கும் தொண்டிலேயே செலவிட்டார் எனலாம். சீவக சிந்தாமணிக்கு முதன் முறை உரைகண்டபோது அதனைச் சமணர் மறுக்க, மீண்டும் திருத்த உரை எழுதி அவர்தம் ஒருமித்த ஒப்புதலைப் பெற்ருர் என்று ஒரு கதை வழங்குகின்றது. இலக்கியப் புலமையும் இலக்கணத் திறனும் நிரம்பிய இவர் உரையில் ஆராய்ச்சித் திறன் மண்டிக் கிடக்கக் காணலாம். பிறர் கருத்தைச் சாடித் தம் கருத்தை சாதிக்கும் தன்மையும் இவரிடம் உண்டு. சீவக சிந்தாமணி உரையில் 'கரும்பே தேனே'[14]

13. தொல்காப்பியம் அகத்திணையியல் : நூ : 9 உரை
14. சீவக சிந்தாமணி பாட்டு : 2453 உரை

எனத் தொடங்கும் பாடலுக்கு இவர் எழுதும் உரை பன்முறை படித்து நலங்காணத் தக்கது.

''கணவற்கு மெய்ம் முழுதும் இனிதாய் இருத்தலின் கரும்பு. நல்லார் உறுப்பெல்லாம் கொண்டு இயறறலின் தேன். இவ்வுலகில் இல்லாத மிக்க சுவையும் உறுதியும் கொடுத்தலின் அமிர்து. காம வேட்கையை விளைவித்து இனிய பண் தோற்றலின், மழலையை யுடையதொரு யாழ். கணவற்குச் செல்வத்தைக் கொடுத்தலின் திரு. நடையால் அன்னம். சாயலால் மயில். காலமன்றியும் கேட்டார்க்கு இன்பம் செய்தலின் குயில். மன்னன் மகளே என்றல் புகழன்மையின் மன்னன் பாவாய் என்றது, அவன் கண்மணிப்பாவை என்பது உணர்த்திற்று! இனி இவள் கொல்விப் பாவையல்லள், மன்னன் பாவை என்றுமாம். சேடியர் கற்பித்த கட்டளை தப்பாமற் கூறலின் பூவை; நோக்கத்தால் மான்.''

இத்தகு பல்கலைப் புலமை நிரம்பியவர் நச்சினர்க் கினியவர் ஆவர்.

சிலப்பதிகாரத்திற்கு முதலில் உரை கண்டவர் அரும்பதவுரையாசிரியர் ஆவர். ஆராய்ச்சித் தெளிவும் ஆழ்ந்த புலமையும் கொண்ட இவர் நல்லதோர் உரை யினைக் கண்டுள்ளார். வழக்குரை காதையில் 'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்' என்ற தொடருக்கு,[15] ''தந்தை தாய் முதலாயினோரை இழந்தார்க்கு அம்முறை சொல்லிப் பிறரைக் காட்டலாம். இஃது அவ்வாறு வாக்கானும் சொல்லலாகாமையின் காட்டுவதில் என்றாள்'' என்று பண்பாட்டிற் கியைந்த அரியவுரை கண்டுள்ளார்.

அடியார்க்கு நல்லார் பொப்பண்ண காங்கேயன் என்னும் கன்னட அரசனல் ஆதரிக்கப் பெற்றவர் என்

15. சிலப்பதிகாரம்; வழக்குரை காதை: வரி: 80 உரை

பதனைப் "பொப்பண்ண காங்கெயர் கோனளித்த சோற்றுச் செருக்கல்ல வோ தமிழ் மூன்றுரை சொல் வித்ததே"[16] என்ற செய்யுள் பகுதியால் அறியலாம். சிலப்பதிகாரக் காப்பிய அமைப்பு, கதைக் கட்டுக் கோப்பு, கூற்றிடை ஒருமைப்பாடு, காவிய மாந்தரின் பண்பு நலன், முதலிய பலவற்றை நன்கு ஆராய்ந்து காட்டும் அடியார்க்கு நல்லார், அணிகளையும் மெய்ப்பாடு களையும் கூட விடாது குறித்துள்ளார். இவர் உரை யின்றேல் சிலப்பதிகாரத்தின் இசை, கூத்து முதலிய கலைச் செல்வங்களின் அரிய செய்திகள் பலவற்றைத் தமிழுலகம் இழந்திருக்கும். எதுகை மோனை நிரம்பி, இனிய ஓசையுடன் கவிதைபோல் அமைந்திருக்கும் இவர் உரை எழுந்த காலம் பன்னிரண்டாம் நூற்றாண் டாகும்.

உலகப் பொதுமறையாம் திருக்குறளிற்கு உரை கண்டவர் பதின்மர். அப்பதின்மர் உரையிற் சிறந்தது பரிமேலழகர் உரையே. "நூலிற் பரித்த உரையெல்லாம் பரிமேலழகன் தெரித்த உரையாமோ தெளி"[17] என்றபடி பரிமேலழகர் உரை இட்பநுட்பஞ் செறிந்து தருக்க நூல் போன்று அமைந்துள்ளது. அரசியல், பொருளியல், வான நூல், மருத்துவ நூல், காம நூல் முதலிய பன்னூ லறிவும் இவரிடம் செறிந்து விளங்கின என்பதனை இவர் தம் உரை கொண்டு தெளியலாம். பொருந்தாவுரை களையும் சில இடங்களைத் தவிர்த்துவிட்டால் உரை யாசிரியர் என்று வழங்கும் சிறப்பிற்குத் தகுதிசான்ற நிலையை இத்திறனால் இவர் பெறுவர் என்பது திண்ணம். காஞ்சிபுரம் உலகளந்த பெருமாள் கோயில் அருச்சகர் பரம்பரையினர் இவர் "வடநூற் றுறையுந் தென்றிசைத்

16. அடியார்க்கு நல்லாருரைச் சிறப்புப் பாயிரம்: 3
17. பெருந்தொகை : 1545

தமிழும் விதிமுறை பயின்ற நெறியறி புலவன்" என்று குறிக்கப் பெறுகின்றார். கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராக இவர் கருதப் பெறுகின்றார்.

இவ் இடைக்காலத்திற்றான் சைவ சித்தாந்த சாத்திரங்களுக்குச் சைவப் பெருமக்கள் தம் சமயப் பற்றும் திறனும் விளங்க அரிய உரைகண்டனர். பிரபந்த உரையாசிரியர்கள் மணிப்பிரவாள நடையில் ஆழ்வார்களின் அமுதப் பாடல்களுக்கு வியாக்கியானங்கள் கண்டனர். திருவியலூர் உய்ய வந்த தேவர், மெய் கண்டார், அருணந்தி சிவாச்சாரியர், திருவதிகை மணவாசகங் கடந்தார், கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் முதலிய சைவ சமயப் பெரியோர் சைவ சித்தாந்த சாத்திரங்களுக்கும், பிள்ளான், நம்பிள்ளை, அழகிய மணவாளர், பெரியவாச்சான்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை முதலிய வைணவ சமயப் பெரியோர் திவ்யப்பிரபந்தத்திற்கும் திறம்பட உரை கண்டனர். கற்பனை வளனும் உணர்ச்சியும் மிகுந்த சொல்லோவியங்களை மணிப்பிரவாள நடையில் வைணவ உரையாசிரியர்கள் எழுதினர். குருபரம்பரைப் பிரபாவம் என்னும் நூலில் சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாம் ஆண்டாளின் வரலாறு சுவைபடச் சொல்லப்பட்டுள்ளதனைக் காணலாம்:

"ஆழ்வாரும் திருமகளாரும் அதிப்ரீதியுடன் அங்கிருந்தும் புறப்பட்டு, திருவரங்கன் திருப்பதியுள் எழுந்தருளினவாறே, 'சூடிக் கொடுத்தாள் வந்தாள்! சுரும்பார் குழற்கோதை வந்தாள்! ஆண்டாள் வந்தாள்! ஆழ்வார் திருமகளார் வந்தார்! திருப்பாவை பாடிய செல்வி வந்தாள்! தென்னரங்கம் தொழுந் தேவி வந்தாள்!' என்று பல சின்னங்கள் பரிமாற எழுந்தருள்வித்துக் கொண்டு, அழகிய மணவாளன்

திருமண்டபத்துள் சென்று நின்று திருப்பல்லக்கின் பட்டுத்திரையை வாங்க, அப்போதே நாச்சியார் அகிலம் காணும்படி உதறி உடுத்த பட்டுச் சேலையும் பருத்த செங்கழுநீர் மாலையும் திருநுதற் கஸ்தூரி நாமமும் கயல் போல் பிளிர்ந்து காதளவோடிய கடைக்கண் விழியும பிரகாசிக்க, சிலம்பார்ப்ப, சீரார் வளை ஒலிப்ப, அன்ன மென்னடை கொண்டு அணி அரங்கத்தான் திருமுன்பே சென்று கண்களாரக் கண்டு களித்து, கேசவ நம்பியைக் கால்பிடிப்பாள் என்னும் பேர்பெற்று உள்ளே புகுந்து, காலாலரங்கத்தை மிதித்தேறி, திருவரங்கச் செல்வனைச் சேர்ந்து, அவன் திருவடிகளிலே அந்தர்ப்பவித்தருளினார்."

இவ்வாறாக இடைக்கால உரையாசிரியர் பலர் தமிழின் பல துறைகளிலும் புகுந்து தங் தகுதிக்கேற்பச் சிறந்த உரைகளைப் பின்னை ஆக்கித் தமிழுலகிற்கு அளித்துள்ளனர். அவர்களின் விழுமிய தொண்டு தமிழின் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் ஊக்கமும் ஆக்கமும் அளித்துத் தமிழிற்குத் தூயாய உரைநடைச் செல்வங்களை உவந்தளித்தவை என்பதனை மறவாது போற்றலே நம் தலையாய கடமையாகும்.

# 19

# சீறாப்புராணத்தில் இலக்கிய நயம்

தமிழ் இலக்கியச் செல்வத்தினைப் பல்வேறு நாட்டவரும் பல்வேறு சமயத்தவரும் அணிபெறச் செய்திருக்கின்றனர். காலத்திற்குக் காலம் கோலம் புதுக்கிச் செல்லும் தமிழ் இலக்கியப் பேரியாறு சிந்தைக்கினியதாய்ச் செவிக்கினியதாய்ச் செம்மாந்து பிறங்குகின்றது. பதினெட்டாம் நூற்றாண்டிலே எட்டயபுர சமஸ்தானத்தைச் சேர்ந்த உமறுப்புலவர் இஸ்லாமியப் பண்பாட்டுக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு சீறாப் புராணத்தை யாத்தார். 'சீறத்' என்னும் அரபுச் சொல்லுக்கு வரலாறு என்பது பொருள். 'சீறத்' என்னும் சொல்லிலிருந்து 'சீறா' என்னும் சொல் பிறந்தது. எனவே சீறாப் புராணம் என்பது தூய வாழ்க்கை வழிநின்று வாழ்ந்த ஒருவரின் வரலாற்றினைக் கூறுவது என்பது பொருளாகும். இஸ்லாமியத் தமிழிலக்கியங்களுள் சீறாப் புராணம் தலைமையும், முதன்மையுமான இடத்தினைப் பெறுகின்றது. "நவில் தொறும் நூல் நயம் பயந்து நிற்கும் நூல்" சீறாப்புராணம் ஆகும்.

இஸ்லாம் சமயத்தை உலக மக்களுக்குப் போதித்து, அதனை உலகெங்கும் பரப்ப முயற்சி மேற்கொண்டு அதற்காவன செய்த அருளாளனும், அன்பாளனும் ஆகிய வணக்கத்திற்குரிய நபிகள் நாயகம் (ஸல்) பெருமான் அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அப்பெருமானாரின் பிறப்பு, வளர்ப்பு, திருமணம், வாழ்க்கை, ஆற்றல், வெற்றி, அறவுரை

# 19

# சீறாப்புராணத்தில் இலக்கிய நயம்

தமிழ் இலக்கியச் செல்வத்தினைப் பல்வேறு நாட்டவரும் பல்வேறு சமயத்தவரும் அணிபெறச் செய்திருக்கின்றனர். காலத்திற்குக் காலம் கோலம் புதுக்கிச் செல்லும் தமிழ் இலக்கியப் பேரியாறு சிந்தைக்கினியதாய்ச் செவிக்கினியதாய்ச் செம்மாந்து பிறங்குகின்றது. பதினெட்டாம் நூற்றாண்டிலே எட்டயபுர சமஸ்தானத்தைச் சேர்ந்த உமறுப்புலவர் இஸ்லாமியப் பண்டாட்டுக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு சீறாப் புராணத்தை யாத்தார். 'சீறத்' என்னும் அரபுச் சொல்லுக்கு வரலாறு என்பது பொருள். 'சீறத்' என்னும் சொல்லிலிருந்து 'சீறா' என்னும் சொல் பிறந்தது. எனவே சீறாப் புராணம் என்பது தூய வாழ்க்கை வழிநின்று வாழ்ந்த ஒருவரின் வரலாற்றினைக் கூறுவது என்பது பொருளாகும். இஸ்லாமியத் தமிழிலக்கியங்களுள் சீறாப் புராணம் தலைமையும், முதன்மையுமான இடத்தினைப் பெறுகின்றது. "நவில் தொறும் நூல் நயம் பயந்து நிற்கும் நூல்" சீறாப்புராணம் ஆகும்.

இஸ்லாம் சமயத்தை உலக மக்களுக்குப் போதித்து, அதனை உலகெங்கும் பரப்ப முயற்சி மேற்கொண்டு அதற்காவன செய்த அருளாளனும், அன்பாளனும் ஆகிய வணக்கத்திற்குரிய நபிகள் நாயகம் (ஸல்) பெருமான் அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அப்பெருமானாரின் பிறப்பு, வளர்ப்பு, திருமணம், வாழ்க்கை, ஆற்றல், வெற்றி, அறவுரை

இரண்டாவது காண்டமான நுபுவ்வத்துக் காண்டம் வானவர் ஜுபுறீல் அவர்கள் மூலம் இஸ்லாம் சமயம் நபிகள் நாயகம் அவர்களுக்கு அருளப்பட்ட வரலாற்றினை விளக்குகின்றது. 'நுபுவ்வத்து' என்னும் அரபுச் சொல் தீர்க்க தரிசனம் என்ற பொருள் தரும் 'நுபுவ' என்ற அரபுச் சொல்லின் அடிப்படையாக அமைந்ததாகும்.

ஹிஜரா என்ற அரபுச் சொல் இடம் விட்டுப் பெயர்தல் என்ற பொருளை உணர்த்தும். மூன்றாவது காண்டமான ஹிஜிறத்துக் காண்டம் மெக்காவைவிட்டு மெதீனு நகரத்திற்கு நபிகள் நாயகம் அவர்கள் ஓடிய வரலாற்றினைக் கூறுகின்றது. இந்த மூன்றாவது காண்டமே சீறாப்புராணத்தில் பெரிய காண்டம் ஆகும். ஈராயிரத்து அறுநூற்று எண்பது பாக்கள் இக்காண்டத்தில் அமைந்துள்ளன. அரேபியாவில் இஸ்லாம் பரவத் தொடங்கிய காலத்தில் பதுறு புகுது என்னும் இரண்டிடங்களில் நடைபெற்ற பெரிய போர்களைக் குறிப்பிடுகின்றது. இவ்விரு போர்களிலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெற்ற வெற்றியினை மூன்றாம் காண்டம் குறிப்பிடுகின்றது.

இனிச் சீறாப்புராணத்தின் இலக்கிய நயத்தினை இனிது றக் காண்போம். 'செந்தமிழாலே சீறா சிறப்புடன் பனுவல் செய்தே, உந்திய புகழ்பெற் றோங்கும் உமறெனும் புலவர்' என்று உமறுப்புலவர் பாராட்டப்படுகின்றார். இந்தப் பாராட்டுக்கேற்பவே உமறுப்புலவரின் கவிதை உள்ளம் அவரது பாடல்களில் புலனாகின்றது.

ஒரு காப்பியத்திற்கு நாட்டுப்படலம் இன்றியமையாததாகும்.

நீர்நிலைகளில் மதகுகளில் இருந்து நீர் வழிந்தோடுகின்ற பேரொலி கேட்கின்றது. அன்னப் பறவைகள் சிறகடித்துப்

பறக்கும் ஒலியும் நீர்நிலைகளில் அலைகளை வீசி இரு கரைகளிலும் வழிந்தோடும் நீர்ப் பெருக்கின் ஒலியும் கேட்கின்றன. இவ்வாறு எங்கும் எழுந்த பேராரவாரம் வில் வீரர்கள் நிறைந்த சேனையின் பேரொலியினையும் வெல்லும் வண்ணம் இருந்தது என்று உமறுப்புலவர் கவிதை நயம் சுரக்கப் பாடுகின்றார். பாடலைப் பார்ப்போம்.

**" அலையெ றிந்திரு கரைவழி ஒழுகுகம் பலையும்**
**கலையும் வெள்ளனம் சிறைவிரித் தசைத்த கம்பலையும்**
**மலைதி றந்தன்ன மதகின்வாய் வழிந்த கம்பலையும்**
**சிலைத ரித்தபேரொலி பெரும் படைஒலி சிறக்கும்.''[2]**

உமறுப்புலவர் வருணனைச் சிறப்பு மிகுந்த தம்பாடலின் இடையே, தம் நன்றி மறவா நல் உள்ளத்தினையும் புலப் படுத்திக் கொள்கின்றார். வகுதை என்னும் பரங்கிப் பேட்டை ஹுசைன் நயினார் அவர்களின் மகனார் அபுல்காசிம் மரக்காயர், காற்றிலே அலைபட்ட படர் கொடிக்குப் பாங்குசால் கொழுகொம்பாக நின்று உமறுப் புலவரைப் பற்றுப் போற்றியவர். கம்பர் ஆயிரத்திற்கு ஒரு பாடலில் தம்மை ஆதரித்த திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலைப் புகழ்ந்து பாராட்டித் தம் நன்றி யுணர்வைப் புலப்படுத்தி இருக்க, உமறுப்புலவரோ வெனில், நூறு செய்யுளுக்கு ஒரு செய்யுள் வீதம் அபுல் காசிமின் வள்ளன்மை நிறைந்த கொடைப் பண்பினையும், கொடை நெஞ்சினையும் வையமறியக் கிளத்தியுள்ளார், சீறாப்புராணம் வெளிவரக் காரணமாக இருந்த வள்ளலே அவர்தானே! எனவே நாட்டு வளம் பாடும் கவிஞர் நன்றிக்கடனையும் புலப்படுத்தி மறவாது பாடி நிற்கின்றார். மருத வளம் சான்ற வயல்களில் செந்நெல் விளைந்து முற்றித் தலைசாய்ந்து கிடக்கின்றது. அங்

---

2. சீறாப்புராணம் : நாட்டுப் படலம் : 19

நெற்கதிர்களை ஏற்றிச் செல்ல வண்டிகள் அணியணியாய் வந்து நிற்கின்றன. கதிர் அறுப்போர் ஆரவாரத்தை எழுப்புகின்றனர். வரப்போரம் விளைந்திருக்கும் கமுக மரங்களில் இருந்து உதிரும் பாக்குகளைச் சுமப்போர் செய்யும் ஆரவாரம் எங்கும் எதிரொலிக்கின்றது. இவ் ஆரவாரத்தினையெல்லாம் கேட்கும் கவிஞர் ஒரு கணம் திகைத்து நிற்கின்ருர். இவ் ஆரவாரங்களை யெல்லாம் எங்கேயோ கேட்ட நினைவு அவருக்குத் தோன்றுகின்றது. ஆம்! அவருக்கு இதோ நினைவு வந்துவிட்டது! வகுதை நகர் வள்ளல் அபுல்காசீமின் வளமனையின் செருக்கை நிகர்த்த தன்றோ இவ் ஆரவாரம் என்று நினைக்கும் கவிஞர் நெஞ்சில் இருந்து கவிதை உள்ளத்தோடும், நன்றி உணர்வோடும் கூடிய பாட்டுப் பிறக்கின்றது. அப்பாடல் வருமாறு :

" செங்நெலின் கனைகுரற் சகடந்
திசைதொறும் மலிந்தன செருக்கும்
கன்னலங் கழனிபுகுந் தறுத்தடைந்த
களமர்கள் ஒலிகுரல் செருக்கும்
துன்னுபூங் கமுகு சிதறுசெம் பழுக்காய்ச்
சுமப்பவர் கம்பலைச் செருக்கும்
மன்னவன் வகுதைத் துரைஅபுல் காசீம்
வளமனைச் செருக்கும் ஒத்திருக்கும்''[3]

நகரப்படலத்தை அடுத்து தலைமுறைப்படலம் கூறிப் பின்னர் நபி அவதாரப்படலம் பாடுகிருர் உமறுப் புலவர். இருண்ட வானத்தில் ஒளி விளக்கேற்றிடும் கதிரவனுய், வற்றிய பாலையில் நிழல்தரும் மரமாய், பிறவிப் பிணியினைப் போக்கிடும் அருமருந்தாய், வாடிய பயிருக்கோர் வள மழையாய், குறைஷியர் குலத்திற்கு ஒரு திலகமாய், மாநிலம் தனக்கோர் மணிவிளக்காய்

3. சீருப்புராணம் ; நாட்டுப் படலம் : 41

[illegible] முகம்மது நபி அவர்கள் பிறந்தார்கள் என்று [illegible] வாயில் தேனூறப் பேசி நிற்கிறார். அவர் [illegible] கவிதையினைக் காணுங்கள்:

" பானுவின் கதிரா லுடருறுங் காலம்
படர்தரு தருநிழல் எனலாய்
ஈனமும் கொலையும் விளைத்திடும் பவநோய்
இடர்தவிர்த் திடும்அரு மருந்தாய்
தீனெனும் பயிர்க்கோர் செழுமழை எனலாய்க்
குறை ஷியர் திலதமே எனலாய்
மானிலந் தனக்கோர் மணிவிளக் கெனலாய்
முகம்மது நபிபிறந் தனரே."[4]

[illegible] தனிச்சிறப்பான அகப்பொருள் [illegible] சீறாப்புராணத்தில் பொலிவோடும் வனப் [illegible] காணலாம். தமிழ் இலக்கிய மரபிற்கு [illegible] சூழலை இஸ்லாமியப்பண்பாடு வழாமல் [illegible] படலத்தில் கவிஞர் உமறு கவினுறக் [illegible]. நபிகள் நாயகம் அவர்களும், அவர்தம் [illegible] தடாகங்களைத்தாண்டி, முல்லைக் [illegible] முறுவலித்துக்காட்டும் காடுசார்ந்த [illegible] அடைகின்றனர். கொவ்வைக் கனிகள். [illegible], கொன்றை மரங்கள், காயாஞ்செடிகள் [illegible] கண்ணுக்குக் கவின் காட்சி வழங்கும் [illegible] ஆய்ச்சியர்கள் தயிர் கடையும் ஓசை [illegible]. நாமும் அக்கண்ணிறைந்த காட்சி [illegible], செவி நிறைந்த ஓசையினைக் கேட்போமே!

" தொண்டையங் கனிகள் தோன்றியிற் சிறப்பத்
தோன்றிய தரியமா ணிக்கம்,

---

4. சீறாப்புராணம் : நபி அவதாரப் படலம் : 91

**விண்டலர் விரித்துக் காய்த்தன போலும்**
**விளங்கிடக் குருந்தொடு காயா**
**வண்டுறை பிடவும் கொன்றையும் செறிய**
**வளைதருங் குடியிடை பொதுவர்**
**வெண்தயிர் உடைக்கும் ஒலி மா ருமுல்லை**
**வேலியுங் கடந்தயல் போனார்.''**[5]

நபிகள் நாயகம் தம் குழாத்தொடு முல்லை நிலத்தைக் கடந்து ஒரு சோலைக்குள் தங்கி இருந்தபோது அன்னை கதீஜா அவர்கள் அழகிய கனவு காணுகின்றார். கண்டது கனவென அறியாமல் நனவென்று மயங்கி வெளியே வந்து பார்த்தபொழுது அண்ணலாரைக் கண்டாரில்லை. மாறாத மனத்துயரைக் கொண்ட பெருமாட்டி அணிமணிகளை வெறுத்து அழகு ஒப்பனையை வெறுத்துச்சுவை உணவினைத் தூரத்தள்ளித் துயரமே உருவானார்கள் என்று உமறுப் புலவர் சித்திரிக்கின்றார்.

அண்ணல் நபிகள் நாயகம் அவர்கள் அன்னை கதீஜா நாயகியைத் திருமணங்கொள்ளும் பெருநல விழாவினைக் கவினுறக் கவிதையில் வடித்துள்ளார். விண்ணையும் மண்ணையும் விளக்கமுற வைக்கும் சுடர் மணிவிளக்காம் கதீஜா அன்னையார் அவர்களைப் பொற்குடத்துப் புதுக் குளிர் நீரால் புனலாட்டி, வெள்ளிய நிலவைப் பழிக்கும் தூய ஆடைகளை உடுத்தி அணிபெறச் செய்து, பல்வகை இசைக்கருவிகள் முழங்க, பாங்கியர்கள், நாயகத்திருமேனி மஹம்மது முஸ்தபா ரஸூல் (ஸல்) அவர்கள் அருகில் அமரச் செய்தார்கள். இதனை நாமணக்கப் பாமணக்க நெஞ்சம் அள்ளூறித் ததும்ப, அழகுத்தமிழில் புதுக்கவிதை புனைகிறார் உமறுப்புலவர். செம்மை சான்ற சொற்கள்

---

5. சீறாப்புராணம் ; கதீஜா கனவு கண்ட படலம் : 4

[illegible] முறையில், பொருத்தமான இடங்களில் அமைந்து [illegible] பொலிவதனைக் கீழ்க்காணும் பாடலிற் கண்டு தெளியலாம்.

"பேரழகு ஒழுகும் பெண்ணிலங் கனியை
பிரசம் ஊறிய மொழிக் கரும்பை
ஆரணக் கடலுக் கமுதநா யகியை
அரிவையர் முறை முறை வாழ்த்திப்
பாரினிற் செறித்த மலர்மிசை நடத்திப்
பல்லியம் முரசொடு கறங்க
வார்பொரு முலையார், மகம்மது மருங்கின்
மணித்தவி சிடத்திருத் தினரே."[6]

சீறாப்புராண நூலின் பிற்பகுதியில் அண்ணலாரின் அருமைப் புதல்வி பாத்திமா அவர்கள் அலி அவர்களைத் திருமணம் செய்து கொள்கின்றார்கள். மணக்கோலம் புனைந்து அலி அவர்கள் புரவிமீது ஏறிப் பவனி வருவதனைத் தீந்தமிழில் [illegible] சொற்களைக் கொண்டு எழிலார்ந்த கவிதை [illegible] உமறுப்புலவர். அருமறை மணக்கும் வாயும் அருள் நிறைந்த கண்ணும், மதிமுகமும், வயிரத்தின் தோளும், கற்பகத்தரு நிகர் கையும், தாமரை அடிகளும் கொண்டு பொருந்திய அழகுத்திரு உருவாம் அலியார் அவர்களைப் பாத்திமா ஒருத்திதானு பெற வேண்டும் என்று [illegible] கூறியதாக உமறுப்புலவர் பின்வருமாறு கூறுகின்றார்:

"அருமறை மணத்த வாயும் அருள் அடை கிடந்த கண்ணும்
திருமதி முகமும் நீண்ட திரள்மணி வயிரத் தோளும்
தருவொளச் சிவந்த கையும் தாமரைத் தாளும் வாய்ப்பப்
பொருவிய அழகை எல்லாம் ஒருத்தியோ பெறுவ(ள்)
என்பார்."[7]

6. சீறாப்புராணம் : மணம்புரிபடலம் : 111
7. சீறாப்புராணம் : பாத்திமா திருமணப்படலம்: 146

ஈண்டு மேலே காட்டிய பாக்கள் பண்டைத்தமிழ் இலக்கியப் பாடல்களின் பாங்கிலும் போக்கிலும் அமைந்து கிடக்கக் காணலாம்.

அபிபு மக்கத்துக்கு வந்த படலத்தில் அபிபு அரசரின் சேனைகள் மக்கம் என்னும் மாநகரை வந்தடைந்த நிலையினை வருணிக்கும் உமறுப்புலவர் கம்ப நாடரின் 'தண்டலை மயில்களாட' என்னும் பாடலின் சொற்களையும், போக்கினையும் பெரிதும் பின்பற்றுகின்றார். அப்பாடல் வருமாறு:

**"வண்டுகள் உண்டு பாட**
**மணிச்சிறை மயில்க ளாடக்**
**கொண்டல் கண் தூங்குஞ் செந்தேன்**
**கொழுங்கனி குழைபைங் காவு**
**முண்டகத் தடமும் செவ்வி**
**முருகவிழ் கழனிக் காடுந்**
**தெண்டிரை பரந்த தென்னத்**
**திரட்படை படர்ந்த தன்றே."[8]**

உவமை என்பது கவிச்சுவையை மிகுவிக்கும் ஒரு சாதனம்; பொருளை விளக்கப் பெரிதும் பயன்படும் கருவி. உவமையின்மூலம் ஒப்பற்ற கருத்தினை வெளிப்படுத்தும் உமறுப்புலவரின் புலமையே புலமை! பாலையை வருணிக்கப்புகும் உமறுப்புலவர் உலகுக்கு இயைந்ததோர் அரிய கருத்தினை உவமைமூலம் நயம்படப்புலப்படுத்தியுள்ளார், மான் கூட்டங்கள் நீர் விடாய் கொண்டு நீரைத் தேடி ஓடி ஓடி அலைகின்றன. தூரத்தே காணும் பேய்த்தேரை (கானல் நீரை) நீரெனக் கருதி ஓடிப் பார்த்து நீர் அன்று என்று தெரிந்து நெஞ்சம் வெதும்புகின்றன, இரக்கத்திற்குரிய

8. சீறாப்புராணம் ; அபிபு மக்கத்துக்கு வந்த படலம் : 61

[illegible]லையை அற்பர்களிடம் சென்று பல முறை இரந்து கேட்டும் பயனற்றுக் கால் ஓய்ந்து வருந்தி வாடும் பல்கலைப் புலவர்கள் நிலையோடு ஒப்பிட்டுப் பேசுகின்றார் புலவர்.

" பாலையென் றுலர்ந்த செங்நிலக் கானல்
பரப்பினைப் புனலென ஓடிச்
சாலவும் இளைத்துத் தவித்துழை இனங்கள்
தனித்தனி மறுகிய மறுக்கம்
மாலுளர்ந் திருண்ட புனம்அனச் சிறியோர்
மருங்கினில் இரந்திரந் திடைந்து
காலறத் தேய்ந்த பலகலை மேலோர்
கருத்தினில் வருத்தம் ஒத்தனவே." [9]

தொடக்கத்தில் நாட்டுப் படலத்தைப் பார்த்தோம். இனி உமறுப்புலவர் காட்டும் நகரப் படலத்தைக் காண்போம். நபிகள் நாயகம் அவர்கள் தம் அன்புத் தோழர் அபூபக்கர் அவர்களுடன் மதீனமா நகர் வருகின்றார். அதுபோது மதீனா மாநகரை வருணிக்கப் புகுகின்றார் உமறுப்புலவர். தாவிப் பாயும் வாளை மீன்களைக் கண்டு பெண் அன்னம் நடை ஒதுங்கும் தடாகங்களும், மேகக் கூட்டங்கள் விண்ணிலிருந்து கவர்ந்து வந்து கண்ணுறங்கும் கருணையான பச்சைப் பசுஞ் சோலைகளும் கொண்டு விளங்குவது மதீனமா நகர். விண்முட்ட உயர்ந்து இருக்கும் மாளிகைகளின் உப்பரிகையின் மேல், மகளிர் தங்கள் கூந்தலுக்கு அகிற்புகை ஊட்டுவதால் எழும் நறுமணம் மிக்க புகை, மாளிகைகள் எங்கும் தவழ்ந்து கொண்டிருக்கும் என்று மதீனமா நகரின் வளத்தினையும், செல்வச் சிறப்பினையும் [illegible] கூறிச் செப்புகின்றார் உமறுப்புலவர்.

9. சீறாப்புராணம் : [illegible]த்திற் புனலமைத்த படலம் : 6

" உகளும் வாளைகண் டனப்பெடை ஒதுங்கும்வா விகளும்
முகில டைந்துகண் படுத்தபைம் பொழில்களும் முன்னிப்
புகைத வழ்ந்தவெண் மாளிகை புறம்பல செறிந்து
திகழும் பொன்னகர் மதீனமும் தெரிதரச் சென்றார்." [10]

ஓசை நயம் கவிதைகளில் சிறந்து விளங்கினால் அதிலொரு தனிச் சுவையைக் காணலாம். பெருமானார் அவர்கள் போருக்கு ஆயத்தமாகிக் குதிரை மீதேறிச் செல்லும் நிலையினை வருணிக்கப் புகுந்த உமறுப்புலவர், கவிச்சக்கரவர்த்தி கம்பர் 'சொல்லொலாக்கும் கடிய வேகம்' என்று கூறியபடி, சக்பூ என்னும் குதிரையின் வேகம் காற்று வேகத்தினும், ஒலியின் வேகத்தினும், ஒளியின் வேகத்தினும் விஞ்சிய வகையில் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

" தாவிடின் மனத்தை ஒக்கும் தாக்கிடின் இடியே ஒக்கும்
மேவிடில் திகிரி ஒக்கும் எதிர்ந்தவர்க் கெரியை ஒக்கும்
பூவிடத்து அடலின் வங்கூழ் போன்றிடும் சக்புஎன் றோதும்
மாவினைக் கொணர்மி னென்ன முகம்மது சரணம்
வைத்தார்." [11]

ஒரே சொல்லை ஒரே பாட்டில் மீட்டும் மீட்டும் வரச் செய்து அதனால் ஓசை நயத்தினையும், இனிமையினையும் புலப்படுத்துவர் கவிஞர். ஹஸரத் அப்துல்லாஹ்(ரலி) எனும் போர் வீரர் ஒருவர் தம் படைக்கலங்கள் எல்லாம் இழந்த நிலையில் பெருமானார் (ஸல்) அவர்கள் தந்த ஈத்தம் பாளை ஈர்க்கையே பேராயுதமாகக் கொண்டு மீண்டும் கடும் போர் ஆற்றுகின்றார். பேரீத்தம் பாளைதான் எனினும் அது விண்ணையும், மேரு மலையையும், வானத்திடியையும், நோக்கும் கண்ணையும் பிளக்கும் பெரும் செயலினைப் பின்வரும்

10. சீறாப்புராணம் ; மதீனம் புக்க படலம் : 5
11. சீறாப்புராணம் ; பதுறுப் படலம் : 21

[illegible] வாழ்த்துங் காட்டுகின்றார் சீரிய, கூரிய தீஞ்சொல் வல்ல கவிஞராம் உமறுப்புலவர்.

" விண்ணினைப் பிளக்கும்; நீண்ட
மேருவைப் பிளக்கும்; தாழ்ந்த
மண்ணினைப் பிளக்கும்; வானத்
திடியையப் பிளக்கும்; நோக்குங்
கண்ணினைப் பிளக்கும்; நாளுங்
கருத்தினிற் பொருவோ மென்னும்
எண்ணினைப் பிளக்கும் என்றால்
யாவரே எதிர வல்லார்." [12]

மேலும் பெருமானார் கருத்துக்களையும் பொன்னேபோல் போற்றிய புலவர் பெருமான் உமறுப்புலவர் தம் நூலில் பல இடங்களிலும் பெய்து வைத்துள்ளார். ஹஸரத் ஸஃது (ரலி) அவர்கள் பெருமானாரை வாழ்த்திக் கூறிய சொற்கள் எல்லார் செவிகளிலும் என்றென்றும் நின்று நிலவும் சொற்களாகும். எளிய சொற்களில் அரிய உணர்வினைப் புகுத்தி உருக்கத்தோடு உமறுப்புலவர் வடிக்கும் திருப் பாடலை இங்குக் காண்போம்.

" அருவோ நீ அருளோ நீ அறமோ நீ
அழகோ நீ அடங்கி லாத
மருவோ நீ ஒளிவோ நீ மனமோ நீ
வழியோ நீ மறை மா னீன்ற
உருவோ நீ உயிரோ நீ உண்டோ நீ
இன்றோ நீ உரைத்த வேதத்
திருவோ நீ செயலோ நீ உன்வடிவம்
என்கொல்? எனத் தெருள்வன் யானே." [13]

உமறுப்புலவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாழ்க்கை வரலாறு முழுவதையும் சீறாப்புராணத்தில் பாடவில்லை. [illegible] கூட்டத்தார் படலத்தோடு

12. சீறாப்புராணம் : உகுதுப் படலம் : 200
13. சீறாப்புராணம் : மழை வந்த படலம் : 86

உமறுவின் சீறு நின்றுவிடுகிறது. இதற்குரிய காரணம் விளங்கவில்லை. இருப்பினும் ஐயாயிரத்திருபத்தாறு பாடல்கள் கொண்ட சீறாப்புராணத்தின் இலக்கிய நயம் இனிமை மிகுந்தது. படிக்கப் படிக்கச் சுவை தருவது. செய்யுட்களின் நடை சிந்தைக்கும் செவிக்கும் நாவிற்கும் இனிய நடையாக இயன்றுள்ளது, அரபுச் சொற்களும் தொடர்களும் பாட்டு ஓட்டத்திற்குத் தடை செய்தாலும் அவை இஸ்லாமியக் கோட்பாடுகளைத் தெள்ளத் தெளிய உணர்த்துவதற்காகவென்றே அமைந்து கிடக்கக் காணலாம்.

முடிவாக, இஸ்லாமியத் தமிழ் உலகில் சீறாப்புராணம் தலை சிறந்த காப்பியமாகும். சிந்தைக்கும் செவிக்கும் இனிய இக்காப்பியத்தைத் தீந்தமிழில் தந்த உமறுப்புலவர் ஒரு தேர்ந்த புலவர் என்று கொள்வதில் தடையு முண்டோ?

# 20

# முதலாந் திருமுறை

உலகிலேயே மிகப் பழம்பெரும் சமயமாகக் கருதப் படுவது நம் சைவ சமயமாகும். 'சைவத்தின் மேற் சமயம் பிறிதில்லை' என்பது ஆன்றோர் கண்ட உண்மை யாகும். கிறிஸ்து நாதருக்கு ஐயாயிரம் ஆண்டுகள் முற்பட்ட சிந்துகங்கைச் சமவெளி நாகரிகமும், ஹரப்பா—மொகஞ் சதாரோ என்னும் பழங்காலப் பெரு நகரங்கள் உலகிற்கு உணர்த்தும் உண்மையும், ஒரு சேர நினைவு கூரப்பட்டால், சிவலிங்க வழிபாட்டின் தொன்மை நன்கு புலனாகும். சங்க இலக்கியங்களில் சிவபிரானைப் பற்றிய குறிப்புக்கள் பல இடம் பெற்றுள்ளன. தொகை நூல்களின் கடவுள் வாழ்த்துப் பாக்களிற் சில, சிவனைப் பற்றியதாக அமைந் துள்ளமையைக் காணலாம்.

எல்லாம் வல்ல முழுமுதற் பொருளாகிய சிவ பிரானின் பெருமையினைக் கூறும் சைவத் திருமுறைகள் பன்னிரண்டாகும். இவற்றில் முதல் ஏழு திருமுறைகள் மூவர் பாடிய தேவாரமாகும். மாணிக்கவாசகர் பாடிய திருவாசகமும், திருக்கோவையாரும் எட்டாந் திருமுறை யாகும். திருவிசைப்பா, திருப்பல்லாண்டு முதலியன ஒன்பதாந் திருமுறை; திருமூலர் இயற்றிய திருமந்திரம் பத்தாந் திருமுறையாகும். மதுரைச் சொக்கநாதராம் ஆலவாய் உறை அண்ணலின் திருமுகப் பாசுரம், காரைக்காலம்மையார் பாடிய திருவாலங்காட்டுத் திருப்பதிகங்கள், சேரமான் பெருமாள்நாயனார் பாடிய நூல்கள் முதலியன பதினோராந் திருமுறையென

வழங்கும். 'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய' சேக்கிழார் சுவாமிகள் இயற்றிய பெரிய புராணம் என வழங்கும் திருத்தொண்டர் புராணம் பன்னிரண்டாந் திருமுறையாகும்.

முதல் ஏழு திருமுறைகள் தேவாரம் என வழங்கப் படுகின்றது என மேலே கண்டோம். அவ்வேழு திருமுறைகளிலும் முதல் மூன்று திருமுறைகள் திருஞான சம்பந்தப் பெருமான் இயற்றிய அழகிய பாடல்களாகும். நான்கு, ஐந்து, ஆறும் திருமுறைகள் திருநாவுக்கரச சுவாமிகள் பாடிய பதிகங்களாகும். சுந்தரமூர்த்தி நாயனூர் பாடிய பாடல்கள் ஏழாந் திருமுறையென வழங்கும். இந்த ஏழு திருமுறைகளும் பொதுவாகத் தேவாரம் என்றும் அடங்கன் முறை என்றும் வழங்கப் பெறும்.

உலக மக்களுக்கு உள்ளப் பண்பாட்டை உணர்த்தி, அவர்களை நன்னெறியில் செலுத்தி உயர் நிலைக்கு உய்விக்கும் அருள் நூல்களே திருமுறைகள் எனப்படும். பொதுவாகத் திருமுறை என்பதற்குத் தெய்வத் தன்மை யுடைய நூல் என்பர் பெரியோர். 'திரு' என்ற சொல் லிற்கு விளக்கம் வரையப் புகுந்த பேராசிரியர் "திரு வென்பது பொருளுடைமையும் பொருள் கொணர்ந்து துய்த்தலுமின்றி எஞ்ஞான்றுந் திருத்தகவிற்றாகியதோர் உள்ள நிகழ்ச்சி; அதுவினையுள்ளுடைமையெனவும் படும்" என்றார்.[1] எனவே இன்பதுன்பத்தினை ஒப்ப எண்ணிச் செயல்படும் மனத்திண்மையே 'திரு' என்பது பேராசிரியர் விளக்கத்தின் வழியே புலனாதல் காண்க. 'வாள் கொண்டு அறுப்பினும் சந்தனம் பூசினும் ஒத்த மனநிலை உடையராந் தன்மையினை' வடமொழியாளர்

1. தொல்காப்பியம்; மெய்ப்பாட்டியல்: நூ 25 உரை

"சமாகிதம்' என்பர். தமிழில் அந்நிலை 'சமநிலை' என வழங்கும். இன்ப துன்பத்தினை ஒப்ப மதிக்கும் உயர் குணச் செம்மல்களைக் 'கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்' என்று சேக்கிழார்பெருமான் தம் பெரியபுராணத்தில் குறிப்பிட்டுள்ளார்.[2]

இனி 'முறை' என்ற சொல்லின் விளக்கங் காண்போம். இச்சொல் பல பொருள்களில் பொதுளும். பிங்கலந்தை நிகண்டு "கோசமும் பழமையும் ஊழுங் கூட்டும், ஆர்ப்பும் முறைமையும் முறையெனலாகும்" என்று குறிப்பிடுகின்றது.

மேலும்.

> " ஏடங்கை நங்கை இறையெங்கள் முக்கண்ணி
> வேடம் படிகம் விரும்பும் வெண் டாமரை
> பாடுந் திருமுறை பார்ப்பதி பாதங்கள்
> சூடுமின் சென்னிவாய்த் தோத்திரஞ் சொல்லுமே"[3]

என்ற திருமந்திரப் பாடலும்,

> " இறைநிலம் எழுதுமுன் இளைய பாலகன்
> முறைவரை வேனென முயல்வ தொக்குமால்
> அறுமுக முடையவோர் அமலன் மாக்கதை
> சிறியதோ ரறிவினேன் செப்ப நின்றதே"[4]

என்ற கந்தபுராணச் செய்யுளும், 'முறை' என்ற சொல் நூலையும் அதன் உட்பிரிவுகளையுங் குறித்து வழங்கும் என்பதனை உணர்த்துகின்றன.

சமயகுரவர் வாயிலாகச் சிவபிரான் திருவாய் மலர்ந்தருளிப் பின் வெளிப்படுத்தி யருளிய தனிச்சிறப்புடையனவாகத் திருமுறைகளைக் கருதலாம். "எனதுரை தனதுரையாக" என வரும் திருஞானசம்பந்தப்

---

2. திருக்கூட்டச் சிறப்பு : 8
3. திருமந்திரம் : 1067
4. கந்த புராணம் ; அவையடக்கம் : 1

பெருமான் தொடரும், "பன்னிய செந்தமிழ்மாலை பாடுவித்தென் சிந்தை மயக்க வைத்த திருவருளினனே" என வரும் திருநாவுக்கரசர் பெருமான் தொடரும் மேற் கூறிய உண்மையினைத் தெளிவுறுத்துவனவாம். மேலும் சுந்தரமூர்த்திப் பெருமானுக்குப் 'பித்தா' என்றும், 'தில்லைவாழந் தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்றும், சேக்கிழார் பெருமானுக்கு 'உலகெலாம்' என்றும் சிவபெருமான் அடியெடுத்துக் கொடுத்துள்ளமை உன்னி உணரற்பாலதாம். பதினோராந் திருமுறையில் இடம் பெற்றுள்ள திருமுகப் பாசுரம் இறைவனால் பாணபத்திரன் பொருட்டுச் சேரமான் பெருமாள் நாயனருக்கு எழுதப்பட்ட சிறப்புடைத்தாகும்.

வேதங்களை 'எழுதாக் கிளவி' என்பது மரபு. இறைவன் திருவருள் கூட்டுவிக்கப் பெற்ற அடியார்கள் இன்தமிழாற் பாடிய திருமுறைகளை 'எழுது மறை' என வழங்குதல் மரபு. திருஞானசம்பந்த மூர்த்திகளை 'வண்டமிழால் எழுதுமறை மொழிந்த பிரான்' என்று பெரிய புராணமும், 'எழுதுமறை மொழிந்த கழுமல முனிவன்' என்று தில்லைக்கலம்பகமும் கூறுவது காண்க. மேலும் திருமுறை யென்னும் இப்பெயர் வழக்கு உண்மையைத் 'திருமுறையெழுதுவோர் வாசிப்போர்" என்னும் சேக்கிழார் வாக்குகொண்டு துணியலாம். உமாபதிசிவாசாரியார் இயற்றிய சேக்கிழார் புராணம் கொண்டு, சைவத் திருமுறைகள் பன்னிரண்டு என வழங்கும் வழக்கம் பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரிய புராணம் இயற்றப்பெற்ற பின்னரே என்பதனை நன்கு துணியலாம்.

அடுத்துத் தேவாரம் என்ற சொல்வழக்கு முதல் ஏழு திருமுறைகளுக்கு வழங்கப்படுவதன் பொருத்தத்தினைக் காண்போம். 'தே' என்பது தெய்வத்தைக்

குறிக்கும் சொல்லாகும். வாரம் என்பது இசைப் பாட்டு வகைகளில் ஒன்றென்பர். கடவுளைத் துதிக்கும் இசைப் பாடல் என்பது தேவாரம் என்னும் சொல்லின் பொருளாகும். 'வாரம்' என்ற சொல்லிற்கு அன்பு எனப் பொருள் கொண்டு தெய்வத்தின்பால் உள்ள அன்பினாற் பாடப் பெற்ற பாடல் எனச் சிலர் பொருள் விரிப்பர். தே + ஆரம் எனப் பிரித்து, தெய்வத்திற்கு ஆரம்போல அமைந்தது எனத் தேவாரத்திற்குப் பொருள் கூறுவதும் உண்டு.

தேவாரம் என்ற சொல் பிற்காலத்தில் வழக்கிற்கு வந்திருக்க வேண்டும். ஏனெனில் கல்வெட்டுக்களில் 'திருப்பதியம்' என்ற சொல் தேவாரப்பாடல்களைக் குறிக்க வழங்கப்பட்டிருப்பதைக் காணலாம். பதினோராம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்று 'தேவாரத் திருப்பதியம் விண்ணப்பம் செய்யும் அம்பலத்தாடி திருநாவுக்கரையன்' என்று குறிப்பிடுகின்றது. தேவாரம் திருநெறித் தமிழ் என்றும் போற்றப்படுவதாகும்.

தேவார மூவர் பாடிய பாடல்களை ஔவையார் 'மூவர் தமிழ்' என மொழிவர். மூவர் பத்திப் பெருக்குடன் பாடிய திருப்பதிகங்கள் எண்ணில் அடங்காதனவாகும். பல பாடல்கள் தில்லைத் திருக்கோயிலின் ஓர் அறையில் பன்னாள் கறையான் புற்றால் மூடப்பட்டிருந்தமையால் பெரும்பாலான ஏடுகள் பழுது பட்டநிலையில் இருந்தன. ஒரு சிலவே நன்னிலையில் நம் கைக்குக் கிடைத்தன.

முதலாம் இராசராச மன்னனின் வேண்டுகோட்கிணங்கத் திருநாரையூரிலே ஆதிசைவ மரபிலே தோன்றிப் பொல்லாப் பிள்ளையாரை வழிபட்டுப் பெருமை கொண்ட நம்பியாண்டார் நம்பிகள் என்னும் அடியவர் மேற்கொண்ட பெருமுயற்சி இன்று நம்மிடையே திருப்பாடல்களை—

தேவாரச் செல்வத்தைத் தந்துள்ளது. திருமுறைகளைத் தொகுத்த திருப்பணி நம்பியாண்டார் நம்பிகளையே சாரும். 'மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும் தேவாரஞ் செய்த திருப்பாட்டும்' என இரட்டைப் புலவர்கள் பாடிய ஏகாம்பர நாதருலா குறிப்பிடுகின்றது. ஆயினும் மூவர் பாடிய பாடல்களைத் தேவாரம் என்ற பெயரால் முதன் முதல் சைவ எல்லப்ப நாவலர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

**" வாய்மை வைத்த சீர்திருத் தேவாரமும் திருவாசகமும்**
**உய்வைத் தரச்செய்த நால்வர் பொற்றாள்**
**எம் உயிர்த் துணையே"**

எனப் பாடியுள்ளமை காண்க.

முதல் திருமுறையினைப் பாடியவர் திருஞான சம்பந்தப் பெருமானவர். சோறுடைத்த சோழவள நாட்டிலே சீகாழிப்பதிலேயே வேத நெறியிலும். வேள்வி நெறியிலும் வாழ்ந்த சிவபாத இருதயருக்கும் அவர் மனைவியார் பகவதியாருக்கும் பிறந்தவரே சம்பந்தப் பெருமான் ஆவர். மூன்று வயதிலேயே அம்மையின் ஞானப் பாலுண்டு, 'தோடுடைய செவியன்' பாடத் தொடங்கிய ஞானப் பெருந்தகை ஞானசம்பந்தராவர். அவர் பாடிய முதல் பாடலே நெஞ்சத்தைப் பிணிக்கும் நேர்த்தியை உடையதாகும், பொருளாழம் மிகுந்த அப்பாடல் வருமாறு:

**" தோடுடைய செவி யன் விடையேறியோர் தூவெண்மதிசூடி**
**காடுடையசுட லைப் பொடிபூசியென் உள்ளங்கவர்கள்வன்**
**ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்தவருள்செய்த**
**பீடுடையபிர மாபுர மேவிய பெம்மானிவனன்றே "[5]**

திருஞானசம்பந்தர் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கப் பாடிய அருட்திருப் பாசுரங்கள் பலவாகும். சம்பந்தர்

5. முதலாந் திருமுறை ; திருப்பிரமபுரப்பதிகம் : 1

திருப்பாடல்களிலே இயற்கையின் இனிய பெற்றியினை நயமுறக் காணலாம். இறைவனின் இணையற்ற திருக் கோலம், இவர் பாடலைப் படிப்போர் கண்முன் கூத்தாடும். இவர் பாடிய பதிகங்கள் பதினாயிரம் என்றும், அவற்றில் பல சிதலால் அழிந்தன என்றும் கூறுவர், இப்போது கிடைத்துள்ள பாடல்கள் 383 பதிகங்களாகும். அவற்றில் முதல் 136 பதிகங்களை முதல் திருமுறையாகவும், அடுத்த 122 பதிகங்களை இரண்டாவது திருமுறையாகவும், இறுதி 125 பதிகங்களை மூன்றாவது திருமுறையாகவும் நம்பியாண்டார் நம்பிகள் வகுத்தமைத்துள்ளார்.

முதல் திருமுறையில் வரும் முதற் பதிகமாகிய 'தோடுடைய செவியன்' என்ற பிரமபுரப் பதிகம் 'மெய்ம்மை மொழித்திருப்பதிகம்' எனச் சேக்கிழாரால் சிறப்பிக்கப்பட்டுள்ளது. மறைகளுக் கெல்லாம் முதலாக அமைந்த பெருமையுடையது, 'ஓம்' எனும் பிரணவ எழுத் தாகும்; 'ஓம்' என்பதிலுள்ள ஓகாரத்தினைத் 'தமிழ்' என்பதன் முதலெழுத்துக்க ளமைந்த தகர மெய்யுடன் இணைத்துத் தொடங்கிய சிறப்பு 'தோடுடைய செவியன்' எனும் இத்திருப்பதிகத்துக்கு உண்மையால், 'எல்லையிலா மறைமுதல் மெய்யுடன் எடுத்த எழுதுமறை, மல்லல் நெடுந்தமிழ்' எனப் போற்றப் பெறுவதோடு முதல் திருமுறையில் முதல் திருப்பதிகமாகவும் முறைப்படுத்தப் பெற்றுள்ளது. இத் திருப்பதிகத்திற்குரிய பண் நைவளம் என்பதாகும். நைவளம் மிகப் பழமையான பண்ணாகும். 'நைவளம் பழுநிய நயந்தெரி பாலை' என்பது சிறுபாணாற்றுப் படைத்தொடர்.[6] இப்பண்ணை இக்காலத்தார் நட்ட பாடையென வழங்குவர், திருஞானசம்பந்தப்பெரு

6. சிறுபாணாற்றுப் படை : 36

மானுக்கு முன்பு வாழ்ந்த காரைக்காலம்மையார் பாடியருளிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இரண்டினுள் 'கொங்கை திரங்கி' என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகமும் நட்டபாடைப் பண்ணில் அமைந் திருப்பது ஈண்டு நினைத்தற் குரியதாகும். ஞானசம்பந்தர் முதன் முதலிற் பாடிய இப்பதிகத்தில் அமைந்த பண் நட்டபாடையாதலின், சம்பந்தர் நட்டபாடைப் பண்ணிற் பாடிய திருப்பதிகங்கள் யாவும் 'தோடுடைய செவியன்' எனும் இத்திருப்பதிகத்தை யொட்டி முதல் திருமுறையின் முதற்கண் வைக்கப் பெற்றன. அடுத்து, 'மடையில் வாளைபாய' என்ற திருக்கோலக்காப் பதிகம் தக்கராகப் பண்ணில் அமைந்துள்ளதாகும். தக்கராகப் பண் அமைந்த பதிகங்களை யடுத்து அதனோடு இயைபுடைய பழந்தக்கராகப் பண்ணில் அமைந்துள்ள பதிகங்கள் வைக்கப் பெற்றன. அடுத்துத் தக்கேசிப் பண் அமைந்த பதிகங்கள் இடம் பெற்றுள்ளன. அடுத்து, குறிஞ்சி, வியாழக் குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சிப் பண் அமைந்த பதிகங்கள் இடம் பெற்றுள்ளன. இறுதிப் பதிகம் 'மாதர் மடப்பிடி' என்னும் முதற் குறிப்புடைய திருத்தருமபுரப் பதிகமாகும். இயலிசைத் திறத்தின் வேறுபாடுடைமையாலும் யாழில் இசைத்தற்கு அடங்காமையினாலும் 'யாழ்முரி' என இப்பதிகம் வழங்கப் படுகின்றது.

முதல் திருமுறையில் சில அற்புதத் திருப்பதிகங்கள் அமைந்துள்ளன, முதலாவது அம்மை தந்த ஞானப் பால் குடித்த நிலையில் பாடிய 'தோடுடைய செவியன்' என்னும் திருப்பாட்டு. அடுத்துத் திருக்கோலக்காவில் பொற்றாளம் பெறப்பாடிய 'மடையில் வாளை' என்னும் பதிகம்; திருநீலகண்ட யாழ்ப்பாணர் வேண்டுகோட்படி திருப்பதிகத்து இசை யாழிலடங்கா வண்ணம் பாடிய

'மாதர் மடப்பிடி' என்னும் பாட்டு; திருப்பாச்சிலாச் சிராமத்தில் கொல்லி மழவன் மகளைப்பற்றிய முயலகன் என்னும் நோய் தீரப் பாடிய 'துணிவளர் திங்கள்' என்னும் பதிகம்; கொங்கு நாட்டிற் பனிநோய் நீங்கப் பாடிய 'அவ்வினைக் கிவ்வினையாம்' என்னும் திருநீலகண்டப் பதிகம்; மதுரை மாநகரிற் சமணரோடு நிகழ்த்திய அனல் வாதத்தில் நெருப்பிலிட்டும் வேவாது பச்சையாய் நின்ற 'போகமார்த்த பூண்முலையாள்' என்னும் பச்சைப்பதிகம்; திருவோத்தூரில் ஆண்பனையினைப் பெண்பனையாக்கப் பாடிய 'பூத்தேர்ந்தாயன' என்னும் பதிகம்; திருவீழிமிழலையிற் படிக்காசு பெற்ற பழங்காசின்வட்டந்தீரப்பாடிய. 'வாசி தீரவே காசு நல்குவீர்' என்னும் பதிகம் முதலியன முதலாந் திருமுறையில் அமைந்துள்ள அற்புதத் திருப்பதிகங் களாகும்.

முதலாந் திருமுறையில் பல பதிகங்களில் இயற்கை வருணனை இனிமையுற அமைந்து கிடப்பதைக் காணலாம். சான்றாகத் திருவீழிமிழலைப் பதியைச் சம்பந்தர் புனைந் துரைத்துள்ள அழகினைக் காணலாம். மருதநிலத்தில் வளமான செல்வங்களைக் காண்கிறோம். வயலிடையே நீர்நிலையும், அந்நீர்நிலைகளில் தாமரை முதலிய நீரிடை மலரும் பூக்களும் அவை உள்ளத்தில் உவகையைப் பூக்கச் செய்கின்றன. தாமரை மலர்களில் அன்னப்பறவைகள் அமர்ந்திருப்ப, அவற்றின் அருகாமையில் தாமரையிலை எழுந்து குடைபோல் அன்னங்களுக்கு நிழல் செய்ய, கரையருகே விளைந்து தலைசாய்த்து நிற்கும் நெற்கதிர், சாமரைபோல் அசைந்து நிற்பது கண்கொள்ளாக் காட்சியாக விளங்குகின்றது. இக்காட்சியைத் திருஞான சம்பந்தர் திருவாய் பின்வரும் பாடலைப் பாடியுள்ளது.

"பொறியரவ மதுசுற்றிப் பொருப்பேமத்
 தாகப்புத் தேளிர்கூடி
மறிகடலைக் கடைந்திட்ட விடமுண்ட
 கண்டத்தோன் மன்னுங்கோயில்
செறியிதழ்த்தா மரைத்தவிசிற் றிகழ்ந் தோங்கு
 மிலைக்குடைக்கீழ்ச் செய்யார் செங்நெல்
வெறி கதிர்ச்சா மரையிரட்ட விளவன்னம
 வீற்றிருக்கு மிழலையாமே."[7]

*இவ்வாறாகத் திருஞானசம்பந்தப்பெருமான் பாடியுள்ள முதல் திருமுறை சிறப்புநலம் வாய்ந்ததாகத் தெரிகின்றது. சின்னஞ்சிறு வயதிலேயே நெஞ்சையள்ளும் சிறந்த பதிகங்களைப் பாடிய பெருமை சம்பந்தரையே சாரும். நா மணக்கும் வாய் மணக்கும் பா மணக்கும் நல்ல தமிழ்த் தெய்வப்பாடல்களை நற்றமிழர் சமுதாயத்திற்கு அளித்தவர் அவர். 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞான சம்பந்தர்' தம் தெய்வத் திருமுறைப் பதிகங்கள் நமக்கு நல் வழி காட்டும் நன்னீர்மை வாய்ந்தன என்பது வாய்மையுரை யாகும்.*

---

7. முதலாந் திருமுறை : திருவீழிமிழலைப் பதிகம் : 2

# 21

# வள்ளலார் வாழ்வு

எங்கும் ஓரே காரிருள். பொருள்களின் தோற்றம் கட்புலனுக்கு எட்டவில்லை. வானமெங்கும் கருமுகிற் கூட்டங்கள். மின்னற் கீற்றுகள் வெட்டிக் கண்ணைப் பறிக்கின்றன. பெருமழை பொழியத் தொடங்குகின்றது. கோடை வெப்பத்தால் வாடி உலர்ந்து கிடந்த மண் குளிர்கின்றது. ஓய்ந்து கிடந்த மரங்களெல்லாம் பசுமைக் காட்சி வழங்குகின்றன. எங்கும் ஓர் உயிரோட்டம் காணப்படுகின்றது. எல்லாம் மழை வெள்ளம் ஆற்றிய பொருள்.

இதுபோன்ற நிலை பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தமிழகத்தில் நிலவியது. ஆங்கிலேயர் ஆட்சி, அவர்கள் புகுத்திய இயந்திர நாகரிகம்: இவை காரணமாகத் தமிழ் மக்கள் அன்பைப் போற்ற மறந்தனர். இரக்கத்தைக் கொள்ள விழைந்திலர். அவர்தம் பேச்சு ஒன்றாகவும் செயல் பிறிதொன்றாகவும் அமைந்தது. அகத்தே கருத்தும் புறத்தே வெளுத்தும் அவர்கள் வாழ்வு போலி வாழ்வாகக் காணப்பட்டது. இகவாழ்வில் பரவாழ்வின் பயனைப் பெற்று மகிழும் பக்குவம் அவர்கட்கு வாய்க்கவில்லை. 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்ற முறையில் அவர்கள் வாழ்வு விளங்கியது.

இந்நிலையில் வள்ளற்பெருமான் அவர்கள் தமிழ்நாடு செய்தவப் பயனால் ஞானபூமியாம் இந்தத் தமிழ் மண்ணிலே

தோன்றினார்கள். மெய்வாழ்வு வாழ்வதாக நடித்துப் பொய் வாழ்வு வாழும் உலக மக்களைத் திருத்தி அவர்களைச் சன்மார்க்க சங்கத்தில் அடைவித்திட வள்ளற்பெருமான் இவ்வுலகில் இறையருளால் பிறந்திட்டதாகவும், இகத்தில் அவர்கள் பரத்தைப் பெற்று மகிழ வேண்டித் தாம் திருவவதாரம் கொண்டதாகவும் வள்ளற்பெருமானே திருவருட்பா ஆறாந் திருமுறையில் சாற்றுகின்றார்.

**" அகத்தே கருத்துப் புறத்துவெளுத்**
**திருந்த உலகர் அனைவரையும்**
**சகத்தே திருத்திச் சன்மார்க்க**
**சங்கத் தடைவித் திடஅவரும்**
**இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந்**
**திடுதற் கென்றே எனைஇந்த**
**உகத்தே இறைவன் வருவிக்க**
**உற்றேன் அருளைப் பெற்றேனே"** [1]

என்று பாடிய திருப்பாடலை நோக்குக; வள்ளற் பெருமான் பிறப்பின் காரணம் துலக்கமுறும்.

## இயற்கையில் ஈடுபாடு

இத்தகு உயந்த செயலுக்காகத் திருவவதாரம் செய்த வள்ளற் பெருமான் அவர்கள் ஆரவாரத்திலும் ஆடம்பரத்திலும் நெஞ்சைப் பறிகொடுக்க வில்லை. ஆரவாரமும் போலி வாழ்வும் மிகுந்த சென்னை மாநகரில் வாழ்ந்தால் எங்கே தம்முடைய உள்ளம் சிறுகுறுமோ என்று அஞ்சி, காட்டுப் புறங்களிலே இனிய ஊர்ப் பகுதிகளிலே சென்று வாழ்ந்தார் வள்ளற் பெருமான். ஊர்ப்புறங்களிலும் மக்களோடு பொருந்தி வாழாமல் காட்டிலும் பருக்கைக்

1. திருவருட்பா ; ஆறாந் திருமுறை ; உற்ற துரைத்தல் : 9

கல்லிலும் புன்செய்க் களத்திலும் திரிந்து இளைப்பெய்திய நாவையும், அந்த இளைப்பை ஏட்டிலும் எழுதிக்காட்ட முடியாதென்றும், ஆயினும் அருளொழிப் பிழம்பாக இருக்கும் ஆண்டவன் அதனை அறிவான் என்றும் வள்ளற் பெருமான் தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

> " நேட்டிலே மிகுந்த சென்னையி லிருந்தால்
> சிறுகுறும் என்றுளம் பயந்தே
> நாட்டிலே சிறிய வூர்ப்புறங் களிலே
> நண்ணினேன் ஊர்ப்புற மடுத்த
> காட்டிலே பருக்கைக் கல்லிலே புன்செய்க்
> களத்திலே திரிந்துற்ற இளைப்பை
> ஏட்டிலே எழுத முடியுமோ இவைகள்
> எந்தைநீ அறிந்தது தானே." [2]

## இரக்கவுணர்வு

தொடர்புடையார் மாட்டுச் செலுத்தும் இரக்கம் 'அன்பு' என்றும், தொடர்பில்லாதாரிடத்தும் செலுத்தும் இரக்கம் 'அருள்' என்றும் கூறப்படும். வள்ளற்பெருமான் வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் உளம் வாடியவர்; கொடியவர்கள் பிற உயிர்களை வாட்டி வதைத்துக் கொல்லும் காட்சியைக் கண்டு திடுக்கிட்டு அஞ்சியவர்; உயிர்கள் கொலைஞர் கையில் அகப்பட்டு உயிரடங்கும் கணப்பொழுதெல்லாம் அக்காட்சியினைக் கண்ணால் கண்டு உள்ளம் பதைத்தவர்; வலையுந் தூண்டிலுங் கொண்டு பாதகர் மீன் பிடிக்கச் செல்லும் காட்சியைக் கண்ட போதெல்லாம் உள்ளம் நடுக்கமுற்று ஒடுங்கியவர் இரக்கமே உருவான வள்ளற்பெருமான் அவர்களாவர். இதனை

2. திருவருட்பா — ஆறாந் திருமுறை ; பிள்ளைப் பெரு விண்ணப்பம் : 58

அவர்களே ஒரு பாடலிற் குறிப்பிட்டுள்ளார். அப்பாடல் பின்வருமாறு:

" துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத்
தொடங்கிய போதெலாம் பயந்தேன்
கண்ணினு லையோ பிறவுயிர் பதைக்கக்
கண்டகா லத்திலும் பதைத்தேன்
மண்ணினில் வலையுந் தூண்டிலுங் கண்ணி
வகைகளுங் கண்டபோ தெல்லாம்
எண்ணியென் னுள்ளம் நடுங்கிய நடுக்கம்
எந்தைநின் திருவுள மறியும்." [3]

## எளிய வாழ்வு

எளிய வாழ்விலே ஏற்படும் இன்பம் வேறு எவ்வாழ்விலும் அமைவதில்லை. பட்டுடுத்துப் படாடோபமாக வாழ்கின்ற வாழ்வு எத்தனை நாள் நிலைக்கும் என்பதனை யாவரே அறிவர்? உணவு, உடை, உறையுள் முதலிய பல துறைகளிலும் எளிய வாழ்வே கொண்டு இனிய வாழ்வு வாழ்ந்து காட்டியவர் வள்ளற்பெருமான் அவர்கள் ஆவர். தம்முடைய தந்தையாகவும், தாயாகவுந் தில்லையில் எல்லையில் கூத்து நிகழ்த்தும் திருச்சிற்றம்பலத்தானையே தகவுடன் கொண்டவர் வள்ளற்பெருமான். இதனை அவரே

" ......எனக்குப், பேசிய தந்தையும் தாயும்
பொடித்திரு மேனி யம்பலத் தாடும்
புனித நீ ஆதலால்" [4]

என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் இனிய சுவை உணவை இறைவன் வழங்கியருளவும், அதில் விருப்பங்

3. திருவருட்பா ; ஆறுந் திருமுறை ; பிள்ளைப் பெரு விண்ணப்பம் : 64

4. திருவருட்பா ; ஆறுந் திருமுறை ; பிள்ளைச் சிறு விண்ணப்பம் : 1 : 3—6

கூடாது. அது இறைவன் தந்தது என்ற காரணத்திற் காக அளவு உண்ணுவதாகவும், எல்லாம் இவ்வுலகில் தன்னைப் பொறுத்த வரையில் இறைவன் சம்மதத்தோடு நிகழ்வதாகவும், தம்முடைய சுதந்திரமாக — இச்சையாக யாதொன்றும் நிகழவில்லை என்றும் மனங்கசிந்து குறிப் பிட்டுள்ளார்.

'' இன்சுவை உணவு பலபல எனக்கிங்கு
எந்தைநீ கொடுப்பிக்கச் சிறியேன்
இன்சுவை உணவென் றுண்கின்றேன் இன்னும்
நீதரு வித்திடில் அதுநின்
தற்சுதந் தரமிங் கெனக்கதில் இறையும்
சம்மதம் இல்லை நான் தானே
என்சுதந் தரத்தில் தேடுவே னல்லேன்
தேடிய தும்மிலை யீண்டே.''[5]

மேலும் உடம்பைப் பற்றிய ஆசை அணுவளவும் இல்லாமலும், பசித்திடும் பொழுதும் வெறுப்போடு உணவு கொள்ளுதலும், உடம்பு பெருத்திடுவதில் ஆசையின்மையும், மாறாக இளைத்தலில் வேட்கையும் கொண்டவராக வள்ளற் பெருமான் வாழ்ந்தார்கள் என்பதனைப் பின்வரும் பாடல் உணர்த்தும்.

'' கிளைத்தவிவ் வுடம்பில் ஆசையெள் ளவும்
கிளைத்திலேன் பசியற உணவு
திளைத்திடுந் தோறும் வெறுப்பொடும் உண்டேன்
இன்றுமே வெறுப்பிலுண் கின்றேன்
தளைத்திடு முடையூன் உடம்பொரு சிறிதும்
தடித்திட நினைத்திலேன் இன்றும்
இளைத்திட விழைகின் றேனிது நான்தான்
இயம்பலென் நீயறிந் ததுவே.''[6]

5. திருவருட்பா: ஆறாந் திருமுறை; பிள்ளைச் சிறு விண்ணப்பம்: 9
6. திருவருட்பா: ஆறாந் திருமுறை; பிள்ளைச் சிறு விண்ணப்பம்: 21

**வீடும் வேண்டா விறல்**

பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய சேக்கிழார் பெருமான் தம் பெரிய புராணத்தில் திருக்கூட்டத்துச் சிறப்பினைச் சொல்லும் பொழுது,

**" கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்**
**ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்**
**கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி**
**வீடும் வேண்டா விறலின் விளங்கினர்"[7]**

என்று குறிப்பிட்டுள்ளார். திருநாவுக்கரசர் பெருமானும் தம் உழவாரத் திருத்தொண்டு செய்யும்பொழுது பருக்கைக் கற்களுடன் செம்பொன்னும் நவமணியும் கலந்து காணப்பட, அவ்வனைத்தையும் உழவாரத்தினிலேந்திப் பூங்கமல வாவியிற் புக எறிந்தார் என்று சேக்கிழார் பெருமான் குறிப்பிடுவார்.

**" செம்பொன்னும் நவமணியும் சேண்விளங்க ஆங்கவையும்**
**உம்பர்பிரான் திருமுன்றில் உருள்பருக்கை யுடன்ஒக்க**
**எம்பெருமான் வாகீசர் உழவாரத் தினிலேந்தி**
**வம்பலர்மென் பூங்கமல வாவியினிற் புகஎறிந்தார்."[8]**

இதனையே வள்ளற்பெருமான் திருப்பாட்டிலுங் காணலாம்:

**" பணத்திலே சிறிதும் ஆசையொன் றிலைநான்**
**படைத்த அப் பணங்களைப் பலகால்**
**கிணற்றிலே யெறிந்தேன் குளத்திலும் எறிந்தேன்**
**கேணியி லெறிந்தனன் எந்தாய்**

7. திருக்கூட்டச் சிறப்பு: 8
8. திருநாவுக்கரச நாயனார் புராணம்: 417

குணத்திலே நீதான் கொடுக்கின்ற பொருளை
யெறிகலேன் கொடுக்கின்றேன் பிறர்க்கே
கணத்திலே யெல்லாங் காட்டுநின் னருளை
கண்டன னினிச்சொல்வ தென்னே.''[9]

இதனால் பொருளைப் போற்றாமல் இறையருளைப் போற்றி இனிது வாழ்ந்தவர் வள்ளற்பெருமான் என்பது நன்கு புலனாகும். இதனாற்றான் 'அருட் பிரகாச வள்ளலார்' என்று அன்போடு மக்களால் இவர்கள் அழைக்கப் பெறுகின்றார்கள். முத்தியிலே அடையவும் விரும்பாத பெருவாழ்வு வாழ்ந்தவர் வடலூர் அடிகளார் என்பது,

"......முத்திபெற் றிடவும்
உரியதோர் இச்சை எனக்கிலை என்றன்
உள்ளம் நீ அறிந்ததே எந்தாய்''[10]

என்று குறிப்பிட்டுள்ளதினின்றும் அறியலாம்.

## வேண்டுவன

பிறரிடம் சென்று பிச்சை கேட்பதனையும், பிறரொருவர் தன்னிடம் வந்து பிச்சை கேட்டால் இல்லையென்று சொல்லாமல் ஈகின்ற தன்மையினையும், இறைவனைக் கைவிடா நினைப்பும், பிறர் பொருளை விரும்பாத மனமும், பிறரைப் பழித்தல் பேசாத தெளிவும், வாய்மையுந் தூய்மையுந் தந்து திருவடிச் சார்பு அருளுவதனையும் இறைவனிடம் வள்ளற்பெருமான் இரந்து முறையிட்டார்கள் என்பது பின்வரும் பாடலால் அறியப்படும்.

---

9. திருவருட்பா: ஆறாந் திருமுறை; பிள்ளைச் சிறு விண்ணப்பம்: 11
10. திருவருட்பா: ஆறாந் திருமுறை; பிள்ளைச் சிறு விண்ணப்பம்: 10: 6—8

"ஈயென்று நானொருவ ரிடம்நின்று கேளாத
இயல்புமென் னிடமொருவர் ஈ
திடுவென்ற போதவர்க் கிலையென்று சொல்லாமல்
இடுகின்ற திறமும் இறையாம்

நீ யென்றும் எனைவிடா நிலையுநா னென்றும்முன்
நினைவிடா நெறியும் அயலார்
நிதியொன்றும் நயவாத மனமுமெய்ந் நிலைநின்று
நெகிழாத திடமும் உலகிற்

சீ யென்று பேயென்று நாயென்று பிறர்தமைத்
தீங்குசொல் லாததெளிவும்
திரமொன்று வாய்மையுந் தூய்மையுந் தந்துநின்
திருவடிக் காளாக்குவாய்

தாயொன்று சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே."[11]

*இத்தகைய உயரிய குறிக்கோளோடு பெருவாழ்வு வாழ்ந்த வள்ளற் பெருமான் அவர்களின் வாழ்வு நமக்கெல்லாம் வழி காட்டுவதாக.*

---

*11. திருவருட்பா; ஐந்தாந் திருமுறை; தெய்வமணி மாலை: 6*

# 22

# வள்ளலார் கண்ட சீர்திருத்தம்

'காலத்தின் இடையிடையே கவிஞர்கள் தோன்றுவர்' என்பர் அறிஞர். தாங்கள் பிறந்த காலத்தின் கருவியாகவும் கவிஞர் அமைவர்: கர்த்தாவாகவும் அமைவர். இவ்வகையில் தமிழ்நாடு செய்தவப் பயனாய்த் தோன்றியவர் வடலூர் வள்ளற் பெருமான் ஆவர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் திருவருட் செல்வராயும், இத் தமிழ்மண்ணின் தனிச் சிறப்பாம் சித்த கணத்தின் வழிவந்த சித்தராயும். சீர்திருத்தச் செம்மலாயும், இயற்கை மருத்துவராயும், எவ்வுயிர்க்கும் இரங்கியழுத பேரருளாளராயும், அடக்கம், அன்பு, ஆன்மநேய ஒருமைப்பாடு முதலியவற்றின் பிரசாரகராயும் திகழ்ந்தவர் வாழ்விக்க வந்த வள்ளலார் ஆவர்.

நாணயத்திற்கு இருபுறங்கள் போன்று மக்கள் வாழ்க்கையிலும் இரு புறங்களைக் கண்டார் வள்ளலார். அகமும் புறமும் ஒத்தியங்காத அலங்கோல வாழ்வு மக்களின் வாழ்வாக உருக்கொண் டிருப்பதனை உள்ளிநைந்தார் கருணையே வடிவான வள்ளலார். புறத்தே வெளுத்துப் பொலிந்து அகத்தே கறுத்துத் தோன்றும் அவல வாழ்வினைப் 'புறம் சுவர் கோலம் செய்யும்' புன்மை நெறியாகக் கண்டார் வள்ளலார். உள்ளும் வெளியும் ஒத்து ஒளிராத இல்வாழ்வு—இருவேறு இயல்புகளைக் கொண்ட இந்நெறி மனித வாழ்விற்கே களங்கமாக அமைவதனைக் கண்டு அவர் வெறுத்தார். இத்தகு புன்னெறி தோய்ந்த அகப்புற

மாறுபாட்டை அகற்றுவதே தாம் பிறவி யெடுத்ததன் பயன் என்றும், பணியென்றும், அப் பணிக்கே இறைவன் தன்னை இங்கு அனுப்பினன் என்றும் வள்ளலாரே தம் திருப்பாட்டு ஒன்றில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

" அகத்தே கறுத்துப் புறத்துவெளுத்
திருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத் தடைவித் திடஅவரும்
இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்
திடுதற் கென்றே எனை இந்த
உகத்தே இறைவன் வருவிக்க
உற்றேன் அருளைப் பெற்றேனே."[1]

இறைவன் அருளால் தாம் உலகில் பிறந்ததனையும், அகத்தே கறுத்துப் புறத்தே வெளுத்திருந்த உலகர் அனைவரையும் சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத்து அடைவித்திடும் எண்ணமே தமது பணி என்றும் பாங்குற மொழிகின்றார் வள்ளலார்.

அடுத்து, வள்ளற்பெருமான், 'வாழையடி, வாழையென வந்ததிருக் கூட்ட மரபினில்யான் ஒருவனன்றோ' என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொள்கின்றார். திருவள்ளுவர் முதலான சான்றோரிடத்துப், திருமூலர் முதலான சித்தரிடத்தும், ஞானசம்பந்தர் முதலான திருமுறைச் சான்றோரிடத்தும் நீங்காத பற்றுக் கொண்டவர் வடலூர் வள்ளலார் ஆவர். இங்குக் குறிக்கப் பெற்ற அனைவரும் 'தமக்கென வாழாப் பிறர்க் கென' வாழ்ந்த அருளாளர்கள் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. இவர்கள்பால் கொண்ட ஆரா அன்பினையும் மதிப்பினையும் வள்ளலார் தம் திருவருட்பாப் பாடல்கள் பலவற்றில் புலப்படுத்தியுள்ளார். ஆயினும் வள்ளலார்

1. திருவருட்பா; ஆருந்திருமுறை; உற்ற துரைத்தல்: 9

ஆன்மீகத் துறையில் சீர்திருத்தச் செம்மலாய் ஒளிர்ந்தார். திருமுறைச் செல்வர்கள் வழி வந்தவராயினும், காலத்தின் தேவையை உணர்ந்து சீர்திருத்தக்காரராயும் விளங்கினர்.

பிறருக்கு உழைக்கும் செயலினை வள்ளலார் 'ஆன்ம லாபம்' என மொழிந்துள்ளார். இரக்கம், அன்புக்கசிவு, அருள் உணர்வு இவற்ருல் விளைவதே உயிர் வாழ்வின் மேம்பாடு என்பதனை நன்கு உணர்ந்திருந்தார். தாம் வழி பட்ட இறைவனை 'அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை என ஏற்றிப்போற்றினர். பிற உயிர்கள்பால் வள்ளலார் காட்டிய வான் கருணையே அருட்பாப் பாமழையாகப் பொழிந்தது.

'ஏன் உரைத்தேன், இரக்கத்தால் எடுத்துரைத்தேன்' என்று அவரே குறிப்பிட்டுள்ளார். 'இரக்கம் ஒருவிடில் என்னுயிர் ஒருவிடும்' என்று கசிந்து மொழிகின்ருர் கருணை வள்ளலார். மேலும்,

> "எங்கே கருணை இயற்கையின் உள்ளன
> அங்கே விளங்கிய அருட் பெருஞ் சிவமே"[2]

என்று இறைவன், இரக்க சிந்தை உடையவர்களிடத்தே உறைகின்ருன் என்பதனைத் தெள்ளத் தெளிவாகப் புலப் படுத்தியுள்ளார்.

> " நடமாடுங்கோயில் நம்பர்க் கொன்றீயில்
> படமாடுங் கோயில் பகவற் கங்காகும்"[3]

என்று திருமூலர் பாடினர்.

---

2. திருவருட்பா ; ஆருந்திருமுறை : அருட்பெருஞ்சோதி அகவல்: 481

3. திருமந்திரம் ; 1857

இந்நிலையினும் ஒருபடி மேலே சென்றார் வள்ளலார்,

"எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவரவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடமென நான் தெளிந்தேன் அந்த"
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்
சிந்தைமிக விழைந்த தாலோ"[4]

என்று அவர் குறிப்பிட்டிருப்பது இவ்வுண்மையினை—"மன்னுயிரையும் தன்னுயிராக" மதிக்கும் மாண்பினைக் குறைவறப் புலப்படுத்தும்.

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்றும்,

"துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத்
தொடங்கிய போதெல்லாம் பயந்தேன்
கண்ணினால் ஐயோ பிறஉயிர் பதைக்கக்
கண்டகா லத்திலும் பதைத்தேன்
மண்ணினில் வலையும் தூண்டிலும் கண்ணி
வகைகளும் கண்டபோ தெல்லாம்
எண்ணிஎன் உள்ளம் நடுங்கிய நடுக்கம்
எந்தைநின் திருவுளம் அறியும்"[5]

என்றும் அவர் பாடியிருக்கும் நிலை, அவர்தம் இரக்க உள்ளத்தைப் பெரிதும் புலப்படுத்துவனவாகும். அருளாளர் பலரும் தங்களைச் 'சிவமாக்கி யாள வேண்டும்' என்று சிவபெருமானிடம் சிந்தை கசிந்து கூற, வள்ளலாரோ வெனில், பிறவுயிர்களின் துன்பங்கண்டு நெஞ்சு நெக்குருகக் கசிந்து பேசுகின்றார்.

---

4. திருவருட்பா ; ஆறாந்திருமுறை; தனித்திரு மாலை: 8
5. திருவருட்பா ; ஆறாந்திருமுறை; பிள்ளைப் பெரு விண்ணப்பம்: 64

'ஒன்றே குலம் ஒருவனே தேவனும் நன்றே நினைமின்' என்றார் தவயோகியாம் திருமூலர். பிற்காலத்தே தாயுமானாரும் இந்நெறியில் பிறங்கினார். வடலூர் வள்ளற் பெருமானின் சீர்திருத்த நெஞ்சம் இத்துறையில் நல்ல பணியினை மேற்கொண்டது. அவர் பாடுகின்றார் :

" சாதிசம யங்களிலே விதிபல வகுத்த
சாத்திரக்குப் பைகள்எல்லாம் பாத்திரம்அன் றெனவே
ஆதியில்என் உளத்திலிருந்தே அறிவித்த படியே
அன்பால்இன் றுண்மைநிலை அறிவிக்க அறிந்தேன்
ஓதிஉணர்ந் தோர் புகழும் சமரசசன் மார்க்கம்
உற்றேன்சிற் சபைகாணப் பெற்றேன்மெய்ப் பொருளாம்
சோதிநடத் தரசைஎன்றன் உயிர்க்குயிராம் பதியைச்
சுத்தசிவ நிறைவைஉள்ளே பெற்றுமகிழ்ந் தேனே."[6]

'ஈசனை அடைதற்குச் சாதிகள், சமயங்கள், பல பிரிவுகளாக வகுக்கப்பட்டிருக்கிற சாத்திரங்கள் இவை எல்லாம் பாத்திரங்கள் அல்ல' என்று வன்மையாகச் சாதிப்பிரிவுகளைக் கண்டிக்கிறார் வள்ளலார்! சாதிமத பேதமற்ற புதிய சமுதாயத்தினைக் காண வேண்டும் என்று பெரிதும் விழைந்தார் வள்ளலார். இறைவனுக்குப் பள்ளியெழுச்சிப் பாடும்பொழுது இக்கருத்தினை வெளிப்படுத்தியுள்ளார்.

" மதம் பிடித் தவர்எல்லாம் வாய்பிடிப் புண்டு
வந்துநிற் கின்றனர் வாய்திறப் பிப்பான்
கதம் பிடித் தவர்எல்லாம் கடும்பிணி யாலே
கலங்கினர் சூழ்ந்தனர் உலம்புறு கின்றார்
பதம்பிடித் தவர்எல்லாம் அம்பலப் பாட்டே
பாடினர் ஆடினர் பரவிநிற் கின்றார்"[7]

என்றும்,

---

6. திருவருட்பா ; ஆறாந்திருமுறை; அனுபவமாலை: 92
7. திருவருட்பா ; ஆறாந்திருமுறை; திருப்பள்ளியெழுச்சி: 7

" ஊடல்செய் மதமும் சமயமும் இவற்றில்
உள்ளகற் பணிகளும் தவிர்ந்தேன்"[8]

என்றும்,

" நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா
நவின்றகலைச் சரிதமெலாம் பிள்ளைவிளை யாட்டே
மேல் வருணம் தோல் வருணம் கண்டறிவா ரிலை நீ
விழித்திது பார்"[9]

என்றும், உலகோருக்கு உய்வு நெறி உணர்த்துகின்றார்.

" வரையில்உயர் குலமென்றும் தாழ்ந்தகுலம் என்றும்
வகுக்கின்றீர் இருகுலமும் மாண்டிடக்காண் கின்றீர்"[10]

என்று மேற்குலம், கீழ்க்குலம் எனப்பிரிப்பதற்குச் சாவுமணி அடிக்கின்றார். பின்னர்ப் பூப்பது சமரச சன்மார்க்கம் என்கிறார்.

" பன்மார்க்க மெல்லாம் பசையற் றெழிந்தனவே
சன்மார்க்க மொன்றே தழைத்ததுவே"[11]

என்றும்,

" சத்தெல்லாம் ஒன்றென் றுணர்ந்த சன்மார்க்க
சங்கம் என்றோங் குமோ?"[12]

என்றும்,

" மலம்கழிந்து உலகவர் வானவர் ஆயினர்
வலம்பெறு சுத்த சன்மார்க்கம் சிறந்தது"[13]

என்றும் சமரச சுத்த சன்மார்க்க நெறியினை நமக்கு உணர்த்துகின்றார்.

---

8. திருவருட்பா ; ஆறாந்திருமுறை; இறை பொறுப்பியம்பல்: 7
9. திருவருட்பா ; ஆறாந்திருமுறை; அருள் விளக்கமாலை; 85
10. திருவருட்பா ; ஆறாந்திருமுறை; புனிதகுலம் பெறுமாறு புகலல்: 7
11. திருவருட்பா ; ஆறாந்திருமுறை; சுத்த சிவ நிலை: 21
12. திருவருட்பா ; ஆறாந்திருமுறை; ஆன்ம தரிசனம்: 8
13. திருவருட்பா ; ஆறாந்திருமுறை; உலகப் பேறு: 3

சிறு தெய்வ வணக்கத்தினையும், உயிர்ப்பலியினையும், ஊன் உண்ணுதலையும் கடிந்து வள்ளற் பெருமான் பாடியுள்ளார் :

"நலிதரு சிறிய தெய்வ மென்றையோ
நாட்டிலே பலபெயர் நாட்டிப்
பலிதர ஆடு பன்றிக் குடங்கள்
பலிக்கடா முதலிய உயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவும் கண்டே
புத்திநொந் துளநடுக் குற்றேன்
கலியுறு சிறிய தெய்வவெங் கோயில்
கண்டகா லத்திலும் பயந்தேன்"[14]

என்று சிறு தெய்வ வணக்கத்தினையும், பலி வழங்கும் கொடிய வழக்கத்தினையும் கண்டித்துள்ளார்.

"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று"[15]

என்பார் திருவள்ளுவர்.

"கொல்லா விரத மொன்று கொண்டவரே நல்லோர் மற்று
அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே"[16]

என்பார் தாயுமான தயாபரர்.

"கொலைபுரிவார் தவிர மற்றை எல்லோரும்
நினது குலத்தவரே"[17]

என்று வள்ளலார் குறிப்பிட்டுள்ளார்.

வடலூர் இராமலிங்கர் ஒரு துறவி. துறவிகள் பிறர் இல்லம் சென்று தலைவாயிலில் நின்றிரந்து பிச்சை பெற்று உண்ணுதலை மரபாகக் கொண்டவர்கள். ஆனால்

14. திருவருட்பா ; ஆறாந்திருமுறை; பிள்ளைப் பெரு விண்ணப்பம்: 63
15. திருக்குறள்: 258
16. தாயுமானவர் பாடல்கள் ; பராபரக் கண்ணி: 192
17. திருவருட்பா ; ஆறாந் திருமுறை; அருள் விளக்க மாலை: 70

நம் வடலூர்த் துறவியாரோ, வடலூரில் சத்திய தரும சாலை கண்டு நாள்தோறும் பலருக்கு உணவளிக்கும் திறஞ் சான்றவராக விளங்கினர் என்பது ஒரு புரட்சியே யன்றோ?

" பட்டினி யுற்றோர் பசித்தனர் களையால்
பரதவிக் கின்றனர் என்றே
ஒட்டிய பிறரால் கேட்டபோ தெல்லாம்
உளம்பகீ ரெனநடுக் குற்றேன்"[18]

என்றும்,

" ...............பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறாது அயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்"[19]

என்றும்,

" மண்ணுல கத்திலே உயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை ஒருசிறி தெனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்
கணமும்நான் சகித்திட மாட்டேன்"[20]

என்றும், அவர் பாடல்கள் வழிப் புலப்படுத்தியுள்ள கருத்தையும்,

", பசியினால் வரும் துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதில் வருமின்பம் பர இன்பமாகும்"

"சீவர்களுக்குப் பசி அதிகரித்த காலத்தில் ஜீவ அறிவு விளக்கமில்லாமல் மயங்குகிறது. அது மயங்கவே அறிவுக்கறிவாகிய கடவுளின் விளக்கம் மறைபடுகின்றது"

18. திருவருட்பா; ஆறாந்திருமுறை; பிள்ளைப் பெருவிண்ணப்பம்:22
19. திருவருட்பா; ஆறாந்திருமுறை; பிள்ளைப் பெருவிண்ணப்பம்: 62
20. திருவருட்பா; ஆறாந்திருமுறை; பிள்ளைச் சிறு விண்ணப்பம்: 23

என்றும் உரைநடைப் பகுதியில் எழுதியுள்ள சொற்களையும் பார்க்கும்பொழுது, 'குடிப்பிறப் பழிக்கும், விழுப்பம் கொல்லும், பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம், நாணணி களையும், மாணெழில் சிதைக்கும், பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும், பசிப்பிணி என்னும் பாவி'[21] யினை அவர் உள்ளவாறு உணர்ந்ததோடு மட்டும் அமையாது, பசிப்பிணி தீர அறச்சாலை கண்டு ஆயிரக்கணக்கான மக்களுக்கு உணவு வழங்கினார் என்பது செயலிலும் அவர் காட்டிய சீர்திருத்தத்தின் செம்மையினை நுண்ணிதின் நுவலும்.

"தமிழ் பாஷையே அதிக சுலபமாகச் சிவானுபூதியைக் கொடுக்குமென்பதாம்" என்று கூறித் தமிழைத் துறக்காத துறவியாகவும் அவர் பொலிகின்றார்.

ஆன்மீகத் துறையில் மட்டுமின்றி அரசியல் துறையிலும் சன்மார்க்கம் தழைக்க வேண்டுமென அவர் விரும்பினார். அவர் காலத்து ஆட்சி ஆங்கில ஆட்சி.

" கருணையிலா ஆட்சி கடுகி யொழிக
அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்க - தெருள்நயந்த
நல்லோர் நினைத்த நலம்பெறுக நன்று நினைத்து
எல்லோரும் வாழ்க இசைந்து"[22]

என்ற பாடலில் இதனை அவர் வெளியிட்டுள்ளார்.

" ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
ஒருமையுள ராகிஉல கியல்நடத்த வேண்டும்"[23]

என்று மேலும் நவின்றார். இத்தகு நிலைக்குச் சுத்த சன்மார்க்கமே வழி என்றார்.

---

21. மணிமேகலை; பாத்திரம் பெற்ற காதை: 76—80
22. திருவருட்பா; ஆறாந்திருமுறை; சுத்த சிவ சன்மார்க்க உலகின் ஒருமை: 5
23. திருவருட்பா; ஆறாந்திருமுறை; வேண்டுவை இவை இவை என விண்ணப்பித்தல்: 4

''சுத்த சன்மார்க்கத்திற்கு முக்கியத் தடையாகிய சமயம்,மதம் முதலிய மார்க்கங்களை முற்றும் பற்றறக் கைவிட்டவர்களும் காமக் குரோதம் முதலியவைகள் நேரிட்ட காலத்தில் ஞான அறிவினால் தடுத்துக்கொள்பவரும், கொலை, புலை தவிர்ந்தவர்களும் ஆகிய இவர்கள்தான் சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்களாவார்கள்'' என்றார்.

உடலைப் பழித்துத் துறவிகள் பாடியிருக்க வள்ளலார்,

''புண்ணியப் பயனாய்ப் பெற்ற தேகத்தைக் கூடிய வரையில் சாக்கிரதையோடு பக்குவ மார்க்கத்தில் நடத்தல் வேண்டும்?'' என்றார்.

வடலூர்த் துறவி பெண்ணுரிமையையும் பேசுகின்றார்.

''பெண்களுக்கு யோகம் முதலிய சாதனங்கள் அவசியம் கற்பிக்க வேண்டியது. மேலும், பேத மற்று அபேதமாய்ப் படிப்பு முதலியவையும் சொல்லிக் கொடுக்க வேண்டியது. தத்துவம் முதலியவற்றின் சொரூப போதிகளைத் தெரிவித்துச் சரளமாக்கினால், பின் தடையின்றி நம்முடைய துரிய ஆசிரிய காலத்தில் ஒத்திருப்பார்கள். 'தெய்வம் தொழா அள்' என்னும் தேவர் குறளால் இதை அறிக''

என்று வரும் வள்ளலார் வாக்கு அவர் பெண்ணினத்திற்கு வழங்கிய பெருஞ் சிறப்பேயாகு மன்றோ!

''பிறவா வரம் தாரும் பெம்மானே'' என்பார் அடியார். 'பெற்றலும் பிறந்தேன் இனிப் பிறவாத தன்மைவந் தெய்தினேன்' என்பர் சுந்தரர். 'பிறவாமை வேண்டும்' என ஆலங்காட்டுறை அண்ணலைக் காரைக் காலம்மையார் கசிந்து வேண்டியதாகக் கூறுவர் சேக்கிழார் பெருமான். ஆனால்

வடலூர் வள்ளலாரோ, 'இறவாமை' வேண்டுகிறார்; 'என் மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கம்' என்கிறார். 'இறவாமையீந்தானென் றாதூது சங்கே' என முழங்குகின்றார். 'சாகாதவனே சன்மார்க்கி' என்கிறார்.

"சிறந்திடு சன்மார்க்க மொன்றே பிணி மூப்பு மரணம்
சேராமற் தவிர்ந்திடுங் காண் தெரிந்துவம்மி னிங்கே
பிறந்த பிறப் பதிற்றான் நித்தியமெய் வாழ்வு
பெற்றிடலாம் பேரின்ப முற்றிடலாம் விரைந்தே"[24]

என்றும் கூறியுள்ளார். கொலைக் கருவிகளாலும் அழிக்க முடியாத உடம்பினைத் தாம் பெற்றுவிட்டதாகப் பிறிதோரிடத்தில் கூறியுள்ளார். 'மரணமிலாப் பெரு வாழ்வினை' எய்துதல் என்பது உண்மை, சத்தியம் என்று எடுத்து மொழிகின்றார்.

'உள்ளம் தளிர்ந்திடச் சாகாவரம் கொடுத்து' என்றும், 'இறவாத பெருவரம் ஈந்த மெய்ப்பொருள்' என்றும் இறைவனை வள்ளலார் குறிப்பிட்டுள்ளமை ஆன்மீகத் துறையில் அவர் காட்டிய புதிய நெறியினை உணர்த்தும்.

"கையுற வீசி நடப்பதை நாணிக் கைகளைக் கட்டியே' நடந்த துறவி அவர். காவித் துணியினைப் பிற துறவிகள் உடுத்த, 'வெண் துகிலால் மெய்யெலாம்' மறைத்த துறவி அவர். பணத்திலே சிறிதுமாசையற்று இறைவன் 'குணத்திலே பற்று' மிகுந்தவர் வள்ளலார். 'ஒருமையுடன் இறைவன் திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு' வேண்டியவர் வள்ளலார். ஒளி வழிபாட்டை ஏற்படுத்தியவரும் வள்ளலாரே ஆவர்.

24. திருவருட்பா; ஆறாந் திருமுறை; மரணம் இலாப் பெரு வாழ்வு.

இதுகாறும் கூறியவற்றால், வடலூர் வள்ளற் பெருமான், சாதிசமயச் சழக்குகளைக் கடந்த சமரச சன்மார்க்கத்தை ஆன்மீகத் துறையில் புகுத்தியவர் என்பதும், அரசியலிலும் சன்மார்க்கம் இடம்பெற வேண்டும் என எண்ணியவர் என்பதும், பசிப்பிணி நோய்ப்பிணி தீர்க்கும் சத்திய தருமச்சாலையினை வாழ்வில் கண்டவர் என்பதும், தமிழ்மொழிப் பற்றும், பெண்ணினம் உயர வேண்டும் என்ற பெருநோக்கும் கொண்டவர் என்பதும், மரணமிலாப் பெருவாழ்வினை இறைவழி எய்த முடியும் என்னும் கொள்கையினர் என்பதும். அனைத்திலும் மேலாக, எவ்வுயிர்க்கும் இரங்கியருளும் கருணையாளர் என்பதும் இவற்றின் வழி இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சீர்திருத்தச் செம்மலாய்த் தன்னிகரற்று விளங்கினவர் என்பதும் அங்கை நெல்லிக்கனியென விளக்கமுறும்.

# 23

# இயற்கை இன்பம்

உலகில் எண்ணற்ற எழிற் காட்சிகளை இயற்கை நமக்கு ஈந்துள்ளது. இயற்கைக் காட்சிகளின் இனிமையில் நெஞ்சைப் பறிகொடுக்காமல் இருக்க முடியாது. இயற்கை யன்னை வழங்கும் இனிய காட்சிகள் நமக்கு இணையற்ற இன்பம் பயக்கின்றன. 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா!' என்று பாரதியார், இறைவன் இந்த உலகில் நமக்காகப் படைத்துள்ள இயற்கை இன்பத்தினை எண்ணி வியந்து பாடுகின்றார். இயற்கைக் காட்சிகள் கண்களுக்கு மட்டுமின்றிக் கருத்துக்கும் நலஞ் சேர்ப்பனவாகும்.

பழந்தமிழர் இயற்கையோடு இயைந்த இன்ப வாழ்வு வாழ்ந்தவர்கள். சங்க காலத்தில் தமிழர் வாழ்வு இயற்கையின் இனிய சூழலில் அமைந்திருந்தது. அவர்கள் தாங்கள் வாழ்ந்த நிலப்பகுதிகளைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்து பகுதிகளாகப் பிரித்துக் கண்டனர். மலையும் மலையைச் சார்ந்த இடத்தினைக் குறிஞ்சி என்றும், காடும் காடு சார்ந்த இடத்தினை முல்லை என்றும், வயலும் வயலைச் சார்ந்த இடத்தினை மருதம் என்றும், கடலும் கடலைச் சார்ந்த இடத்தினை நெய்தல் என்றும், மழைவளம் குறைந்து கொடிய வெப்பம் மிகுந்த இடத்தினைப் பாலை என்றும் பழந்தமிழர்கள் குறிப்பிட்டனர்.

இயற்கையழகில் பழந்தமிழ்ப் புலவர்கள் ஈடுபாடு கொண்டனர். இயற்கையின் அழகில் தோய்ந்து இணை

யற்ற இன்பங் கண்ட புலவர்தம் உள்ளம் அவ்வினிய இயற்கையின் இன்பக் காட்சிகள் குறித்துப் பல கவிதைகளை வடித்துள்ளது. அத்தகைய சிறந்த கவிதைகளை நாம் படிக்கும் பொழுது இணையிலாத இன்பத்தினை அடைகின்றோம். இயற்கை வழங்கும் எழிற் காட்சிகளை நேரே கண்டு, காட்சி இன்பம் பெற்று மகிழ்வது ஒருவகை. இயற்கையின் இனிய பெற்றியினைத் தம் பாடல்களில் இனிமையுற வடித்துத் தந்திருக்கும் கவிஞர்களின் பாடல்களைப் படித்து மகிழ்ச்சியில் திளைப்பது மற்றொரு வகை. இரண்டாவதாகக் குறிப்பிடப் பெற்ற இன்பத்தினை நாம் இருக்கும் இடத்திலிருந்தே பெற முடியும். நாம் வேண்டும் பொழுதெல்லாம் நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்த இந்தக் கவிதைகள் என்றும் வாழ்ந்து வருவனவாகும்.

கபிலர் என்னும் பழந்தமிழ்ப் புலவர் இயற்கையில் தோய்ந்த நெஞ்சம் கொண்ட இனிய புலவர் ஆவர். அவர் பாடலில் ஓர் அழகான இயற்கை வருணனை அமைந்துள்ளது. அது வருமாறு: "ஒரு வளமார்ந்த மலைப் பாங்கரில் பசிய மூங்கில் மரங்கள் பல செழித்து வளர்ந்துள்ளன. அந்த மூங்கிலை வண்டு துளைத்துச் சென்றுள்ளது, அவ்வாறு வண்டு துளைத்துச் சென்ற அந்தத் துளைகளின்மேற் காற்று உட்புகுந்து வெளிவருகின்றது. அப்பொழுது பிறக்கும் இசை குழலோசை போன்று அமைந்து கொள்ளை இன்பம் நல்குகின்றது. அம் மலைச்சாரலில் குளிர்ந்த அருவி ஒன்று குதித்தோடிக்கொண்டிருக்கிறது. மலை முகட்டிலிருந்து கீழ்நோக்கி வந்த அருவி நீர், பாறைகளில் விழும்பொழுது பெருத்த ஓசை பிறக்கின்றது. அந்த ஆரவார ஒலி முழவோசையாக ஒலிக்கின்றது. அந்த அருவியின் பாங்கரில் கூட்டங் கூட்டமாகக் கலைமான் இனங்கள் தாழ ஒலித்துப்

பெருங்குரல் எழுப்புகின்றன. அந்த ஓசை பெருவங்கியத்தின் இசையாக எங்கும் நிறைகிறது. அந்த ஓசையுடன் மலைச்சாரலில் கொத்துக்கொத்தாக மலர்ந்திருக்கும் பூக்களில் உள்ள தேனைப் பருகுவதற்காக வண்டுகள் மிழற்றும் ஒலி யாழோசையாக அமைகின்றது. இவ்வாறு அந்த அழகிய மலைப்பக்கத்தே எழுந்த பல்வேறு இனிய ஓசைகளைக் கேட்ட மந்திகள் ஆரவாரம் மிகுந்து, அப்பொழுது பக்க மலைகளில் அழகிய மயில்கள் ஆடுகளத்தில் புகுந்தாடும் விறலி போலத் தம் அழகிய வண்ணத் தோகைகளை விரித்தாட, அவ் ஆட்டத்தினைக் கண்டு வியந்து மகிழ்ந்து நிற்கின்றன.

" ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கில்
கோடை யவ்வளி குழலிசை யாகப்
பாடின் அருவிப் பனிநீர் இன்னிசைத்
தோடமை முழவின் துதைகுர லாகக்
கணக்கலை இகுக்கும் கடுங்குரல் தூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டியா ழாக
இன்பல் இமிழிசை கேட்டுக் கலிசிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவளர் அடுக்கத் தியலியா டும்மயில்
நனவுப்புகு விறலியில் தோன்றும்." [1]

இவ்வாறு இயற்கையில் அமைந்த ஓர் இனிய காட்சியினைக் கபிலர் நமக்கு இனிமையுற வழங்கியுள்ளார்.

கபிலர் காட்டிய இயற்கை வருணனையைக் கண்டு மகிழ்ந்த நாம் இளங்கோவடிகள் வழங்கும் இயற்கைக் காட்சியினைக் காண்போம். இயற்கையன்னை இனிய கொலுவீற்றிருக்கும் காலம் இளவேனிற் காலமாகும். இக்காலத்தில் தென்றலைத் தேராகவும், இனிய கரும்பை வில்லாகவும், சோலைக் குயிலைத் தூதாகவும் கொண்டு மன்னன் மாரன்

1. அகநானூறு 82: 1-10

ஆட்சி செலுத்துகின்ருன் என்று இளங்கோவடிகள் பாடியுள்ளார். மேலும், அவர் அந்தி மாலையினை அழகாகப் புனைந்துள்ளார்.

'உலக முழுவதிலும் தன் ஒப்பற்ற ஒளிக் கதிர்களைப் பரப்பி ஆட்சி செலுத்திய கதிரவன் மாலைக் காலத்திலே மேலைத் திசையில் மறைகின்ருன். எங்கும் காரிருள் பரவிக் கிடக்கின்றது. வானத்திலே உலாவரும் வட்ட நிலா எங்கேயென்று மாநில மடந்தை, திசைகளாகிய தன் முகம் பசப்பூரப்பட்டு. செவ்விய மலராகிய கண்களிலிருந்து நீர்வார உடல் முழுதும் பனித்து வருந்துகின்ருள். அந்த மாலைக் காலத்தில் கோவலர் வேய்ங்குழலினை இசைத்து முல்லைப் பண்ணை எழுப்பி மகிழ்கின்றனர். மாலையில் மலர்ந்த முல்லை மலரில் வண்டுகள் ஊதிப் பண்ணை எழுப்புகின்றன. வண்டுகளின் இத்தகைய குறும்புச் செயலினைத் தென்றல் கடிந் தோட்டுகின்றது. முல்லை மலரின் இனிய மணத்தினைத் தென்றல் தெரு வெங்கும் வாரி இறைக்கின்றது. ஒளி பொருந்திய வளையினை அணிந்துள்ள மகளிர், வளம் பொருந்திய ஊரில் மாலைக் காலம் வந்துவிட்டது என்று கண்டு, மனையின் மாடத்தில் அழகிய விளக்குகளை ஏற்றி வைக்கிருர்கள். இத்தகு அழகு நிறைந்த அந்திப் போதில் செக்கர் வானத்தின்கண் வெள்ளிய பிறை நிலா தோன்றிப் பால் போலும் வெள்ளிய ஒளியை விரித்து மகிழ்ச்சியூட்டுகின்றது''

'' விரிகதிர் பரப்பி யுலகமுழு தாண்ட
ஒருதனித் திகிரி யுரவோற் காணேன்
அங்கண் வானத் தணிநிலா விரிக்கும்
திங்களஞ் செல்வன் யாண்டுளன் கொல்லெனத்
திசைமுகம் பசந்து செம்மலர்க் கண்கள்
முழுநீர் வார முழுமெயும் பனித்துத்
..................................................
திரைநீ ராடை யிருநில மடந்தை

குழல்வளர் முல்லையிற் கோவலர் தம்மொடு
மழலைத் தும்பி வாய்வைத் தூத
அறுகாற் குறும்பெறிந் தரும்புபொதி வாசம்
சிறுகாற் செல்வன் மறுகிற் றூற்ற
எல்வளை மகளிர் மணிவிளக் கெடுப்ப
அந்தி வானத்து வெண்பிறை தோன்றிப்
புன்கண் மாலைக் குறும்பெறிந் தோட்டிப்
பான்மையிற் றிரியாது பாற்கதிர் பரப்பி
மீனரச சாண்ட வெள்ளி விளக்கம்''.[2]

இளங்கோவடிகளின் இந்த மாலைக் கால வருணனை படிக்குந்தோறும் நயந் தந்து நம்மை நன்கு மகிழ்விப்பதாகும்.

இளங்கோவடிகள் மாலைக் காலத்தை வருணித்துள்ளது போல மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் காலைப் பொழுதினைக் கவினுற வருணித்துள்ளார் சாத்தனாரின் இவ்வருணனையில் இயற்கை தரும் இன்பம் நிரம்பி வழியக் காணலாம்:

''மலர்கள் மலர்ந்து மட்டில்லாத மணம் பரப்புகின்ற அழகிய சோலை ஒன்றுள்ளது. அந்தச் சோலையில் மரஞ் செடி கொடிகள் நெருங்கி வளர்ந்து பின்னிப் பிணைந்துள்ளன. கதிரவனின் ஒளிக் கதிர்களும் உட்புக முடியாதபடி சோலை அடர்ந்து காணப்படுவதால் அச் சோலையில் இருள் மண்டிக் கிடக்கிறது. இலை நெருக்கத்திலே குயில்கள் நுழைந்து செல்லும் இளமரக்கா அது. தும்பிகள் வேய்ங்குழலின் ஓசையினைப் பொருத்திக் காட்டுகின்றன. இளைய வண்டுகள் இனிய யாழொலியினை எழுப்புகின்றன. அங்கு அழகிய தோகைகளை விரித்து மயில்கள் ஆட, அக்கவின் நிறைந்த காட்சியினை மந்திகள் காண்கின்றன. ஆண்டுப் பளிங்கு போலும் நீரையுடைய குளம் ஒன்று உள்ளது. அக்குளத்தில் பச்சைப்பசே

2. சிலப்பதிகாரம்; அந்திமாலைச் சிறப்புச் செய் காதை: 1-26

லென்று தாமரைக் கொடிகள் இலையும் பூவும் விட்டுப் படர்ந்துள்ளன. பச்சை இலைப் பரப்பின்மேல் செந்தாமரை மலர்கள் அலர்ந்துள்ளன. அரச செருக்கோடு அன்னமொன்று தனியாக அமர்ந்துள்ளது. குளக்கரையில் ஆடும் மயிலின் ஆட்டத்திற்கு ஏற்பச் சம்பங் கோழியொன்று முழவொலி கூட்டுகின்றது. கரிய குயில் ஒன்று மரக்கொம்பில் அமர்ந்து இன்னிசைப் பாடலை எழுப்புகின்றது."

" பரிதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக்
கிருள்வளைப் புண்ட மருள்படு பூம்பொழிற்
குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட
மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய
வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்
மயிலா டரங்கின் மந்திகாண் பனகாண்
மாசறத் தெளிந்த மணிநீ ரிலஞ்சிப்
பாசடைப் பரப்பிற் பன்மல ரிடைநின்
ஞெருதனி யோங்கிய விரைமலர்த் தாமரை
அரச வன்ன மாங்கினி திருப்பக்
கரைநின் றாலு மொருமயி றனக்குக்
கம்புட் சேவற் கனைகுரன் முழவாக்
கொம்ப ரிருங்குயில் விளிப்பது காணாய்"[3]

இவ்வாறு காலையில் காணப்படும் சோலைக் காட்சியினைச் சீத்தலைச் சாத்தனார் தாம் இயற்றிய மணிமேகலைக் காப்பியத்தில் நயந்தோன்ற வருணித்துள்ளார்.

சித்திரையும் வைகாசியும் நம் நாட்டில் இளவேனிற் காலம் என வழங்கப்படும். பங்குனித் திங்களில் பழுத்த இலைகளை உதிர்த்த மரங்களெல்லாம் சித்திரைத் தொடக்கத்தில் மெல்லிய துளிர்விட்டுப் பசுமைக் காட்சி வழங்கும். வேம்பின் வெண் மலர்கள் பூத்துப் புதுமணம் கமழும்; தென்னை மரங்கள் பசுஞ்சோலை விரித்துத்

---

3. மணிமேகலை; பளிக்கறை புக்க காதை: 1-13

'தென்றலில் தலையசைத்துத் தீஞ்சுவை நீரினை இளநீராக வழங்கும்; பனை மரங்கள் நுங்கினை வழங்கி மகிழ்விக்கும். மாஞ்சோலை எங்கும் ஒருவகைப் புதுமணம் மாம் பூக்களால் எழும்பும். மேடையெங்கும் மெல்லிய பூங்காற்று வீசும். கோடையில் குளிர் தருக்களின் நிழல் இளைப்பாற்றிக் கொள்ளுதற் கேற்ப விளங்கும். குளிர் ஓடைப் புனலிலே ஊறும் தீஞ்சுவைத் தண்ணீரை உண்டால் உள்ளத்தில் உவகை ஊற்றெடுக்கும். இத்தகு இனிமையான இளவேனிற் காலத்து இன்ப மாலையினைத் திருநாவுக்கரச நாயனார் இன்பம் பொங்கப் பாடுகின்றார். அவருக்கு இறைவனின் இணையடி நீழல், குற்றமற்ற யாழிலிருந்து பிறக்கும் இனிய இசை போன்றும், இளவேனிற் காலத்து இன்ப மாலையில் தோன்றும் முழு மதியின் ஒளி போன்றும், மெல்லெனத் தவழ்ந்து வீசும் தென்றற் காற்று போன்றும், இளவேனிற் காலத்தில் கிடைக்கும் இனிய நறுங்கனிச் சுவை போன்றும், வண்டுகள் பண்ணிசைக்கும் குளிர்நீர்த் தடாகம் போன்றும் இனிமை பயப்பதாகத் தம் தேவாரப் பாவில் அவர் காட்டுகின்றார்.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை யிணையடி நீழலே."[4]

அடுத்து, கவிச் சக்கரவர்த்தி கம்பரும் இயற்கை வழங்கும் இனிய காட்சியினை எழிலுறத் தம் கவிதையில் வடித்துக் காட்டியுள்ளார். மருத நிலத்தினை வருணிக்கப் புகுந்த கம்பநாடர், 'மலர்ச் சோலையில் மயில்கள் ஆட, தாமரை மலர்கள் அவ் ஆட்டத்திற்கு ஏற்ப விளக்

4. ஐந்தாந் திருமுறை; தனித் திருக்குறுந்தொகை: 90 ஆம் பதிகம், முதற்பாடல்.

கமைத்து நிற்க, மழையைத் தரும் மேக கூட்டங்கள் முழவாக அமைய, குவளை மலர்கள் தம் கண்களை விரித்து அக் கவின் நிறைந்த காட்சியினைக் காண, குளத்தில் எழும் அலைகள் திரைச் சீலைகளாக அமைய, மகர யாழிலிருந்து பிறக்கும் இசை போன்று வண்டுகள் பாட, அழகான மருத நில மங்கை இன்பக் கொலு வீற்றிருக்கின்றாள்.' என்று காட்சியின்பம் நல்கியுள்ளார்.

"தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாஙகக்
கொண்டல்கள் முழவி னேங்கக் குவளைகண் விழித்து
நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்கு மாதோ"[5]

இவ்வாறாகத் தமிழ்க் கவிஞர்கள் பலரும் இயற்கையழகில் தோய்ந்து தங்கள் மனத்தைப் பறிகொடுத்துள்ளமையினை அவர்தம் பாடல்கள் வழி அறியலாம். கவிஞர்கள் காட்டுகின்ற இயற்கைக் காட்சிகள் நம் நெஞ்சை அள்ளும் நீர்மையனவாகும். கருத்தை நிறைவிக்கும் அக்காட்சிகள் நம் நினைவில் என்றும் நின்று வாழுஞ் சிறப்புடையனவாகும். எனவே, நாம் இயற்கை வழங்கும் இனிய காட்சிகளை நேரில் கண்டும் கவிஞர்கள் வடித்துள்ள இயற்கையின் அழகுப் பொலிவினை அவர்தம் கவிதைகளில் படித்தும் மாறாத மகிழ்ச்சியில் திளைப்போமாக!

---

5. கம்பராமாயணம்; பால காண்டம்; நாட்டுப் படலம்: 4



***சி. பா.***

தேசிங்கு ஆண்ட செஞ்சியில் பிறந்தவர் (3-5-1935) 'இந்தச் செந்தமிழ்ச் செல்வர். காஞ்சிபுரமும் திருவண்ணாமலையும் இந்த இலக்கியப் பொழில், கற்ற இடங்கள். பைந்தமிழ் வளர்க்கும் பச்சையப்பன் கல்லூரிப்பாசறை மறவருள் ஒருவர். அன்னைத் தமிழில் பி.ஏ. ஆனர்சு, அங்கு! முதல் வகுப்பில் தேறிய முதல்வர். குறுந்தொகை' பற்றிய ஆய்வுரைக்கு 1963ல் எம்.லிட்., பட்டமும், 'சேரநாட்டுத் தமிழ் இலக்கியங்கள்' பற்றிய ஆய்வுரைக்கு 1970ல் டாக்டர் (பி.எச்.டி.) பட்டமும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இவர் பெற்ற சிறப்புகள். நல்ல நடை கொண்ட இந்த நாகரிகர் பேர் சொல்ல நாளும் மாணவர் படை உண்டு நாட்டில்! சென்னைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தவர் பேராசிரியராக துறைத்தலைவராகச் சிறந்திருக்கிறார் முன்னாள் தமிழக ஆளுநருக்குத் தம்மை முறையாகப பயிற்றுவித்த ஆசிரியர், இந்த முற்றிய புலமையாளர்!

பத்து நூல்கள் படைத்துள்ள இவர் ஒப்பருந் திறனுக்கும் உயர் 'தமிழ் அறிவுக்கும், 'தமிழ் இலக்கிய வரலாறு' ஒன்றே சான்று! அண்மையில் வந்துள்ள அணிகலன். பெருந்தகை மு.வ. 'ஆங்கிலத்தில் ஒரு நூல்' சங்ககால மகளிர் நிலை பற்றிய ஆராய்ச்சி. 'இலக்கிய அணிகள்' என்ற நூல் தமிழக அரசின் இரண்டாயிரம் உருபா முதல் பரிசைப் பெற்றது. படித்துப் பல பட்டம் பெற்ற இந்தப் பைந்தமிழ் வேந்தர்க்குப் பலரும் கொடுத்துள்ள புகழ் மகுடங்கள்: புலவரேறு (குன்றக்குடி ஆதீனம்). செஞ்சொற் புலவர் (தமிழ் நாட்டு நல்வழி நிலையம்). சங்கநூற் செல்வர் (தொண்டை மண்டல ஆதீனம்).

பெருந்தகை மு. வ. வின் செல்லப்பிள்ளை சி.பா. அவர் புகழ் பாடும் அந்தமிழ்த் தும்பி; அயராது உழைக்கும் அருஞ்செயல் நம்பி! இலக்கியப் பேச்சில் இன்ப அருவி! எழுத்தில் நல்ல இலக்கியப் பிறவி!

சி. பா. இந்த ஈரெழுத்து ஒரு மொழி. இளைஞர்க்குச் சொல்வது சிறக்கப் பாடு படு!

***—மா.செ.***

**Jacket Printed at Neo Art Press. Madras-2**